உ

இதோபதேசம்.

இது,

சமஸ்கிருதபாஷையினின்று

சுன்னுகம்

அ. நாகநாத பண்டிதரால்

மொழிபெயர்த்து

ஷையூர்

அ. குமாரசுவாமிப்பிள்ளையால்

சென்னபட்டணம்.

வெள்ளையநாடார் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

Copy Right Reserved.

1886.

OPINIONS.

From,

T. Chellappa Pillai Esquire B. A. B. L. Retired Chief Justice of the State of Travancore.

The nations of antiquity conveyed instructions to their youths on morals through the medium of fables. The "*Hitopadesa*" (good advice) was one of the earliest and most successful efforts put forth in this direction. That it has signally accomplished its object is evident from its critical study both in the West and in the East, and the numerous translations made into the languages of Europe and Asia. Fourteen hundred years ago it was translated by order of king Nushiraban into the Persee from which it was translated into Hebrew and Greek and thence into the languages of Modern Europe, where at the present day it is one of the first books, perhaps the first book-read by scholars who wish to acquire a mastery over the sacred language of India.

"The value of the *Hitopadesa* to the history of narrative fiction" says Professor Johnson in the preface to his edition of the work, "is not however its only recommendation. Its popularity through so many ages amidst such various nations, is evidence of intrinsic merit; and the pictures of domestic manners and human nature which it presents, however tinctured by national peculiarities, must have been recognized as universally true, as well as diverting; or they would not have been naturalized in the West as well as in the East. In the maxims also which the tales serve to illustrate, there must have been much that secured the acquiescence of all mankind, or the remarks would have been left to enlighten the moralists of India alone."

The moral truths taught in it are given in the classic language of the works of such national reverence and authority as the Institutes of *Manue,* the Mahabharata &c., verses from which being skilfully put into the months of the actors in the Fables. These verses, embodying as they do, the condensed wisdom of ages, are always at the fingers' ends of Pundits. Messrs Nakanata Pillai and Kumaraswami Pillai deserve credit for attempting to place within the reach of the Tamil public a faithful translation of the work.

From,

C. W. Cathiravalu Pillai Esquire, Police Magistrate, Kaits.

I have examined Mr. A. Nakanata Pillai's Tamil translation of Hitopadesam which inculcates morals by means of fables and compared some of the passages in it with the original in tha Sanscrit language. The translation appears to be correct and written in simple Tamil. I reccommend this work to the reading public both in Ceylon & India.

From,

C. BRITO Esquire. B. A. ADVOCATE.

Like the double reputation which Mr. Kumaraswami Pillai enjoys for scholarship—Tamil & Sancrit—the translation which he edits has the double merit of being useful for two different classes of Students, those wishing to perfect their knowledge of Tamil prose composition, and those who, having a knowledge of Tamil already, wish to improve their acquaintance with Sanscrit. My knowledge of Sanscrit is so imperfect that I cannot say how far the translation agrees with the original, but I can confidently say that like every thing that comes from Mr. Kumaraswami Pillai's hand, it carries the impress of his wide and deep acquaintance with Tamil.

The Kalvalavu, Jaffna.
August 26. 1886.

From,

WILLIAM NEVINS Esquire,
Head Master, Town High School. Jaffna.

The present Tamil Version of the Sanskrit *Hitopadesa* (Wholesome Instruction) is a sterling addition to the educational books now in Tamil. Perspicuity and precision, the prime excellences of literary compositions, discover themselves in almost all the sections of the work. There is reason to believe that the Translator and the Editor have, by the present production, rendered a great service to the Tamil Public, and Mr. A. Kumaraswami Pillai, the able Editor, deserves the favourable notice of Tamil Scholars.

இந்நூல் அச்சிடுதற்குத் திரவியோபகாரிகளாய் விளங்கிய கண்ணியசீலர்கள் நாமாதிகள்.

	ஊர்.	பெயர்.	உத்தியோகம்.	ரூபா.	சதம்.
1	Kaits	C. Cathiravalu Pillai	Police Magistrate	10	...
2	Mallakam	V. Sinnatamby	Clerk P. W.D. Mannar	10	...
3	Kanderodai	N. Visuvanatha Pillai	Chief Clerk	5	...
4	Palai	C. Brito	Advocate	10	...
5	Vannarponnai	T. Chellappa Pillai	Retired Judge	10	...
6	Mallakam	T. Kathiritamby	Maniagar, Valigam N.	12	...
7	Puloly	N. Mylvaganam	Proctor	10	...
8	Vannar ponnai	S. Nagalingam	Advocate	5	...
9	Kokuvil	S. Sabaratnam	Shroff (Mullative)	5	...
10	Chunnagam	A. Thamotharam Pillai	Clerk, Jaffna	5	...
11	வண்ணார்பண்ணை	வை. ஆறுமுகபிள்ளை	Merchant	7	50
12	Chunnagam	K. Tillaiambalam	Intarpreter (Mullative)	5	...
13	Udupity	V. Mudaliar. Somasundaram	SubCollector (Mullative	5	...
14	Murikandy	C. Vaitilingam	Overseer	3	...
15	Urumpirai	S. Chinniah	Overseer	5	...
16	கந்தரோடை	மு. வே. மு. ஆச்சிமுத்துப்பிள்ளை			...
		C. Veluppillai		15	...
		வே. மு. முத்துவேற்பிள்ளை.			...
17	Tillipale	A. Kanagasabhai	Advocate	5	...
18	Kopai	C. Muthucomarasuriar	Salt Supt.	5	...
19	Wannar ponnai	A. Arularnbalum	Proctor	5	...

20	Navaly	V. Aroomogam	Storekeeper, N. O. B. C. Ld.	5	...
21	Mallakam	R. Mailvaganam	Proctor	5	...
22	Tavadi	S. Sanmugam	Headclerk	5	...
23	Udupity	V. Modr. Sivasidumbaram	Maniagar	5	...
24	Jaffna Town	V. Kasi Pilly	Proctor	5	...
25	Town	S. Allegakone	Advocate	3	...
26	Thavady	A. W. Vettyveluppillai	Interpreter. [Kaits	5	...
27	Vannarponnai	A. Sooprmaniar	Late Sub-Collector of		...
28	Chunnakam	J. P. Howard	Medical officer	5	...
29	Columbutury	T. Coomarasami Chettiar	Planter	5	...
30	Rajampett	C. W. Chinnappah Pillay	Taluq Overseer	5	...
31	Cuddapah	N. Etherajulu Modalyar	L. F. Overseer	5	...
32	Rajampett	C. Moonsawmy Naidoo	Contractor	2	...
33	Rajampett	V. Appasawmy Modalyar	Village Moonsiff	2	...
34	Rajampett	A. Narainsawmy Chetty	Forester	2	...
35	Batticotta	R. Kandappa	Registrar Clerk	2	...
36	Vannarponnai	S. Valupilly	Renter	1	50
37	Manepay	V. Thampipillai	Surveyor	3	...
38	Kantharoday	S. Vaitilingam	Doctor	1	50
39	Chunnagam	K. Naganader	Clerk	3	...
40	Vannarponnai	S. Vinasitamby	Landholder	5	...
41	சுன்னுகம்	சி. இராமநாதர்	உடையார்	5	...
42	வண்ணர்பண்ணை	வி. சபாபதிக்குருக்கள்	பூசை	௪	...
43		சு. கனகரத்தினம்		௨	...
44	சுன்னுகம்	சொ. ஆறுமுகச்செட்டியார்	வாணியம்	௨	...

☞ இவர்கள் நன்றி என்றும் நினைக்கத்தக்கது. அ. கு.

கதாசூசிகை.

	மித்திரலாபம்.	பக்.
௧.	காககூர்மகபோத மூஷிகசாரங்கங்களின்கதை.	௮
௨.	வியாக்கிரபதிகர்கள் கதை.	௯
௩.	காகமிருகசிருகாலர்கள்கதை.	௨0
௪.	சகுனிமார்ச்சாரபக்ஷிகள்கதை.	௨௧
௫.	பரிவிராசகமூஷிகவிரணியகர்கள்கதை.	௩௫
௬.	வயோதிகவணிகன்மனைவிகதை.	௩௬
௭.	வியாதமிருகசூகரசர்ப்பசிருகாலர்கள்கதை.	௪௬
௮.	போதவணிகன்பத்தினிராசபுத்திரர்கதை.	௫௩
௯.	சிருகாலகஜங்கள்கதை	௫௫
	சுகிர்தபேதம்.	
௧.	வணிகனிடபசிங்கசிருகாலர்கள்கதை.	௧
௨.	ஆப்பினைப்பிடுங்கியகுரங்கின்கதை.	௬
௩.	கர்த்தபகுக்குரசௌரர்கதை.	௭
௪.	மூஷிகவிடாலசிங்கங்கள்கதை.	௨0
௫.	தண்டகர்ணன்குட்டினிக்கதை.	௨௩
௬.	நாவிதன்பத்தினிவர்த்தகர்கதை.	௨௯
௭.	கோபன்பத்தினியுப்பதி யிருவர்கதை.	௩௪
௮.	வாயசதம்பதிகிருஷ்ணசர்ப்பங்கள்கதை.	௩௬
௯.	சிங்கசசங்கள்கதை	௩௭
௧0.	சமுத்திரடிட்டிபக்குருவிகள்கதை.	௪௪
	விக்கிரகம்.	
௧.	அன்னமயூராதிகள்கதை.	௧
௨.	பக்ஷிவானரங்களின்கதை.	௩
௩.	புலித்தோல்போர்த்தகழுதைகதை.	௫
௪.	கஜசசங்களின்கதை.	௭
௫.	காகவன்னங்கள்கதை.	௧௧
௬.	காகவர்த்தகக்குருவிகள்கதை.	௧௨
௭.	இரதகாரன்கதை.	௧௪
௮.	நீலிசிருகாலர்கள்கதை.	௨௩
௯.	வீரவரன்கதை.	௩௩

கக. பிச்சைக்காரனைக்கொன்ற நாவிதன்கதை. ௩௬

சந்தி

க. அஞ்சமயூரங்கள் கதை. ௫௩
உ. சங்கடவிகடகம்புக்கிரீவங்கள் கதை. ௫௩
௩. மூன்றுமீன்களின் கதை. ௫௪
௪. வணிகபத்தினி யிரத்தினப்பிரபையின்கதை ௫௫
௫. நகுலபகங்கள் கதை ௫௭
௬. முனிமூஷிகங்கள்கதை ௬0
௭. வலாககருக்கடகங்கள்கதை ௬க
௮. பொரியரிசிச்சராவமுடைத்தபிராமணன்கதை ௬௩
௯. சுந்தோபசுந்தர்கதை ௬௬
க0. பிராமணசாகங்கள்கதை. ௭௩
கக. ஒட்டகவியாக்கிர சிருகாலர்கதை ௭௪
கஉ. விருத்தசர்ப்பமண்டூகங்கள்கதை ௭௮
க௩. நகுலபிராமணர்கதை ௮௪

இதோபதேசம்.

பாயிரம்.

௧. கங்காநதியின் நுரைக்கிறுபோலத் தமது சிரசிலே சந்திரகலை இருக்கப்பெற்ற பரமேசுவரனுடைய திருவருளினாலே சற்சனர் தேர்ச்சியிற் சித்தி பெறுக.

௨. இதோபதேசம் என்னும் இந்நூல், பாஷையிலே வல்லமையையும், எவ்விடத்திலும் விசித்திரமான வாக்குகளையும், நீதிவித்தையையுங் கொடுக்கும்.

௩. புத்திமானானவன், கல்விப்பொருளையுஞ் செல்வப்பொருளையுஞ் சம்பாதித்தலில், தன்னை வியாதிக்கும் மரணத்துக்கும் உட்படாதவனாகவும், தருமத்தை ஆசரித்தலிலே மரணத்தால் அதிவிரைவாக மயிரிற் பிடித்து இழுக்கப்பட்டவனாகவுஞ் சிந்திக்கவேண்டும்.

௪. எக்காலத்திலும் அபகரிக்கப்படாமையானும், விலைமதிக்கப்படாமையானும், அழிக்கப்படாமையானும், எல்லாப் பொருள்களுள்ளுங் கல்விப்பொருளே உத்தமத்திரவியம் என்று பெரியோர் சொல்லுகின்றார்.

௫. நீரொழுகிச்செல்கின்ற ஆறானது தன்னை அடைந்தபொருளைச் சமுத்திரத்திற் சேர்ப்பதுபோல வித்தையானது மனிதனை அடைதற்கரிய இராசசமுகத்திற் சேரச்செய்கின்றது; பின்னர் அதனால் அவனுக்குப் பெரும் பாக்கியத்தைக் கொடுக்கின்றது.

௬. வித்தையானது அடக்கத்தைக் கொடுக்கின்றது; அடக்கத்தினாலே தகுதி உண்டாகின்றது; தகுதியினாற் செல்வம் உண்டாகின்றது; செல்வத்தினாலே தருமம் உண்டாகின்றது; தருமத்தினாலே சுகம் உண்டாகின்றது.

௭. சஸ்திரவித்தையுஞ் சாஸ்திரவித்தையும் என இருவித வித்தைகளுள. இவற்றுள், சஸ்திரவித்தை முதுமைப்பருவத்திற் பரிகாசத்திற்கிடனாகின்றது. சாஸ்திரவித்தையோ சர்வகாலமும் பூசிக்கப்படுகின்றது.

அ. பசுமட்கலத்திலே பதித்த தழும்பு அழியமாட்டாது; அதுபோல இளமைப்பருவத்திலே கற்பித்தகல்வியும் அழியாமலிருக்கும்; ஆதலாற், பாலகர்க்கு விநோதகதாரூடமான நீதிசாத்திரம் இங்கே சொல்லப்படும்.

கூ. மித்திரலாபம், சுகிர்தபேதம், விக்கிரகஞ், சந்தி என்னும் நான்கு பிரிவினையுடைய இந்நூல், பிரதானமாய்ப் புஞ்சதந்திரத்திலும் வேறு கிரந்தங்களிலுமிருந்து எடுத்து எழுதப்படுகின்றது.

கங்காநதிக் கரையிலே பாடலிபுத்திரம் என்னும் பெயருடைய நகரம் ஒன்றிருக்கின்றது. அங்கே உத்தம குணங்கள் எல்லாஞ்சேர்ந்த சுதரிசனன் என்றொரு இராசன் இருந்தான். அந்த இராசன் ஒருநாள் ஒருவன் படித்த சுலோகங்கள் இரண்டைஉற்றுக்கேட்டான். அந்தச்சுலோகங்களாவன ;—

க0. அநேகசந்தேகங்களை அகற்றுகின்றதுங், காணப்படாதபொருள்களைக் காட்டுகின்றதும், யாவர்க்குங் கண்போல இருக்கின்றதுமாகிய, சாத்திர உணர்ச்சியில்லாதவன் எவனோ அவனே குருடன்.

கக. இளமைப்பருவமும், நிறைந்தசெல்வமும், பிரபுத்தன்மையும் அவிவேகமுமாகிய நான்குந் தனித்தனி ஒன்றொன்றே நாசத்தை விளைவிக்கும்; இந்நான்கும் ஓரிடத்தே சேர்ந்திருக்குமாயின் அங்கே எந்தத் தீங்குதான் விளையமாட்டாது! என்பவைகளே.

இராசா இந்த இரண்டு சுலோகங்களையுங் கேட்டு, இதுவரையுஞ் சாத்திரத்தை அப்பியாசஞ் செய்யாதவர்களும், நித்தியமுந் தவறானவழியிற் செல்லுகின்றவர்களுமாகிய தன் புத்திரர்களுக்குச் சாத்திரம் பயிற்றாமையைப்பற்றி மனத்துக்கங்கொண்டு பின் வருமாறு சிந்திப்பானாயினான் :—

கஉ. வித்துவானுந், தருமகுணமுடையவனும் அல்லாத புத்திரன் பிறந்ததனாற் பயன் என்னை? குருட்டுக் கண்ணினாலே துன்பமேயன்றிப் பிரயோசனம் யாது?

கங. பிறவாதவனும், இறந்தவனும், மூர்க்கனுமாகிய புத்திரர் மூவருள்ளே, முன்சொல்லிய இருவரும் உத்தமர்,

பின்னைய மூர்க்கன் உத்தமனல்லன்; முன்னைய இருவரும் ஒரு முறையிலே துக்கத்தைக் கொடுக்கின்றார்கள். பின்னுள்ள மூர்க்கனே அடிக்கடி துக்கத்தைக்கொடுக்கின்றான்."

கச. மேலும், ஒரு புத்திரன் அழகினையுஞ் செல்வத்தினையுமுடையவனாயிருந்தானாயினும், மூடனாயிருப்பானாயின், அவன் கருப்பத்திற்றானே அழிந்துவிடுதல் நன்று! அவன் பிதா விவாகஞ்செய்யாதிருத்தலும் நன்று! அவன் பிறந்தவுடனே இறந்துவிடுதலும் நன்று! அவன் புத்திரியாய்ப் பிறத்தலும் நன்று! அவன் பிதாவின் மனைவி மலடியாயிருத்தலும் நன்று! அவன் பூமியிலே பிறவாமற் கருப்பத்திற்றானே இருந்துவிடுதலும் நன்று!

கரு. எவன் பிறந்ததினாலே தன்வமிசத்தை உயர்த்துகின்றானோ அவனே பிறந்தவன். நிலையற்ற இவ்வுலக சஞ்சாரத்திலே இறந்தவன் யாவன்! பிறவாதவன் யாவன்!

கசா. குணவான்கள் தொகையைக் கணக்கிடும்போது தன்மகன் எல்லார்க்கும் முதலிற் கடினியாற் குறிக்கப்படாமையினாலே துக்கங்கொள்ளுகின்ற மாதாவினும், மலடியே துக்கமில்லாதவள்.

கஎ. எவன் தானத்திலுந், தபத்திலும், வீரத்திலுங், கல்விசெல்வங்களைச் சம்பாதித்தலிலுங் கீர்த்தியடையாமல் இருக்கின்றானோ, அவன் மாதாவின் உச்சாரமேயாம்.

கஅ. பின்னும், நூறு மூர்க்கர்களினும் நற்குணமுள்ள புத்திரன் ஒருவனே உத்தமன்: அநேக நக்ஷத்திரங்களினாற் போக்குதற்கரிய இருளை ஒரு சந்திரனே போக்குகின்றது.

ககூ. புண்ணிய தீர்த்தத்திலே யாவராலுஞ் செயற்கரிய அருந்தவத்தை எவன் செய்தானோ அவனுடைய புத்திரன் தாழ்மையுடையவனும், விருத்தியுடையவனும், தருமவானும், நற்புத்திமானுமாயிருப்பான்.

உ0. இராசாவே! பொருள்வரவும், நித்திய ஆரோக்கியமும், அருமையான மனைவியும், பிரியவாசகமுள்ளவளும், அடக்கமான புத்திரனுந், செல்வத்தைக் கொடுக்கும்

வித்தையுமாகிய ஆறுஞ் சீவியலோகத்திலே ஆறுசுகங்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன.

உக. பூரணமான திரவியத்தைச் சம்பாதிக்க வலியில்லாத பலபுத்திரர்களினுற் பிதா மேன்மை அடைவானு? பெருமை அடைந்திருக்கின்ற பிதா யார்? தன் பிதாவுக்குக் கீர்த்தியைக் கொடுப்பவனும், தன்குலத்தைத் தாங்குகின்றவனுமாகிய புத்திரன் ஒருவனே உத்தமன்.

ஆதலால் இப்போது என்னுடைய புத்திரர்களைக் கல்வியினுற் குணவான்களாக்கவேண்டும்.

உஉ. உணவும், நித்திரையும், அச்சமும், மைதுனமுமாகிய இவைகள் மனிதர்களுக்கும் மிருகங்களுக்குஞ் சமமாயுள்ளனவாம்; புண்ணியம் ஒன்றுமே மனிதருக்கு விசேஷமாயுள்ளது; புண்ணிய மில்லாதவர்கள் மிருகங்களுக்குச் சமானமானவர்களேயாம்.

உங. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள் ஒன்றுயினும் எவனுக்கு இல்லையோ அவனுடைய பிறவி ஆட்டின் கழுத்திலுள்ள அதனைப்போலப் பிரயோசனமில்லாததேயாம்.

உச. இனி, ஆயுசுங், கர்மமுங், திரவியமும், வித்தையும், மரணமுமாகிய இந்த ஐந்துந் தேகிகளுக்கு மாதாவின் கருப்பத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன.

உரு. மேலும், அவசியமாய்ச் சம்பவிக்க வேண்டிய சம்பவங்கள் மகான்களுக்குஞ் சம்பவிக்கின்றன; நீலகண்டருடைய நிருவாணமும், விஷ்ணுவினுடைய மகாசர்ப்ப சயனமும் அப்படியே சம்பவித்தன.

உசு. வரற்பாலதல்லாதது எதுவோ அதுவரவேமாட்டாது, வரற்பாலது எதுவோ அது தவருதுவந்தேவிடும் என்கின்ற மருந்து மனவிசனமாகிய விஷத்தைக் கெடுக்கும். ஆதலின் மனத்துன்ப முடையவர்களால் இது குடிக்கப்படாமலிருத்தல் என்னையோ?

உஎ. என்னும் இவைகள் காரியங்களைச்செய்ய இயலாத சில சோம்பேறிகளுடைய வார்த்தைகளாகும். இரதம்

ஒற்றைச் சில்லிற் சரியாகப் போகமாட்டாது. அதுபோல் மானுஷியகாரணமின்றி விதியுஞ் சித்திக்கமாட்டாது.

உஅ. அப்படியே முற்பிறப்பிற் செய்யப்பட்ட கர்மந் தானே விதி என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலான் மனிதன் சோம்பின்றித் தான் செய்தற்பாலதை விரைந்து முயலல்வேண்டும்.

உகூ. இலக்குமியானவள் முயற்சி செய்கின்ற புருடசிங்கத்தையே அடைகின்றாள். அற்பமனுடர்கள் விதிதானே காரணம் என்று சொல்லுகின்றார்கள். விதியைக்கீழ்ப்படுத்தி உன் வலிமையுள்ளவரையும் முயற்சி செய்; முயற்சி செய்தபோதுஞ் சித்தி இல்லையாயின், அப்போது குற்றமியாது?

௩0. குயவனானவன் தான் இச்சித்தது எதுவோ அதனை மண்ணினின்றே செய்கின்றான், அதுபோல மனிதனுந் தான்செய்கின்ற கருமத்தைத் தன்னிச்சைப்படியே முடிக்கின்றான்.

௩க. பின்னும், ஒரு மனிதன் தனக்கு முன்னே திரவியக்குவை இருத்தலைக்கண்டு, அதனை விதிதானே கொடுத்தது என்று காகதாலீயம் போலச் சொல்லுதல் பொருந்தாது; அதற்குச் சிறிது முயற்சியும் வேண்டும்.

௩உ. முயற்சி செய்தலினாலேயன்றி ஆசையினாலே காரியங்கள் அநுகூலப் படமாட்டா; நித்திரை செய்யுஞ் சிங்கத்தின்வாயிலே மான்கள் பிரவேசிக்கும் வழக்கமில்லை.

௩௩. படிப்பிக்கப் படாமலிருக்கின்ற பாலகனுக்குப் பிதா சத்துரு; மாதா வைரி; அந்தப் பாலகன் அன்னங்களின் மத்தியிலே கொக்குச் சோபியாததுபோலச் சபையின் நடுவே சோபிக்கமாட்டான்.

௩௪. மனிதர் அழகினையும், இளமைப் பருவத்தினையும் உயர்குலத்தினையுமுடையவராயிருந்தாராயினும், கல்வியில்லாதிருப்பாராயின் பரிமளமில்லாத முருக்கம்பூவைப் போல்வர்.

௩௫. இன்னுஞ் சாஸ்திரங்களை அப்பியாசஞ் செய்யாமலும், குருமுன்னிலையிலே படியாமலுமிருக்கின்ற மூடபுத்திரன் சோரநாயகனற் கர்ப்பிணியான ஸ்திரியைப் போலச் சபையின் நடுவே பிரகாசிக்கமாட்டான்.

இப்படியே சிறிதுபோது சிந்தித்தபின் அந்த இராசா பண்டிதர்களைச் சபையாகக் கூட்டி அவர்களை நோக்கிப், பண்டிதர்களே! என் வார்த்தையைக் கேளுங்கள்; எப்போதுந் தவறுன வழியிற் செல்லுகின்றவர்களும், இதுவரையுங் கல்வி கற்பிக்கப்படாதவர்களுமாகிய என் புத்திரர்களுக்கு நீதி சாஸ்திரோபதேசத்தினுலே மறுபிறவியை அடைவிக்கத் தக்க சாமர்த்தியத்தையுடைய வித்துவான் யாராவது உங்களுள்ளே உண்டா?

௧௬. ஏனெனில் பளிங்கானது பொன்னேடு சார்ந்திருத்தலினுலேமரகதரத்தினத்தின் ஒளியை அடைகின்றது. அப்படியே புத்திமானுடைய சேர்க்கையினுலே மூடனுஞ் சாமர்த்தியத்தை அடைகின்றான்.

௧௭. அப்பனே! மனமானது கீழ்மக்களோடு சகவாசஞ் செய்தலினுற் கீழ்மையாகின்றது. சமமானவர்களோடு சகவாசஞ் செய்தலினுற் சமமாகின்றது. பெரியோர்களோடு சகவாசஞ் செய்தலினுற் பெருமையடைகின்றது,' என்றான்.

அப்பொழுது அந்தச்சபையின் மத்தியிலே சகல நீதி சாத்திர தத்துவங்களை அறிந்தவரும், வியாழபகவானைப் போன்றவருமாகிய விஷ்ணுசர்மர் என்னும் பண்டிதர் எழுந்து, தேவரீர்! உத்தமகுலத்தில் உற்பவித்த இந்த இராசபுத்திரர்கள் நீதி சாத்திரங்களை உணரும்படிசெய்தல் என்னுற்கூடும்.

௧௮. சூனியத்திரவியத்திலே சென்ற தொழின் முயற்சியானது பலனுடையதாகமாட்டாது. நூறுமடங்கு பிரயாசப்பட்டாலுங் கிளியைப்போலக் கொக்கினைப்படிப்பித்தல் கூடாது.

௧௯. மேலும், மேன்மையான இந்தக் கோத்திரத்திலே குணமில்லாத பிள்ளைகள் பிறக்கமாட்டார்கள். பதுமராகம் பிறக்கும் இடத்திலே பளிங்குத்துண்டு எப்படி உண்டாகும்?

ஆதலால் நான் ஆறுமாசத்திலே நும் புத்திரரை நீதி சாஸ்திரத்தில் வல்லவர்களாக்குவேன் என்றார். இராசா மரியாதையோடு பின்னுஞ் சொல்வானுயினன்.

௪0. கிடந்தானும் பூவின் சேர்க்கையினாலே பெரியோருடைய சிரசில் ஏறுகின்றது. பெரியோராலே நன்றாகப் பிரதிட்டை செய்யப்பட்ட கல்லுந் தேவத்தன்மையை அடைகின்றது.

௪௧. உதயமலையில் இருக்கின்ற பொருளானது சூரிய சந்நிதானத்தினாற் பிரகாசிக்கின்றது. அதுபோல இழிந்த வருணத்தவனும் பெரியோருடைய சேர்க்கையினாற் பிரகாசிக்கின்றான்.

ஆதலால் என்னுடைய புத்திரருக்கு நீதிசாத்திரத்தை உபதேசிக்கும் பொருட்டு நீரே பிரமாணமாயிரும்; என்று சொல்லி விஷ்ணுசர்மருக்கு வெகுமானமுஞ்செய்து தன் புத்திரரை அவரிடத்தே ஒப்பித்தான். அதன்பின்னர் மேன்மாடத்திலே பொழுதுபோக்கின்பொருட்டு ஒருங்கு சேர்ந்திருக்கும் இராசகுமாரருக்கு அந்தப்பண்டிதர் நற்புத்திகளை மேற்கூறிய கிரமமாகப் பின்வருஞ் சுலோகத்தைக்கொண்டு சொல்வாராயினர்.

௪௨. புத்திமான்களுடைய காலமோ காவியசாத்திர விநோதங்களிற் கழிகின்றது; மூடர்களுடைய காலமோ சூதுமுதலிய வியசனகாரியங்களிலும், நித்திரையிலும், பிறர்க்குக் கலகஞ்செய்தலிலுஞ் செல்லுகின்றது.

ஆதலால் நான் உங்களுக்குப் பொழுதுபோக்கின் பொருட்டுக் காகம், ஆமை முதலியவைகளுடைய அதிசயமான கதைகளைச் சொல்லுகின்றேன் என்றார். இராசபுத்திரர்கள் சொல்வீராக என்றார்கள். அப்பொழுது விஷ்ணுசர்மர் சொல்லத் தொடங்கினார்.

பாயிரம் முற்றுப்பெற்றது.

முதலாவது

மித்திரலாபம்.

பிள்ளைகளே! இப்போழுது மித்திரலாபஞ் சொல்லப்படும். அதனைச் சாவதானமாகக் கேளுங்கள்: அதன் முதற்சுலோகம் இது;—

க. புத்தியையும், நேர்மையையுமுடைய மித்திரர் உபாயமுந், திரவியமும் இல்லாதவராயினும், காக கூர்ம கபோத மூஷிக சாரங்கங்களைப்போலத் தங்கள் காரியங்களைச் சடிதியிலே முடிப்பர் என்றார்.

இஃது எப்படி என்று இராசபுத்திரர்கள் கேட்க விஷ்ணுசர்மர் சொல்வாராயினர்.

காககூர்மகபோதமூஷிகசாரங்கங்களின்கதை.

கோதாவரியாற்றங்கரையிலே விசாலமான இலவமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்திலே நான்கு திக்குகளிலுமுள்ள பலதேசங்களிலிருந்து பல பறவைகளும் இராக்காலத்திலே வந்து வாசஞ்செய்வது வழக்கம். அப்படி இருக்கும்போது ஒருநாள் இராமுடிந்து சந்திரன் அஸ்தமலையிற் செல்கின்ற விடியற்காலத்திலே இலகுபதனன் என்னும் பெயருடைய காகம் ஒன்று நித்திரைவிட்டு எழுந்திருக்கையில், இரண்டாம் இயமனைப்போல வருகின்றவேடன் ஒருவனைக் கண்டு இன்றைக்கு எனக்கு விடியற்காலத்திலே கெட்ட விழிவிசேஷமாயிற்று, இதனால்யாது தீமை வருமோ அறியேன் என்று சொல்லி அதன் காரண காரியத்தை ஆராய்ந்துகொண்டு வியாகுலத்தோடு பறந்துபோயிற்று.

உ. மூடனுக்குத் துன்பமடைய வேண்டிய இடங்கள் ஆயிரக்கணக்கும், பயப்படவேண்டிய இடங்கள் நூற்றுக்கணக்குமாக நாடோறும் வந்து நேரிடுகின்றன. வித்துவான்களுக்கு அப்படி வந்து நேரிடுதல் இல்லை.

உலகத்திலே சஞ்சரிக்கின்ற மனுஷர் பின்வரும் பிரகாரம் அவசியஞ் செய்தல் வேண்டும்.

உ. "சித்திரைவிட்டு எழும்புந்தோறும் மரணம் வியாதி, துன்பம் என்பவைகளுள், இன்றைக்கு எம்மை யடையும்படி சமீபித்திருக்கின்ற பெரும்பயம் யாது என்று அறிந்துகொள்ளவேண்டும்.

அதன்பின் அந்த வேடன் அரிசிக்குறுணியை நிலத்திலேசிதறி வலையை விரித்துவிட்டு அவ்விடத்திலேமறைந்து நின்றான். அப்பொழுது சித்திரக்கிரீவன் என்னுங்கபோதராசன் தன் கூட்டத்தோடு ஆகாயத்திற் பறந்துபோகையில், அரிசிக்குறுணியைக் கண்டு, அவற்றைக் கவரவிரும்பியபுறுக்களை நோக்கி, என் சிநேகிதரே! சாவதானமாயிருங்கள்! சனங்களில்லாத இவ்விடத்திலே இந்த அரிசிக்குறுணி எப்படிவரும்? இதனைப்பற்றி ஆராய்தல் வேண்டும். இது நன்மையின் பொருட்டன்று. இந்த அரிசிமேலாசைநாசத்துக்கிடனாகும் என்றெண்ணுகின்றேன்.

ங. ஒரு வழிப்போக்கன் பொற்கங்கணவிருப்பினாலே கடத்தற்கரியசேற்றிலே அமிழ்ந்திக் கிழப்புலியினாலே கொலையுண்டான். இப்படியே எங்களுக்கும் சம்பவிக்கும் என்றது.

இஃது எப்படி என்று புறுக்கள் கேட்கப் புறவரசு சொல்லுகின்றது:—

வியாக்கிரபதிகர்கள்கதை.

நான் ஒருமுறை தென்காட்டிலே பிரயாணஞ் செய்யும்போது ஒரு கிழப்புலியைக் கண்டேன். அந்தக்கிழப்புலி கையிலே தருப்பையையிட்டுக்கொண்டு, ஸ்நானஞ் செய்து நீர்க்கரையிலே இருந்து வழிப்போக்கர்களை நோக்கித் தனித்தனியே வழிச்செல்வோனே! இந்தப் பொற்கங்கணத்தை எடுத்துக்கொள்; என்று சொல்லிக்கொண்டிருந்தது. அப்போது புலியை அடைந்து அதனை வாங்குதற்கு ஒவ்வொருவனும் பயப்பட்டான். பின்னர் ஆசையினாலே மயங்கிய வழிப்போக்கன் ஒருவன் அதனைக் குறித்து ஆலோசிப்பானாயினான். இது நல்ல அதிட்டத்தினால் எனக்குச்சம்பவிக்கின்றது. ஆயினும், இதிற் சந்தேகம் இருக்கின்றமையால் முயற்சி செய்யலாகாது.

௧. பகைவனிடத்திலிருந்து விருப்புள்ள ஒன்றைப் பெற்றுக்கொண்டாலும்,தீங்கேயன்றி அதனாலே நற்கதி உண்டாகாது; விஷத்தோடு சேர்ந்திருக்குமாயின்; அமிர்தந் தானும் அழிவுக்குக் காரணமாகும்.

இன்னுஞ்செல்வத்தைத் தேடுகின்ற ஒவ்வொரு முயற்சியிலுஞ் சந்தேகம் இருக்கின்றது.

௨. என்னை? சந்தேகத்தை அடையாமல் ஒருவனுஞ் சுகத்தைக்காணமாட்டான். சந்தேகத்தை அடைந்துஞ் சீவித்திருப்பானாயின், பின்னர்ச் சுகத்தை அடைவான்.

ஆதலால் அதனை ஆராயக்கடவேன் என்று ஆலோசித்துப் புலியை நோக்கிப் "பொற்கங்கணம் எங்கே?" என்று வெளிப்படையாய்க் கேட்டான். புலி தன் கையை நீட்டி அதனைக் காட்டிற்று. வழிப்போக்கன் கொல்லுந் தொழிலையுடைய உன்னிடத்திலே எனக்கு எப்படி விசுவாசம் உண்டாகும்? என்றான்.

புலி, அடா! வழிப்போக்கா! கேள்: நான் இளமைப் பருவத்திலே அதிகந் துராசாரமுடையவனாயிருந்து, அநேக மனுஷரையும், மிருகங்களையுங் கொன்று தின்றேன். இதனால் இப்போது புத்திரரையும், மனைவியையும் இழந்து விட்டேன். ஆதலால் வமிசத்தையும் இழந்தவனாயிருக்கின்றேன். "தான தருமாதிகளைச்செய்;" என்று ஒரு தார்மிகர் எனக்கு உபதேசித்ததனால் இப்பொழுது ஸ்நானசீலனும், கொடையாளனுமாயிருக்கின்றேன். அன்றியும் வயோதிகனும், நகதந்தங்கள் விழுந்தவனுமாயிருக்கின்றேன். இவ்வியல்புடைய நான் விசுவாசகாதகனாவது எப்படி?

௩. யாகம், வேதமோதல், தானந், தபம், சத்தியம், திடம், பொறுமை, உலோபமின்மை என்னும் இவைகள் அட்டதருமங்கள் என்று எண்ணப்பட்டிருக்கின்றன.

௪. இவற்றுள், முன்னைய நான்கும் இடம்பத்துக்காகச் செய்யப்படுகின்றன. பின்னைய நான்கும் மகான்களுடைய மனத்திலே நிலைத்திருக்கின்றன.

என் கையில் இருக்கும் இந்தப் பொற்கங்கணத்தையும் யாருக்காவது கொடுக்கவிரும்புகின்றேன். ஆதலால் என்னிடத்தில் உலோபகுணம் இல்லை. அப்படியாயினும், புலி மனுஷரைக் கொன்று தின்பது." என்னும் உலக வார்த்தையைத் தடுத்தலரிது.

ரு. ஆராய்வில்லாமல் முன்னோரையே அனுசரிக்கும் இயல்புடைய சனங்கள் ஒரு குட்டினி தருமங்களை உபதேசித்தாலும், அவளைப் பிரமாணமாகக் கொள்ளார்கள்; பிராமணன் பசுக்களைக்கொல்லுகிறவனாயிருந்தாலும், அவனையே பிரமாணமாகக் கொள்ளுவார்கள்.

நானுந்தருமசாஸ்திரங்களை வாசித்திருக்கின்றேன் கேள்;—

சா. தங்கள் உயிர் தங்களுக்கு எப்படி அருமையாயிருக்கின்றதோ அப்படியே பிறர்க்கும் அருமையாயிருக்கும்; பெரியோர் தங்கள் உயிர்க்குச் செய்வதுபோல எல்லா உயிர்களுக்குந் தயை செய்கிறார்கள்.

எ. மேலும், கொடுக்கும்போதும், கொடாமல் மறுக்கும்போதும், இன்பத்திலுந், துன்பத்திலும், விருப்பிலும், வெறுப்பிலும், நல்ல மனுடர் தம்மைப்போல யாவரையும் பாவித்துக்கொள்ளுகின்றார்கள்.

அ. இன்னும், பிறன்மனைவியைத் தன்மாதாப் போலவும், பிறன் பொருளை மட்பிண்டம் போலவுஞ், சகல உயிர்களையுந் தன்னுயிர் போலவும் எவன் காண்கிறானோ அவனே கல்விமான்.

நீயோ மிகவும் வறிஞனாய்க் காணப்படுகின்றாய். ஆதலின், இதனை உனக்கே தரப் பிரயத்தனப்படுகின்றேன்.

கூ. "குந்திபுத்திரா! வறியவர்களைப் பாதுகாத்துக்கொள்: செல்வர்களுக்குத் திரவியத்தைக் கொடாதே; வியாதியுடையவனுக்கே மருந்துகொடுக்கப்படவேண்டும். வியாதியில்லாதவனுக்கு மருந்துகொடுத்தலினாற் பிரயோசனம் யாது?" என்று பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

கo. இன்னும், தனக்கு முன்னுபகாரஞ் செய்யாத சற்பாத்திரத்திலே கொடுக்கவேண்டியது என்று எநதத்

தானம் ஏற்றகாலத்திலும், இடத்திலுங் கொடுக்கப்படுகின்றதோ அந்தத் தானமே நீதியையுடையது என்று அறியப்படுகின்றது.

ஆதலால் நீ போய் இந்தக் குளத்திலே முழுகிவந்து என் பொற்கங்கணத்தை ஏற்றுக்கொள் என்று சொல்லிற்று. அப்பொழுது அவ்வழிப்போக்கன்எவ்வளவு விரைவிற் புலியின் வார்த்தையை நம்பிப் பேராசையினாற் குளத்திலே ஸ்நானஞ் செய்யும்படி பிரவேசித்தானோ அவ்வளவு பெருஞ்சேற்றில் அமிழ்ந்தித் தப்பியோட முடியாதவனாயினான். புலியானது அவன் சேற்றில் விழுந்ததைக் கண்டு, அடடா! பெருஞ்சேற்றில் விழுந்திருக்கின்றாய்! அதிலிருந்து உன்னைத் தூக்கிவிடுகிறேன். என்றுசொல்லி மெல்ல மெல்லச் சமீபித்துப் போய் அவனைப்பிடித்தது. வழிப்போக்கன் என் மனவாஞ்சை இப்படி முடிந்ததே என்று சிந்திப்பானாயினான்.

கக. துராத்துமாவுக்குத் தர்மசாஸ்திரத்தைப் படித்தலும், வேதத்தை அத்தியயனஞ்செய்தலும் நல்லொழுக்கத்திற்குக் காரணமாகாது. பசுவின்பால் இயல்பிலே மதுரமாய் இருத்தல்போல இதனிடத்தும் இயல்பாகிய தீக்குணமே மேற்படும்.

கஉ. மேலும், இந்திரியங்களை அடக்கிக்கொள்ள இயலாத மனமுடையவர்களுக்குச் செய்த செய்கையானது யானையை ஸ்நானஞ் செய்வித்தல்போலிருக்கின்றது. பெரும்பாலும் அநுட்டித்தலில்லாத அறிவானது நாயகசினேகமில்லாத ஸ்திரியினுடைய ஆபரணத்தின் பாரம் போலிருக்கின்றது.

கொல்லுந் தொழிலையுடைய இந்தத் துராத்துமாவிலே நான் விசுவாசம்வைத்தது நன்றன்று.

கங. கொம்புள்ள மிருகங்களிலும், நதிகளிலும், நகங்களுள்ள மிருகங்களிலும், ஆயுதங்களைக் கையில் வைத்திருக்கிறவர்களிலும், ஸ்திரிகளிலும், இராசகுலத்திலும் ஒருகாலமும் விசுவாசம் வைத்தலாகாது.

கச. ஒவ்வொன்றற்குமுரிய இயல்பான குணங்களே யன்றி மற்றையகுணங்கள் பரீக்ஷிக்கவேண்டியன அல்ல எல்லாக்குணங்களினும் இயல்பான குணங்களே மேற்பட்டுச் சிரசிலே நிற்கின்றன.

கரு. இன்னும், ஆகாயத்தில் உலாவித்திரிவதும், பாவங்களைக் கெடுப்பனவாயும் ஆயிரங்கிரணங்களையுடையனவாயுமிருக்கிற சோதிகளுக்கிடையே செல்வதுமாகிய சந்திரனை அதன் விதிவசத்தினாலே இராகு பிடிக்கின்றது. ஆதலால் விதிவசத்தை விலக்குதற்கு வல்லவன் யாவன்?

என்று இப்படியே சிந்தித்துக்கொண்டிருக்கும் போது புலியினாற் கொன்று தின்னப்பட்டான். ஆதலினாற்றான் "ஒரு வழிப்போக்கன் பொற்கங்கண விருப்பினாலே கிழப் புலியினாற் கொலையுண்டான்" என்பதுசொல்லலுற்றேன்.

ஆதலால் ஒருகாலமும் விசாரியாமல் யாதொரு தொழிலையுஞ் செய்யலாகாது.

கசு. நன்றாய்ச் சீரணித்த போசனமும், ஆழிய கல்வியுள்ள புத்திரனும், நன்கு ஆளப்பட்ட மனைவியும், சிரத்தையோடு சேவிக்கப்பட்ட இராசாவும் போல, ஆராய்ந்து சொல்லப்பட்ட வார்த்தையும், முற்ற விசாரித்துச், செய்யப்பட்ட செய்கையும் நெடுங்காலஞ் சென்றாலும் வேறுபடமாட்டா.

இந்த வசனத்தைக் கேட்டுப் புறாக்களில் ஒன்று, "இப்படி ஏன் சொல்லுகிறாய்?"

கஎ. ஆபத்துக் காலத்திலேதான் மூத்தோருடைய வார்த்தையை அங்கீகரித்தல் வேண்டும். எவ்விடத்திலும் இப்படியே ஆராய்ப்புகுந்தாற் போசனந்தானுஞ் செய்தல் கூடாது.

கஅ. இவ்வுலகத்திலே அன்னம், பானம் முதலிய எல்லாம் ஐயத்திற்கிடனாக இருக்கும். ஆதலால், எதிலே முயற்சிசெய்யலாம்! எப்படிச் சீவிக்கலாம்!

ககூ. பிறனுடைய மகிமையிற் பொறாமைகொள்ளுகிறவனும், உலோபகுணமுடையவனும், சந்தோஷமில்லாதவனும், கோபமுள்ளவனும், நித்தியசந்தேகமுள்ளவனும்

பிறன்பொருள்கொண்டு சீவிக்கிறவனுமாகிய அறுவரும் நித்தியமுந் துக்கத்தை அநுபவிக்கிறவர்களேயாம். என்று கர்வத்தோடுஞ் சொல்லிற்று.

இதனைக் கேட்டுப் புறாக்களெல்லாம் அரிசி சிதறிய இடத்திலே போயிருந்தன.

உ௦. அநேக சாஸ்திரங்களைப் படித்தறிந்தவர்களும், பலவற்றைக் கேட்டுணர்ந்தவர்களும், ஐயங்களை அறுக்க வல்லவர்களுமாகிய மகான்களாயிருந்தாலும், ஆசையினாலே மோகமடைந்தவர்கள் வருந்துவார்கள்.

உக. இன்னும், உலோபத்தினாலே கோபமுங், காமமும், மயக்கமும், நாசமும் உண்டாகின்றன. உலோபமே பாவத்திற்குக் காரணமாகும்.

அந்தப் புறாக்கள் உலோபகுணத்தினாலே வலையிற் சிக்குண்டன. அப்போது அவைகளெல்லாந் தங்களை நிலத்தில் இறங்கும்படி புத்திசொல்லி ஏவிவிட்ட புறாவையே நிந்தித்தன.

உஉ. ஒரு மனிதன் ஒரு கூட்டத்துக்கு முன்னே போதலாகாது; போனவிடத்து முயற்சி செய்யப்பட்ட காரியம் அநுகூலமாயின், சகலருக்கும் பலன் சமமாயிருக்கும்: காரியம் பிரதிகூலமாயின், முன்னாய்ப் போனவன்றானே தண்டிக்கப்படுவான்.

உங. இந்திரியங்களை அடக்காமலிருத்தலே ஆபத்துக்கு வழி; அவைகளை அடக்குதலே பாக்கியத்துக்கு வழி இவற்றுள், எந்த வழியிலே போதற்குப் பிரியமோ அந்த வழியிற் செல்லுக.

அவைகளுடைய நிந்தமொழிகளைக் கபோதராசனாகிய சித்திரக்கிரீவன் கேட்டு, இது அந்தப் புறாவின் குற்றம் அன்று.

உச. வரவேண்டிய ஆபத்துக்களுக்கு நற்பொருளுங் காரணமாகின்றது. பசுக்கன்றைக் கட்டுதற்கு அதன்றாயின்காலே தம்பமாகின்றது.

உ௫. பின்னும், ஆபத்திலே அகப்பட்டவர்களை அதிலிருந்து நீக்குஞ் சமர்த்தனே சுற்றத்தவனும். பயமடைந்தவர்களை அதினின்றுங் காக்கவேண்டிய சமயத்திலே தாமசஞ்செய்பவன் சுற்றத்தவனல்லன்.

ஆபத்துக்காலத்திலே மனந்தளர்தல் வீரமில்லாத புருடனுடைய இலக்கணம். ஆதலால் இந்தச் சமயத்திலே தைரியங்கொண்டு பிரதீகாரஞ் செய்தற்கு நினைக்கவேண்டும்.

உ௬. ஆபத்துக் காலத்திலே தைரியமும், செல்வத்திலே பொறுமையும், நியாயசபையிலே வாய்ச்சாமர்த்தியமும், போரில் வீரமும், புகழில் விருப்பமும், கல்விகற்றலிலே முயற்சியுமாகிய இவைகள் மகாத்துமாக்களுக்கு இயல்பிலே அமைந்துள்ளனவாம்.

உ௭. ஆக்கத்திலே சந்தோஷம் இல்லாதவனும், கேட்டிலே துக்கம் இல்லாதவனும், போரிலே மகாவீரனுமாகிய திரிலோக திலகனுயுள்ள புத்திரனைப் பெறுகின்ற மாதாவைக் காணுதலரிது.

உ௮. பொருளைத் தேடவிரும்புகின்ற மனுஷன், நித்திரை, சோர்வு, பயம், கோபம், ஆலசியம், இழுக்கம் என்னும் ஆறுகுற்றங்களையும் விலக்கல்வேண்டும்.

இப்போது நாமெல்லாம் ஓரேமனமுடையவர்களாய் வலையை எடுத்துக்கொண்டு மேலேபறந்து போகக்கடவேம்.

உ௯. சிறியனவாயிருந்தாலும், பலவஸ்துக்கள் ஒருங்கு கூடுமாயின், பெருங்காரியத்தையும் முடித்தற்கு வல்லனவாகும். பெரிய மதயானைகள் சிறிய புற்களினாற் திரித்த கயிற்றிற் கட்டப்படுகின்றன.

௩0. ஒருவன் அற்பமனுஷனாயிருந்தாலுந் தன் குலத்தவர்களோடு சேர்ந்திருத்தல் உத்தமம். உமியினின்றும் பிரிந்தனவாயின் அரிசி ஒருகாலமும் முளைக்கமாட்டாது. என்றது.

இப்படியே பறவைகளெல்லாஞ் சேர்ந்து ஆலோசித்து வலையை எடுத்துக்கொண்டு பறந்துபோயின. பின்னர் அந்த வேட்டன் அதிதூரத்திலே தன்வலையை அபகரித்துக்கொண்டு போகின்ற பறவைகளைக் கண்டு அவைகளின் பின்னே ஓடிப் போகும்போது;

௩௧. "பறவைகளாகிய இவைகள் ஒருங்குகூடி என் வலையை எடுத்துக்கொண்டு போகின்றன. ஆயினும், இவைகள் எப்பொழுது கீழே இறங்குமோ அப்பொழுது என்வலைகள் என்னிடத்திலே வந்துசேரும்."

என்று நினைத்துக்கொண்டு போனான். பறவைகளோ கண்ணுக்கெட்டாமல் வெகுதூரத்திற் போயின. பின்னர் வேடனும் அவைகளைப் பின்னே தொடராது திரும்பினான். பேராசையுள்ள வேடன் திரும்பிப்போனதைப் புறாக்கள் கண்டு, இப்போது செய்வதற்கு உசிதமான காரியம் யாது? என்று கேட்கச் சித்திரக்கிரீவன் அவைகளைநோக்கி,

௩௨. மாதா, மித்திரன், பிதா என்னும் இவர்கள் மூவரும் இயல்பிலே நன்மையைச் செய்கிறவர்களாய் இருக்கின்றார்கள்; மற்றையோர்களோ காரியங்களைக் குறித்துங் காரணங்களைக் குறித்தும் நன்மையைச் செய்கிறவர்களாய் இருக்கின்றார்கள்.

என்னுடைய நண்பனாகிய இரணியகன் என்னும் மூஷிகராசன் கண்டகியாற்றங்கரையிலே சித்திர வனத்திலே இருக்கிறான்; அவன் எங்களுடைய வலையை வெட்டிவிடுவான். என்றுசொல்லி அவைகளெல்லாவற்றையுங் கூட்டிக்கொண்டு இரணியகனுடைய வாசஸ்தானத்திற்குச் சமீபமாகப் போயிற்று. எப்பொழுதும் அபாயஞ் சம்பவிக்கும் என்ற சந்தேகத்தினாலே நூறு துவாரத்தையுடையதாக ஒரு வளையைத் தோண்டி, அதிலே வாசஞ்செய்த இரணியகன் புறாக்கள் வந்துவிழுந்ததைக்கண்டு, பயந்து மௌனமாயிருந்தது.

சித்திரக்கிரீவன், இரணியகனை நோக்கி, மித்திரா! நீ ஏன் எங்களோடு பேசாமலிருக்கின்றாய்? என்று கேட்டது. அப்பொழுது இரணியகன் அதன்குரலை உய்த்துணர்ந்து விரைந்து வெளியில் வந்து ஆகா! எனது பிரியசிநேகிதனாகிய சித்திரக்கிரீவன் இங்கே வரப்பெறுதலினால் யான் புண்ணியவானாயிருக்கின்றேன்.

௩௩. மித்திர சம்பாஷணையும், மித்திர சகவாசமும், மித்திரக் கொண்டாட்டமுமுடையவன் எவனோ அவனினும் புண்ணியவான் இவ்வுலகத்தில் இல்லை.

என்று சொல்லிப் பின்னர் வலையிலே சிக்குண்டிருக்கின்ற அவைகளைப் பார்த்து, ஒருகணப்பொழுது அதிசயங்கொண்டு நின்று, சிநேகிதனே! இஃது என்ன? என்று கேட்டது. சித்திரக்கிரீவன், எங்களுடைய பூர்வசென்ம கர்மபலன் இதுதான்.

௩௪. எவன் தான்றானே எக்காரணத்தினால் எவனால் எப்படி எப்பொழுது எவ்விடத்தில் எவ்வளவு நன்மைதீமைகளைச் செய்தனனோ அவனே அக்காரணத்தினால் அவனால் அப்படி அப்போது அவ்விடத்தில் அவ்வளவு நன்மைதீமைகள் தெய்வவசத்தினால் அடைகின்றனன்.

௩௫. உரோகம், துன்பம், பரிதாபம், சிறை என்னும் இவைகள் ஆன்மாக்களுடைய குற்றம் என்னும் மரத்திலிருந்து பழுக்கும் பழங்களாம்.

இதனைக் கேட்டு மூஷிகராசன் சித்திரக்கிரீவனுடைய வலையை அறுக்கும்படி அதிசீக்கிரமாக ஓடிப்போயிற்று. சித்திரக்கிரீவன் அதனைக் கண்டு மித்திரா! அப்படியன்று; முதல் என்னையே புகலிடம் என்று வந்திருக்கின்ற இவைகளுடைய பாசங்களை முழுமையும் வெட்டிவிடு; அதன்பின் என்னுடைய பாசத்தை அறு; என்றது.

இரணியகன், நானோ அற்பவலிமையுடையேன்; என் பற்களோ மிகமெல்லியவைகள்; ஆதலின், இவைகளுடைய பாசங்களை அறுத்துவிடுதற்கு நான் சமர்த்தனாவது எப்படி? என்னுடைய பற்கள் எதுவரையும் முரியாமல் இருக்குமோ அதுவரையும் உன்னுடைய வலையை மாத்திரம் அறுத்துவிடுகிறேன். அதன்பின் அவைகளுடைய பாசங்களையும் இயன்றமட்டும் அறுத்துவிடுவேன் என்று சொல்லிற்று.

சித்திரக்கிரீவன், அப்படியாயினும் உன்னால் இயன்றமட்டும் இவைகளுடைய வலைகளை வெட்டிவிடு என்றது. இரணியகன் தம்மை அடைந்தவர்களைக் காக்கும்பொருட்டுத் தம்மை இழந்துவிடுதல் நீதிசாத்திர வித்துவான்களுக்குச் சம்மதமன்று.

௩௬. ஒருமனிதன் ஆபத்திநிமித்தம் செல்வத்தைக் காத்துவைத்துக்கொள்ளவேண்டும், செல்வத்தினும் மனைவி

னைக் காத்துக்கொள்ளவேண்டும். செல்வத்தினும் மனைவியினும்பார்க்க நித்தியமுந் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும்.

௩௭. மேலும், நம்முயிர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இவைகளின் நிலைக்குக் காரணமாயுள்ளது; அதனை அழிப்பவன் எல்லாவற்றையும் அழிப்பவனாவன், அதனைக் காப்பவன் எல்லாவற்றையுங் காப்பவனாவன். என்று சொல்லிற்று.

சித்திரக்கிரீவன், மித்திரா! இது நீதியேயாயினும், என்னை அடைந்தவர்களுடைய துக்கத்தை யான் தாங்கிக் கொள்ளுதற்கு எப்படியுஞ் சமர்த்தனல்லேன். அதனாற்றான் இதனைச் சொல்லுகின்றேன்.

௩௮. புத்திமான் பிறன்பொருட்டுத் திரவியங்களையுந் தன்னுயிரையும் விட்டுவிடலாம். நீதிமான் விநாசம் வந்த காலத்தில் எல்லாவற்றையும் விட்டுவிடுதல் உத்தமம்.

இங்கே ஒப்பில்லாத நியாயம் ஒன்றுசொல்லுகின்றேன் கேள்:—

௩௯. இவைகள், சாதியிலுஞ், செல்வத்திலும், வலிமையிலும் எனக்குச் சமமாயிருக்கின்றன. ஆதலால் என்னுடைய பிரபுத்தன்மையின் பலன் எப்பொழுது உண்டாகும்?

௪0. இவைகள் ஆபத்து வந்தகாலத்திலன்றி என் சமீபத்தைவிட்டுப் பிரியமாட்டா. என்னையடைந்த இவைகளை என்னுயிரை விடுதலினாலாவது சீவிக்கும்படிசெய்;

௪௧. இன்னும், மாம்சம், மூத்திரம், மலம், எலும்பு என்பவைகளால் ஆக்கப்பட்டு அழிகின்ற சரீரத்திலே அபேட்சையைவிட்டு, மித்திரா! என்னுடைய கீர்த்தியைப் பரிபாலனஞ் செய்துகொள்.

௪௨. இன்னும், நிலையின்மையினின்று நிலையுண்மையும் மலவாகியினாற் பரிசுத்தமும், உடம்பினின்று கீர்த்தியும் பெறக்கூடுமாயின்; பின் யாதுதான் பெறுதல்கூடாது!

௪௩. சரீரத்துக்கும், குணங்களுக்குமுள்ள பேதம் மிகப்பெரியது; சரீரமோ க்ஷணப்பொழுதில் அழிகின்

றது. குணங்களோ கற்பாந்தம்வரையும் நிற்கின்றன. என்றது.

இவைகளை இரணியகன் கேட்டு மனமகிழ்ந்து, மயிர்சிலிர்த்து, மித்திரா! நல்லது! நல்லது! உன்னை அடைந்தவர்களுக்கு நீ செய்கின்ற தயையினாலே மூவுலகத்துக்கும் பிரபுத்தன்மை உன்னிடத்திலேயே பொருந்தியிருக்கின்றது என்று சொல்லி அவைகளெல்லாவற்றினதுங் கட்டுகளை வெட்டிவிட்டது. அதன்பின் அவைகளை அன்போடும் பூசித்துச் சித்திரக்கிரீவனை நோக்கி, மித்திரா! எப்படியும் இங்கே வலையிற் சிக்குண்டது குற்றம் என்றெண்ணி உன்னை அவமதித்தலாகாது.

சச. நூறுயோசனை தூரத்துக்கப்பாலிருந்து இரையைக் காண்கின்ற பறவை, தனக்கு முடிவுகாலம் வந்ததாயின்; தன்னைப் பிடிக்கும்படி வைத்த வலையைக் காணமாட்டாது.

சரு. இன்னும், சந்திரசூரியர்களை இராகுகேதுக்கள் பீடைசெய்தலையும், யானைகளும், பாம்புகளுங் கட்டுப்படுதலையும், புத்திமான்களுக்கு, வறுமைவருதலையும் பார்த்து அம்மம்ம! விதியே வலிமையுடையது என்று நான் எண்ணுகின்றேன்.

சசு. பறவைகள் ஆகாயத்திலே தனிமையாய் விநோதஞ்செய்பவைகளாயிருப்பினும் ஆபத்தினை அடைகின்றன. மீன்கள் சமுத்திரத்தின் ஆழமான சலத்தினின்றும் உபாயத்தினாற் பிடிக்கப்படுகின்றன. நியாயப்பிரமாணங்கள் அநீதியாய் விதிக்கப்பட்டிருக்கும்போது அவைகளினாற் சன்மார்க்கம் எப்படி உண்டாகும்? காலமானது தூரத்தினின்றும் ஆபத்திலே கரத்தை நீட்டிக் கிரகிக்கின்றது. எந்தத் தானத்தினாலே நற்குணம் அடையலாம் என்று,

இப்படியே உபதேசித்து அதிதிசற்காரஞ்செய்து தழுவிச் சித்திரக்கிரீவனை அனுப்பிவிட்டது. அதுவுந் தன்பரிவாரத்தோடு தனக்கிஷ்டமான தேசத்திற்குப் போயிற்று. இரணியகனுந் தன் வளையிற் பிரவேசித்தது.

௪எ. ஆகா! மித்திரர்கள் எவ்வளவு உபகாரங்களையுஞ் செய்யவல்லவர்களாயிருக்கின்றார்கள். பார்; ஒரு மூஷிகத்தின் சிநேகத்தினாற் புறாக்கள் தங்கள் பாசங்களினின்றும் மோசனமடைந்தன.

இங்கே நடந்த விருத்தாந்தங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த இலகுபதனன் என்னுங் காகம் ஆச்சரியம் அடைந்து ஆகா! இரணியகா! நீயே புகழப்படத் தக்கவனாயிருக்கின்றாய்! ஆதலால் நானும் உன்னோடு சிநேகமாயிருக்க விரும்புகின்றேன். எனக்குச் சிநேகத்தினால் அநுக்கிரகஞ் செய்தற்கு நீயே யோக்கியன் என்று சொல்லிற்று. இரணியகனும் இதனைக்கேட்டு வளையிலிருந்து வெளியில் வந்து நீயார்? என்று கேட்டது. அது, இலகுபதனன் என்னும் காகம் நான் என்றது. இதனைக் கேட்ட இரணியகன் சிரித்து, எனக்கு உன்னோடு சிநேகம் யாது?

௪அ. புத்திமானானவன் உலகத்திலே எப்பொருள் எதனோடு சேரத்தகுந்ததோ அப்பொருளை அதனோடு சேர்க்கவேண்டும். நானோ உண்ணப்படும்பொருள்; நீயோ உண்பவன்; பின் எங்களுள்ளே இஷ்டம் எப்படி உண்டாகும்?

௪௯. பின்னும், உணவுக்கும், அதனை உண்பவனுக்கும் இடையிலிருக்கும் பிரீதி கேட்டுக்கே காரணமாகும். நரியினுடைய தந்திரத்தினால் வலையில் அகப்பட்ட மான் ஒன்று காகத்தினாற் காக்கப்பட்டது. என்றது.

இஃது எப்படி என்று காகங்கேட்க இரணியகன் சொல்லுகின்றது.

காகமிருகசிருகாலர்கள்கதை.

மகததேசத்திலே சம்பகாவதி என்னும் பெயருடைய பெரிய காடு ஒன்று இருந்தது. அங்கே நெடுங்காலமாகப் பெருஞ்சிநேகத்துடன் ஒரு மானும், காகமும் வாசஞ்செய்து வந்தன. அந்தமான் சந்தோஷமுஞ் சரீரபுஷ்டியுமுடையதாகித் தன்னிச்சைப்படியே காட்டில் உலாவிக்கொண்டிருக்கையில் ஒருநாள் ஒருநரி அதனைக்கண்டு, ஓகோ! இதனு

டைய இனிய மாமிசத்தை யான் உண்பது எப்படி? ஆயினும், முன்னரே இதற்கு என்னில் விசுவாசம் உண்டாகும்படிசெய்வேன் என்று சிந்தித்து அதற்குச் சமீபமாகப்போய், மித்திரா! உன் க்ஷேமம் எப்படி" என்று கேட்டது.

மான், நீ, யார்? என்று கேட்க, அது, நான் க்ஷுத்திரபுத்தி என்னும் நாமமுடைய நரி. இந்தக் காட்டிலே சுற்றத்தவர்களில்லாமையினால் இறந்தவனைப்போல வசித்துவருகிறேன்: இப்பொழுது உன்னை நண்பனாக அடைந்ததனால் இன்னுஞ் சுற்றத்தாரோடு சிவலோகத்திற் பிரவேசித்தவனாயிருக்கின்றேன்; இனி உன்னை அநுசரித்து நடப்பதே எனக்குக் கடன் என்றது. மானும், அப்படியே யாகுக என்றது. பின்னர்ச் சூரியன் அத்தமித்தபோது மான் நரியையுங் கூட்டிக்கொண்டு தன்னுடைய வாசஸ்தானத்திற்குப் போயிற்று. அங்குள்ள மரக்கொம்பிலே மானுக்கு நெடுங்கால சிநேகிதனாக இருந்த சுபுத்தி என்னுங் காகம், அவ்விரண்டையுங் கண்டு, மானை நோக்கி, மித்திரா! இந்த இரண்டாமாள் யார்? என்று கேட்டது. மான், இது நம்முடைய சிநேகத்தை விரும்பிவந்திருக்கும் நரி; என்றது. காகம், காரணமின்றி வந்தவனோடு சிநேகங்கொள்ளுதல் யோக்கியமன்று; ஆதலால் நீ செய்தது நன்றன்று.

க. அறியப்படாத குலத்தையுங் குணத்தையுமுடையவன் எவனாயிருந்தாலும், அவன் வசிக்க இடங்கொடுத்தலாகாது; சரற்கவன் என்னுங் கிருத்திரம் பூனைக்கு இடங்கொடுத்த குற்றத்தினாற் கொல்லப்பட்டது என்றது.

அவ்விரண்டும் இஃது எப்படி என்றுகேட்கக் காகஞ் சொல்லுகின்றது.

சகுனிமார்ச்சாரபக்ஷிகள் கதை.

கங்கையாற்றங்கரையிலே கிருத்திரகூடம் என்னும் மலையிலே பெரிய பர்க்கடிமரம் ஒன்று இருக்கின்றது. அந்த மரப்பொந்திலே விதியின்கொடுமையினால் விழுந்த நகத்தையுங், குருட்டுக்கண்ணையுமுடைய சரற்கவன் என்னுங் கிருத்

திரம் வாசஞ்செய்துவந்தது. அங்கேயுள்ள மற்றைய பறவைகள் அதன் சீவனத்துக்காக இரக்கங்கொண்டு தங்கள் போசனங்களிலிருந்துகொஞ்சங் கொஞ்சங்கொடுத்துவந்தன. அந்தப் போசனங்கொண்டே அதுவுஞ் சீவித்துவந்தது. பின்னொருநாள் தீர்க்ககர்ணன் என்னும் பெயருடைய பூனை ஒன்று பறவைக்குஞ்சுகளைப் பட்சிக்கும் பொருட்டு அங்கேவந்தது.

அப்போது வருகின்ற அந்தப்பூனையைப் பறவைக்குஞ்சுகள் கண்டு பயந்து துக்கித்து ஆரவாரித்தன. அதனைக் கேட்டுச் சரற்கவன், இங்கே வருகிறது யார்? என்று கேட்டது. தீர்க்ககர்ணன் கிருத்திரத்தைக் கண்டு பயந்து, ஆ! நான் கொல்லப்பட்டவனாயிருக்கிறேன்.

க. பயங்கரமானது எவ்வளவும் வராமலிருக்கின்றதோ அவ்வளவும் அதற்குப் பயப்படவேண்டும். வந்த பயங்கரத்தைப் பார்த்து மனிதன் தனக்கு உசிதம் எதுவோ அதனைச் செய்தல்வேண்டும்.

நான் இப்பொழுது அதற்கு அதிசமீபமாயிருத்தலினாலே தப்பியோடவுமாட்டேன்; ஆயினுஞ் சம்பவிக்கவேண்டியது சம்பவிக்கட்டும். என்னை அது நம்பும்படிசெய்துகொண்டே அதற்குச் சமீபமாகப்போவேன் என்றாலோசித்து அதற்குக் கிட்டப்போய்ச், சுவாமியே! உம்மை வாழ்த்துகிறேன் என்றது. கிருத்திரம், நீ யார்? என்று கேட்டது. அது, நான் பூனை என்று சொல்லிற்று. கிருத்திரம், தூரந்திற்போ; அல்லது என்னாற் கொல்லப்படுவாய் என்றது. பூனை, சற்றுநேரம் என்வார்த்தையைக் கேட்கவேண்டும்; கொல்லப்படத்தக்கவனாயின்; கொல்லப்படுவேன்.

உ. எவனாயினுஞ் சாதியினாலே மாத்திரந்தண்டிக்கப்படுதல் அல்லது பூசிக்கப்படுதல் எங்கேயாவது உண்டா? அவனுடைய செய்கைகளைப் பரீட்சித்தறிந்த பின்னரே அவனைத் தண்டிக்கவேண்டும்; அல்லது பூசிக்கவேண்டும் என்றது.

கிருத்திரம், பூனையை நோக்கி, ஏன் வந்தாய்? சொல்லு என்று கேட்டது. பூனை, நான் இந்தக் கங்கையாற்றங்கரையிலே எப்பொழுதும் முழுகி மாமிசபோசனத்தையும் ஒழித்துப் பிரமசரியத்தோடு சாந்திராயணவிரதத்தை அநுட்டி

த்துவருகிறேன்; தருமத்தை அறிந்த உங்களுடைய அன்புக்கும் விசுவாசத்துக்கும் பாத்திரமாயுள்ள பறவைகள், எப்பொழுதும் என் முன்னே நுங் குணராசியைப் பற்றிப் புகழ்ந்து பேசுகின்றன. ஆதலால் அறிவிலும், வயசிலுமுதிர்ந்த உம்மிடத்திலிருந்து தருமங்களைக் கேட்டறியும்பொருட்டு இவ்விடத்துக்கு வந்தேன்; இவ்விதமான தருமங்களை அறிந்திருக்கின்ற நீர் அதிதியாகிய என்னைக் கொல்லும்படி முயற்சிசெய்யலாமா? கிருகஸ்தனுடைய கடமைகளைச் சொல்லுகிறேன் கேளும்;—

ந. தன்வீட்டுக்கு வந்தவன் சத்துருவாயினும், அவனுக்கு அதிதிசற்காரஞ் செய்துமுடித்தலே உசிதம். மரமானது தன்னைத் தறிக்கிறவனுக்கும் நிழலைச் செய்கின்றது.

வீட்டிலே அன்னமில்லையாயின்; பிரியவார்த்தையினாலாவது அதிதியைப் பூசிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ச. புல்லு, வாசஸ்தானம், தண்ணீர், இனியவார்த்தை என்னும் இவைகள் நல்லோருடைய வீட்டிலே ஒருகாலமும் இல்லை என்று மறுக்கப்படத்தக்கவைகளல்ல.

ரு. பின்னும், துர்க்குணமுள்ள பிராணிகளுக்கும் நல்லவர்கள் கிருபை செய்கிறார்கள். சந்திரன் சண்டாளனுடைய வீட்டிலுந் தனது சந்திரிகையை வீசுகின்றதன்றோ!

சா. தன்வீட்டுக்கு வந்தவன் பாலனாயிருந்தாலென்! விருத்தனாயிருந்தாலென்! குமாரனாயிருந்தாலென்! அவனுக்குப் பூசைசெய்தல்வேண்டும். எல்லாருக்கும், வந்தவனே குரு.

எ. வேறும், அதிதியானவன் எந்த வீட்டினின்று தன்னுடைய ஆசை அநுகூலப்படாதவனுய்த் திரும்பிப்போகின்றானோ அந்தவீட்டுக்காரனுக்குப் பாவத்தைக் கொடுத்துவிட்டு, அவனுடைய புண்ணியத்தை எடுத்துக்கொண்டு போகின்றான்.

அ. ஒருவன் தான், உத்தமகுலத்தவனாயிருந்தாலுந் தன் வீட்டுக்கு வந்த நீசனையும் யோக்கியப்படி பூசிக்கவேண்

டும். அதிதியானவன் சகல தேவவடிவமுடையவனன்றோ! என்றது.

கிருத்திரம், பூனையோ மாமிசத்தில் ஆசையுடையது; இங்கே பறவைக்குஞ்சுகளும் இருக்கின்றன அதனாலேதான் இப்படிச் சொல்லுகிறேன் என்றது. பூனை இதனைக்கேட்டு, மண்ணிலே அடித்துக் கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று காதைப்பொத்தி நான் தருமசாஸ்திரங்களைக் கேட்டு ஆசையும் நீங்கிச் செயற்கரிய சாந்திராயண விரதத்தையுஞ் செய்து முடித்திருக்கிறேன்; ஒன்றோடொன்று மாறுபடுகின்ற தருமசாஸ்திரங்களுங், கொல்லாமையே பரமதருமம் என்னும் இதிலே ஒத்தகருத்துடையனவாய் இருக்கின்றன.

௯. எல்லாக்கொலையையும் விலக்கினவர்களும், எல்லாவற்றையுந் தாங்குபவர்களும், எல்லார்க்கும் புகலிடமானவர்களும் எவர்களோ அவர்கள் சுவர்க்கத்துக்குப் போகின்றவர்களாயிருக்கின்றார்கள்

௧௦. தருமம் என்று சொல்லப்படுகின்ற நண்பன் ஒருவனே மரணத்திலும் பின்றொடர்ந்து வருகின்றான். மற்றவைகளெல்லாம் உடம்புடனே அழிந்துபோகின்றன.

௧௧. மாமிசத்தை உண்ணும் உயிர்க்கும், உண்ணப்படும் மாமிசத்துக்கும் உள்ள பேதத்தைப் பார்; ஒன்றுக்குக் கணப்பொழுதுக்குச் சந்தோஷம்: மற்றையது உயிரை விடுகின்றது,

௧௨. ஒருமனிதன் தனக்கு மரணம் வரும் என்றெண்ணி எந்தத்துக்கத்தை அடைகின்றானோ அந்தத் துக்கத்தைப்பற்றிய அனுமானத்தாற் பிறனையுங் காத்துக்கொள்ளவேண்டும்.

௧௩. இன்னுங் கேள்; ஒருமிருகந் தன்னியல்பின்படியே காட்டிலே முளைத்த புல்லு முதலியவற்றை உண்டு தன் வயிற்றை நிரப்புகின்றது. அதற்கு விரோதமாகப் பெரும் பாதகஞ் செய்பவன்யாவன்? என்றது.

இப்படியே அந்தப் பூனை கிருத்திரத்துக்கு நம்பிக்கையை உண்டாக்கி, அம்மரப்பொந்திலே இருந்து சிலநாள் சென்றபின் பறவைக்குஞ்சுகளைத் தன்பொந்திலே கொண்டு

வந்து நாடோறும் உண்டுவந்தது. பின்னர்க்குஞ்சுகளை இழந்த பறவைகள் சோகத்தினலே வருந்திப் புலம்பி இங்கும் அங்கும் விசாரணைசெய்யும்படிதொடங்கின. பூனை இதனை அறிந்து பொந்தினின்றும் புறப்பட்டுத் தப்பியோடிற்று.

பின்னர் அங்கும் இங்குந் தேடித்திரியும் பறவைகள் அந்த மரப்பொந்திலே குஞ்சுகளுடைய எலும்புகளைக்கண்டு இந்தச் சரற்கவன் என்னுங் கிருத்திரந்தானே எங்கள் குஞ்சுகள் எல்லாவற்றையுங் கொன்று தின்றுவிட்டது என்று நிச்சயித்து எல்லாங்கூடிவெளியேவந்து கிருத்திரத்தையே கொன்றன. ஆதலாற்றான், அறியப்படாத குலத்தையுங் குணத்தையுமுடையவன் எவனாயிருந்தாலும் அவன் வசிக்க இடங்கொடுத்தலாகாது என்பது சொல்லுகிறேன் என்றது.

நரியானது, இதனைக் கேட்டுக் கோபங்கொண்டு, காகத்தை நோக்கி, நீரும், மானைக்கண்ட முதலாவது தினத்திலே அதன் குலத்தையுந் தொழிலையும் அறியாதவராகியே இருந்தீர். பின் உம்முடன் இதன் சிநேகத்தொடர்பு மேன்மேலும் எப்படி வளர்கின்றது?

கச. எவ்விடத்தில் வித்துவான் இல்லையோ அவ்விடத்தில் அற்ப்புத்திமானும் புகழப்படத்தக்கவன். மரமில்லாத தேசத்திலே ஆமணக்கே மரமாகின்றது.

கரு. பின்னும், இவன் நம்மவனோ பிறனோ என்றெண்ணுதல் அற்பபுத்திமானுடைய எண்ணமாம். உதாரநடையுடையவர்களுக்கு இந்தப் பூமிமுழுவதுங் குடும்பமாக இருக்கின்றது.

எனக்கு மான் எப்படிப் பந்துவாயிருக்கின்றதோ அப்படியே நீயும் இரு;' என்றது. அப்போது மான், இந்த உத்தரங்களிற்ற் பிரயோசனம் யாது? நாமெல்லாம் ஓரிடத்திலே வாசஞ்செய்து நம்பிக்கையான சம்பாஷணையோடு சுகங்களை அநுபவித்துக்கொண்டு காலங்கழிக்கக்கடவோம்.

கசு. எவனுக்காயினும், ஒருவன் சத்துருவுமல்லன்; ஒருவன் மித்திரனுமல்லன். சத்துருக்களும் மித்திரர்களும் ஒவ்வொருவனுக்கும் வியவகாரத்தினால் உண்டாகின்றார்கள் என்றது.

காகமும், அப்படியேயாகுக என்றது. பின்னர் விடியற்காலத்திலே அவைகளெல்லாந் தங்கள் தங்களுக்குப் பிரியமுள்ள தேசங்களுக்குப்போயின. பின்னொருநாள்நரியானது மானை நோக்கி, மித்திரா! இந்தக்காட்டிலே ஒரு பக்கத்திலே பயிர்நிறைந்த வயலொன்று இருக்கின்றது. நான் உன்னை அங்கே கூட்டிக்கொண்டுபோய் அதனைக் காட்டுகிறேன். என்று இரகசியமாய்ச் சொல்லிக் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டிவிட்டது. அந்த மான் நாடோறும் அங்கேபோய்ப் பயிரைத் தின்றுவந்தது. சிலநாள்களின் பின் வயற்காரன்கண்டு அதனைப் பிடிக்கும்படி வலையேற்றி வைத்தான். பின்னர் அவ்விடத்திலே உலாவும்போது அது வலையிலே அகப்பட்டு, இந்தக் காலபாசத்துக்குச் சமானமான வேடபாசத்தினின்றும் என்னை விலக்கவல்லவன் என்சிநேகிதனேயன்றி வேறு யார்? என்று சிந்தித்துக்கொண்டிருந்தது.

இப்படியிருக்கும்போது நரியும் அங்கே வந்து சமீபத்திலே நின்று என்னுடைய கபடமான உபாயம் பலித்து விட்டது; இனி என் மனவிருப்பமும் பெரிதுசித்தியாகும்; இதனை வெட்டும்போது நான் பெற்றுக்கொள்ளும் மாமிசமும் இரத்தந் தோய்ந்த எலும்புகளும் எனக்குப் பூரணமான போசனமாகும் என நினைத்துக்கொண்டிருந்தது.

அப்போது மான், நரியைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு, மித்திரா! என்னுடைய வலையை அறுத்துவிட்டு, என்னை விரைவிற் காத்துக்கொள்;

கஎ. சிநேகிதனை ஆபத்திலும், வீரனைப் போரிலும், சுத்தமுடையவனைக் கடனிலும், மனைவியைத்திரவியக்குறையிலும், உறவினரை வியசனத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கஅ. உற்சவத்திலும், வியசனத்திலும், வறுமையிலும், இராசவாயிலிலும், இராச்சியகலகத்திலும், சுடுகாட்டிலும் எவன் நிற்கின்றானோ அவனே சுற்றத்தவன். என்றது.

நரி வலையைப் பின்னும் பின்னும் பார்த்து, இந்த மான் கட்டுகளினாற் பெலனாகக் கட்டப்பட்டிருக்கின்றது என்று நினைத்துக்கொண்டு, மித்திரா! வார்க்கயிற்றினால் உண்டாக்

கப்பட்ட இந்த வலையை இன்றைக்குப் பானுவாரத்திலே யான் பற்களினால் எப்படித் தொடுவேன்; மனத்திலே நீ வேறுவிதமாக எண்ணுவாயாயின், விடியற்காலத்தில் எதனைச்சொல்வாயோ அதனைச் செய்வேன் என்றுசொல்லி ஒருபக்கத்திற்போய் மௌனமாய் நின்றது.

பின்னர் அந்தக் காகஞ் சாயங்காலத்திலே வழக்கப்படி மான் வராமையைக் கண்டு எங்குந் தேடிப் பார்க்கும்போது, அது, இப்படி அகப்பட்டிருத்தலைக் கண்டு, மித்திரா! இஃதென்ன? என்றுகேட்டது. மான், காகத்தை நோக்கி, அயோக்கியமான மித்திரனுடைய வார்த்தையைக் கேட்டதனாலாய பலன் இதுதான்;

கக. தனக்கு நன்மைசெய்தலை விரும்புஞ் சிநேகிதர்களுடைய வார்த்தையை எவன் கேளாமலிருக்கின்றானோ அவன் ஆபத்து வருங்காலத்தில் தன்சத்துருவுக்கு மகிழ்ச்சியை வளர்ச்சிசெய்கிறவனாயிருக்கிறான் என்றது.

காகம், அந்த வஞ்சக நரி எங்கே என்று கேட்டது. மான், அது என் மாமிசத்தை விரும்பி இங்கேதான் காத்துக் கொண்டிருக்கின்றது என்றது. காகம், இது கெட்டவர்களுடைய இலக்கணம் என்று யான் முன் சொல்லவில்லையா?

உ0. என்னிடத்திலே குற்றமில்லை என்பது விசுவாசத்துக்குக் காரணமாகாது. குணவான்களுந் துரோகிகளிலிருந்து அச்சத்தை அடைகின்றார்கள்.

உக. மரணகாலத்தைச் சமீபித்திருப்பவர்கள், தீபம் அவியும்போதுண்டாகும் மணத்தை மணக்கவும்; மித்திரருடையவார்த்தையைக் கேட்கவும்; அருந்ததியைக் காணவு, மாட்டார்கள்.

உஉ. முகத்துக்கு முன்னே பிரியமாய்ப் பேசுகிறவனும், அப்பாற்போய்த் தன்காரியங்களைக் கெடுக்கிறவனுமாய் மேலே பாலினையுங், கீழே நஞ்சினையுமுடைய குடம் போன்ற மித்திரனை விட்டுவிடல்வேண்டும்.

என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டு, நரியை நோக்கி அடா! வஞ்சகா! பாவகருமமுடைய உன்னாற் செய்யப்பட்டது யாது?

உங. மதுரவசன மித்தியோபசாரங்களினால் வசப்பட்டவர்களும், பேராசையுள்ளவர்களும், விசுவாசமுடையவர்களும், உலகத்தில் வஞ்சிக்கப்படுதல் உண்டு.

உச. மேலும், உபகாரியும், நம்பிக்கையுள்ளவனும், நற்புத்தியுடையவனுமாகிய மித்திரனுக்குத் துரோகஞ்செய்கின்ற அசத்திய மனிதனைப் பகவதீ! பூமிதேவீ! எப்படிச் சுமந்துகொண்டிருக்கின்றாய்!

உரு. துர்ச்சனனோடு சிநேகமும் பிரீதியுஞ் செய்யலாகாது; கரி, உட்டணமாயிருந்தாற் கையைச்சுடும்; குளிராயிருந்தாற் கையைக் கருமையாக்கும்.

உசு. கொசுகு முன்னரோ இரண்டுகால்களிலும் விழுகின்றது; பின்னர் முதுகின் மாமிசத்தை உண்கின்றது; அதன்பின் மெல்லமெல்லக் காதினுள்ளேபோய் மதுரமும், அதிசயமுமான ஓசையை உண்டாக்குகின்றது; துவாரத்தைக் காணும்போது சடிதியாகத் தைரியத்தோடும் உள்ளே பிரவேசிக்கின்றது. அஃது,இப்படியே வஞ்சகனுடைய செய்கையெல்லாவற்றையுஞ் செய்துமுடிக்கின்றது.

உஎ. துர்ச்சனன் இனிமையாய்ப் பேசுகிறவனாயிருந்தாலும், அவனை நம்பலாகாது; ஏனெனில்; அவனுடைய நாக்கின் நுனியிலே தேன் இருக்கின்றது; இருதயத்திலே விஷம் இருக்கின்றது.

இவைகளே. துட்டருடைய இலக்கணம் என்றது. பின்னர்க் காலையிலே வயற்காரன் கையிலே தடியையும் எடுத்துக்கொண்டு வருதலைக் காகங்கண்டு, என்னசெய்ய வேண்டும் என்று ஆலோசித்து, "மானை நோக்கி மித்திரா நீ, காற்றினால் வயிற்றை நிறைத்துக், கால்களை அசையாமல், இறந்தவனைப்போல உன்னைக் காண்பித்துக்கொண்டு கிட; நான் உன்கண்களை மூக்கினாற் கொத்திக்கொண்டிருப்பேன்; பின்னர் நான் சத்தங்காட்டும்போது நீ எழுந்து சடிதியில் ஓடிவிடு," என்று சொல்லிற்று. அப்படியே மானுங் காகஞ் சொன்னபிரகாரஞ்செய்தது.

அப்போது வயற்காரன், அந்த மானைக் கண்டு, மகிழ்ச்சியால் மலர்ந்த கண்களையுடையவனாகி, நீயும், இறந்தாயோ?

என்றுசொல்லி வலையிலிருந்து மானை நீக்கிவிட்டு வலையைச் சிக்கெடுத்து, ஒழுங்குசெய்துகொண்டு சிறிதுதூரம்போகும் போது, மான் காகஞ் சத்தமிடுதலைக்கேட்டு எழுந்து ஓடிப் போயிற்று. அப்போது வயற்காரன் கோபங்கொண்டெறிந்த தண்டு நரியிற்பட நரியும் இறந்தது.

உஅ. ஒருமனிதன் தான்செய்த மிகக்குரூரமான பாவ புண்ணியங்களின் பலனை மூன்றுவருஷத்திலாவது, மூன்று மாசத்திலாவது, மூன்று பக்கத்திலாவது, மூன்று நாள்களி லாவது அனுபவிப்பான்.

ஆதலாற்றான், போசனத்துக்கும், போசனத்தை உண் பவனுக்கும் இடையிலிருக்கும் பிரீதி கேட்டுக்கே காரணமா கும் என்பது சொல்லுகின்றேன் என்று சொல்லிற்று. காகம் பின்னும், இரணியகனை நோக்கி.

உகூ. இரணியகா! உன்னை உண்ணுதலினால் எனக்கு ஆகாரந் திருப்தியாகமாட்டாது; சித்திரக்கிரீவனைப்போலச் சுத்தனாகிய நீ, சீவித்திருக்கையில் நானுஞ் சீவித்திருப்பேன்.

ங0. மேலும், புண்ணியந்தானே ஒருகருமமாயுள்ள மிருகங்களுள்ளும் விசுவாசங் காணப்படுகின்றது; நல்லவர் களுடைய இயற்கையோ நற்குணங்களினின்றும் மாறுபட மாட்டாது.

ஙக. வைக்கோற்பழுதைக்கொள்ளியினாற்சமுத்திரநீர் சூடடையமாட்டாது; அதுபோல் நல்லமனுடனுடையமன மானது கோபம்வரினும் விகாரமடையமாட்டாது. என்றது.

அப்போது இரணியகன் காகத்தை நோக்கி, நீயோ நிலை யின்மையுடையனாயிருக்கிறாய்! நிலையின்மையுடையவனோடு ஒருகாலமுஞ் சிநேகஞ் செய்தலாகாதென்று சொல்லப்பட் டிருக்கின்றது.

ஙஉ. பூனை, எருமை, ஆடு, காகம், அற்பமனிதன் என்னும் இவைகள் நம்பிக்கையினின்றும் விலக்கப்பட்டுள்ள வைகள்; ஆதலின் இவைகளிடத்திலே விசுவாசம்வைத்தல் நன்றன்று.

மேலும், நீயோ எங்கள் சத்துருபக்கத்தவனாய் நிற்கின்றாய்; இதனைப்பற்றிச் சொல்லியவைகளைக் கேள்;

௩௩. நன்றாய்ச் சேர்ந்து ஒன்றித்த சேர்க்கையினாற்றானுஞ் சத்துருவோடு சிநேகஞ்செயதலாகாது; தண்ணீரானது நன்றாகச் சூடாக்கப்பட்டாலும் அக்கினியைத் தணிக்கின்றது.

௩௪. துர்ச்சனன் வித்தையினால் அலங்கரிக்கப்பட்டவனாயினும் நீக்கப்படவேண்டியவன்; பாம்பு இரத்தினத்தைத் தரித்திருந்தாலும் பயங்கரமுள்ளதன்றோ!

௩௫. "கூடாதது எதுவோ அது கூடாததுதான்; கூடியது எதுவோ அது கூடியதுதான். தண்ணீரிலே இரதஞ் செல்லமாட்டாது; பூமியிலே தோணியுஞ் செல்லமாட்டாது.

௩௬. சத்துருவிடத்திலும், தன்னில் விருப்பமில்லாத மனைவியிடத்திலும் பெருந்திரவியத்தின்பொருட்டு எவன் விசுவாசம்வைக்கின்றானோ அவன் பிராணனுக்கு அதுவே முடிவாகும். என்றது.

அப்போது இலகுபதனன், இந்த விஷயங்களைப் பற்றி யானுங் கேள்விப்பட்டிருக்கிறேன்; உன்னோடு சிநேகஞ் சீக்கிரஞ்செய்யவேண்டும் என்பதே என்னுடைய சங்கற்பம்; அது கூடாதாயின்: உணவையும்விடுத்து உன்வீட்டுவாயிலிற்றானே உயிரையும் விடுவேன்;

௩௭. துர்ச்சனனானவன் மட்குடத்தைப் போலச் சுகமாய் உடைக்கப்படத்தக்கவனும், இலகுவிற் பொருத்தமுடியாதவனுமாய் இருக்கிறான். சற்சனனோ பொற்குடத்தைப் போலப் பிரித்தற்கருமையான்வனும் பிரிந்தால் விரைவிற் பொருத்தத்தக்கவனுமாய் இருக்கின்றான்.

௩௮. பொன்முதலிய உலோகவகைகளுக்கு உருக்குதலினாலும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் நிமித்தகாரணத்தினாலும், மூர்க்கர்களுக்குப் பயத்தினாலும், உலோபத்தினாலும், நல்லோர்களுக்குப் பார்வையினாலுஞ் சேர்க்கை உண்டாகின்றது.

௩௯. நல்லவர்கள தேங்காய்க்குச் சமானமான வடிவமுடையவர்களாய்க் காணப்படுகின்றார்கள்; தீயவர்களோ புறத்தே மனோகரமுடைய இலந்தைப் பழம்போலக் காணப்படுகிறார்கள்.

௪0. இன்னும், சிநேகமற்ற காலத்திலும் நல்லோர்களுடைய குணம் மாறுபடமாட்டாது; தாமரையின் நாளங்களற்றுப்போனாலும் அதன் நூல்கள் பற்றிப்பிடித்துக்கொள்ளுகின்றன.

௪௧. சுத்தம், கொடை, வீரம், சுகதுக்கங்களிற் சமமாயிருத்தல், இரக்கம், பிரியாதிருத்தல், சத்தியம் என்னும் இவைகளே சிநேகிதனுடைய குணங்களாம்.

இந்தக் குணங்களெல்லாம் நிறையப்பெற்ற உன்னையன்றி எந்தச் சிநேகிதனை யான் பெற்றுக்கொள்ளுவேன் என்று சொல்லிற்று.

இந்த வார்த்தைகளெல்லாவற்றையும் இரணியகன்கேட்டுப் புற்றினின்றும் வெளியில்வந்து, அதனை நோக்கி நான் உன்னுடைய அமிர்தம்போன்ற வார்த்தைகளினாலே திருப்தியடைந்துகொண்டேன்.

௪௨. நல்ல யுத்தியினால் அலங்கரிக்கப்பட்டதும், நல்லோர்களாற் பிரயோகிக்கப்பட்ட ஆகருஷணமந்திரத்தோடொத்ததுமாகிய சற்சனனுடைய வார்த்தை சித்தத்திற்குப் பிரீதியைக் கொடுத்தல்போல, வெயிலினால் வருந்தினவர்களுடைய சரீரத்திற்குச் சீதளசலஸ்நானமாயினும், முத்துமாலையாயினும், அங்கமெங்கும் பூசிய சந்தனக்குழம்பாயினுஞ் சுகத்தைக் கொடுக்கமாட்டாது.

௪௩. மேலும், இரகசியத்தை வெளிப்படுத்தல், யாசித்தல், நிட்டூரம், மனந்தளர்தல், கோபம், பொய், சூது, என்னும் இவைகளே மித்திரனுடைய குற்றங்களாம்.

இந்த வசனங்களிலே சொல்லப்பட்ட குற்றங்களுள் ஒரு குற்றமாவது உன்னிடத்திற் காணப்படவில்லை.

௪௪. வாக்குவல்லமையும், மெய்வார்த்தையும், பேச்சினால் அறியப்படுகின்றன. நேர்மையும், நிலைமையும் பார்த்தமாத்திரத்தில் அறியப்படுகின்றன.

சரு. இயல்பிலே சுத்தமானவர்களுடையசிநேகம் ஒருவிதமாயிருக்கும், வஞ்சகர்களினுடைய வார்த்தை வேறொருவிதமாக வளரும்.

சசு. துராத்துமாக்களுக்கு மனமும்வேறு; வாக்கும் வேறு; செய்கையும் வேறு; மகாத்துமாக்களுக்கு மூன்றும் ஒத்திருக்கும்.

ஆதலால் உன்னுடைய இஷ்டத்தின்படியாகுக. என்று சொல்லிச் சிநேகத்தை நிச்சயப்படுத்தித் தன்னிடத்திலிருந்த விசேஷபோசனத்தினாற் காகத்தைச் சந்தோஷப்படுத்திவிட்டுத் தன்புற்றினுட்பிரவேசித்தது. காகமுந் தனதுவாசஸ்தானத்திற்குப் போய்விட்டது. அதன்பின் அவ்விரண்டும் ஒன்றுக்கொன்று உணவுகொடுத்தலினாலும், சுகம்விசாரித்தலினாலும் விசுவர்சவார்த்தைகளினாலும் பேதமில்லாமற் காலத்தைப்போக்கின.

இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள் காகம், இரணியகனை நோக்கி, மித்திரா! இங்கே காகங்களுக்கு உணவு சம்பாதித்துக்கொள்ளுதல் கஷ்டம்; ஆதலால் இந்த இடத்தை விட்டு வேறிடத்திற்குப் போகவிரும்புகிறேன் என்றது.

இரணியகன் அதனைநோக்கி மித்திரா!

சஎ. பல்லுகளும், உரோமங்களும், நகங்களும், சனங்களும் தங்கள் தங்கள் வாசஸ்தானங்களை விட்டுநீங்கினாற் பிரகாசிக்கமாட்டா. என்பதை அறிந்து புத்திமான் தன்னுடைய இடத்தைவிட்டுப் பிரியமாட்டான் என்றது.

காகம், இது கெட்டமனிதருடைய வார்த்தை.

சஅ. சிங்கங்களுஞ் சற்புருஷர்களும், யானைகளுந் தத்தம் இடங்களைவிட்டுப் போகின்றன, காகங்களும், கெட்ட சனங்களும், மிருகங்களும் இருந்த இடத்திலேதானே இறந்துபோகின்றன.

சகூ. கீர்த்தியுள்ள வீரனுக்குத் தன்தேசம் யாது! பிறதேசம் யாது! எந்தத்தேசத்தை அடைகின்றானோ அந்தத்தேசத்தைத் தன்புயவலிமையினாற் சம்பாதித்துக்கொள்ளுகிறான், பல்லு, நகம், வால் என்னும் ஆயுதங்களையுடைய சிங்கம் எந்தக்காட்டினை அடைகின்றதோ அந்தக்காட்டிலே

கொல்லப்படுகின்ற யானைகளின் இரத்தத்தினால் தனதுதாகத்தைத் தணிக்கின்றது என்றது.

இரணியகன், இலகுபதனனை நோக்கி, மித்திரா! எங்கே போகவேண்டும்.

௫௦. புத்திமான், ஒருபாதத்தினாற் செல்லுகின்றான் ஒருபாதத்தினாலே திடமாய் நிற்கின்றான். பிறவிடத்தைப் பூரணமாய் நியமிக்குமுன் முந்திய இடத்தை விடலாகாது. என்றது.

காகம், நன்றாக நியமிக்கப்பட்ட ஓரிடம் இருக்கின்றது என்றுசொல்லிற்று. இரணியகன், அஃது எங்கேயிருக்கின்றது? என்றுகேட்டது.

காகம், தண்டகாரணியத்திலே கற்பூரகௌரம் என்னும்பெயருடைய வாவி ஒன்றிருக்கின்றது, அதிலே நெடுங்காலமாகச் சம்பாதிக்கப்பட்ட எனது மித்திரனும் இயல்பிலே தார்மிகனுமான மந்தரன் என்னும் பெயருடைய ஆமை ஒன்று வாசஞ்செய்கின்றது.

௫௧. பிறனுக்கு உபதேசஞ்செய்யும் வல்லமை எல்லா மனிதருக்கும் இலகுவாயிருக்கின்றது; தருமத்தை அநுட்டிக்கும் வல்லமை ஒருமகானுக்கே உரியதாயிருக்கின்றது.

அந்த மந்தரனே விசேஷபோசனங்களினாலே நம்மை வளரும்படிசெய்யும் என்றது. இரணியகன், நான் இங்கே இருந்தாலென்ன செய்வேன்!

௫௨. ஏனெனில்; எந்தத்தேசத்திலே மரியாதையும், விருத்தியும், சுற்றமும், வித்தையைச் சம்பாதித்தலுமில்லையோ எப்படியும் அந்தத்தேசத்தை முற்றும் விட்டுவிடல் வேண்டும்.

௫௩. பின்னும், பாக்கியவான், பிராமணன், இராசா, வைத்தியன், நதி என்னும் இவ்வைந்தும் எங்கே இல்லையோ அங்கே வாசஞ் செய்தலாகாது.

௫௪. போசனத்துக்குரிய பதார்த்தம், பயம், வெட்கம், இரக்கம், கொடை என்னும் இவ்வைந்தும் எங்கே இல்லையோ அங்கே இருத்தலாகாது.

௫௫. வேறும், கடன்கொடுப்பவன், வைத்தியன், பிராமணன், நன்னீரையுடைய நதி என்னும் நான்கும் எங்கேயில்லையோ அங்கே மித்திரா! வாசஞ் செய்தலாகாது.

ஆதலால் என்னையும் அங்கே கூட்டிக்கொண்டுபோ; என்றது.

அதன்பின் காகம், அந்தமித்திரனையுங் கூட்டிக்கொண்டு அதிசயமான சம்பாஷணையுடன் சுகமாய் அந்த வாவிக்குச் சமீபமாகப் போயிற்று. அப்போது மந்தரன், தூரத்திலே தானே இலகுபதனன் வருதலைக்கண்டு, எழுந்து, அதிதிக்குச் செய்யவேண்டிய உபசாரத்தை அதற்குச்செய்து, பின்மூஷிகத்துக்கும் உபகாரஞ்செய்தது.

௫௬. பிராமணர்களுக்கு அக்கினியே குரு. நான்கு வருணத்தவர்களுக்கும் பிராமணனே குரு; பெண்களுக்கு நாயகன் ஒருவனே குரு; எவ்விடத்திலும் அங்கேவந்த அதிதியே குரு.

௫௭. வீட்டுக்குவந்தவன் உத்தமவருணத்தவனாயினும் என்ன! நீசனாயினும் என்ன! அவன் யோக்கியப்படி பூசிக்கப்படக்கடவன். அதிதிசர்வதேவ மயமுள்ளவனன்றோ!

காகம், மந்தரனை நோக்கி, "மித்திரா! இதற்கு விசேஷமாகப் பூசைசெய்; ஏனெனில்; இரணியகன் என்னும் பெயருடைய மூஷிகராசனாகிய இது, புண்ணியாத்துமாக்களுள்ளே சிரேட்டமுடையது; கிருபை என்னும் இரத்தினத்திற்கு ஓரிருப்பிடம், இதனுடைய குணஸ்துதிகளை ஆயிரநாக்குடையசேடன் இன்னுமோராயிரம் நாக்குகளைக் கொண்டிருப்பானாயின்; எப்பொழுதாவது சொல்லுதற்குச்சமர்த்தனாவான்." என்று சொல்லிச் சித்திரக்கிரீவனுடைய கதையை வர்ணித்தது. மந்தரன் ஆதரவோடும் இரணியகனைப்பூசித்து, க்ஷேமம் விசாரித்துச் சனமில்லாத வனத்திலே வந்ததற்குக் காரணத்தைச்சொல்லவேண்டும் என்றுகேட்டது. இரணியகன் சொல்லுகிறேன்கேள்; என்று சொல்லத்தொடங்கிற்று.

பரிவிராசகமூஷிகஹிரண்யகர்கள்கதை.

சம்பகாவதி என்னும் பெயருடைய நகரத்திலே சந்நியாசிகள் வாசஞ்செய்யும் வாசஸ்தானம் ஒன்று உண்டு. அங்கே சூடாகர்ணன் என்னும பெயருடைய சந்நியாசி ஒருவன் இருந்தான். அவன், தான் போசனஞ்செய்தபின் எஞ்சிய அன்னத்தைப் பிக்ஷாபாத்திரத்திலிட்டுச் சுவரிலுள்ள ஒரு நாகதந்தத்திலே தூக்கிவைத்துவிட்டு நித்திரைசெய்துவருவான். நான் பாய்ந்து அந்த அன்னத்தை நாடோறும் எடுத்து உண்டுவந்தேன்.

பின்னர் ஒருநாள் அவனுடைய பிரியசிநேகிதனாகிய வீணாகர்ணன் என்பவன் அங்கே வந்தான். சூடாகர்ணன், அவனோடு பலகதைகளையும் பேசிக்கொண்டிருக்கும்போது என்னைப் பயப்படுத்தும்படி முரிந்த ஒரு மூங்கிற்றண்டத்தினாலே பூமியில் அடித்தான். வீணாகர்ணன் அவன் அப்படிச் செய்தலைப்பார்த்து, மித்திரா! நீ, என்னுடைய கதையில் விருப்பின்றி வேறொன்றில் விருப்புவைத்திருப்பதென்ன?

க. முகமலர்ந்திருத்தலும், கண்களங்கமற்றிருத்தலும், கதையில் விருப்புடைமையும், இனியவார்த்தையும், சிநேகம் அதிகமாயிருத்தலும், விரைந்துபார்த்தலும், கதையிலாசையுள்ள மனிதனுடைய இலக்கணமாம்.

உ. பராமுகமாயிருத்தலும், முன்செய்தவைகளை நாசமாக்கலும், சம்மானஞ் செய்யாமையும், துர்ச்சரிதங்களைச் சொல்லுதலும், கதாப்பிரசங்கத்தின்ற் பெயர்களை மறத்தலும், கதையில் வெறுப்புள்ள மனிதனுடைய இலக்கணமாம் என்றான்.

அப்போது, சூடாகர்ணன் வீணாகர்ணனை நோக்கி, மித்திரா!, நான் கதையில் வெறுப்புடையவனல்லன்; மேலும், பார்! இந்த மூஷிகம் என்னுடைய பாத்திரத்திலிருக்கும் அன்னத்தை எப்போதும் பாய்ந்து அபகரித்து உண்கின்றது; என்றான்.

வீணாகர்ணன், நாகதந்தத்தைப்பார்த்து, இந்தமூஷிகம் அற்பபெலனுடையதாகவிருந்தும், இவ்வளவுதூரம் பாய்கின்றது ; இதற்கு இங்கே யாதேனுங் காரணமிருத்தல்வேண்டும்.

௩. ஓர் இளம்பெண்ணானவள் வெளிப்படையான காரணமின்றித்தன்னுடைய விருத்த நாயகனைத் தலைமயிரிற் பிடித்திழுத்துத் தழுவிமுத்தமிட்டாள். இதற்கும் ஒரு காரணம் உண்டு." என்றான்.

சூடாகர்ணன்,இஃது என்னஎன்றுகேட்க வீணாகர்ணன் சொல்லுகின்றான்.

வயோதிகவணிகன்மனைவிகதை.

கௌடதேசத்திலே கௌசாம்பி என்னும் நகரத்திலே பெருஞ்செல்வனாகிய சந்தனதாசன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் முதுமைப்பருவத்திலே காமத்தினாற் பிரேரிக்கப்பட்ட இருதயத்தினாலும், செல்வச்செருக்கினாலும், இலீலாவதி என்னும் பெயருடைய வணிகபுத்திரி ஒருத்தியை விவாகஞ்செய்தான். அவளும், மன்மதனுடைய வைசயந்தியைப்போல யௌவனமுள்ளவளாய் இருந்தாள். அந்த விருத்தநாயகன் அவளுக்கு விருப்பமில்லாதவனாய் இருந்தான்.

க. குளிரினால் வருந்துகிறவர்களுக்குச் சந்திரனிலும், வெய்யிலினால் வருந்துகின்றவர்களுக்குச் சூரியனிலும் மனஞ்சந்தோஷப்படமாட்டாது ; அதுபோலப் பெண்களுக்கு மூப்பினையும், பழுதுபட்ட இந்திரியத்தினையுமுடைய நாயகனிடத்திலே மனஞ்சந்தோஷப்படமாட்டாது.

உ. மேலும், ஆடவர்களுடைய மயிர்கள் நரையாகக் காணும்போது அவர்களுடைய ஆசையின் குணத்துக்குப் பெயர்யாது ? பிறரிடத்தில் மனம்வைத்திருக்கும் ஸ்திரிகள் அதனை மருந்துபோல எண்ணுகிறார்கள்.

அந்த விருத்தநாயகனோ அவளிடத்தே அதிகம் ஆசையுடையவனாயிருந்தான்.

௩. ஏனெனில்; ஆன்மாக்களுக்குப் பொருளாசையும் சீவியவாசையும் எப்பொழுதுங் கௌரவமுள்ளன. வயோதிகனுக்கு இளமைப் பருவத்தையுடைய மனைவி பிராணனிலுங் கௌரவமுள்ளவள்.

௪. மேலும், விருத்தன், விஷயங்களை அனுபவிக்கவுமாட்டான். அநுபவியாமல் விடவுமாட்டான். பல்லில்லாது நக்குதலைமாத்திரஞ் செய்யும் நாய் எலும்பை உண்ணவுமாட்டாது விடவுமாட்டாது.

பின்னர் இலீலாவதி, யௌவனகர்வத்தினாலே குலமரியாதையைக் கடந்து ஒரு வணிக புத்திரனோடு அநுராகமுள்ளவளாய் இருந்தாள்.

௫. பிதாவீட்டிலிருத்தல், சுவதந்திரமாயிருத்தல், யாத்திரோற்சவங்களுக்குப்போதல், மரியாதைக்கு விரோதமாக ஆடவர் முன்னிலையில் வெளிப்படுதல், பிறதேசத்தில் வாசஞ்செய்தல், கெட்டநடையுடைய பெண்களுடனே இட்டங்கொள்ளுதல், விருத்தியைப் பலமுறையுங் கெடுத்தல், நாயகனுடைய வயோதிகத்திற் பொறாமைகொண்டு பிறவிடத்தில் வசித்தல் என்னும் இவைகள், பெண்களுடைய கற்பழிதற்குக் காரணமாகும்.

௬. மதுபானம், துர்ச்சனரோடு சகவாசஞ் செய்தல், நாயகனைப் பிரிந்திருத்தல், சுற்றித்திரிதல், நித்திரைசெய்தல், பிறர்வீட்டில் வாசஞ்செய்தல் என்னும் இவ்வாறும் பெண்களுக்குக் குற்றங்களாம்.

௭. இன்னும், இடமில்லாமையினாலும், காலமில்லாமையினாலும், வருந்திக்கேட்கும் மனிதரில்லாமையினாலும் பெண்களுக்குக் கற்பு உண்டாகின்றது.

௮. அன்றியும், பெண்களுக்குப் பிரியமில்லாதவன் என்றும், பிரியமுள்ளவன் என்றும் ஒருவனுமில்லை. பசுக்கள் காட்டிலே புதிது புதிதாகப் புல்லைத் தேடுதல்போல அவர்களும் புதுப் புது நாயகர்களைத் தேடுகிறார்கள்.

௯. மேலும், நல்ல அலங்காரத்தையுடைய மனுஷனைக்கண்டால், அவன் சகோதரனாயிருந்தாலென்ன! மகனா

ளிருந்தாலென்ன! பெண்கள் ஆசையினால் வருந்துகின்றார்கள். இது சத்தியம். சத்தியம்.

௧0. பெண்ணானவள் நெய்க்குடத்துக்குச் சமானமாயிருக்கிறாள். ஆடவன் எரிகரிக்குச் சமமாயிருக்கிறான். ஆதலாற் புத்திமான் நெய்யையும் அக்கினியையும் ஓரிடத்தில் வைத்தலாகாது.

௧௧. ஒருவன், மாதாவோடாவது, சகோதரியோடாவது, மகளோடாவது தனியிடத்திலிருத்தலாகாது; இந்திரியங்களோ வலிமையுடையன; அவைகள் அறிஞனையும் மருட்டி இழுக்கின்றன.

௧௨. பெண்களுடைய கற்புக்கு நாணமும், விநயமும், இரக்கமும், பயமுங் காரணமன்று நாயகனைக் கேளாதிருத்தல் ஒன்றுமே காரணமாம்.

௧௩. ஒருஸ்திரியைக் கௌமாரபருவத்திலே பிதாவும், யௌவன பருவத்திலே நாயகனும், நாயகனில்லாத காலத்திலே புத்திரனும் பாதுகாத்தல்வேண்டும். பெண்ணானவள் தன்னிட்டமாய் இருத்தற்கு யோக்கியமுடையவளல்லள்.

௧௪. பின்னும், தேவப்பெண்கடாமும், எப்போதும் நிலையில்லாதவர்களாயிருக்கிறார்கள். என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களைக் காக்கும் மனுஷர் சுகத்தை அடைகின்றார்கள்.

ஒருநாள் அந்த லீலாவதியென்பவள் இரத்தினவரிசையின் கிரணம் வீசுகின்ற கற்பூரத்தையொத்த வெண்கட்டிலின்மேல் அந்த வணிகபுத்திரனோடு விசுவாசமான சம்பாஷணை செய்துகொண்டு சுகமாயிருக்கையிற் காத்திராப் பிரகாரம் வந்த நாயகனைக்கண்டு விரைந்தெழுந்து அவன் மயிரிற் பிடித்திழுத்து அதிகமாய்த் தழுவி முத்தஞ்செய்தாள். அந்தச்சமயத்திலே அந்தத்தூர்த்தனும் எழுந்து ஓடிப்போய்விட்டான்.

௧௫. வெள்ளி பகவானும் வியாழ பகவானும் எந்தச் சாத்திரங்களை அறிந்திருக்கின்றார்களோ அந்தச் சாத்திரங்கள் எல்லாம் இயல்பிலே பெண்களுடைய புத்தியிலே தாபிக்கப்பட்டிருக்கின்றன.

அப்போது அவளுடைய செய்கையைச் சமீபத்தில் நின்ற குட்டினி பார்த்து இவள் காரணமின்றி இவனைத்தழுவினாள் என்று சிந்தித்துப் பின்னர் அந்தக் காரணத்தை அறிந்து இலீலாவதியை இரகசியமாகத் தண்டித்தாள்.

ஆதலினாற்றான், ஓரிளம் பெண்ணானவள் வெளிப்படையான காரணமின்றித் தன்னுடைய விருத்த நாயகனைத் தலைமயிரிற் பிடித்திழுத்துத் தழுவிமுத்தமிட்டாள். என்பது சொல்லுகிறேன்.

இந்த மூஷிகம் பெலனுடையதாய் இருத்தற்கு யாதேனுங் காரணம் இருத்தல்வேண்டும். என்று ஒரு கணப்பொழுதவரையுஞ் சிந்தித்து, இங்கே திரவியம் மிகுதியாய்க் காணப்படுதலே காரணம். என்று சொன்னான்.

௧௬. இவ்வுலகத்திலே திரவியமுடையவன் எவனும், எவ்விடத்திலும், எக்காலத்திலும் பெலமுடையவனாயிருக்கிறான். திரவியந்தானே பிரபுத்துவத்துக்கும், இராசாவை யடைதற்குங் காரணமாயிருக்கின்றது.

அவன் பின்னர் ஒரு கனித்திரத்தை எடுத்துப் புற்றினைத் தோண்டி நெடுங்காலமாகச் சம்பாதித்து வைக்கப்பட்ட எனது திரவியத்தை எடுத்துக்கொண்டான். அக்காலந் தொடங்கி வலிமையுங்கெட்டு, முயற்சியுமிழந்து, ஆகாரத்தைத் தானுஞ் சம்பாதிக்க இயலாதவனாய் அச்சத்தோடு மெல்ல மெல்ல ஊர்ந்துதிரிந்தேன் ; இப்படித் திரியும் என்னைச் சூடாகர்ணன் கண்டு, சொல்லுவானாயினான்.

௧௭. மனிதன், செல்வத்தினாலே பெலவானாகின்றான்; செல்வத்தினாலே பண்டிதனாகின்றான். பார் ; இப்போது இந்த மூஷிகஞ் செல்வ மிழந்ததனாலே தன்சாதிக்குச் சமமாய் வந்துவிட்டது.

௧௮. செல்வ மில்லாத சிற்றறிவுள்ள மனிதனுடைய செயல்களெல்லாங் கோடைகாலத்துச் சிற்றாறுகளைப்போல அழிகின்றன.

௧௯. செல்வ முடையவனுக்கு மித்திருண்டு ; செல்வமுடையவனுக்குச் சுற்றமுமுண்டு ; செல்வமுடையவனே மனுஷன் ; செல்வமுடையவனே பண்டிதன்.

உ0. மேலும், புத்திரனில்லாதவனுடைய வீடு சூனியம்; சன்மித்திரனில்லாதவனுடைய வீடு சூனியம்; மூர்க்கனுடைய திக்குகள் சூனியம்; வறுமை எங்கேயோ அங்கே முழுதுஞ் சூனியம்.

உக. மேலும், வறுமையினாலும், மரணத்தினாலும் துக்கம் வருகின்றது. வறுமை தாழ்ந்ததென்று எண்ணப்படுகின்றது; மரணம் அற்பகிலேசத்தோடு வருகின்றது; வறுமையோ தாங்குதற்கரிய துக்கத்தோடு வருகின்றது.

உஉ. பின்னும், இந்திரியங்கள் குறையின்றி இருக்கின்றன என்று மனுஷர் கூறுவது பெயர்மாத்திரந்தான்; புத்திகெடவில்லை என்பதும் வசனந்தான்; செல்வச் செருக்கினின்றும் நீங்கின மனுஷன் அப்பொழுததானே வேறொருவனாய்க் காணப்படுகின்றான்; இது ஆச்சரியமன்றோ! என்று சொல்லினான்.

இந்த வார்த்தைகளெல்லாவற்றையும் யான்கேட்டு,இங்கேயிருத்தல் யோக்கியமன்று; என்றும், இதனைப் பிறருக்குச் சொல்லல் உசிதமன்று; என்றும் நினைத்தேன்.

உ௩. திரவிய நட்டத்தையும், மனத்துன்பத்தையும், வீட்டிலுள்ள கெட்ட சரித்திரத்தையும், தான் வஞ்சிக்கப்பட்டதையும், அவமானப்பட்டதையும், புத்திமான் பிறர்க்கு வெளிப்படுத்தாதிருத்தற்பாலன்.

உச. வயசு, திரவியம், வீட்டிற் கலகம், இரகசியம், மைதுனம், மருந்து, தவம், தானம், அவமானம் என்னும் ஒன்பதும் முயற்சியோடு மறைக்கப்பட வேண்டியவைகளாம்.

உரு. தெய்வமானது அதிகம் பராமுகமாயிருக்கும் போதும், முயற்சிகள் பிரயோசனப் படாமலிருக்கும் போதும், புத்திமானாகிய தரித்திரனுக்குக் காட்டிலேயன்றி வேறு எங்கே சுகமுண்டு?

உசு. தரித்திரமடைதலினும் இறந்துவிடுதலே புத்திமானுக்குப் பிரியம்; அக்கினி நிர்வாணமானாலுஞ் சீதத்தன்மையை அடையமாட்டாது.

உஎ. பூவானது, எவருடைய சிரசின் மேலாவது சேர்ந்திருக்கும்; அல்லது காட்டிற்றானே அழிந்துவிடும்: அப்படியே புத்திமானுக்கும் இரண்டு விருத்திகள் உள.

மேலும் இரந்துண்பது அதிகம் இகழ்ச்சியாம்.

உஅ. வறியசனங்கள், சம்மானமில்லாத உலோபியிடத்தேபோய் யாசித்தலினும் பார்க்கத் தங்கள் சுவாசத்தினாலே ஈமவிறகுக்கு அக்கினியை மூட்டி அதிலே விழுந்திறத்தல் உத்தமம்.

உகூ. மனிதன் வறுமையினால் வெட்கமுடையவனாகின்றான்; வெட்கமுடையவன் மகிமையில்லாதவனாகின்றான். மகிமையில்லாதவன் நிந்தையுடையவனாகின்றான். நிந்தையுடையவன் மனஸ்தாபமுடையவனாகின்றான். மனஸ்தாபமுள்ளவன் சோகமுடையவனாகின்றான். சோகமுடையவன் புத்தியில்லாதவனாகின்றான். புத்தியில்லாதவன் அழிவடைகின்றான். ஐயோ! திரவியமில்லாமையே ஆபத்துக்களெல்லாவற்றிற்கும் இடமாகும்.

௩௦. மேலும், பொய்வார்த்தை பேசுதலினும், மௌனமாயிருத்தல் உத்தமம். பிறன்மனைவியிடம் போதலினும் ஆடவர்களுக்கு அலித்தன்மை உத்தமம்.

௩க. கோள்வார்த்தையைப் பிரீதியாய்க் கேட்டுக்கொண்டிருத்தலினும் பிராணனை விட்டுவிடுதல் உத்தமம். பிறனுடைய செல்வத்தை அனுபவித்தலிலும் இரந்துண்ணல் உத்தமம்.

௩உ. துட்டவிடபம் நிற்குஞ் சாலையினுஞ் சூனியசாலை உத்தமம். ஒழுக்கமில்லாத மனைவியினும் வேசையாகிய மனைவி உத்தமி. புத்தியில்லாத இராசாவுடைய ஊரினும் வனவாசம் உத்தமம். அதமரோடு கூடியிருத்தலினும் உயிர்விடுதல் உத்தமம்.

௩௩. சேவைசெய்தல்தானே மானங்களெல்லாவற்றையும் அழிக்கின்றது; நரை அழகினை அழிக்கின்றது. விஷ்ணு சிவகதைகள் பாவங்களை அழிக்கின்றன. யாசித்தல் நூறு குணங்களைத் தானும் அழிக்கின்றது.

என்று ஆலோசித்துப் பின், நான், பிறனுடைய பொருளினுற் போஷிக்கப் படுகிறேனன்றே! ஆ! கஷ்டம்! இதுவும் மரணத்தினுடைய இரண்டாம் வாயில்தான்.

கச. பல்லவங்களைக் கிரகிக்கும் புலமையும், விலைமகளைக் கலத்தலும், பிறன் கீழிருந்து உண்ணுதலுமாகிய மூன்றும் ஆடவர்களுக்கு அவமானங்களாம்.

கரு. இன்னும், துன்பமுடையவனும், நெடுங்காலம் பிறவூரில்வசிப்பவனும், பிறரன்னத்தைப்புசிப்பவனும், பிறர் வீட்டில் நித்திரைசெய்பவனும் எவனே அவனுக்குச் சீவன் மரணவேதனையாம். மரணம் அவனுக்கு இளைப்பாறுதலாம்.

என்று ஆலோசித்துப் பேரவாவினுலே பின்னும் அவனுடைய அன்னத்தை எடுத்துண்ணும்படி பாய்ந்தேன்.

கசா. உலோபத்தினுலே புத்தி நீங்குகின்றது. உலோபம் பொருளாசையை உண்டாக்குகின்றது. பொருளாசையால் வருந்தும் மனிதன் இம்மை, மறுமை என்னும் இரண்டிலுந் துக்கத்தை அடைகின்றான்.

அதன்பின் நான் மெல்ல மெல்ல ஊரும்போது வீணுகர்ணன் ஒருகிழிந்த மூங்கிலின் தண்டினுல் என்னை அடித்தான். அப்போது நான் ஆசையுள்ளவனும், சந்தோஷமில்லாதவனும், தனக்குத்தானே நிச்சயமாய்த் துரோகியாகின்றான். என்று நினைத்தேன்.

கஎ. பொருளாசையுடையவன் சந்தோஷமில்லாதவனேயாம். அடக்கமான மனமுடையவன் இந்திரியங்களை வென்றவனேயாம். மனமகிழ்ச்சியில்லாதவனுக்கு எல்லாம் ஆபத்தேயாம்.

கஅ. சந்தோஷமான மனமுடையவனுக்குச் சகல சம்பத்துமிருக்கின்றது. உபானத்தினுல் மூடப்பட்ட பாதமுடையவனுக்குப் பூமி முழுவதுந் தோலால் மூடப்பட்டிருத்தல் போலக் காணப்படுகின்றது.

கக. மகிழ்ச்சியாகிய அமிர்தத்திலே திருப்தி அடைந்திருக்கின்ற அறிஞர்கள் அநுபவிக்குஞ் சுகம், பொருளின் பொருட்டு இங்குமங்குந் திரிகின்றவர்களுக்கு எப்படி உண்டாகும்?

௪௦. விடயங்களை வென்று ஆசையில்லாதவனாய் இருக்கிறவன் எவனோ அவனே எல்லாச் சாத்திரங்களையும் படித்தவன். அவனே எல்லாவற்றையுங் கேட்டறிந்தவன். அவனே எல்லாவற்றையும் அநுட்டித்தவன்.

௪௧. இன்னும், செல்வருடைய வாயிலிற்போய்ச் சேவைசெய்யாமலும், விரகத்துன்பத்தை அநுபவியாமலும், நபுஞ்சகவார்த்தையைக் கேளாமலும், இருக்கும் மனுடனுடைய சீவனமே பாக்கியமுள்ளது.

௪௨. பொருளாசையினால் வருந்தித் திரவியத்தைக் கையிலடைந்தபோது சந்தோஷமடைந்தவனுக்கு நூறுயோசனைதானுந் தூரமாய்க் காணப்படமாட்டாது.

ஆதலால் அவசியஞ் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்ட காரியங்களை நிச்சயித்து அறிதல் சிரேட்டமாயிருக்கின்றது.

௪௩. தருமம் யாது? உயிர்களுக்குத் தயைசெய்தலேயாம்; சௌக்கியம் யாது? உயிர்கள் பூமியிலே வியாதியின்றி இருத்தலாம், சிநேகம் யாது? நற்குணமேயாம். பாண்டித்தியம் யாது? உலகத்தினின்றும் பிரிந்திருத்தலேயாம்.

௪௪. ஆபத்துகள் வரும்போது பிரிந்திருத்தலே பாண்டித்தியம், பிரியாமல் இருப்பவனுக்கு ஒவ்வோரடியிலும் ஆபத்தேயாம்.

௪௫. ஒருவன் ஒருகுலத்தைக் காக்கும்பொருட்டு ஒருவனைவிட்டுவிடலாம். ஒரு கிராமத்தின் பொருட்டு ஒரு குலத்தைவிட்டுவிடலாம். ஒரு நாட்டின் பொருட்டு ஒரு கிராமத்தை விட்டுவிடலாம். தன் பொருட்டுப் பூமி முழுவதையும் விட்டுவிடலாம்.

௪௬. இன்னும், பிரயாசப்படாமற் பெற்றுக்கொண்ட தண்ணீரானாலென்ன! பின்னர் அச்சத்தைக் கொடுக்கும் இனிய அன்னமானாலென்ன! இரண்டுஞ் சமமேயாம். இதனைப்பற்றி விசாரித்துப் பார்க்கிறேன்; எங்கே ஓய்வுண்டோ அங்கேயே சுகமும் உண்டு.

என்று ஆலோசித்துக்கொண்டு சனங்களில்லாத காட்டுக்கு வந்தேன்.

௪எ. சுற்றத்தவர்க்கு மத்தியிலே திரவியமில்லாதவனாய் வாசஞ்செய்தலினும், புலிகளும் பெரியயானைகளுஞ் சஞ்சரிக்கின்ற காட்டின் மரங்களே வீடாகவும், பழங்களுந் தண்ணீருமே உணவாகவும் புல்லுகளே படுக்கையாகவும் மரவுரிகளே உடையாகவுங் கொண்டு வாசஞ்செய்தல் உத்தமம்.

அப்பொழுது புண்ணியப்பேற்றினாற் கிடைத்த சிநேக விருத்தியையுடைய இந்த மித்திரனாலே அநுக்கிரகிக்கப்பட்டேன். இப்பொழுதும் புண்ணியபரம்பரையினாலே நும் புகலிடமாகிய சுவர்க்கத்தை அடைந்திருக்கிறேன்.

௪அ. காவியங்களிலுள்ள அமிர்த இரசமும், நல்லவர்களோடு சகவாசஞ்செய்தலுமாகிய இரண்டுமே சஞ்சாரம் என்னும் நச்சுமரத்தினது மதுரமான பழங்களாம்.

௪௯. பின்னும், நல்லவர்களுடனே வாசஞ்செய்தல், விஷ்ணுவிற் பத்திசெய்தல், கங்காநதியில் முழுகுதல் என்னும் மூன்றுமே சஞ்சாரத்தின் சாரங்களாக எண்ணத்தக்கன. என்றது.

மந்தரன் சொல்லத் தொடங்கிற்று.

௫0. திரவியங்கள் பாததூளிக்குச் சமம். இளமைப் பருவம் மலையிலிருந்து இறங்கும் நதிக்குச் சமம். மானுடப் பருவம் நிலையின்றி அசையும் நீர்த்துளிக்குச் சமம். சீவனம் நுரைக்குச் சமம். சுவர்க்கத்தின் தாழக்கோலைத் திறக்குந் தருமத்தை அசைவில்லாத மனத்தோடு செய்யாதவன் எவனோ அவன் பின்னர்த் துக்கமடைந்து நரைத்துக் கூனிச் சோகாக்கினியினால் எரிக்கப்படுகிறான்.

நீயோ அதிகந் திரவியத்தைச் சம்பாதித்து வைத்தாய் அதனாலேதான் இந்தத் தோஷம் உண்டாயிற்று.

௫க. வாவியினிற்குஞ் சலத்தை இறைகூடையினால் இறைத்தல்போலச் சம்பாதித்து வைத்த திரவியத்தைக் கொடுத்தலே அதனைக் காத்தலாம்.

௫உ. உலோபியானவன் திரவியத்தை எடுக்கும்படி பூமியின் கீழே கீழே தோண்டுகிற ஆழம் அத்தனையும் அவன் தான் பாதாளஞ் செல்லுதற்குமுன்னரே வழிதோண்டுதலாம்.

௫௩. எவன் தன் சௌக்கியத்துக்கு விரோதமாகத் திரவியத்தைச் சம்பாதிக்க விரும்புகிறனோ அவன் பிறனுக்குப் பாரஞ்சுமக்கிறவனைப் போலத் துன்பத்திற்கு இடனாவான்.

௫௪. கொடாமலும் அநுபவியாமலும் இருக்குந் திரவியங்களினால் நாம் செல்வர்கள் எனப்படுவோமாயின், பூமியின் குகையுள்ளே வைக்கப்பட்டிருக்குந் திரவியங்களினாலும் நாம் செல்வர்கள் எனப்படுவோம் அன்றோ!

௫௫. எவனுடைய நாள்கள் தானமும் போகமுமின்றி நீங்குகின்றனவோ அவன் சுவாசம்விட்டாலுங் கொல்லனுடைய துருத்தியைப் போலச் சீவனில்லாதவனேயாகும்.

௫௬. கொடாமலும், உண்ணாமலும் இருக்குந் திரவியத்தினாற் பிரயோசனம் யாது? சத்துருக்களைக் கொல்லாமலிருக்கும் வலிமையினாற் பிரயோசனம் யாது? தருமத்தை அநுசரியாத கல்வியினாற் பிரயோசனம் யாது? இந்திரியங்களை அடக்காத மனத்தினாற் பிரயோசனம் யாது?

௫௭. நன்றாக அநுபவியாத உலோபியுடைய திரவியம் அவனுக்கும் பிறருக்கும் பொதுவாக இருக்கின்றது. இது அவனுடையது என்னுஞ் சம்பந்தம் அழியும்போது துக்கமடைதலே அவனுடையது என்பதனை உணர்த்துகின்றது.

௫௮. மேலும், உலோபியுடைய திரவியம் தேவர்களுக்காவது பிராமணர்களுக்காவது சுற்றத்தவர்களுக்காவது போய்ச்சேர மாட்டாது. அக்கினி, திருடர், அரசர் என்னும் இவர்களிடத்திற் போய்ச் சேர்கின்றது.

௫௯. திரவியத்துக்குக் கொடுத்தலும், அநுபவித்தலும், அழித்தலும் என மூன்று கதிகள் உண்டு. கொடாமலும் அநுபவியாமலும் இருப்பவனுடைய திரவியம் மூன்றாங் கதியாகிய அழிதலை அடைகின்றது.

௬௦. பிரியவாக்கியத்தோடு கூடிய கொடை, கர்வமில்லாதஞானம், பொறுமையோடு கூடிய வீரம், கொடையோடு கூடியமனம் என்னும் நன்மைகள் நான்கனையுங்காண்டலரிது.

சுக. திரவியம் எப்போதுஞ் சம்பாதிக்கத் தக்கது. அதனை அளவுக்குமேலே சம்பாதித்தலாகாது; திரவியம் சம்பாதிக்குந் தன்மையையுடைய நரி ஒன்று வில்லினுற் கொல்லப்பட்டதை அறியாயோ? என்றது.

இரணியகன் இஃது எப்படி என்று கேட்க மந்தரன் சொல்லத் தொடங்கிற்று.

வியாதமிருகசூகரசர்ப்பசிருகாலர்கள்கதை.

கல்யாணகடகம் என்னும் நகரத்திற் பைரவன் என்னும் பெயருடைய வேடன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் மாமிசவிருப்பமுடையவனுய் வில்லினை எடுத்துக்கொண்டு விந்தியமலைக் காட்டின் மத்தியிலேபோய் அங்கே ஒரு மானை எய்துகொன்றுன். பின்னர் அந்தமானை அவன் எடுத்துக்கொண்டு வரும்போது பயங்கரமான வடிவமுடைய ஒரு பன்றியையுங் கண்டான். அப்பொழுது அந்த மானைப் பூமியில் வைத்துவிட்டுப் பன்றியை அம்பினுல் எய்துவிழுத்தி அதனைச் சமீபித்தபோது பயங்கரமான அந்த மிருகம் உகாந்தகாலத்து மேகம்போல ஆரவாரித்து அந்த வியாதனுடைய முஷ்கதேசத்தில் அடித்தது. அவன் தறிக்கப்பட்ட மரம்போலப் பூமியில் விழுந்தான்.

க. நீர், அக்கினி, நஞ்சு, ஆயுதம், பசி, வியாதி மலையிலிருந்து விழுதல் முதலிய சில நிமித்தங்கள் நேரிட்டு மனிதன் உயிரை விடுகிறுன்.

பின்னர்ப் பன்றியும் வேடனுங் காலடித்து உதறினதினுல் அங்கே ஒரு பாம்பும் இறந்தது. அப்போது உணவின் பொருட்டுச் சுற்றித் திரிந்த தீர்க்கராவன் என்னும் பெயருடைய ஒரு நரி, இறந்துகிடக்கும் மான், வேடன், பாம்பு, பன்றி என்னும் நான்கையுங்கண்டு, "ஆகா! நல்லது! எனக்கு இன்றைக்கு மிகுந்தபோசனங் கிடைத்திருக்கின்றது.

௨. மனிதர்களுக்கு எண்ணப்படாத துக்கங்கள் எப்படிவந்து சேருகின்றனவோ அப்படியே சுகங்களும் வந்து சேருகின்றன. எக்காரியத்திலுந் தேவச்செயலே மேற்படுகின்றது. இந்த மாமிசங்கள் மூன்று மாசத்துக்கு மேற்பட எனக்குப் போசனமாகும்.

௩. ஒரு மாசத்துக்கு வேடனுடைய மாமிசம்போதும். இரண்டு மாசங்களுக்கு மானும் பன்றியும் போதும். பாம்பு ஒரு தினத்துக்குப்போதும். இன்றைக்கு வில்லின் நாணைப் புசிப்பேன்.

ஆதலால் முதன்முதற் புசிக்க விரும்பும்போது இந்த இரசமில்லாத விற்குதையில் ஒட்டியிருக்கும் வார்க்கயிற்றை உண்பேன். என்று சொல்லி அப்படியே செய்தது. அப்போது வார்க்கயிறு அற்றுப்போக வில்லுவிசையாய் மேலே நிமிர்ந்து அதன் நெஞ்சைப் பிளந்தது. அதனால் அந்தத் தீர்க்கராவன் என்னும் நரி உயிர்விட்டது. ஆதலாற்றான் திரவியம் எப்போதுஞ் சம்பாதிக்கத்தக்கது. என்பது சொல்லுகிறேன்.

௪. கொடுப்பதும், உண்பதும் எதுவோ அதுவே செல்வனுக்குத் திரவியமாம். இறந்தவனுடைய தாரங்களையுந் திரவியங்களையும் பிறர் அநுபவிக்கிறார்கள்.

௫. மேலும், மேன்மக்களுக்குக் கொடுக்கப்படுவதும், நாடோறும் உண்ணப்படுவதுமாகிய திரவியமே உன்னுடைய திரவியம் என்று எண்ணுகிறேன். எஞ்சிய திரவியத்தை யாவருக்கோ காத்துவைக்கின்றாய்.

அது நிற்க. இப்பொழுது அளவுக்கு மேலே வர்ணித்ததினாற் பிரயோசனம் யாது?

௬. புத்தியுள்ள பண்டிதர்கள் அடையத்தகாததை விரும்பவும் நட்டமானதைப்பற்றித் துக்கிக்கவும் ஆபத்துக் காலங்களிலே மயங்கவுமாட்டார்கள்.

மித்திரா! நீ எப்போதும் இதனை அனுசரித்து உற்சாகமாக இருத்தல்வேண்டும்.

௭. அநேகர் சாஸ்திரங்களைப் படித்தும் மூடராகின்றார்கள். எந்த மனுஷன் சாத்திரத்தின்படி செய்யுஞ் செயல்

கலையுடையவனே அந்தமனுஷனே வித்துவான். நன்றாக ஆலோசித்துச் செய்யப்பட்ட மருந்துதானே நோயாளிக்கு ஆரோக்கியத்தை உண்டாக்குகின்றது.

அ. மேலும், விசேஷ அறிவுக்குரிய பிரமாணமானது முயற்சியிற் பயமுடையவனுக்கு அற்பமேனும் பிரயோசனப் படமாட்டாது. குருடனுடைய கையிலே விளக்கிருந்து பிரகாசித்தாலும் அதனால் அவனுக்குப் பிரயோசனம் யாது?

மித்திரா! நல்லவிதி கெட்டவிதி என்னும் அவஸ்தை விசேஷத்தினால் இதிலே திருத்தியாயிருத்தல் உத்தமம்.

கூ. சுகம் துக்கம் எதுவந்தாலும் அநுபவித்தல்வேண்டும். சுகதுக்கங்கள் சக்கரத்தைப் போலச் சுழன்றுவருகின்றது.

கo. தவளைகள் சிறுகுளத்தையும் பறவைகள் பூரண வாவியையும் அடைதல்போலச் சகலசெல்வங்களுந் தம்வசமின்றி முயற்சியுடைய மனுடனை அடைகின்றன.

கக. நிறைந்த முயற்சியுடையவனும், தாமசமில்லாதவனும், தொழின்முறை அறிந்தவனும், வியசனத்தில் விருப்பில்லாதவனும், வீரனும், நன்றிபறிதலுடையவனும், திடசிநேகமுள்ளவனுமாகிய மனிதனிடத்தே வாசஞ்செய்யும் பொருட்டு இலக்குமி தன்னிச்சைப்படி செல்கின்றாள்.

கஉ. விசேஷமாகப் புத்திமான் திரவியமில்லாதவனாயிருந்தாலும் உயர்ந்தநிலையை அடைகிறான்; உலோபியானவன் திரவியமுள்ளவனாயிருந்தாலும் அவமானமான நிலையை அடைகிறான், சுவாபமாய் உற்பவித்த குணோதயங்களுக்கு இடமாகிய சிங்கத்தின் மேன்மையை நாயானது பொன்மாலையைத்தரித்திருந்தாலும் அடையமாட்டாது.

கங. செல்வன் என்பதனாற் கர்வங்கொண்டிருக்கின்ற நீ, செல்வம் அழியும்போது துக்கத்தை ஏன் அடைகின்றாய்? மனிதருடைய வீழ்ச்சியும் உயர்ச்சியும் கையிலிருக்கும் பந்துக்குச் சமமாயிருக்கின்றன.

கச. பின்னும், மேகத்தின் நிழலும், மூடனுடைய நட்பும், புதுத்தானியங்களும், பெண்களும், இளமைப்பருவ

மும், திரவியங்களும் சிறிதுகாலத்துக்கே அநுபவிக்கத்தக்கவைகளாய் இருக்கின்றன.

௧௫. சீவனத்தின்பொருட்டு அளவுக்குமேலே முயற்சி செய்தலாகாது. அது சிருட்டிகரினால் நியமிக்கப்பட்டிருக்கின்றது. ஒருபிராணியானது கருப்பத்திலிருந்து பிறந்தவுடனே அதன் மாதாவின் முலைகள் பால் சுரக்கின்றன அன்றோ!

௧௬. மித்திரா! கேள்! அன்னங்களை வெண்மையாக்கினவரும், கிளிகளைப் பசுமையாக்கினவரும், மயில்களைச் சித்திரமாக்கினவரும் எவரோ அவரே உனக்குஞ் சீவனத்தைக் கொடுப்பார்.

பின்னும், மித்திரா! புத்திமான்களுடைய இரகசியத்தைக் கேள்.

௧௭. திரவியங்கள் சம்பாதிக்கப்படும்போது துக்கத்தை உண்டாக்குகின்றன; அழியும்போது மனஸ்தாபத்தைக் கொடுக்கின்றன; ஆக்கமாயிருக்கும்போது மோகத்தை உண்டாக்குகின்றன. ஆதலால் திரவியங்கள் எப்படிச் சுகத்தைக்கொடுக்கும்?

௧௮. திரவியத்தில் ஆசையுள்ளவன் தருமத்தில் ஆசைகொள்ளாமலிருத்தல் உத்தமம்; சேற்றுநீரிலே சுத்திசெய்தலினும் அதனைத் தீண்டாமை உத்தமம்.

௧௯. ஆகாயத்திற் பறவைகளும், பூமியில் மிருகங்களும், நீரில் மீன்களும் எப்படி மாமிசத்தை உண்கின்றனவோ அப்படியே எவ்விடத்திலுந் திரவியவான் போகத்தை அநுபவிக்கின்றான்.

௨௦. மேலும், இயமனால் பிராணிகளுக்குப் பயமுண்டாதல்போலச் செல்வர்களுக்கு இராசாவினாலும், நீரினாலும், அக்கினியினாலும், சோரராலும், சுற்றத்தாராலும் பயம் உண்டாகின்றது.

௨௧. இச்சையானது நீங்காமலிருக்கும்போது இச்சைப்படி திரவியமில்லாதிருத்தலே தகுதி; இச்சையினும் கிலேசம் அதிகமுள்ள இப்பிறவியிலே துக்கம் யாது?

சகோதரா! இன்னும் கேள்;

உஉ. திரவியத்தைச் சம்பாதித்தல் அரிது; சம்பாதித்ததைக் காத்தலும் அரிது; சம்பாதித்தது நாசமடைதல் மரணத்துக்குச் சமம். ஆதலாற் பொருளாசையை நினைக்கப்படாது. பொருளாசையை நீக்கிவிட்டால் வறியவன் யார்? செல்வன் யார்? அந்த ஆசைக்கு அதிகம் இடங்கொடுத்தால் அடிமைக்குணம் மேற்கொள்ளும்.

உங. இன்னும், ஒரு மனிதன் எதனை வாஞ்சிக்கின்றானோ அதனிலேயே அவன் வாஞ்சை செல்கின்றது, வாஞ்சித்த பொருளை அடைந்தபோது அதனின்றும் ஆசைதிரும்புகின்றது.

அதிகம் பேசுதலினாற் பிரயோசனம் யாது? என்னோடு பேசும் விநோத சம்பாஷணையினால் மித்திரா! காலங்கழிக்க வேண்டும்.

உச. மகாத்துமாக்கள் மரணகாலம் வரைக்கும் பிரீதி உள்ளவர்களும், தக்ஷணத்தில் அழியுங் கோபமுள்ளவர்களும் எல்லாவற்றையும் விட்டவர்களும், ஒன்றிலேனும் பற்றற்றவர்களுமாயிருக்கிறார்கள்.

என்று சொன்னதை இலகுப்தனன் கேட்டு மந்தரா! நீ ஆசிர்வாதமுடையனாய் இருக்கிறாய்; முற்றும் புகலிடமாயும் இருக்கிறாய்.

உரு. நல்லவர்கள்தாமே நல்லவர்களை ஆபத்தினின்றும் எப்போதும் நீக்கத்தகுந்தவர்கள். சேற்றில் அமிழ்ந்திய யானைகளை யானைகளே தூக்கி எடுக்கின்றவைகளாயிருக்கின்றன.

உசு. அப்படியிருந்தும், குணவானிடத்திலே குணவானே பிரீதி செய்கிறான். குணமில்லாதவனுக்குக் குணவானிலே சந்தோஷமில்லை; வண்டு பெலத்தோடு தாமரையை அடைகின்றது. தவளை அந்தத் தாமரையோடு கூடவசித்தாலும் அதனை அடைவதில்லை.

உஎ. இரக்கிறவர்களாயினும் அடைக்கலம் புகுந்தவர்களாயினும் தங்களாசையிற் பங்கமடையாமலேதிருத்தியான முகமுடையவர்களாய் எவனிடத்தினின்று திரும்பிப்போகி

ன்றூர்களோ அவன் ஒருவனே பூமியிலுள்ள மனுடருக்குள்ளே கீர்த்தியுடையவனும் உத்தமனும், சற்புருஷனும், புண்ணிய சீலனுமாம். என்றது.

அவைகள் இப்படியே தங்களுக்குப் பிரியமான உணவுகளை உலாவித் தேடி அடைந்து சந்தோஷமுடையவைகளாய்ச் சுகத்தோடு வசித்துக்கொண்டிருந்தன. பின்னொருநாள் சித்திராங்கதன் என்னும் பெயருடைய மான் ஒன்று யாராலோ பயப்படுத்தப்பட்டு அங்கே வந்து அவைகளுடன் கூடிற்று. அப்போழுது பின்வரும் பயங்கர காரணத்தை எண்ணி மந்தரன் சலத்தினுள்ளே பிரவேசித்தது. மூஷிகம் புற்றினுள்ளே புகுந்தது. காகம் பறந்துபோய் ஒரு மரத்தில் நுனியில் ஏறியிருந்தது. பின்னர்க்காகம் நெடுந்தூரம் பார்த்தும் பயங்கர காரணம் யாதொன்றையுங் காணவில்லை. அதன் பின் எல்லாம் வந்து ஒருங்கு கூடியிருந்தன. மந்தரன் மானை நோக்கி நல்லது! க்ஷேமமாயிருக்கின்றாயா? உன்னிச்சைப்படியே நீர் முதலிய உணவுகளை, நீ அநுபவித்து இங்கே நின்று இவ்வனத்தை ஆளும் ப்சமானனாகக்கடவாய். என்றது. அப்போது சித்திராங்கதன் அதனைநோக்கி நான்வேடனாற் பயப்படுத்தப்பட்டவனாகி உனது சரணத்தை அடைந்தேன்.

உஅ. சரணமடைந்தவனை உலோபத்தினாலாதல் பயத்தினாலாதல் ஒருவன் காத்துக்கொள்ளாது விடுவானாயின், அதனால் வரும்பாவம் அவனுக்குப் பிரமகத்தி தோஷத்துக்குச் சமமாய் இருக்கும் என்று வித்துவான்கள் சொல்லுகிறார்கள்.

மேலும் உங்களோடு கூட இருக்குஞ் சிநேகத்தன்மையை விரும்புகிறேன். என்றது. இரணியகன் அதனைநோக்கி எங்களோடு உன்னுடைய சிநேகம் பிரயாசமின்றி அடையப்பட்டது.

உகூ. ஔரசன் சம்பந்தஞ் செய்யப்பட்டவன், வமிசக்கிரமமாய் வந்தவன் தீங்கினின்று காத்தவன். என்னும் நான்குவித மித்திரனையும் அறிந்துகொள்ளவேண்டும்.

நீ, இவ்விடத்தில் உன்வீடு போலப் பேதமின்றி இருக்கக்கடவாய். என்றது. மான் அதனைக்கேட்டு மகிழ்ச்சியோடு தன்னிச்சைப்படி ஆகாரத்தை உண்டு நீரைக்குடித்து வாவிக்குச் சமீபத்தில் நிற்கின்ற ஒரு மரநிழலிற் படுத்திருந்தது.

௯௦. கிணற்றினீரும், ஆலமரத்தினிழலும், இளமபெண்ணும், செங்கற்கோயிலும், சீதளகாலத்தில் உட்டணமாயிருக்கும்; உட்டணகாலத்தற் சீதளமாயிருக்கும்.

பின்னர் மந்தரன் மானை நோக்கி, மித்திரா! நீயாராலே பயப்படுத்தப்பட்டிருக்கின்றாய். சனமில்லாத இந்தக் காட்டிலே யாராவது வேடர் சஞ்சரிக்கிறாரா? என்று கேட்டது. மான் அதனைநோக்கிக் கலிங்கதேசத்திலே உருக்கு மாங்கதன் என்னும் இராசா ஒருவன் இருக்கின்றான். அவன் முறையே திக்குவிசயஞ்செய்து சந்திரபாகாநதி தீரத்திலேவந்து சேனைகளை நிறுத்தித் தானும் வாசஞ் செய்கின்றான். விடியற்காலத்திலே இங்கேவந்து கர்ப்பூரவாவியின் சமீபத்தில் வாசஞ்செய்ய எண்ணியிருக்கின்றான் என்று ஒரு வேடன் சொன்னகதையைக் கேட்டேன். அதுவும் விடியற்காலத்திலே இங்கேவரும் பயங்கரத்திற்குக் காரணமாய் இருக்கின்றது. என்பதனை உணர்ந்து யாது செய்தல்வேண்டுமோ அதனைச் செய்யத் தொடங்கல்வேண்டும். என்றுசொல்லிற்று. ஆமை அதனைக்கேட்டு மித்திரா! நான் வேறோர் வாவிக்குள்ளே ஓடிப்போய் ஒளிப்பேன் என்று அச்சத்தோடு சொல்லிற்று. காகமும் மானும் அப்படியாகுக என்று சொல்லின. பின்னர் இரணியகன் ஆலோசித்து, நீரை அடைந்தபோதே ஆமைக்குச் சௌக்கியம் உண்டாகும் பூமியிற் செல்லும்போது அதற்குச் சௌக்கியம் எப்படி உண்டாகும்?

௯௧. சலசெந்துக்குத் தண்ணீரும், பட்டணத்தில் இருப்பவர்களுக்குக் கோட்டையும், சுவாபதம் முதலியவைகளுக்குச் சுவ பூமியும் இராசாக்களுக்குச் சேனையும் பெரும் பலமாம்.

அன்புள்ள இலகுபதனகா! இவ்விதமான உபதேசத்தினற் பின்வரும் பிரகாரமுடியும்.

௧௨. வணிகபுத்திரன் ஒருவன் தன்மனைவியுடைய சரீரம் ஒருவனாற் பிடிக்கப் பட்டதைக்கண்டு அக்கங்கொண்டிருந்தான் அப்படியே நீயுமாவாய் என்றது.

இஃது எப்படி என்று அவைகள் கேட்க இரணியகன் சொல்லத் தொடங்கிற்று.

போதவணிகன்பத்தினிராசபுத்திரர்கதை.

கானியகுப்சம் என்னுந் தேசத்திலே வீரசேனன் என்னும் நாமமுடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் வீரபுரம் என்னும் நாமமுள்ள நகரத்திலே தன் புத்திரனாகிய துங்கபலன் என்பவனை இளவரசனுக்கிவைத்தான். அவனுமோ பெருஞ்செல்வனும் இளைஞனுமாயிருந்தான். ஒருநாள் தனது நகரத்திலே உலாவும்போது அதிகம் மேன்மையான யௌவனமுள்ளவளும், இலாவண்ணியவதி என்னும் பெயருடையவளுமாகிய ஒரு வணிகன்மனைவியைக் கண்டு புத்திகெட்டு அரமியஞ்சென்று துராசையினாற் பிடிக்கப்பட்ட மனமுடையவனாய் அவளைக் கண்டுகொள்ளும் பொருட்டு ஒரு தூதியை அனுப்பினான்.

௧. நேசமுள்ள பெண்களுடைய காதளவோடி நீண்ட நீல இறகுள்ள புருவம் என்னும் வில்லினின்று எய்யப்படுகின்ற இந்தக் கண் என்னும் கதியுடைய அம்புகள் ஒருவனுடைய இருதயத்திலே எவ்வளவுக்குந் தையாமல் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவன் சன்மார்க்கனும் இந்திரியங்களை அடக்குபவனும், வெட்கத்தைத் தாங்குபவனும், மரியாதையுள்ளவனுமாயிருப்பான்.

௨. அசத்தியமும், வலாற்காரமும், மாயையும், பொறாமையும், அதிலோபமும், நிர்க்குணமும், அசுசியும், பெண்களுக்கு இயல்பாக உண்டான தோஷங்களாம்.

அந்த இலாவண்ணியவதி என்பவளும் அவனைப் பார்த்த கணந்தொடங்கி அவனிடத்தே நேசமுள்ளவளாயிருந்தாள்.

பின்னர் இலாவண்ணியவதி தூதியுடையவார்த்தையைக் கேட்டு நான் பதிவிரதை நீதியின்மையாக நடக்கமாட்டேன்.

௩. எவள் வீட்டுக்காரியங்களிற் சாமர்த்தியமுடையவளோ, எவள் புத்திரபாக்கியமுள்ளவளோ, எவள் தன்கணவனுடைய உயிர்போல் இருக்கின்றளோ, எவள் பதிவிரதையோ, அவளே மனைவி.

௪. அன்றியுங் குயில்களுக்குச் சத்தமும் பெண்களுக்குக் கற்புநிலையும் கெட்டவடிவமுடையவர்களுக்குக் கல்வியுந் தபோதனர்களுக்குப் பொறுமையும் ரூபமாம்.

௫. இன்னும், எவளிடத்து நாயகன் சந்தோஷப்படாமல் இருக்கின்றனோ அவள் மனைவி என்று புகழப்படத்தக்கவளல்லள்; அக்கினியைச் சாட்சியாக வைத்திருக்கின்ற மரியாதையுள்ள நாயகனே பெண்களுக்குப் புகலிடமாம்.

இன்னும் என் பிராணநாயகன் எதனைக்கட்டளையிடுகின்றனோ அதனையே ஆராயாமற் செய்வேன் என்றாள் தூதி இது சத்தியமா? என்றுவினவ. இலாவண்ணியவதியுஞ் சத்தியந்தான் என்றாள். பின்னர்த் தூதிபோய் இலாவண்ணியவதி சொன்னபடி எல்லாவற்றையுந் துங்கவலன் முன்னிலையிற் சொன்னாள். அதுகேட்ட துங்கவலன் நான் அவளுடைய நேசமில்லாமல் எப்படிச் சிவிப்பேன்? என்றான். அப்போது குட்டினியாளவள் அவனை நோக்கிச் சுவாமீ! நான் அவளை உம்மிடம் வரும்படி செய்வேன் என்ன, அவன் அஃது எப்படிக்கூடும்? என்று கேட்டான். குட்டினி, உபாயஞ் செய்யவேண்டும்.

௬. உபாயத்தினாற் செய்துமுடிக்கத்தக்கது; பராக்கிரமத்தினாற் செய்துமுடிக்கத்தக்கதன்று; சேற்றுவழியிற் போன யானை ஒன்று நரியொன்றினாற் கொல்லப்பட்டது என்றுசொன்னாள்.

இராசகுமாரன் இஃது எப்படி என்றுகேட்கக் குட்டினி சொல்லுகின்றாள்.

சிருகாலகஜங்கள்கதை.

பிரமாரணியத்திலே வாசஞ்செய்யுங் கர்ப்பூரதிலகன் என்னும் யானையைப் பார்த்து நரிகளெல்லாம் இது எந்த உபாயத்தினாலாவது கொல்லப்படுமாயின்; இதன் சரீரம் எங்களுக்கு நான்கு மாசத்துக்கு இச்சைப்படி போசனமாகும். என்று சிந்தித்தன. அப்பொழுது அவற்றின் நடுவிலிருந்த ஒரு வயோதிக நரி இதனை நான் புத்திவலிமையினாற் கொல்வேன். என்று வாக்குத்தானஞ் செய்து பின்னர் வஞ்சகத்தோடு அந்தயானையின் சமீபம்போய்ச்சாட்டாங்கமாய் விழுந்து நமஸ்காரஞ்செய்து, தேவரீர்! கிருபாநோக்கஞ் செய்தருளும். என்றது. யானை நீ யார்? எங்கேயிருந்து வருகின்றாய்? என்று கேட்க, அது. நான் நரி; காட்டில்வசிக்கும் பிராணிகளெல்லாங் கூடி என்னை உம்மிடம் அனுப்பின; இராசாவின்றியிருத்தல் யோக்கியமன்று; இந்தக் காட்டிராச்சியத்திலே அபிடேகம் பண்ணிவைத்தற்கு நீர்தாமே சகல மேன்மையான குணங்களையுமுடையவராக எண்ணப்பட்டிருக்கின்றீர்.

௧. குலாசாரசனுசாரங்களிற் சுத்தமுள்ளவனும், மேன்மையான மனமுடையவனும். தருமமுடையவனும், நீதிசாத்திரத்தில் வல்லவனும் எவனோ அவனே பூமிக்குச் சுவாமியாக நியமிக்கப்படவேண்டும்.

௨. ஒரு மனிதன் முதல் இராசாவையும், பின் மனைவியையும், அதன்பின் திரவியத்தையும் அடைதல்வேண்டும். உலகத்தில் இராசா இல்லையாயின்; மனைவி எங்கே? திரவியம் எங்கே?

௩. மேலும், இராசா மழையைப் போலப் பிராணிகளுக்கு ஆதாரமாய் இருக்கின்றான். மழை தவறிப்போனால் அவைகள் இராசாவிடத்திலே உதவிபெற்றுச் சீவிக்கின்றன அன்றோ!

௪. பரவசமாயிருக்கின்ற இவ்வுலகத்திலே நல்ல நடையுள்ள மனிதனைப் பெற்றுக்கொள்ளுதல் அருமை; அவன் பெரும்பாலுந் தண்டத்திற்குப் பயந்து நியமிக்கப்பட்ட கட

மைகளைச் செய்துவருகிறான். குலஸ்திரியானவள் தன் நாயகன் பெலனில்லாதவனாயிருந்தாலென்ன! அதிட்டமில்லாதவனாயிருந்தாலென்ன! அவன் ஆஞ்ஞைக்குப் பயந்து சேர்த்துக்கொள்ளுகிறாள்.

ஆதலால் முகூர்த்தகாலம் வழுவிப்போகாதபடி அனுக்கிரகஞ்செய்து தேவரீர்! சீக்கிரம்வந்துவிடல்வேண்டும் என்று சொல்லிவிட்டு நரி எழுந்து போயிற்று. இராச்சியவிருப்பத்தினாலிழுக்கப்பட்ட கர்ப்பூரதிலகன் என்னும் யானையோ நரிகாட்டிய வழியால் ஓடிப்போய் ஒருபெருஞ்சேற்றில் மாண்டது. அப்போது அந்தயானை நரியைநோக்கி மித்திரா! இப்போது செய்யத்தக்கது யாது? நானோ பெருஞ்சேற்றில் விழுந்திருக்கிறேன் என்றது. அப்போது நரிசிரித்துத் தேவரீர்! என் வாலின் நுனியிலே கையைப்பிடித்துக்கொண்டு மேலே ஏறிவாரும்; என்போலிகளுடைய வார்த்தையிலே விசுவாசம் நீர் வைத்ததனால் உண்டாகிய பிரயோசனம் இது தான்.

௫. எப்பொழுது துர்ச்சனருடைய கூட்டத்தை விட்டிருப்பாயோ அப்பொழுதே சீவிப்பாய். எப்பொழுது துர்ச்சனருடைய கூட்டத்திற் சேர்ந்திருப்பாயோ அப்பொழுது தானே மரணிப்பாய் என்றது.

அதன்பின் அந்தப் பெருஞ்சேற்றில் அமிழ்ந்திய யானை நரிகளால் உண்ணப்பட்டது. ஆதலாற்றான், உபாயத்தினாற் செய்யத்தக்கது என்பது சொல்லுகிறேன் என்றான்.

அதன்பின் குட்டினியுடைய உபதேசத்தின்படி அந்த இராசபுத்திரன் இலாவண்ணியவதி யுடைய நாயகனாகிய சாருதத்தன் என்னும் வனிகபுத்திரனைச் சேவகனாக்கி விசுவாசமான காரியங்களெல்லாவற்றிலும் நியோகித்தான். பின்னொருநாள் குட்டினியுடைய உபதேசத்தினால் அந்த இராசபுத்திரன் ஸ்நானஞ்செய்து கந்தசந்தனாதிகளைப் பூசிப் பொன்னாபரணங்களைத் தரித்துக்கொண்டு, சாருதத்தா! நான் ஒருமாசம் வரையுங் கௌரிவிரதம் அநுட்டித்தல்வேண்டும். ஆதலால் இன்றுதொடங்கி ஒவ்வோரிரவுங் குலத்திற்பிறந்த ஒவ்வொரு யுவதியைக் கொண்டுவந்து நீ ஒப்பித்தல் வேண்டும்.

அவள் சொல்லப்பட்ட விதிப்படி என்னாற் பூசிக்கப்படவேண்டியவள் என்றான்.

பின்னர் அந்தச்சாருதத்தன் அவ்விதமான ஒரு யௌவனஸ்திரியைக் கொண்டுவந்து சமர்ப்பித்துப் பின்பக்கத்தில் ஒளித்துநின்று, இவன் என்ன செய்கிறான்? என்று பார்த்தான். அந்த இராசபுத்திரனும் அவளைத் தொடாமலே தூரத்தினின்று வஸ்திராலங்காரத்தினாலும், கந்தசந்தனங்களினாலும் பூசித்துக் காவற்காரரோடு கூட்டி அக்கணமே அனுப்பிவிட்டான். அந்த வணிகபுத்திரன் அதனைக் கண்டதனால் உண்டாய நம்பிக்கையினாலும், உலோபத்தினால் இழுக்கப்பட்ட மனத்தினாலுந் தன்மனைவியையுங் கொண்டுவந்து சமர்ப்பித்தான். அந்தத்துங்கவலனும் அவளைத் தன்மனத்திற் பிரியமாயிருந்த இலாவண்ணியவதி என்றறிந்து, விரைந்தெழுந்து, இரக்கமின்றி அவளோடு பேசி ஆனந்தத்தினால் மூடப்பட்டகண்ணுஞ், சந்தோஷ மனமுமுள்ளவனாய் வெகுவிதமான சம்பாஷணை செய்துகொண்டிருந்தான். அதனைக் கண்ட வணிகபுத்திரன் எழுதப்பட்ட சித்திரம்போல நின்றான்.

இப்படியே ஒரு மூடன் தான் செய்த உபாயத்தினால் அதிகதுக்கமுற்றான். அப்படியே உனக்குஞ் சம்பவிக்கும் என்று நான் பயப்படுகிறேன் என்று மூஷிகஞ் சொல்லிற்று. பின்னர் மந்தரன் அதன்வார்த்தையைக்கேட்டு அவதானித்து மகாபயத்தோடும் நீர்நிலையைவிட்டுப் போயிற்று. இரணியகன் முதலியவைகளும் அதற்குப் பின்னே போயின. அப்போது காட்டிற் சுற்றித் திரிகின்ற வேடன் ஒருவன் நிலத்திற் போகின்ற மந்தரனைப் பிடித்து உயர்த்தித் தன் வில்லிலே கட்டிக்கொண்டு வீட்டைநோக்கிச் சென்றான். அந்த மானும், காகமும், மூஷிகமும் அதிகந் துக்கத்தை அடைந்து அவன்பின்னே போயின. அப்பொழுது மூஷிகம் புலம்பத் தொடங்கிற்று.

௬. சமுத்திரத்தைப் போல எல்லை காணரிய ஒருதுக்கத்தின் கரையை நான் காணமல் இருக்கும்போது இரண்

டாங் துக்கமும் எனக்குச் சமீபித்தது. என் தவறுகளுக்காக எவ்வளவு அநர்த்தங்கள் வந்துசேருகின்றன !

எ. இயல்பிலே எவன் மித்திரனா யிருக்கின்றானோ அவன் தேவச் செயலினாற் கிடைக்கிறான். அப்படிப்பட்ட இயல்பான மித்திரன் ஆபத்திலும் விட்டுப்பிரியான்.

அ. மேலும், இயல்பிலுண்டான மித்திரனிலே மனிதர் விசுவாசம் வைத்திருத்தல்போல மாதாவிலாவது, மனைவியிலாவது, சகோதரர்களிலாவது, பிள்ளைகளிலாவது விசுவாசம் வைக்கமாட்டார்கள்.

இப்படியே மூஷிகம்பின்னுஞ் சிந்தித்து அந்தோ ! எனக்குக் கெட்ட்விதி இருக்கின்றது.

கூ. காலபேதங்களிற் சுற்றிவருகின்ற நன்மைதீமைகளாகிய சுவகருமங்களினின்றும் விரிகின்ற முயற்சிகள் ஜென்மபேதங்களிற் போல அவஸ்தாபேதங்களிலும் இவ்விடத்தில் என்னாற் கண்டு அநுபவிக்கப்பட்டன.

க0. அபாயத்தோடு காயமும், நாசத்தோடு சம்பத்தினிலையும், பிரிவினோடு கூடுதலும், வைக்கப்பட்டிருக்கின்றன

கக. சோகத்தை நீக்குவோனும், அச்சத்தினின்று காப்பவனும், நமக்குப் பிரீதியும் நம்பிக்கையுமுள்ள பாசனமுமாகிய மித்திரன் என்னும் பஞ்சாக்ஷர ரத்தினத்தைச் சிருட்டித்தவன் யாவன் ?

கஉ. எந்த மித்திரன் தன் மித்திரனுடைய கண்களுக்குப் பிரீதியான இரசாயனமும், மனததிற்கு ஆனந்தமும், சுக துக்கங்களின் பாத்திரமுமாய் இருக்கின்றானோ அந்த மித்திரனைப் பெற்றுக்கொள்ளுதல் அரிது. மற்றைய மித்திரர்களோ பொருளாசையினாற் சலக்கமுடையவர்களாய்ச் செல்வமுள்ள காலததிலே எவ்விடத்தும் வந்து கூடுவார்கள். அவர்களுடைய உண்மையை உரைத்தறியுங் கல்லு ஆபத்தேயாம்.

இப்படியே வெகுநாரம் புலம்பிக்கொண்டு சித்திராங்கதனையும், இலகுபதனனையும் நோக்கி எதுவரையும் வேடன் காட்டைவிட்டு நீங்காமல் இருக்கின்றானோ அதுவரையும் மந்

தரனை விடுவித்தற்கு முயற்சி செய்யக்கடவேம் என்று சொல்லிற்று.

அவைகள், செய்யவேண்டிய காரியத்தை விரைந்து சொல்வாயாக என்று கேட்டன.

இரணியகன், சித்திராங்கதன் சலசமீபத்திற்போய் இறந்தவனைப்போல்ச் சேட்டையின்றித் தன்னைக்காட்டிக்கொண்டு கிடத்தல்வேண்டும்; அதன்மேலிருந்து காகமும் மூக்கினால் யாதாயினும் ஒன்றைக் கொத்தல்வேண்டும். அப்பொழுது இந்தவேடன் மிருகமாமிச விருப்பத்தினால் மந்தரனை நிலத்தில் வைத்துவிட்டுப்போவான்; அப்போது நான் மந்தரனுடைய பாசங்களை அறுத்துவிடுவேன் என்று சொல்லிற்று.

பின்னர்ச் சித்திராங்கதனும் இலகுபதனனுஞ் சீக்கிரம் போய் அப்படிச் செய்துகொண்டிருக்கும்போது அந்தவேடன் இளப்படைந்தவனுய்த் தண்ணீர் குடித்து மரத்தின் கீழே நிருகலையில் இறந்தது போலக் கிடக்கும் மானைப் பார்த்து, மந்தரனைச் சலசமீபத்தில் வைத்துவிட்டுக் கர்த்தரிகையையும் எடுத்துக்கொண்டு மனமகிழ்ச்சியுடன் அதற்குச் சமீபமாகப்போனான். அப்போது இரணியகன் வந்து கட்டுகளை அறுத்துவிட ஆமை விரைந்து சலத்திற்புகுந்தது. அந்த மானுந் தனக்குக் கிட்ட வேடன் வருதலைக் கண்டு துள்ளி எழுந்து சீக்கிரம் ஓடிப்போயிற்று. அப்போது வேடன் திருமபிவந்து மரத்தடியிற் பார்த்தபோது ஆமையைக் காணமல், ஆராயாது காரியத்தைச் செய்கின்ற எனக்கு இது தக்கது.

கஅ. எவன் நிலையான காரியங்களை விட்டு நிலையின்மையான காரியங்களைச் செய்கின்றானே அவனுடைய நிலையான காரியங்களும் நட்டமாகின்றன. நிலையில்லாத திரவியங்களு நட்டமாகின்றன என்று சிந்தித்தான்.

பின்னர் அவன் தன் கர்மவசத்தில் ஆசையில்லாதவனாய் மலைச்சாரலுக்குப் போனான். மந்தரன் முதலியவைகளெல்லாம் ஆபத்தினின்றும் நீங்கினவைகளாய்த் தங்களுக்குரிய இடங்களிற்போய்ச் சுகத்தோடு வசித்தன என்றார்.

இவைகளை உபதேசித்த விஷ்ணுசர்மனை இராசகுமாரர்கள் நோக்கி, ஆரியரே! நாங்களெல்லாவற்றையுங் கேட்டுணர்ந்தோம்; ஆதலின் மனப்பாக்கியமுடையேம்; எங்கள் மனவாஞ்சையும் நிறைவேறிற்று என்று சொன்னார்கள்,

விஷ்ணுசர்மர், இப்படியே உங்கள் விருப்பம் நிறைவேறிற்று.

கச. நல்லோர் மித்திரரை அடைந்துகொள்ளக்கடவர்; சனங்கள் செல்வம் அடையக்கடவர். இராசாக்கள் தங்கள் தர்மநிலையினின்று என்றும் பூமியைக் காக்கக்கடவர்; நன்மை செய்பவருடைய நீதி புதுநாயகியைப்போல எங்கள் மனச்சந்தோஷத்தின் பொருட்டாக இருக்கக்கடவது; பரமேசுவரர் சனங்களுக்கு நன்மையைக் கொடுக்கக்கடவர். என்றார்.

மித்திரலாபம் முற்றுப்பெற்றது.

இரண்டாவது

சுகிர்தபேதம்.

பின்னர் இராசபுத்திரர்கள், விஷ்ணுசர்மரைப் பார்த்து, "ஆசாரியரே! நாங்கள் மித்திரலாபத்தைக் கேட்டுணர்ந்தோம். இப்பொழுது சுகிர்தபேதத்தையுங் கேட்டற்கு விரும்புகின்றோம் என்றார்கள்.

விஷ்ணுசர்மர், பிள்ளைகளே! சுகிர்தபேதத்தைக் கேளுங்கள் அதன் முதற்சுலோகம் இது:—

க. ஒருகாட்டிலே ஒருசிங்கத்துக்கும், ஓர் எருதுக்கும் அதிகம் நண்பு வளர்ந்துகொண்டிருந்தது; அதனைக்கோட் சொல்லும், பொருளாசையுமுடைய ஒரு நரி விநாசமாக்கி விட்டது என்றார்.

இராசபுத்திரர்கள் இஃது எப்படி? என்று கேட்க விஷ்ணுசர்மர் சொல்வாராயினர்.

வணிகனிடபசிங்க சிறுகாலர்கள்கதை.

தெற்குத்தேசத்திலே சுவர்ணவதி என்னும்பெயருடைய நகரி ஒன்று உண்டு. அங்கே பெருஞ்செல்வனாகிய வர்த்தமானன் என்னும்பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அதிகம் பொருளிருந்தும், மிக்க திரவியமுடைய தன் சுற்றத்தவர்களைப் பார்த்துப் பின்னும் திரவியத்தை வளர்த்தல் வேண்டும் என்னும் எண்ணமுண்டாயிற்று.

உ. தன்னைக் கீழாகப் பார்க்கிறவன் எவன் மகிமையடையாமலிருப்பான்? தன்னைமேலாகப் பார்க்கின்றவர் யாவரும் வறியராகின்றார்கள்.

ங. வெகு திரவியமுடைய மனிதன் பிராமணனைக் கொன்றவனாயினும் பூசிக்கப்படுகிறான்; சந்திரனுக்குச் சமானமான குலத்தவனாயினுந் திரவிய மில்லாதவன் இகழப்படுகின்றான்.

ச. இளம்பெண்ணானவள் வயோதிக நாயகனை விவாக ஞ்செய்ய விரும்பமாட்டாள். அதுபோலச் செல்வமும் முயற்சியில்லாதவனையும், சோம்புடையவனையும், விதியை நம்பியிருப்பவனையும், சாகசத்தினாற்கெட்டவனையுஞ்சேரமாட்டாது.

ரு. சோம்பு, ஸ்திரிகளைச்சேவித்தல், உரோகமுடையவனாயிருத்தல், சென்மஸ்தானத்திற் பிரியமாயிருத்தல், சந்தோஷம், பயம் என்னும் ஆறும் பெருமையடைதற்கு விக்கினமாயுள்ளவைகளாம்.

சா. எவன் அற்ப திரவியத்தினாலே தான் நன்றாயிருக்கிறேன் என்று எண்ணுகிறானோ அவனுக்கு விதியானது அவைகளை விருத்தியாக்கமாட்டாது.

எ. மேலும், முயற்சியில்லாதவனும், ஆனந்தமில்லாதவனும், வீரியமில்லாதவனும், சத்துருவுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவனுமாகிய புத்திரனை மாதாவானவள் ஒருகாலமும் பெறாதிருக்கக்கடவள்.

அ. பெற்றுக்கொள்ளாத பொருளையே பெறும்படி விரும்பவேண்டும். பெற்றுக்கொண்டதைத் தீங்கினின்று காத்தல்வேண்டும். காக்கப்பட்டதை நன்றாய் வளர்த்தல் வேண்டும். வளர்க்கப்பட்டதை யோக்கியர்களுக்குக்கொடுத்தல் வேண்டும்.

கூ. விருத்தியாக்கப்படாத செல்வம், அஞ்சனத்தைப் போலக்காலஞ் செல்லச்செல்ல அற்பசெலவினாலும் அழிகின்றது; அநுபவிக்கப்படாத செல்வம் பிரயோசனமில்லாததாய் இருக்கின்றது.

௰. அஞ்சனத்தின் குறைவையும், வன்மீகத்தின் வளர்ச்சியையும் பார்த்துத் தர்மகர்மத்தினாலும், புண்ணியகர்மங்களினாலும் வாழ்நாளைப் பிரயோசனமுள்ளதாக்கிக் கொள்ளல்வேண்டும்.

௧௧. நீர்த்துளிகள் கிரமமாய் விழுதலினால் ஒருகுடம் நிரம்புகின்றது. அதுவே சகல வித்தைகளுக்கும், தருமத்துக்கும், திரவியத்துக்குங் காரணமாகும்.

என்று இப்படியே வர்த்தமானன் ஆலோசித்துச் சஞ்சீவகன் நந்தகன் என்னும்பெயருடைய இடபங்கள் இரண்டையும் சகடத்தின் துலாவிற்பூட்டி அதனைப் பலவிதத் திரவியங்களினாலும் நிறைத்து வாணியத்தின்பொருட்டுக் காசுமீரதேசத்துக்குப்போயினான்.

கஉ. சமர்த்தர்களுக்கு அதிபாரம் யாது? முயற்சிசெய்கிறவர்களுக்குத் தூரம் யாது? வித்தையை யறிந்தவர்களுக்குப் பிறதேசம் யாது? இன்சொல்லுடையார்க்குப் பிறன் யார்?

இப்படிப்போகும்போது துர்க்கம் என்னும் பெயருடைய பெருங்காட்டிலே சஞ்சீவகன் முழந்தாள் ஒடிந்து விழுந்தது. இதனைக்கண்டு வர்த்தமானன் சிந்திப்பானாயினான்.

கங. நீதிமான் இங்கேயும் அங்கேயும் முயற்சிசெய்தாலும் எது தேவசித்தமாய் இருக்கின்றதோ அதுவே அவனுக்கு இறுதிப்பலனாகின்றது.

கச. சந்தேகப்படுதல் சகலசெய்கைகளுக்கும் இடையூறாய் இருத்தலால் அது எப்போதும் விடப்படத்தக்கது. ஆதலாற் சந்தேகத்தை ஒழித்துச் செய்யப்படவேண்டிய காரியமே செய்யும்படி விதிக்கப்படுகின்றது.

இப்படியே சிந்தித்துச் சஞ்சீவகனை அவ்விடத்தில் நீக்கிவிட்டுப் போயினான். . சஞ்சீவகனும் ஒருபடி மூன்றுகாலினாலுஞ் சஞ்சரித்துக்கொண்டு அவ்வனத்திலே நின்றது.

கரு. தண்ணீரில் அமிழ்ந்தினவன் மலையிலிருந்து விழுந்தவன் பாம்பினாற்கடிக்கப்பட்டவன் என்னும் இவர்களுடைய உயிர்நிலையை ஆயுளானது காத்துக்கொள்ளுகின்றது.

கசு. ஒருபிராணியானது நூறு அம்புகளினால் எய்யப்பட்டாலும் அது இறத்தற்குரிய காலத்திலன்றி இறக்கமாட்டாது. இறத்தற்குரிய காலத்தை அடைந்ததாயின், தருப்பை நுனியாற் றொட்டாலுஞ் செத்துவிடும்.

கஎ. ஒருவராலுங் காக்கப்படாதவன் தெய்வத்தினாற் காக்கப்பட்டானாயின் நிலைபெறுகின்றான். நன்றாகக் காக்கப்பட்டவன் தெய்வத்தினால் விடப்பட்டானாயின் அழிகின்றான்.

உதவியில்லாதவனாயினுங் காட்டிலே விடப்பட்டவன் சீவிக்கின்றான். வீட்டிலே வைத்துச் செய்யவேண்டிய முயற்சி செய்தாலுஞ் சீவிக்கமாட்டாதவன் சீவிக்கமாட்டான்.

பின்னர் நாள்கள் செல்லச்செல்லச் சஞ்சீவகன் தன்னிச்சைப்படி அந்தக்காடுகளிலே சுற்றித்திரிந்து உணவுமுதலியவைகளிற் குறைவில்லாமல் சந்தோஷமுடையதாயும், கொழுத்த சரீரமுடையதாயும் நின்று ஒருநாட்பெலத்த சத்தத்தோடும் உங்காரஞ்செய்தது. அந்தக்காட்டிலே பிங்கலகன் என்னுஞ் சிங்கம் ஒன்று தன் புயவலிமையினாற் சம்பாதித்த இராச்சியசுகத்தை அனுபவித்துக்கொண்டிருந்தது.

கஅ. அபிஷேகமாயினுஞ் சமஸ்காரமாயினும் மிருகங்களினாற் சிங்கத்துக்குச் செய்யப்படுதல் இல்லை; அது தன் விக்கிரமத்தினாற் சம்பாதிக்கப்பட்ட இராச்சியத்திற்குத் தானே மிருகேந்திரத் தன்மையுடையதாயிருக்கின்றது.

அந்தச்சிங்கமும் ஒருநாள் தண்ணீர்த்தாகத்தினால் ஆகுலப்பட்டுத் தண்ணீர் குடிக்கும்பொருட்டு யமுனாநதிக்கனாக்குப் போனபோது அங்கே முன்னொருகாலமுங் கேட்கப்படாத உகாந்த மேகத்தின் சத்தத்தை ஒத்த சஞ்சீவகனுடைய பெருஞ்சத்தத்தைக்கேட்டுப் பயப்பட்டுத் தண்ணீர்குடியாமற் றிரும்பித் தனது வாசஸ்தானத்திற்கு வந்து இதுயாது? என்று ஆலோசித்துக்கொண்டு சும்மா இருந்தது. அஃது அப்படியிருத்தலை அதன் மந்திரி பிள்ளைகளாகிய கரடகன் தமனகன் என்னும் நரிகள் இரண்டுங்கண்டன.

தமனகன் கரடகனை நோக்கி, மித்திரா! கரடகா எங்கள் சுவாமி தண்ணீர் குடிக்கப்போயுங் குடியாமல் மந்தம் மந்தமாய் நிற்றற்குக் காரணம் யாது? என்று கேட்டது.

கரடகன், மித்திரா! தமனகா! எங்கள் எண்ணப்படி அதற்கு நாம் இனிச்சேவைசெய்யப்படாது. ஆதலால் அதன் தொழிலை விசாரிப்பதினாற் பிரயோசனம் யாது? குற்றம் ஒன்றுமின்றி நெடுங்காலமாக இந்த இராசனால் அவமானஞ் செய்யப்பட்டு நாங்கள் பெருந்துக்கம் அநுபவிக்கின்றோம்.

சகூ. ஊழியஞ்செய்து பொருள்பெற விரும்புகின்றசே, வகர்கள் யாது செய்யற்பாலர்! பார்! சரீரசுவதந்திரந்தா னும் அந்த மூடர்களுக்கு இல்லை.

உ0. பிறனை அடைந்திருப்பவர்கள் குளிர் காற்று வெய்யில் இவைகளினால் உண்டாகின்ற கிலேசங்களைத் தாங்கிக் கொள்ளுகிறார்கள். அறிவுள்ளவன் அதிற்பாதியினாலேனுந் தவத்தைச் செய்து சுகமுடையவனாவான்.

உக. தன்னிட்டமான சீவனவிருத்தி எவ்வளவுக்கு இருக்கின்றதோ அவ்வளவுக்குஞ் சென்மமானது பிரயோசன முடையதாய் இருக்கின்றது. பராதீனராய்ப் போனவர்கள் எவர்களோ அவர்கள் உயிரோடிருக்கின்றார்களாயின்; இறந்தவர்கள் யாவர்?

உஉ. வா; போ; இரு; எழுந்துநில்; பேசு; மௌனமாயிரு; என்று இப்படியே செல்வர்கள், ஆசை என்னுங் கிரகணத்தினால் முழுங்கப்பட்ட சேவர்களோடு விளையாடுகிறார்கள்.

உ௩. புத்தியில்லாதவர்கள் திரவியலாபத்தின் பொருட்டுப் பண்ணியஸ்திரிகளைப்போலத் தங்களைத் தாங்களே அலங்காரஞ் செய்து செய்து பிறருக்குத் துணைக்காரனரா கின்றார்கள்.

உச. இயல்பிலே சபலத்திலும், அசுசியிலும், பதிகின்ற சுவாமிகளுடைய பார்வையைத்தானுஞ் சேவகர்கள் வெகுமானிக்கின்றார்கள்.

உரு. விசேஷமாக ஒருசேவகன் உயர்ச்சியடையும் பொருட்டாகத் தன்னைத் தாழ்த்துகின்றான். சீவனத்தின் பொருட்டு உயிரை விடுகின்றான். சுகத்தின்பொருட்டுத் துக்கப்படுகின்றான். சேவகனிலும் மூடன் வேறு யாவன்?

உசா. ஒரு சேவகன் மௌனமாயிருந்தானாயின் மூர்க்கன் என்றும், பேச்சில் வல்லவனாயின் பைத்தியக்காரன் என்றும், கீழ்ப்படிதலுடையனாயிருந்தானாயின்; பயப்படுகிற

வன் என்றும், பெரும்பாலும் பொறுமையில்லாதவனாயிருந்தானாயின்; குலத்திற் பிறவாதவன் என்றும், ஒருபக்கத்திலே காணப்பட்டானாயின்; இலச்சைகெட்டவன் என்றும், தூரத்தில் நின்றானாயின் கர்வமுள்ளவன் என்றும், சொல்லப்படுவான்.. ஆதலினாற் சேவகர்களுடைய கடமையோ அதிக துக்கமுடையதும் யோகிகளாற்றானும் பயின்றுகொள்ளற்கரியதுமாக இருக்கின்றது. என்றுசொல்லிற்று.

தமனகன். மித்திரா! இது எப்போதும் மனத்தினாற்றானும் நினைக்கத்தக்கதன்று.

உஎ. எந்தச் சுவாமிகள் மகிழ்ச்சியுடையராய் மனவிருப்பங்களை விரைவில் நிறைவேற்றுகிறார்களோ அந்தச் சுவாமிகள் பிரயத்தனத்தாற் சேவிக்கப்படாமல் இருத்தல் எப்படி?

உஅ. மேலும், சேவையில்லாதவர்களுக்கு உத்தண்ட வெண்குடையும், குதிரையும், யானையும், வாகனங்களும், சாமரம் வீசுமகிமையும் எப்படி உண்டாகும்? என்றது.

கரடகன், அதனை நோக்கி அப்படியாயினுஞ் செய்யத்தகாத இக்காரியத்திலே தலைப்படுதலினால் நமக்குப் பிரயோசனம் யாது? செய்யத்தகாத காரியங்களிலே தலைப்படுதலை எப்போதுந் தள்ளிவிடல்வேண்டும்,

உகூ. பார்; எவன் அடாத காரியத்தைச் செய்தற்கு விரும்புகின்றானோ அவன் ஆப்பினைப் பிடுங்கிய குரங்கினைப்போலக் கொல்லப்பட்டுப் பூமியிலே கிடப்பான் என்று சொல்லிற்று.

தமனகன் இஃது எப்படி என்று கேட்கக் கரடகன் சொல்லுகின்றது.

ஆப்பினைப்பிடுங்கிய குரங்கின்கதை.

மகததேசத்திலே தர்மாரணியத்துக்குச் சமீபமான பூமியிலே காயஸ்தகோத்திரத்தவனாகிய சுபதத்தன் என்னும் பெயருடைய ஒருவனால் அரங்கசாலை ஒன்று கட்டுவிக்கும்படி

தொடங்கப்பட்டது. அங்கே ஈர்வாளினுல் அறுக்கப்பட்ட, மரத்தம்பத்திற் சிறிது தூரம் பிளக்கப்பட்ட இருபிளவின் நடுவில் ஓர் ஆப்புத் தச்சனுல் இறுக்கப்பட்டிருந்தது. காட்டில் வாசஞ்செய்யும் பெரிய குரங்குக்கூட்டங்கள் விளையாடும்படி அங்கே வந்தன. அவற்றுள் ஒரு குரங்கு நாசகாலத்தினுல் ஏவப்பட்டதுபோல அந்த ஆப்பினைக் கைகள் இரண்டினுலும் பிடித்துக்கொண்டிருந்தது. அப்போது அதனுடைய முட்கங்கள் இரண்டும் மரப்பிளவினுள்ளே புகுந்தன. அது பின்னர்த் தனக்கு இயல்பாயுள்ள சபலத்தினுலே மகாப்பிரயாசத்தோடும் அந்த ஆப்பினைப் பிடுங்கிற்று. பிடுங்கினபோது மரப்பிளவுகளினுல் அண்டங்கள் நெருக்கிச் சூரணமாக்கப்பட்டுப் பஞ்சத்துவம் அடைந்தது.

ஆதலாற்றான் எவன் அடாதகாரியத்தைச் செய்தற்கு விரும்புகின்ருனே என்பது சொல்லலுற்றேன். என்றது.

தமனகன், அப்படியாயினும் யசமானனுடைய சேட்டைகளை விசாரித்தறிதல் சேவகராற் செய்யத்தக்கது. என்று சொல்லிற்று.

கரடகன், எவன் எல்லா அதிகாரத்திலும் நியமிக்கப்பட்ட பிரதானமந்திரியோ அவனே அதனைச் செய்க்கடவன். ஏனெனில்; அநுசீவிகளாகிய நாம் பிறனுடைய அதிகாரத்திலே தலைப்போடுதல் ஆகாது. பார்; யசமானனுக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் இச்சையினுற் பிறனுடைய அதிகாரத்திலே தலைப்போடுகின்றவன் எவனே அவன் கத்துதலினுல் அடிபட்ட கழுதையைப் போலத் துன்பத்தை அடைவான் என்றுசொல்லிற்று.

தமனகன் இஃது எப்படி என்று கேட்கக் கரடகன் சொல்லுகின்றது.

கர்த்தபகுக்குர சௌரர்கதை.

வாராணசி என்னும் நகரத்திலே கர்ப்பூரபடன் என்னும் பெயருடைய வண்ணுன் ஒருவன் இருந்தான். அவன்

ஒருநாள் இளமைப்பருவத்தையுடைய தன் மனைவியோடு வெகுநேரம் விநோதஞ் செய்து கொண்டு பின்னர் அதிகம் நித்திரையாயினன். பின் திரவியங்களைத் திருடும்படி கள்ளன் ஒருவன் வந்து அவன்வீட்டிலே பிரவேசித்தான். அவனுடைய முற்றத்திலே கழுதையும் ஒன்று கட்டப்பட்டிருந்தது. நாயும் அங்கே நின்றது. கழுதை அந்தக் கள்ளனைக் கண்டு சுவானத்தை நோக்கி உன்னுடைய காரியம் இதுதானா? நீ ஏன் பெருஞ்சத்தமுண்டாக்கி எங்கள் யசமானனை எழுப்பாமல் இருக்கின்றாய் என்று கேட்டது. அப்போது நாய் அதனை நோக்கி நீ என்னுடைய இந்தக் காரியத்தைப் பற்றி விசாரிக்கவேண்டியதில்லை. இவருடைய வீட்டினை நான் எப்படிக் காத்துவருகிறேன் என்பதனை நீயே அறிவாய்; இவர் நெடுங்காலம் மனப்பாக்கியமுடையராயிருந்தும் எனது உபயோகத்தை அறிந்தாரல்லர். இப்பொழுது எனக்கு உணவுகொடுத்தலிலும் குறைந்த ஆதரவுள்ளவராய் இருக்கிறார். யசமானர்கள் தங்கள் சேவகர்களிற் குறைகண்டன்றிக் குறைந்த ஆதரவுள்ளவர்களாய் இருக்கமாட்டார்கள். என்றுசொல்லிற்று.

கர்த்தபம், நாயை நோக்கி, அடா! மிலேச்சாகேள்! காரியகாலத்திலே தாமசிக்கிறவன் எவனோ அவன் ஏவற்காரனா? சிநேகிதனா? என்றது.

நாய் அதனை நோக்கிக் காரியகாலத்திலே கூலிக்காரரை மரியாதைசெய்யாதவன் பிரபுவா?

க. கூலிக்காரர்களுக்குச் சம்பளங் கொடுக்கும் போதும், யசமானனைச் சேவிக்கும்போதும், மார்க்கக்கிரியைகளை நடத்தும்போதும் புத்திரோற்பத்தியிலும் அநுசீவிகளைத் தடுப்பவர்கள் இருத்தலாகாது. என்றது.

அப்பொழுது கழுதை கோபத்தோடு நாயைநோக்கி நீ பாவி யசமானனுடைய காரியத்தில் வெறுப்புச் செய்கின்றாய்; அப்படியிருந்தாலும் யசமானனை எப்படி எழுப்பல் வேண்டுமோ அப்படி நானே எழுப்புவேன்.

௨. சூரியனைப் பின்பக்கத்திலும், அக்கினியைச் சடரத்திலும், சுவாமியைப் பலவிதத்தினாலும், பரலோகத்தை வஞ்சகமின்றியுஞ் சேவித்தல்வேண்டும்.

என்று சொல்லிக்கொண்டு அது பெருஞ்சத்தம் உண்டாக்கிற்று. அப்போது வண்ணான் அந்தச் சத்தத்தினால் விழித்து நித்திரையைக் கெடுத்தது என்று கோபங்கொண்டு எழுந்து கழுதையைத் தடியினால் அடித்தான். அந்த அடியினாற் கழுதை மரணமடைந்தது.

ஆதலாற்றான் யசமானனுக்கு இதஞ்செய்யவேண்டும் என்ற இச்சையினாற் பிறனுடைய அதிகாரத்திற் றலைப்படுகிறவன். என்பது முதலியவைகளைச் சொல்லுற்றேன்.

பார்; வேட்டையைத் தேடுதலே எங்களுக்கு விதிக்கப்பட்ட தொழில்; எங்கள் செயல்களிலே யாம் முயற்சி செய்தல்வேண்டும். என்று சொல்லிப் பின்னரும் ஆலோசித்து நாங்கள் இருவரும் உண்டு சேடமான உணவு அதிகமாக இருக்கின்றது. ஆதலால் இன்றைக்கு அதனை விசாரிப்பதில் யாதும் பிரயோசனம் இல்லை. என்று சொல்லிற்று.

தமனகன், இதனைக் கேட்டுக் கோபத்தோடுஞ் சொல்லத்தொடங்கிற்று. உணவைமாத்திரந் தேடுகின்ற நீ இராசாவை எப்படிச் சேவிப்பாய்? சேவகனுக்கு இது யோக்கியமன்றென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

௩. சிநேகிதருக்கு உபகாரஞ் செய்யும்பொருட்டும், பகைவர்களுக்கு அபகாரஞ்செய்யும்பொருட்டும் இராசாவையடைதல் புத்திமான்களால் விரும்பப்படுகின்றது. வயிற்றைமாத்திரம் நிறையாதவன் யாவன்?

௪. எவனுடைய சீவனத்தில் விப்பிரரும், மித்திரரும் சுற்றத்தவர்களுஞ் சீவிக்கின்றார்களோ அவனுடைய சீவனமே பிரயோசனமுள்ளது. தன் சரீரத்தின் பொருட்டுச் சீவனஞ் செய்யாமல் இருப்பவன் யாவன்?

ரு. எவனுடைய சீவனத்தினால் அநேகர் சீவிக்கின்றார்களோ அவனே சீவிக்கக்கடவன். காகந்தானுந் தன்னுதரத்தைச் சஞ்சுவினாற் பூரணமாக்கவில்லையா?

சா. ஒருவன் ஐந்து வெள்ளியின்பொருட்டு அடிமையாய்ப் போகின்றான். ஒருவன் வேறு ஒரு பெரிய நியர்யத்தினால் இலக்ஷம் வெள்ளிக்கு அடிமையாக்கப்படுகின்றான். நன்றாய்ச்செய்யும் வேலைக்காரனோ இலக்கத்துக்குமேற்பட்ட தொகையினாலுங் கிடைக்கப்படமாட்டான்.

எ. மனுடசாதியார் யாவரும் சமானமுடையராய் இருத்தலினால் ஒருவருக்கு ஒருவர் சேவைசெய்தல் இகழப்படத்தக்கது. எவன் யசமானனாகாமல் இருக்கிறானோ அவன் அநுசீவிகளுள் ஒருவனாக எண்ணப்படுகின்றான்.

அ. குதிரை, யானை, உலோகம், விறகு, கல்லு, வஸ்திரம், ஸ்திரி, புருடன், சலம் என்னும் இவைகளுள்ளிருக்கும் பேதம் பெரும்பேதமேயாம்.

கூ. அப்படியாயினும், அற்பநரம்பும், மிகக்கொழுப்பும், அழுக்குமுள்ள பாமிசமில்லாத எலும்பினை நாயானது எடுத்துப் புசித்துத் தன்பசி தணியாதிருந்துஞ் சந்தோஷப்படுகின்றது.

க0. சிங்கமானது ஒரு நரி தனக்குச் சமீபமாகவந்தாலும் அதனைக் கொல்லாதுவிட்டு யானையையே கொல்லுகின்றது. சகலருங் கஷ்டத்தை அநுபவித்தாலும் ஒருவன் தன் பெலனுக்கடுத்த பெலனையே விரும்புகிறான்.

இன்னுஞ் சேவகர்களுக்கும் யசமானர்களுக்குமுள்ள வித்தியாசத்தைப் பார்.

கக. நாயானது வாலையசைத்தல், கீழேபாதங்களிலே விழுதல், பூமியிலே விழுந்து ஆதரவோடுபார்த்தல் என்னும் இவைகளைத் தனக்கு உணவைக்கொடுக்கும் யசமானனுக்குச் செய்கின்றது. ஆயினும், உத்துங்கமான யானையோ தைரியத்தோடு பார்க்கின்றது. நூறுபிரியவாக்கியத்தினாலன்றி உண்ணப்பிரியப்படாது.

கஉ. ஒரு கணப்பொழுதாயினும் மனுஷர்களினல்விஞ்ஞானமும், விக்கிரமமும், புகழும், பொருந்திச்சீவிக்கின்றதெதுவோ அதுவே இவ்வுலகத்திற் சீவியம் என்று அதனை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். காகமும் பலியை உண்டு நெடுங்காலத்துக்குச் சீவிக்கவில்லையா ?

கங. பின்னும், நன்மைதீமைகளை விசாரித்தறியத்தக்க புத்தியில்லாதவனும், அநேக சுருதிவிஷயங்களால் விலக்கப்பட்டவனும், உதரத்தைமாத்திரம் நிறைக்கவேண்டும் என்னும் முழுவிருப்பமுடையவனுமாகிய புருடபசுவுக்கும் மற்றையபசுக்களுக்குமுள்ள விசேஷம் யாது ? என்றது.

கரடகன், நாங்கள் அவ்வளவு பிரதானிகள் அல்லேம். இதனை விசாரணை செய்தலினல் எங்களுக்குப் பிரயோசனம் யாது ? என்றது.

தமனகன் ; சிறிதுகாலத்திலே அமாத்தியன் பிரதான நிலையையாவது அப்பிரதான நிலையையாவது அடையமாட்டான்.

கச. இவ்வுலகத்திலே எவனுவது மேன்மையையும், மரியாதையையும், கீழ்மையையும், இயல்பிலேயில்லாதவனுயிருந்தாலும், உலகத்திலே தன்செய்கைகளே மனிதனை நன்மையில் அல்லது தீமையிற் செலுத்துகின்றது.

கரு. இன்னும், ஒரு கல்லானது மகாப்பிரயாசத்தோடும் மலையில் ஏற்றப்பட்டுக் கணப்பொழுதிற் கீழே உருட்டி விழுத்தப்படுகின்றது. அப்படியே ஆத்துமாவுங் குணதோஷங்களினல் உயர்ந்து விழுகின்றது.

ஆதலால், நல்லவனே ! ஆத்துமாவானது எல்லாருக்கும் அவரவர் முயற்சியிற் றங்கியிருக்கின்றதன்றோ !

கசு. கிணற்றைத் தோண்டுகின்றவன் கீழே கீழே போதல்போலவும், பிராகாரத்தைக் கட்டுபவன் மேலேமேலே போதல்போலவும் மனுடனுந் தன் செய்கைகளாலே தாழ்ச்சியையும், உயர்ச்சியையும் அடைகின்றான். என்றது.

கரடகன், பின் நீ என்னசொல்லுகிறாய்? என்றது. தமனகன், எங்கள் யசமானனாகிய இந்தப் பிங்கலன் யாதோ ஒரு பயங்கரத்தினால் தண்ணீர் குடியாமல் அச்சத்தோடுந் திரும்பிவந்திருக்கின்றான். என்றுசொல்லிற்று.

கரடகன், அந்தப்பயங்கரமும் இன்னது என்று நீ அறியாயா? என்றது.

தமனகன், புத்திமானால் அறியப்படாதது ஒன்று இருக்கின்றதா?

கஎ. சொல்லப்பட்டதன் பொருளைப் பசுக்களாலுங் கிரகித்தறிகின்றன. குதிரைகளும், யானைகளுங் கட்டளையிடும்போது அறிகின்றன, சொல்லப்படாதவைகளையும் பண்டிதன் ஊகித்து அறிகின்றான். பிறனுடைய இங்கிதத்தையறிதலே யுத்தியிந்திரியங்களின் பலனும்.

கஅ. மேலும், ஒரு மனிதனுடைய ஆகாரத்தினாலும், இங்கிதத்தினாலும், நடையினாலும், சேட்டையினாலும், வார்த்தையினாலும், நேத்திரவத்திர விகாரங்களினாலும், உள்ளிருக்கும் மனவெண்ணம் குறித்தறியப்படுகின்றது.

இப்போது அவருடைய பயப்பிரஸ்தாவத்திலே அறிவின்பெலத்தினால் நான், அவனை வசப்படுத்துவேன்.

கக. எவன் பிரஸ்தாவத்துக்கு இசைந்த வாக்கியத்தையும், நற்குணத்துக்கு இசைந்த பிரியத்தையும், தன்வலிமைக்குச் சமமான கோபத்தையும் அறிகின்றானோ அவனே பண்டிதன். என்றது.

கரடகன், மித்திரா! நீ சேவிக்கும் வழிகளை அறியாதவனாய் இருக்கின்றாய்.

உ0. பார்; கூப்பிடாமலிருக்கவும், உள்ளேபோய்க் கேளாதிருக்கவும் வெகுவார்த்தைகளைப் பேசித் தன்னைப் பிரீதியுடையவன் என்று எவன் எண்ணுகின்றானோ அவன் இராசாவுக்குக் கெட்டபுத்தியுடையவனாய்க் காணப்படுகின்றான். என்றது.

தமனகன், நல்லவனே ! நான் சேவைகளை அறியாதவன் என்பது எப்படி ?

உக. பார் ; இயல்பிலே அழகுள்ளது என்றும், அழகில்லாதது என்றும், யாதாயினும் இருக்கின்றதா? எவனுக்கு எது உருசிக்கின்றதோ அவனுக்கு அதுவே அழகுள்ளதாம்.

உஉ. எவனுக்கு எது இயல்போ அதனால் அந்தமனுஷனைப் பின்தொடர்ந்து ஒரு புத்திமான் சீக்கிரத்திலே தன் வசப்படுத்துவான்.

உ௩. இங்கே இருக்கிறவன் யார் ? என்று கேட்டால் தேவரீர் ! நான்தான் என்றும், எனக்குத் தயைசெய்து கட்டளையிடுவீராக என்றுஞ்சொல்லல்வேண்டும். இராசாவுடைய ஆஞ்ஞையைத் தன்சத்தியுள்ளளவும் பொய்ப்படுத்தலாகாது.

உச. அற்பமான இச்சையுள்ளவனும், பொறுதியுடையவனும், அறிவுள்ளவனும், நிழலைப்போலப் பின்செல்பவனும், கட்டளையிட்டதற்கு விகற்பமாக நடவாதவனும் எவனோ அவனே இராசஸ்தானத்தில் வசிக்கக்கடவன் என்றது.

கரடகன், சிலவேளை நீ தகுந்த சமயமல்லாத சமயத்திலே பிரவேசிப்பாய் ; அதனால் யசமானர் உன்னை அவமதிப்பார் என்றது.

தமனகன், அஃதுண்மையாயினுமாக. அப்படியாயினும் அநுசீவிகள் இராசசமீபத்தில் அவசியம் இருத்தல் வேண்டும்.

உரு. குற்றத்திற்குப் பயந்து ஒருவிஷயத்திலுந் தொடங்காதிருத்தல் கெட்டபுருடனுடைய இலக்கணம். சகோதரா ! சீரணியாது என்னும் அச்சத்தினால் போசனத்தை உண்ணமல் விடுபவன் யார் ?

உசா. கல்வியில்லாதவனா யிருந்தாலென்ன ! குலமில்லாதவனாயிருந்தாலென்ன ! அறியாதவனாயிருந்தா லென்ன இராசா தன் முன்னிலையிலே நிற்பவனுக்குத்தானே தயை செய்கின்றான் ; பெரும்பாலும், இராசாக்களும், பிரமதைக

ளும், கொடிகளும், பக்கத்தில் நிற்பதெதுவோ அதனையே சுற்றிப்பிடிக்கின்றார்கள் என்றது.

கரடகன், பின்னர் அங்கேபோய் என்ன சொல்வாய்? என்று கேட்டது.

தமனகன், கேள்; யசமானர் என்னிற்பற்றுடையராய் இருக்கின்றாரோ, பற்றின்றியிருக்கின்றாரோ என்பதனை முதலே ஆராய்ந்தறிவேன் என்றது.

கரடகன், அதனை அறியும் இலக்கணம் யாது? தமனகன், கேள்;

உஎ. தூரத்திலே கண்டு சிரித்தலும், விசாரணையிலே அதிகம் ஆதரவாயிருத்தலும், இல்லாத இடத்திற்குணங்களைப்புகழ்ந்துபேசுதலும், பிரியமான வஸ்துக்களிலே நினைவிருத்தலும், சேவகனிற்பற்றாயிருத்தலும், கொடையும் பிரீதியை வளர்த்தலும, குற்றஞ்செய்தபோதிலுங் குணத்தை எடுத்தலும் பற்றுள்ள யசமானுடைய இலக்கணமாம்.

உஅ. காலத்தைக் கழித்தலும், ஆசைகளை வளர்த்தலும் பிரயோசனத்தைப்பின்னப்புடுத்தலும் பற்றில்லாத யசமானுடைய இலக்கணமாம். என்று புத்திமான் அறிந்துகொள்ளக்கடவன்.

இதனை அறிந்து எப்போது அவர் என் வசயாவாரோ அப்போது அதனைச்சொல்வேன்.

உகூ. நீதிசாத்திர விதியோடு சேர்ந்த தீமையைக்காட்டுதலினால் உண்டாகும் விபத்தியையும், உபாயத்தைக் காட்டுதலினால் உண்டாகுஞ் சித்தியையுங் கண்ணுக்கெதிரே காட்டுகின்றவர்களைப்போலப் புத்திமான்கள் காட்டுகின்றார்கள்.

௩௦. இன்னும், இராசாபற்றுள்ளவராயிருக்கும்போது குற்றங்களுங்குணமாய் எண்ணப்படும்; பற்றில்லாதவராய் இருக்கும்போது, குணங்களுங் குற்றங்களாய் எண்ணப்படும். இவ்விரண்டிற்கும் நடுநிலையாயிருக்கும்போது குற்றங்கள்குற்றங்களாயுங் குணங்கள் குணங்களாயும் எண்ணப்படும்.

இப்படியே இராசாவுடைய குணங்கள் மூன்று வகைப்படும் என்று சொல்லிற்று.

கரடகன், அப்படியாயினுஞ் சாவகாசமின்றிப் பேசுதல் தகுதியன்று.

௩௧. விருகஸ்பதிதானுந் தகுதியற்றகாலத்திலே வார்த்தையைப் பேசுவானாகின்; புத்திக்கு இகழ்ச்சியையும், அவமானத்தையும் நித்தியமும் அடைவான் என்றது.

தமனகன், மித்திரா! பயப்படாதே நானோ தகுதியில்லாத காலத்திலே பேசமாட்டேன்.

௩௨. ஆபத்துக்காலத்திலேயும், பிழையானவழியிற்செல்லும்போதும் காரியஞ்செய்தற்குரிய காலங்கழிந்தபோதிலும், கேளாதிருந்தாலுந் தன் யசமானனுக்கு இதஞ்செய்ய விரும்புகின்ற சேவகன் புத்திசொல்லவேண்டும்.

சமயங் கிடைத்தபோது, ஆலோசனையைச் சொல்லிக்கொடாதிருப்பேனாயின்; அப்போது என்னுடைய மந்திரியுத்தியோகம் பிரயோசனமில்லாததாயிருக்கும்.

௩௩. ஒருமனிதன் எந்தக்குணத்தினாலே தன் சீவனத்தைத்தேடுகின்றானோ எதனாலே உலகத்திற் சற்குணராற் புகழப்படுகின்றானோ அந்தக்குணமானது அந்தக்குணத்தை அறிந்தவனாற் காக்கவும் வளர்க்கவும்படல்வேண்டும்.

ஆதலால் உனக்குச் சமாதானமுண்டாவதாக நான் பிங்கலகனாகிய இராசாவுடைய சமீபத்துக்குப்போகிறேன். என்பதனை அறிந்துகொள் என்றது.

கரடகன், சுபம் உண்டாகக்கடவது. உன்கருத்து எப்படியோ அப்படியே செய்யப்படக்கடவது.

௩௪. திரவியத்தை அடைதற்பொருட்டும், சேமத்தின் பொருட்டும், வெற்றியின்பொருட்டும், சத்துருபக்கத்தை அழித்தற்பொருட்டும், பின்னர்ச்சுகமாய்த் திரும்பிவருதற்பொருட்டும் போவாயாக என்றது.

பின்னர்த்தமனகன், விம்பிதமடைந்தவனைப்போலப் பிங்கலன் சமீபம்பொயிற்று. அப்போது பிங்கலராசா அதனைத் தூரத்திலே கண்டு ஆதரத்தோடும் உள்ளே பிரவேசிக்கும்படி செய்ய அது சாட்டாங்கமாய் அதனை நமஸ்காரஞ்செய்து உட்கார்ந்தது,

அப்போது, இராசா, உன்னைக்கண்டு நெடுநாளாயிற்று. என்னத் தமனகன், தேவரீருடைய ஸ்ரீபாதங்களுக்குச் சேவகனுகிய என்னுல் யாதொரு பிரயோசனமுமில்லை. அப்படியாயினும் வேண்டியகாலத்திலே அநுசீவிகள் அவசியமாய்ச் சமீபத்தில் இருக்கவேண்டும். என்றெண்ணி இப்போது வந்திருக்கிறேன் என்றுசொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றது.

ருடு, இராசாவே! பல்லினைத் தேய்த்தற்காவது காதிற்றினவை மாற்றுதற்காவது இராசாக்களுக்குப் புல்லினுலுஞ் செயப்படவேண்டிய காரியம் இருக்கின்றது. இஃது இப்படியாயின்; அங்கமும், வாக்குங் கையுமுள்ள மனிதன் எவ்வளவு அதிகம் வேண்டியவனுயிருக்கின்றுன்.

ஆயினுஞ் சுவாமியினுல் நெடுங்காலம் அவமானம் பண்ணப்பட்ட என்னுடைய புத்தி அழிந்துவிட்டது என்று ஐயங்கொள்ளப்படக்கூடும். அப்படியில்லை.

ருசு. இரத்தினத்தைக்காலிலே தரித்தாலும் என்ன? கண்ணுடியைத்தலையிலே தரித்தாலும் என்ன! கொள்ளுகிற விற்கிற காலங்களிலே கண்ணுடி கண்ணுடிதான், இரத்தினம் இரத்தினந்தான்.

ருஎ. தைரிய விருத்தியுடையவனது புத்தியானது, விபரீதலத்திற் சிக்கியிருக்கும்போது தானும், அழிந்துபோயிற்று என்று ஐயங்கொள்ளத்தக்கதன்று. அக்கினியின்கொழுந்து தலைகீழாய்ப் பிடிக்கப்பட்டாலும், ஒருபோதுங் கீழே போகமாட்டாது.

தேவரீர்! இராசனுனவன் எப்போதும் ஒவ்வொருகாரியங்களிலும் விசேஷங்களை அறிந்தவனுய்இருத்தல்வேண்டும்.

௩அ. இராசனானவன் விசேஷமின்றி எல்லார்க்குஞ் சமமாய் நடந்தானாயின்; முயற்சி செய்யத்தக்க சமர்த்தருடைய முயற்சி முழுதுங்கெட்டுப்போகும்.

௩௯. பின்னும், இராசாவே! உத்தமர், அதமர், மத்திமர் எனப்புருஷர் மூவகைப்படுவர்; அப்படியே இவர்கள் மூவரும் மூவகைச்செயல்களிலே நியோகிக்கப்படக்கடவர்.

௪0. சேவகர்களுக்கும், ஆபரணங்களுக்கும் ஸ்தானமே நியோகிக்கப்படவேண்டும்; சூடாமணியைப் பாதத்திலுஞ் சிலம்பைச்சிரசிலும் அணிதல் தகாது.

௪௧. இன்னும் பொன்னாபரணங்களோடு நன்றாக எடுத்துவைத்தற்கு உசிதமான இரத்தினமானது துத்தநாகத்தோடு எடுத்து வைக்கப்படுகிறதில்லை. அது அதனோடுவைக்கப்பட்டால் அங்கே சத்தமிடவும் மாட்டாது; சோபையாய் இருக்கவும் மாட்டாது. அதனை அங்கே வைத்தவனே இகழ்ந்து பேசப்படுவான்.

௪௨. கண்ணாடி மகுடத்திற்றரிக்கப்பட்டும் இரத்தினம் பாதாபரணமாக்கப்பட்டுமிருக்கும்போது இரத்தினத்திலே குற்றமில்லை. ஆனாலும் அதனை அணிகின்ற சாதுவானவனே தனக்குச் சாமானியஞானமில்லை என்பதனைக் காட்டுகின்றான்.

௪௩. இவன் புத்திமான், பற்றுள்ளவன், இங்கேயிருக்கிறவன் இரண்டு குணமுள்ளவன் என்று இப்படியே சேவகரை விசாரித்து அறிகின்றவனாகிய இராசாச் சேவகராலே நன்றாய்ச் சேவிக்கப்பட்டுத் திருத்தியடைவான்.

௪௪. குதிரையும், ஆயுதமுஞ், சாத்திரமும், வீணையும், வார்த்தையும், ஸ்திரி புருஷர்களும், மனுஷ பரீட்சையால் யோக்கியா யோக்கியதை பெறுகின்றன.

௪௫. சாமர்த்தியமில்லாத பத்தியுடைய வேலைக்காரனால் யாதுசெய்யக்கூடும்? அபகாரஞ்செய்கின்ற வலிமையுள்ளவனால் யாதுபயன்? பத்தியுடையவனும், வலிமையுடையவனுமாகிய என்னை இராசாவே! நீர் அவமானஞ்செய்தற்பாலரல்லீர்!

சசு. இராசாவைச் சூழ்ந்திருக்குஞ் சனங்கள் அவமானஞ்செய்தலினுற் பிரீதியுள்ளவர்களாவார்கள் ; பின்னர் அந்த இராசசமூகத்திலே புத்திமான்கள் இருக்கமாட்டார்கள். புத்திமான்களால் இராச்சியம் விடப்பட்டபோது நீதியானது குணமுடையதாய் இருக்கமாட்டாது. நீதி அழிந்தபோதே உலகம் முழுதும் எதிர்க்க வலியின்றித் தாழ்வடையும்.

சஎ. தேவரீர் ! சனங்களுஞ், சனபதங்களூப், இராசாச்சம்மானம் பண்ணுகிறவனையே எப்போதுந் தாங்களுஞ் சம்மானம் பண்ணுகின்றன. எவன் இராசாவால் அவமானம் பண்ணப்படுகின்ருனே அவன் யாவராலும் அவமானம்பண்ணப்படுகின்ருன்.

சஅ. வித்துவான்களால் யோக்கியம் என்று சொல்லப்பட்டதெதுவோ அதனைப் பாலகனிடத்திலே இருந்து தானுங் கிரகித்துக்கொள்ளவேண்டும் சூரியன் தோற்றப்படாமல் இருக்கும்போது விளக்கின் பிரயோசனம் எவ்வளவு? என்றது.

பிங்கலன், நல்லது ! தமனகா ! இவையெல்லாம் ஏன்? நீயோ எங்களுடைய பிரதானமந்திரி புத்திரன் ; நற்புத்திமானுய் இவ்வளவுகாலமும் நடந்துவிட்டு இப்போது எங்கேயிருந்து குறளை வார்த்தையைக் கேட்டுக்கொண்டு வந்திருக்கிருய்? உன்மனக்கருத்தைச் சொல்லு என்றது.

தமனகன், தேவரீரை, ஒன்று கேட்கின்றேன் சற்றே சொல்லவேண்டும். சுவாமீ ! நீர் தண்ணீர் குடிக்கப்போய்க் குடியாமற் பிரமைகொண்டவனைப்போல நிற்றல் என்னை? என்றது.

பிங்கலன், "நீ சொன்னது நல்லது ! இதுவரையும் இந்த இரகசியத்தைச் சொல்லுதற்கு விசுவாசத்துக்கு இடமாக எனக்கு ஒருவனுங் காணப்படவில்லை. நீயோ அப்படிப்பட்ட விசுவாசமுடையவன் ; ஆதலாற் சொல்லுகிறேன் கேள்; இப்போது இந்தவனத்திலே ஏதோ ஓர் அபூர்வபிரா

ணி சஞ்சரிக்கின்றது ஆதலால் இந்தவனத்தை நாம் விட்டுவி டல்வேண்டும். நீ ஒருகாலமும் இந்த அபூர்வமான பெரிய சத்தத்தைக் கேட்கவில்லையா? சத்தரூபத்தின்படியே அந்தப் பிராணியுடைய பெலனும் பெரிதா யிருக்கவேண்டும்.” என்றது.

தமனகன், தேவரீர்! அஃது அவ்வளவு பெரும்பயத் துக்குக் காரணந்தான்; அந்தச் சத்தத்தை நாங்களும் கேட் டோம். மேலும் எவன் முதலே ஆலோசனையின்மையினால் இராசாவை யுத்தகளத்தை விடும்படி அல்லது யுத்தத்துக்கு முயற்சிசெய்யும்படி உபதேசிக்கின்றானோ அவன் மந்திரியா? மேலுந் தேவரீர் இப்படிப்பட்ட காரிய சந்தேகத்திலேதான் சேவகர்களுடைய உபயோகமே அறியப்படவேண்டும்.

சகூ. ஒரு மனிதன் தன்னுடைய சுற்றத்தவர்கள் ஸ்திரி, சேவகவருக்கம், என்னும் இவர்களுடைய சாரத்தையுந் தன் பெலன் புத்தியையும், ஆபத்து என்னும் உரைகல்லி னாலே பரீக்ஷித்தறிகின்றான். என்று சொல்லிற்று.

சிங்கம், நல்லது! பெரிய பயமே என்னைத்தடுக்கின் றது. என்றது.

தமனகன் ஒருபக்கத்திலே நின்று, தேவரீர்! நீர் இரா ச்சிய சுகத்தை விட்டுவிட்டு வேறிடத்திற்கு போக எப்படி என்னோடு பேசலாம்? நான் எவ்வளவும் உயிரோடிருப்பே னோ அவ்வளவும் தேவரீர்பயப்படவேண்டாம். மேலுங் கர டகன் முதலானவர்களுடைய மனமோ ஆறுதலடையும்படி செய்யப்படவேண்டும். ஆபத்துக்குப் பிரதிகாரஞ் செய்யும் பொருட்டு சனசமுதாயங்களைச் சேர்த்தல் அரிது என்று வெளிப்படையாய்ச் சொல்லிற்று.

அதன்பின் கரடகன் தமனகன் என்னும் இரண்டும் இராசாவினால் அதிக அனுக்கிரகத்தோடு பூசிக்கப்பட்டுப் பயத்துக்குப் பிரதிகாரஞ் செய்வோம் என்று வாக்குப்பண் ணிப்போயின.

போகும்போது கரடகன் தமனகனை நோக்கி, மித்திரா! இந்தப் பயங்கரகாரணம் பிரதிகாரஞ் செய்யத்தக்கதோ செய்

யத்தகாததோ என்பதை அறியாமற்பயங்கரத்தை நீக்குவேன் என்று இராசாவுக்கு வாக்குப்பண்ணி இந்தப்பெரிய அநுக்கிரகத்தை எப்படிப்பெற்றாய்? காரியத்தைச் செய்ய இயலாதவன் யாரிடத்தும் அதற்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்படாது. பிரதானமாய் இராச உபகாரத்திற்கு அருகமான அதிகாரத்தை வாங்கப்படாது.

ருo. பார்; எவனுடைய பிரசாதத்தில் இலக்குமியும், பராக்கிரமத்தில் வெற்றியும், விரோதத்தில் இயமனும் வசிக்கின்றதோ அவன் எல்லாமகிமையு முடையவனன்றோ?

ருக. இராசாவானவன் சிறுவனாயிருந்தாலும் அவனை ஒரு பெரியவன்என்று சம்மானம்பண்ணல்வேண்டும்; அவன் நரரூபமாய் இருக்கின்ற பெரியதேவதையன்றோ? என்றது.

தமனகன், சிரித்து மித்திரா! சும்மாயிரு; பயங்கர காரணத்தை நான் அறிந்தேன். அது எருத்தினுடைய சத்தந்தான். எருதுகள் எங்களுக்கும் சிங்கத்துக்கும் போசனமாயிருக்கின்றன. என்றது.

தமனகன், எங்கள் சுவாமியின் பயம் அவ்விடத்திலே தானே மோசனமானால் அப்போது நாம் இந்த மகாப்பிரசாதத்தை அடைவது எப்படி?

ருஉ. சேவகர்கள் யசமானனை எப்போதும் பயமில்லாதவனாய் இருக்கும்படி செய்தலாகாது; ஒருசேவகன் தன் யசமானனுக்குப் பயத்தைக் காத்திராதபடி செய்வானாயின், அதிகருணனுக்கு வந்த அவஸ்தையை அடைவான். என்றது.

கரடகன், அது எப்படி என்று கேட்கத் தமனகன் சொல்லுகின்றது.

மூஷிகவிடால் சிங்கங்கள் கதை.

உத்தராபதத்திலே அற்புதசிகரி என்னும் மலையிலே மகாவிக்கிரமன் என்னும் பெயருடைய சிங்கம் ஒன்று இருந்தது. மலையின் முழையிலே நித்திரை செய்கின்ற அந்தச்சிங்கத்தின் கேசரநுனியை ஒரு மூஷிகம் வெட்டிக்கொண்டு

போதல் வழக்கம். சிங்கம் தன் மயிர்நுனி வெட்டப்பட்டதைக்கண்டு, கோபித்து வளைக்குள்ளே புகுந்த மூஷிகத்தைக்கண்டுகொள்ள முடியாமல் ஆலோசிக்கத் தொடங்கிற்று. இங்கே செய்யத்தக்கது யாது?

௧. எவனுக்கு அற்பசத்துரு இருக்கின்றானோ அந்தச் சத்துரு விக்கிரமத்தினாற் பிடிக்கப்படமாட்டான். அவனைப் பிடித்தற்கு அவனுக்குச் சமானமான சேனையையே முன்னுக்கு நியமித்தல்வேண்டும்.

என்று ஆலோசித்துக்கொண்டு கிராமத்திற்போய் அதிகர்ணன் என்னும் பூனையை மாமிசம் முதலிய உணவுகளினாற் சந்தோஷப்படுத்திப் பிரயாசத்தோடு கொண்டுவந்து தன்முழையிலே வைத்தது. அதன்பின்னர்மூஷிகம் அதற்குப் பயந்து வெளியில் வராமல் இருந்தது. அதனால் அந்தச் சிங்கம் குறையாத கேசரமுள்ளதாய்ச் சுகமாய் நித்திரைசெய்துவந்தது. அந்தச்சிங்கம் மூஷிகத்தின் சத்தத்தை எப்போது எப்போது கேட்கின்றதோ அப்போதப்போதெல்லாம் மாமிசாகாரங்களை விசேஷமாய்க் கொடுத்துப் பூனையைப் புஷ்டியாக்கிற்று. பின்னொருநாள் அந்தமூஷிகம் பசியினால் வருத்தமடைந்து வெளியில் உலாவினபோது பூனையினாற் கொன்று தின்னப்பட்டது.

அதன்பின் அந்தச்சிங்கத்துக்கு எலியின்சத்தம் ஒருபோதுங் கேட்கப்படவில்லை; அப்போது பூனையின் உபயோகம் வேண்டாமையினால் அதற்கு ஆகாரங்கொடுத்தலிலே அந்தச் சிங்கங் குறைந்த ஆதரவுள்ளதாய் இருந்தது. ஆதலினாற்றான், "சேவகர்கள் யஜமானனை எப்போதும் பயமில்லாதவனாயிருக்கும்படி செய்தலாகாது." என்பது சொல்லலுற்றேன். என்றது.

அதன்பின் கரடகனுந் தமனகனுஞ் சஞ்சீவகனுக்குச் சமீபமாகப் போயின. அப்போது கரடகன் அவ்விடத்திலே ஒரு மரத்தின் அடியிலே கர்வத்தோடும் இருந்தது. தமனகன் சஞ்சீவகன் சமீபத்திலே போய் "அடா! இடபமே!

நான் இராசாவாகிய பிங்கலனாலே இந்தக்காட்டினைக் காக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறேன். சேனாபதியாகிய கரடகன், "சீக்கிரம் வந்து என்னைக்காண்; அல்லது இந்தக் காட்டைவிட்டுத் தூரப்போ." என்று உனக்குக் கட்டளையிடுகின்றது. இப்படிச் செய்யாதுவிடுவாயாயின்; உன்பல்ன் உனக்கு விரோதமாகும். எங்கள் சுவாமி கோபங்கொண்டாராயின் யாதுசெய்வாரோ நான் அறியேன், என்றது.

அப்போது தேசவியவகாரங்களை அறியாத சஞ்சீவகன் அச்சத்தோடு வந்து சாட்டாங்கமாய் விழுந்து கரடகனை நமஸ்காரஞ் செய்தது.

௨. யானைகள் யானைப்பாகரினால் அடிக்கப்படுகின்ற சத்தம், புத்தியே பெலத்திலுங் கௌரவமுள்ளது; அஃதில்லாமையாற்றான் யானைகளுக்கு இந்த அவஸ்தை என்று டிண்டிமப்பறைகள் சொல்லுதல்போல இருக்கின்றது.

பின்னர்ச் சஞ்சீவகன், "சேனாபதீ! என்னாற் செய்யத்தக்கது யாது? அதனைக் கட்டளையிடுக." என்று ஐயத்துடன் சொல்லிற்று.

கரடகன், "இடபமே! நீ இந்தக் காட்டிலே இருக்கப் பிரியப்பட்டாயாயின்; தேவரீருடைய பாதாரவிந்தத்தைப் போய் வணங்கு." என்றுசொல்லிற்று.

சஞ்சீவகன், "பயமில்லை என்றுசொன்னீராயின்; வருகிறேன்." என்றது.

கரடகன், கேளடா! இடபமே! இந்தச் சந்தேகத்து அவசியமில்லை.

௩. நிந்தித்த சேதிராசனாகிய சிசுபாலனுக்குக் கிருஷ்ணதேவர் எதிர்வாக்கியம் ஒன்றும் பேசினாரல்லர்; மேகசத்தத்துக்கு எதிராய் ஊங்காரஞ்செய்கின்ற சிங்கம், நரியின்சத்தத்துக்கு எதிராய் உங்காரஞ்செய்யமாட்டாது.

௪. வாயுவானது மிருதுவும், அற்பமும், முழுதும் வளையத்தக்கதுமாகிய புல்லுகளை நிர்மூலஞ்செய்யாது; உன்

ன்தமாயிருக்கின்ற மரங்களையே முறிக்கின்றது. மகான்களும் மகான்களிலே தங்கள் விக்கிரமத்தைக் காண்பிக்கின்றார்கள். என்றது.

பின்னர்க் கரடகனுந் தமனகனுஞ் சஞ்சீவகனைச் சிறிது தூரத்திலே நிற்கும்படிசெய்து தாங்கள் பிங்கலகன் சமீபம் போயின. அப்போது இராசா விருப்பத்தோடும் பார்க்க அவைகளும் அதனை நமஸ்காரஞ்செய்து இருந்தன.

இராசா, "அதனைக் கண்டீர்களா?" என்னத் தமனகன், "சுவாமீ! கண்டோம். தேவரீராற் கேட்கப்பட்ட சத்தம் எப்படிப்பட்டதோ அதன்காரணமும் அப்படிப்பட்டதுதான்; அதுவோ மகாபெலமுள்ளது; தேவரீரைக் காணவிரும்புகின்றது. தேவரீர்! ஆயத்தமாக இருத்தல் வேண்டும். மேலுஞ் சத்தத்தினாலேமாத்திரம் பயப்படுதல் தகுதியன்று.

ரு. செய்கரையானது தண்ணீராலே முறிக்கப்படுகின்றது, காத்துக்கொள்ளப்படாமையால் மந்திராலோசனையும் அப்படியே முறிகின்றது; கோள்வார்த்தையினாலே சினேகம் முறிகின்றது: அச்சம் பேச்சினாலே முறிகின்றது.

சா. சத்தத்தின் காரணம் யாதென்றறியாமற் சத்தத்தினுன்மாத்திரம் பயப்படலாகாது: ஒரு குட்டினி சத்தத்தின் காரணத்தை முற்றுமறிந்து கௌரவத்தை அடைந்தாள்." என்றது.

இஃது எப்படி என்று இராசா கேட்கத் தமனகன் சொல்லுகின்றது.

கண்டாகர்ணன் குட்டினிகள் கதை.

சிறீபர்வதமத்தியிலே பிரமபுரம் என்னும் பெயருடைய நகரம் ஒன்று உண்டு. அங்குள்ள மலையின் சிகரத்திலே கண்டாகர்ணன் என்னும் பெயருடைய ஓர் இராக்ஷதன் வாசம் பண்ணுகின்றான். என்று ஊர்க்கதை பரம்பிற்று. அதற்குக்

காரணம், ஒருநாள் கண்டாமணியை எடுத்துக்கொண்டு தப்பியோடின ஒரு சோரனை ஒரு புலி கொன்றுவிட்டது, அந்தச் சோரனுடைய கையினின்றும் விழுந்த கண்டாமணியைக் குரங்குகள் எடுத்துக்கொண்டுபோய்க் கணந்தோறும் அடித்துக்கொண்டிருந்தன. அப்போது அந்தநகரவாசிகள் மனுடன் கொன்றுதின்னப்படுகிறான்; அதனாற் கணந்தோறுங் கண்டாமணி அடிக்கப்படுகின்றது. என்று கேள்விப்பட்டார்கள், அதன்பின் கண்டாகர்ணன் கோபித்து மனுஷனைக் கொல்லுகின்றான் என்றும், கண்டாமணியை அடிக்கின்றான் என்றுஞ் சொல்லிச் சனங்களெல்லாம் அந்த நகரத்தை விட்டு ஓடிப்போனார்கள்.

பின்னர்க் கராலயை என்னும் பெயருடைய குட்டினி ஒருத்தி இதனைப்பற்றி ஆலோசித்துக் குரங்குகளே அந்தக் கண்டாமணியை அடிக்கின்றன என்று தானே அறிந்து இராசாவிடத்திற்போய்த் தேவரீர்! எனக்குப் பெரிய திரவியோபகாரஞ் செய்வீராயின், நான் இந்தக்கண்டாகர்ணனைக் கொன்றுதருவேன்" என்று அறிவித்தாள்.

அப்போது இராசாச் சந்தோஷத்தோடும் அவளுக்குத் திரவியோபகாரஞ் செய்தான். குட்டினி அவ்விடத்திலே வட்டமாக இயந்திரங்கீறி விநாயகர் முதலிய தேவர்களைப் பூசைசெய்து குரங்குகளுக்குப் பிரியமான பழங்களைத்தானே எடுத்துக்கொண்டு வனத்திற்போய் அவ்விடத்திற் சிந்திவிட்டாள். அப்போது குரங்குகள் கண்டாமணியைக் கீழே எறிந்துவிட்டுப் பழங்களிலே விருப்பங்கொண்டன. குட்டினியுங் கண்டாமணியை எடுத்துக்கொண்டு நகரத்தில்வந்து அதனைக்காட்டிச் சர்வசனங்களாலும் பூசிக்கப்பட்டாள். ஆதலாற்றான், சத்தத்தின் காரணம் யாதென்றறியாமற் சத்தத்தினால் மாத்திரம் பயப்படலாகாது. என்பது சொல்லுகிறேன். என்றது.

அதன்பின் கரடகனுந் தமனகனுஞ் சஞ்சீவகனைக்கொண்டுவந்து இராசாவைக் காணும்படி செய்தன. சஞ்சீவகன்

அந்தக் காட்டிற்றனே நெடுங்காலமாக அதிகப்பிரியத்தோடு வசித்தது. பின்னொருநாள் அந்தச் சிங்கத்தின் சகோதரனாகிய தத்தகர்ணன் என்னும் பெயருடைய சிங்கம் அதனைக் காணும்படி வந்தது. பிங்கலகன் அதிதி சற்காரஞ்செய்து இருத்திவிட்டு அதற்குப் போசனத்திற்காகமிருகங்களைக் கொல்லப் புறப்பட்டது.

அதற்கிடையிற் சஞ்சீவகன், தேவரீர்! இன்றைக்குக் கொல்லப்பட்ட மான்களின் மாமிசம் எங்கே? என்று கேட்க இராசாத், தமனககரடகர்கள் அறிந்திருப்பார்கள் என்று சொல்லிற்று.

சஞ்சீவகன், மாமிசம் உண்டோ? இல்லையோ அறியவேண்டும். என்றது.

இராசாச், சிரித்துக்கொண்டு மாமிசமில்லை என்று சொல்லிற்று.

சஞ்சீவகன், இவ்வளவுமாமிசங்களையும் அவ்விரண்டும் எப்படி உண்டன? என்று கேட்கச்,

சிங்கம், உண்ணப்பட்டதுஞ், செலவுசெய்யப்பட்டதுங், கவனியாமல் விடப்பட்டதுந்தான்; நாடோறும் இப்படியே நடக்கின்றது என்றது.

சஞ்சீவகன், ஸ்ரீமந் தேவரீருடைய பாதங்களுக்குத் தெரியாமல் இந்தக் காரியங்கள் எப்படிச் செய்யப்படுகின்றன? எனச்

சிங்கம், இவைகள் எனக்குத் தெரியப்படாமலே செய்யப்படுகின்றன என்றது.

சஞ்சீவகன், இது நல்லதன்று.

க. சேவகன் ஆபத்துக்குப் பிரதிகாரஞ்செய்தலையொழிய வேறொன்றையுந் தன்னுடைய யசமானனாகிய இராசாவுக்கு அறிவியாமற் செய்யாதிருக்கக்கடவன்.

உ. அற்பசெலவும், வெகு சஞ்சயமுமுள்ள கமண்டலத்துக்கு அமாத்தியனே உவமையாம். இராசாவே! தரித்தி

ரனுகிய மூர்க்கனுற் பிரயோசனகுணம் யாது? வேறும்பல கறை போன்றவனுற் பிரயோசனம் யாது?

ந. காகினியளவேனும் விருத்திசெயகின்ற அமாத்தியன் எவனே அவனே எப்பொழுதுஞ் சிரேஷ்டன்; கோஷமானது கோஷமுள்ளவர்களுக்குப் பிராணனும் பிராணனது இராசாக்களுக்குப் பிராணனன்று.

ச. குலாசாரங்களினுல் ஒருமனிதன் மதிக்கப்படத்தக்க நிலையைச்சிறிதும் அடையமாட்டான். திரவியமில்லாதவன் தன்மனைவியினுலும் விடப்படுகின்ருன். பிறரால் விடப்படுதல் எவ்வளவு அதிகம்?

இவைகளே இராச்சியத்திலுள்ள பிரதான குற்றங்களாம்.

ரு. பார்; அதிகஞ்செலவும், அபேக்ஷையற்றிருத்தலும், அதர்மமாகச் சம்பாதித்தலும், திருடுதலும் தூரத்திலிருத்தலும் கோக்ஷவியசனம் என்று சொல்லப்படுகின்றன.

சு. தன்வரவு இவ்வளவு என்று ஆலோசனைசெய்யாமற் சீக்கிரத்திற் றன்வாஞ்சைப்படி செலவுசெய்பவன் குபேரனுக்குச் சமமான செல்வனுயினும் பிச்சைக்காரனுவான் என்றது.

தத்தகர்ணன், சகோதரா! கேள்; நெடுங்காலமாகச் சந்திவிக்கிரக காரியங்களில் ஏற்பட்டு அதிகாரிகளாய் இருந்த கரடகதமனகர்கள் கோக்ஷ அதிகாரத்திலே வைக்கப்படத்தக்கவர்களல்லர். பின்னும் நியோகிக்கப்பட வேண்டியவர்களுடைய விஷயத்தில் நான் சிறிது கேள்விப்பட்டிருக்கிறேன். அதனை உனக்குச் சொல்லுகிறேன்.

எ. பிராமணன், சத்திரியன், சுற்றத்தவன் என்னும் இவர்கள் திரவியசாலையின் அதிகாரத்திலே வைக்கப்படத்தக்கவர்களல்லர். திரவியம் விருத்தியானுலும் பிராமணன் அதிகவருத்தத்தினுலேனும் அதனைக் கொடுக்கமாட்டான்.

அ. திரவியாதிகாரத்தில் வைக்கப்பட்ட இராசன் நியதமாய் வாட்படையைக் காட்டுகின்றான். சுற்றத்தவன் ஞாதி என்றதன்மையினால் ஆக்கிரமித்து எல்லாத் திரவியத்தையும் விழுங்குகின்றான்.

௯. நெடுங்காலமாகச் சேவகனாய் நியோகிக்கப்பட்டவன் குற்றஞ்செய்த காலத்திலும் பயமில்லாமலிருப்பான். அவன் தன் யசமானனை அவமானம்பண்ணித் தன் பிரியத்தின்படியும் போகக்கூடும்.

௧௦. உபகாரத்தைச் செய்கின்ற அதிகாரச் செல்வன் தன்குற்றத்தை எண்ணமாட்டான், உபகாரத்தையே துவசமாக்கி எல்லாவற்றையுங் கொள்ளையாடுகின்றான்.

௧௧. இரகசியத்திலே விளையாடுகின்ற அமாத்தியன் அதினின்றுந் தானே பற்றுள்ளவனாய் வரப்பார்க்கின்றான். அந்தப் பிரீதியினால் எப்போதும் மெய்யாகக் கர்வமாக நடக்கின்றான்.

௧௨. உள்ளே துட்டனும் பொறுதியற்றவனு மாகிய அமாத்தியன் அனர்த்தங்களெல்லாவற்றையும் செய்கின்றவனேயாம். இராசாவே! இதற்குச் சகுனியும் நந்தராஜன் மந்திரியாகிய சகடாரனுமே திருட்டாந்தமாம்.

௧௩. ஒருமந்திரி முழுதுஞ் செல்வப்பெருக்குடையவனாய் வரும்போது பிற்காலத்தில் எப்போதுந் திருத்தப்படக்கூடாதவனா யிருக்கின்றான்; திரவியப்பெருக்குத்தானே சித்தத்தை விகாரப்படுத்துகின்றது என்பது சித்தர்களுடைய பழமொழியாம்.

௧௪. கிடைத்த திரவியத்தை ஏற்றுக்கொள்ளாமையுந் திரவியச்செலவை மறைத்தலும், வெறுப்பும், புத்தியின்மையும், போகமும், மந்திரியுடைய குற்றங்களாம்.

௧௫. யசமானனுடைய திரவியசஞ்சயத்தை நாசஞ்செய்தலும், சுவாமிக்குப் பிரீதியான திரவியத்தைப் பிறருக்குக் கொடுத்தலும் எதன்பொருட்டுத் திரவியஞ் சேர்க்கப்பட்டி

ருக்கின்றதோ அதற்கு விரோதமாக அதனை மாறுபடுத்தலு மாகிய இவைகளை எப்போதும் பரீட்சித்தல் இராசாவின் கடமைகளாம்.

கசுா. உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலுந் துஷ்டவிரணத்தைப்போல இருக்கிறார்கள். அவர்களை நெரித்தாலன்றி இராசாவினிடந் திருடின திரவியசாரத்தை வெளியே கக்க மாட்டார்கள்.

கஎ. உத்தியோகஸ்தர்கள் பின்னும் பின்னும் வரலாற்காரம் பண்ணப்பட்டாலன்றி இராசாவுடைய திரவிய சஞ்சயத்தை விடமாட்டார்கள். ஸ்நானவஸ்திரம் ஒருமுறை பிழியப்பட்டால், தான்குடித்த தண்ணீர் எல்லாவற்றையுங் கக்குமா?

இவைகளெல்லாவற்றையும் அறிந்து இவைகளுக்கு எப்போது அவசியம்வருமோ அப்போது வியவகாரத்திற்குக் கொண்டுவரவேண்டும். என்றது.

பிங்கலகன். நீ சொன்னது சரிதான். எப்போதும் இவர்கள் என்பேச்சுக்குக் கீழ்ப்படிகிறவர்களல்லர். என்று சொல்லிற்று.

தத்தகர்ணன்; இஃது அவர்களுக்கு என்றும் நன்றன்று.

கஅ. இராஜாவானவன். தன்புத்திரராயிருந்தாலுங் கட்டளையை மீறுகிறவர்களைப் பொறுத்துக்கொள்ளலாகாது. ஆயினும் விசேஷமாகத் தன்திரவிய வரவைப்பற்றிய நட்டத்திலும் தன்மனதில் நியமித்திருக்கிற விஷயநட்டத்திலும் பொறுத்துக்கொள்ள லாகாது.

ககூ. கர்வமுள்ளவனுடைய கீர்த்தியும், நடுநிலையில்லாதவனுடைய சிநேகமுங், காமதூர்த்தனுடைய குலமும், பொருளாசையுடையவனது தருமமுந், துன்பமுடையவனது வித்தையின்பலனும், உலுத்தனுடைய சௌக்கியமும், அவதானமில்லாத மந்திரியை வைத்திருக்கும் இராச்சியமும் அழிகின்றன.

௨௦. விசேஷமாக; இராசாவானவன், கள்ளரினின்றும், பிரிவுசெய்பவரினின்றும், சத்துருக்களினின்றும், இராச அத்தியட்சர்களினின்றுந், தனது லோபத்தினின்றும் பிரசைகளைப் பிதாவைப் போலக் காத்தல்வேண்டும்.

சகோதரா! எப்பொழுதும் என்பேச்சின்படியே செய்தல்வேண்டும். போசனமும் இன்றைக்கு எங்களாற் செய்யப்பட்டிருக்கின்றதுதானே. சகிய பக்ஷகனாகிய இந்தச் சஞ்சீவகனையே போசன அதிகாரத்தில் நியமிக்கவேண்டும். என்றது.

சஞ்சீவகன் இதனுடைய வார்த்தைப்படியே நியமிக்கப்பட்டது. பிங்கலன் சஞ்சீவகன் என்னும் இருவரும் மற்றைய சுற்றத்தவர்கள் யாரையும் விலக்கிவிட்டுப்பெரிய சிநேகிதராய் நாட்கழித்துவந்தன. அப்போது அனுசீவிகளுக்குத்தானும் ஆகாரங்கொடுத்தலிற்குறைவுகண்டதனால் கரடகதமனகர்கள் ஒருவரோடொருவர் ஆலோசனைசெய்தார்கள்.

அப்போது தமனகன், இங்கேசெய்யவேண்டியது யாது? இந்தத்தோஷம் எங்களாலேயே யாயிற்று. தான்செய்த குற்றத்திற்காகத் தான்புலம்புதல் நன்றன்று.

௨௧. நான் சுவர்ணரேகையைத் தொட்டதினாலும், நாவிதன் மனைவியாகிய தூதி தன்னைத்தானே கட்டிக்கொண்டதினாலும் வர்த்தகன் இரத்தினத்தைத் திருடப் பிரியப்பட்டதினாலும் ஆகிய தத்தங்குற்றங்களினாலே துக்கப்பட்டார்கள். என்றது.

கரடகன் இஃது எப்படி என்று கேட்கத் தமனகன் சொல்லுகின்றது.

நாவிதன் பத்தினிவர்த்தகர் கதை.

காஞ்சனபுரம் என்னும் நாமமுள்ள நகரத்திலே வீரவிக்கிரமன் என்னும் பெயருடைய இராசன் ஒருவன் இருந்தான். அவனுடைய பிரதான நீதியதிபதி ஒருநாவிதனைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோனபோது கந்தர்ப்பகேது

என்னுஞ் சந்நியாசியும், இன்னுமொரு வர்த்தகனும் "இவன் கொல்லப்படத்தக்கவனல்லன்" என்றுசொல்லி அவனுடைய வஸ்திரத்தின் தொங்கலைப் பிடித்தார்கள். இராச உத்தியோகஸ்தர்கள் "இவன் ஏன்கொல்லப்படத் தக்கவனல்லன்?" என்றுகேட்டார்கள். அந்தச் சந்நியாசி சேனுங்கள் என்று "சுவர்ணரேகையை நான்தொட்டு" என்பதைக் கூறினன். அவர்கள் இஃது எப்படி என்று கேட்கப் பரிவிராசகன் சொல்லுகிறான்.

நான் சிங்களத் துவீபராசனகிய சீமூதகேதுவின் புத்திரன்; என் பெயர் கந்தர்ப்ப கேது; ஒருநாள் சரசவனத்தில் இருக்கும்போது சமுத்திரமத்தியிலே சதுர்த்தசி திதியிலே தோற்றுகின்றதோர் கற்பகமரத்தடியிலே, இரத்தினமணிகளின் கிரணவரிசை எறிக்கின்ற பொற்கட்டிலிலே, சர்வாலங்காரியாய், இலக்குமியைப் போல இருந்து வீணை வாசிக்கின்ற ஒரு கன்னிகை தோற்றுகின்றாள். என்று ஒரு கப்பல் வியாபாரி சொல்லக் கேள்விப்பட்டேன். அப்போது நான் அந்தப் போதவணிகனையுங் கூட்டிக்கொண்டு தோணி ஏறிப் போய் அங்கே அவள் அப்படியிருக்கக் கண்டேன். அவள் என்னைக்கண்டவுடன் சமுத்திரத்தினுள்ளே குதித்தாள். நானும் அவளுடைய சௌந்தரிய ரூபகுணத்தினல் இழுக்கப்பட்டு அவளுக்குப் பின்னே குதித்தேன்.

அதன்பின் அவள் சுவர்ணபட்டணத்திற் போய்ச் சாம்பூநத அரண்மனையிலே அவ்விதமான கட்டிலில் இருந்து மிகவும் புதிய இளம்பருவத்தையுடைய வித்தியாதரஸ்திரிகளாற் பூசிக்கப்படுதலைக்கண்டேன். அவளும் என்னைத் தூரத்திலே கண்டு ஒருதோழியை அனுப்பினள். இவள் வந்து என்னுடன் ஆதரவாகப் பேசினள். அந்தத்தோழியிடம் நானவளைப்பற்றிக் கேட்டபோது இவள் கந்தர்ப்பகேலி என்னும் பெயருடைய வித்தியாதர சக்கரவர்த்தியின் புத்திரி; இரத்தினமஞ்சரி என்னும் பெயருடையவள். எவன் சுவர்ணபட்ட

ணித்தை வந்து தன் கண்களினுற் காண்கின்ருனே அவனே என்னை விவாகமுடிப்பான். என்று உறுதிசொல்லி யிருக்கின்ருள். என்றுசொன்னுள்.

யான் அவளைக் கந்தருவ விவாகக்கிரமமாக மங்கலமுடித்தேன். அவளோடு கூடி நெடுங்காலமாகச் சந்தோஷங்கொண்டிருந்தேன். பின்னர் ஒருநாள்இரசியமாகச்சுவாமி! உமது இச்சைப்படி இவைகள் எல்லாவற்றையும் அனுபவித்துக் கொள்ளலாம். ஆயினுஞ் சித்திரந் தீட்டப்பட்டாற்போலிருக்கின்ற இந்தச் சுவர்ணரேகை என்னும் வித்தியாதரஸ்திரியை மாத்திரம் ஒருகாலமுந் தொடலாகாது என்றுசொன்னுள். பின்னர் எனக்குக் குதுகலம் உண்டுபட்டதனுல் அந்தச் சுவர்ணரேகையைத் தொட்டேன். அந்தச்சித்திரத்தை ஒத்த சுவர்ணரேகையும் என்னைத்தொட்டுப் பாதார விந்தத்தால் என்னை உதைத்தாள். அப்போது நான் வந்து என்னுடைய இராச்சியத்திலே விழுந்தேன்.

பின்னர்த் துக்கத்தினுற் பிடிக்கப்பட்டவனுகிய நான் பிரயாணப்பட்டுப் பூமியைச்சுற்றித் திரிந்து பின் இந்த நகரியை அடைந்தேன். இராத்திரி ஓரிடையன் வீட்டிலே நித்திரைசெய்யும்போது சிலவிசேஷங்களைக்கண்டேன்.

அந்த இடையன் சாயங்காலத்திலே பசுத் தொழுவத்தினின்றும் வீட்டுக்குவந்தபோது தன்மனைவி ஒரு தூதியோடாலோசனை செய்தலைக்கண்டு அவளை அடித்து ஒரு தம்பத்திலே கட்டிவைத்துவிட்டு நித்திரைசெய்தான். பின்னர் அர்த்தராத்திரியிலே இந்த நாவிதன் மனைவியாகிய தூதி பின்னும் அந்தக்கோபியிடம்வந்து அந்த மகானுபாவன் உன்பிரிவினுல் மனத்துக்கங்கொண்டு இறக்க இருக்கின்றவனைப்போல் இருக்கிழுன். ஆதலால் நான் என்னைத்தானே இந்தத்தூணிலே கட்டிவைத்துக்கொண்டு இங்கேநிற்கிறேன். நீ அங்கேபோய் அவனைக் கொண்டாடிக்கொண்டு சீக்கிரம்வந்துவிடு; என்று சொன்னுள். அப்படியே நடந்தபோது அந்த

இடையன் விழித்தெழுந்து, அவளை நோக்கி இப்பொழுது சோரநாயகனுக்குக்கிட்ட ஏன் போகாமல் நிற்கிறாய்? என்று கேட்டான். தூதி சிறிதும் பேசாமல் நின்றாள். அவன் கோபங்கொண்டு கர்வத்தினால் என்வார்த்தைக்கு உத்தரஞ்சொல்லாமல் இருக்கிறாயா? என்றுசொல்லி அவளுடைய மூக்கைவெட்டிவிட்டுப் பின்னரும் படுத்து நித்திரையாயினான்.

அதன்பின்னர்த் திரும்பிவந்த கோபி தூதியைநோக்கிப் "புதினம் யாது?" என்று கேட்டாள் தூதி, பார்; என்னுடையமுகமே இங்கு நிகழ்ந்த புதினத்தைச் சொல்லும் என்றாள். பின்னர்க்கோபி தூதியை விலக்கி அப்படியேதன்னைக் கட்டிக்கொண்டு நின்றாள். தூதி வெட்டப்பட்ட மூக்கையும் எடுத்துக்கொண்டுபோய் வீட்டினுட் பிரவேசித்திருந்தாள். பின்னர் விடியற்காலத்திலே அந்தநாவிதன் கத்திக்கூட்டினை எடுத்துத்தரும்படி அவளைக்கேட்க அவள் அவனுக்குக் கத்திக்கூட்டினைக் கொடாமல் ஒரு கத்தியை மாத்திரம் கொடுத்தாள் நாவிதன் கோபித்துக் கத்தியை வீட்டிலே தூரத்தில் எறிந்துவிட்டான். அப்போது அவள் வருத்தத்தினாற் சத்தமிட்டு நான் குற்றம் ஒன்றுஞ் செய்யாதிருக்க இவன் என்னுடைய மூக்கை வெட்டினான் என்றுசொல்லி நீதியதிபதி சமீபத்துக்கு இவனைக் கொண்டுவந்தாள்.

அந்த இடைச்சியும் இடையன் கேட்டபோது அடா! பாவீ! பெருங்கற்புடைய என்னை அவமானஞ் செய்தற்குச் சமர்த்தன் யாவன்? என்னுடைய செயல்களை உலகபாலகர் எண்மருமே அறிவார்கள்.

க. ஆதித்தியனுஞ், சந்திரனும், தேயுவும் வாயுவும், ஆகாசமும், பூமியும், நீருந், இருதயமும், இயமனும், பகலும், இரவும், இருசந்திகளும், தருமமும் மனுடனுடைய செயல்களை அறிகின்றன.

நான் பெருங்கற்புடையளாய் என்னாயகனையன்றி வேறொருவனை மனத்தினாற்றானும் நினையாமல் இருந்தேனாயின்;

என்முகங் காயமில்லாமல் இருக்கக்கடவது. என்றாள். அப்போது அந்த இடையன் விளக்கைக் கொண்டுவந்து அவளுடைய முகத்தைப்பார்த்து முகங்காயப்படாமலிருக்கிறதைக் கண்டு அவள் பாதத்திலே விழுந்து நமஸ்காரஞ்செய்தான். இனி வர்த்தகனுடைய சரித்திரத்தையுங் கேளுங்கள்:—

இந்த வர்த்தகன் தன்வீட்டிலிருந்து புறப்பட்டுப் பன்னிரண்டு வருஷத்தின்பின் பொதியமலைக்குச் சமீபமாயுள்ள இவ்வூருக்கு வந்து ஒரு வேசைவீட்டிலே நித்திரைசெய்தான். அந்தவீட்டு வாயிலிலே அக்குட்டினியினாலே தாபிக்கப்பட்ட மரவேதாளத்தின் தலையிலே மிகவிலையுயர்ந்த இரத்தினம் ஒன்று இருந்தது. அதனைக் கண்டு பொருளாசையுடைய இந்தவர்த்தகன் இராத்திரியில் எழுந்து கவரும்படி கையை வைத்தான். அப்பொழுது சூத்திரத்தினால் அசைக்கப்படுகின்ற அவ்வேதாளங் கைகளினாற் பிடிக்க வருந்திக் குளறினான். குட்டினி எழுந்து மகனே! பொதியமலைக்குச் சமீபமாயிருந்து வந்திருக்கிறாய்; ஆதலால் இரத்தினம் வைத்திருப்பாய்; உன்னுடைய இரத்தினங்கள் எல்லாவற்றையும் எனக்குக்கொடு; இல்லை என்பாயாயின் இந்த வேதாளத்தினால் விடப்படமாட்டாய் என்றாள். இப்படியே இவன் அடிமைப்பட்டுச் சகல இரத்தினங்களையும் அவளுக்குக் கொடுத்தான். இவ்வாறு திரவியம்முழுதும் அபகரிக்கப்பட்டவனாய் எங்களுடன் வந்து சேர்ந்திருக்கிறான். என்றான்.

இவைகள் எல்லாவற்றையுங் கேட்டு இராச அதிகாரிகள் நியாயந்தீர்த்தார்கள். நாவிதன் மனைவி முண்டிதமாக்கப்பட்டாள். இடைச்சி சிக்ஷிக்கப்பட்டாள். குட்டினியுந் தண்டிக்கப்பட்டாள். வர்த்தகனுடைய திரவியங்கள் கொடுக்கப்பட்டன.

ஆதலாற்றான், "சுவர்ணரேகை நான் தொட்டதினாலும்." என்பது முதலியவைகளைச் சொல்லலுற்றேன்.

இன்னும், இது நாங்களே செய்துகொண்ட குற்றம். இதில் நாம் புலம்புதல் நன்றன்று! என்றுசொல்லிப் பின்

னர் ஒரு கணப்பொழுதுவனாயிற் சிந்தித்து, மித்திரா! இவ்விரண்டிற்கும் ஒன்றித்த மித்திரத்துவம் என்னல் எப்படி முடிந்ததோ அப்படியே பேதமுஞ் செய்யப்படவேண்டும்.

௨. சாமர்த்தியமுடையவர்கள் உண்மையல்லாததையும் உண்மையாகக் காட்டுகின்றார்கள். சித்திரச்செயலை அறிந்த சனங்கள் சமதலத்திலே பள்ளத்தை மேடுபோற் காட்டுகின்றார்கள்.

௩. காரியங்கள் சம்பவிக்கும்போது எவனுடைய புத்தி விகாரமின்றி இருக்கின்றதோ அவன் ஓர் இடைச்சி சோரநாயகர் இருவரை மறைத்ததுபோலப் பெரிய இடையூறுகளையுங் கடக்கிறான். என்றது.

இஃது எப்படி என்று கரடகன் கேட்கத் தமனகன் சொல்லுகின்றது.

கோபன்பத்நினியுபபதியிருவர்கதை.

துவராவதி என்னும் நகரத்திலே ஓர் இடையன் மனைவி வேசையாய் இருந்தாள். அவள் அந்தக் கிராமாதிகாரியாகிய தெண்டநாயகனோடும் அவன் புத்திரனோடும் பிரீதிசெய்து வந்தாள்.

௧. அக்கினி விறகினாலும், பெருங்கடல் ஆற்றினாலும், இயமன் சர்வப்பிராணிகளினாலும், அழகிய கண்ணையுடைய பெண் ஆடவர்களினாலுந் திருத்தியடைதலில்லை.

௨. கொடையினாலேனும், மானத்தினாலேனும், நேர்மையினாலேனுஞ், சேவையினாலேனுஞ், சத்திரத்தினாலேனுஞ் சாத்திரத்தினாலேனும், ஸ்திரீகளை எப்போதுஞ் சமநிலைக்குங் கீழ்ப்படிவுக்குங் கொண்டுவருதல் கூடாது.

௩. சகல நற்குணங்களையும் அடைந்தவனும், கீர்த்தி பொருந்தினவனும், விரும்பப்படத்தக்கவனும், நேசமுள்ளவனும், பொருளுடையவனும், யௌவனமுடையவனுமாகிய நாயகனை ஸ்திரிகள் விட்டுவிட்டுச் சீலகுணம் முதலியவைகளில்லாத மனுடருக்குக் கிட்டப்போகின்றார்கள்.

௪. ஒருபெண்ணானவள் விசித்திரமான மெத்தையிலே தன்னிட்டப்படி சயனஞ்செய்தாளாயினும், அறுகம்புல் முதலிய அடர்ந்த பூமியிலே பிறநாயகனோடு சம்பாஷணை செய்தலால் உண்டாகுஞ்சௌக்கியமுள்ளவளாயிருக்கமாட்டாள்.

பின்னொருநாள் அவள் தெண்டநாயகன் புத்திரனோடு சம்பாஷணை செய்துகொண்டிருக்கும்போது தெண்டநாயகனும் அங்கே வந்தான். அவனைக் கண்டு அவன் புத்திரனைக் களஞ்சியத்தில் வைத்துவிட்டு அத்தெண்டநாயகனோடும் அப்படியே சம்பாஷணை செய்துகொண்டிருந்தாள். அப்போது அவளுடைய நாயகனாகிய இடையனும் பசுத்தொழுவத்தினின்று வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டவுடனே இடைச்சி தெண்டநாயகனை நோக்கி, "நீர் ஒரு தடியை எடுத்துக்கொண்டு கோபத்தையுங்காட்டிக்கொண்டு போகக்கடவீர். என்று சொன்னாள். அப்படியே அவன் செய்தபோது அந்த இடையன் அங்கே வந்து மனைவியை நோக்கித் தெண்டநாயகன் இங்கே வந்ததற்குக் காரணம் யாது? என்று கேட்டான். இவன் யாதோ ஒரு காரணத்தினாற் புத்திரன்மேற் கோபிக்கப் புத்திரனுந் தப்பியோடிவந்து இங்கே பிரவேசித்தான். நான் அவனைக் களஞ்சியவீட்டில்வைத்துக் காத்திருக்கிறேன். அவன் பிதா அவனைத் தேடிவந்தும் இந்த வீட்டிலே கண்டுகொள்ளவில்லை. அதனாலேதான் இவன் கோபங்கொண்டுபோகின்றான். என்றுசொல்லி அவன் புத்திரனைக் களஞ்சியவீட்டினின்றுங் கூட்டிக்கொண்டு வந்து நாயகனுக்குக் காட்டினாள்.

௫. பெண்களுக்கு உண்வு இருமடங்கு என்றும், புத்தி நான்குமடங்கு என்றும், விடாமுயற்சி அறுமடங்கு என்றும், விருப்பம் எண்மடங்கு என்றும் எண்ணப்படுகின்றது.

ஆதலாற்றான், காரியங்கள் சம்பவிக்கும்போது எவனுடைய புத்தி விகாரமின்றி இருக்கின்றதோ; என்பது சொல்லலுற்றேன். என்றது.

கரடகன், இப்படியிருக்கக்கூடவது. ஆயினும் இவ்விருவருள்ளும் பெரிய செயற்கைச் சிநேகம் இருக்கின்றது. இதனை எப்படிப் பிரிக்கலாம்? என்றது,

தமனகன், வேறே சில உபாயஞ் சிந்திக்கப்படவேண்டும்.

சு. உபாயத்தினால் எது செய்யக்கூடியதோ அது பராக்கிரமத்தினாற் செய்யப்படக் கூடியதன்று ஒரு காகமானது கனகசூத்திரத்தினால் ஒரு கிருஷ்ணசர்ப்பத்தைக்கொன்றது. என்றது.

கரடகன் இஃது எப்படி என்றுகேட்கத் தமனகன் சொல்லத்தொடங்கிற்று.

வாயசதம்பதிகிருஷ்ணசர்ப்பங்கள் கதை.

ஒரு மரத்திலே ஓர் ஆண்காகமும் பெண்காகமும் வாசஞ்செய்தன. அவைகளுடைய குஞ்சுகள் அந்த மரப்பொந்திலே இருந்த கிருஷ்ணசர்ப்பத்தினாற் கொன்றுதின்னப்பட்டன. அதன்பின் மீண்டு சினைதரித்த காகப்பெடை, நாயகனை நோக்கிச் சுவாமீ! இந்த மரத்தை நாம் விட்டுவிடவேண்டும். ஏனெனில்; இவ்விடத்திலே இந்தக் கிருஷ்ணசர்ப்பம் எவ்வளவுகாலம் இருக்குமோ அவ்வளவும் எங்கள் சந்ததி தலைப்படமாட்டாது.

க. மனைவியும், பொய்யானமித்திரனும், எதிர்வார்த்தை சொல்லுஞ் சேவகர்களும், பாம்புள்ளவீட்டிலே வாசஞ்செய்தலும் மரணத்துக்கு இடனாகும் அதற்குச் சந்தேகமில்லை. என்றது.

காகம், பிரியையே! பயப்படவேண்டாம்; நான் பலமுறையும் அதனுடைய பெருங்குற்றத்தைப் பொறுத்துவந்தேன். இனி அதனைப் பொறுக்கமாட்டேன். என்று சொல்லிற்று.

காகப்பேடு, சுவாமீ! பெலவானாகிய இந்தக் கிருஷ்ணசர்ப்பத்தோடு நீர், போர்செய்தற்கு எப்படிச் சமர்த்தராவீர்? என்று கேட்டது.

உ. காகம், இந்த எண்ணம் வேண்டாம்;

எவனுக்குப் புத்தியிருக்கின்றதோ அவனுக்கு அதுவே பெலம்; புத்தியில்லாதவனுக்குப் பெலன் எங்கே? மதோன்மத்தமுள்ள ஒரு சிங்கம் முயலினால் விழுத்தப்பட்டது அதனைக்கண்டுகொள். என்றது.

பெண்காகம், இஃது எப்படி என்று கேட்க ஆண்காகஞ் சொல்லுகின்றது.

சிங்கசசங்கள்கதை.

மந்தரம் என்னும் மலையிலே துர்த்தாந்தன் என்னும் பெயருடைய சிங்கம் ஒன்று இருந்தது. அது எப்போதும் மிருகங்களைக் கொல்லும் நியமமுள்ளது. அப்போது மிருகங்களெல்லாம் ஒருங்குகூடிச் சிங்கத்தை அடைந்து தேவரீர்! மிருகங்கள் எல்லாவற்றையும் எதன்பொருட்டுக் கொல்லுகின்றீர்? நாங்களே உமக்கு உணவின்பொருட்டு நாடோறும் ஒவ்வொரு மிருகம் நற்கொடையாகத் தருவோம். என்று வாக்குச் செய்தன.

சிங்கம், உங்களுக்கு இது பிரியமாயின்; அப்படியே ஆதக. என்றது. அன்று தொட்டு அவைகள் நியமித்த விலங்கினை நாடோறும் உண்டுவந்தது. ஒருநாள் ஒரு வயோதிகமுயலின் முறைவந்தது. அப்போது அந்த முயல்;

க. நாம் சீவிய வாஞ்சையின் பயத்தினால் வணக்கஞ் செய்கிறோம். மரணமடையப்போகிற நாம் இனிச் சிங்கத்தை வணங்குகிறதென்ன?

மெல்லமெல்லப் போவேன் என்று நினைத்து அப்படியே போய் அதனைச் சமீபித்தது. அப்போது சிங்கம் பசியினால் வருந்திக் கோபங்கொண்டு நீ ஏன் தாமசப்பட்டு வந்தாய்? என்று கேட்டது.

முயல், நான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை. வழியிலே வேறொரு சிங்கத்தினால் வலாற்காரமாக மறிக்கப்பட்டேன்.

அப்போது அதன் முன்னிலையிலே பின்னர் வருவேன்; என்று வாக்குச்செய்துவிட்டுச் சுவாமியாகிய உமக்கு அறிவிக்கும்படி இங்கேவந்திருக்கிறேன். என்றுசொல்லிற்று.

சிங்கம், அந்தத் துராத்துமா எங்கே நிற்கின்றது? சீக்கிரம்போய் அதனை எனக்குக் காட்டு; என்று கேட்டது.

முயல் அதனைக் கூட்டிக்கொண்டு ஆழமான ஒரு கிணற்றின் சமீபத்தில் வந்து சுவாமீ! பாரும்! என்றுசொல்லி அந்தக் கிணற்று நீரினுள்ளே அதனுடைய பிரதிவிம்பத்தைக் காட்டிற்று. அப்போது அந்தச் சிங்கங் கர்வத்தினால் மூடப்பட்டு அந்த நிழலிற்பாய்ந்து மரணமடைந்தது.

ஆதலாற்றான், எவனுக்குப் புத்தியிருக்கின்றதோ அவனுக்கு அதுவே பெலம். என்பது சொல்லலுற்றேன் என்று சொல்லிற்று.

பெண்காகம், நீ சொன்னதற்கு ஒத்துக்கொண்டேன்; இப்போது செய்யத்தக்கதைச்சொல்லுக. என்று கேட்டது.

காகம், பிரியையே! சமீபமாயிருக்கிற அந்த வாவியிலே இராசபுத்திரன் ஒருவன் எப்போதும் வந்து ஸ்நானஞ் செய்கின்றான்; அவன் தன் சரீரத்தினின்றுங் கழற்றி அந்தக் கல்லில் வைக்கும் பொன்மணிக்கோவையை நீ, மூக்கினாற் கொத்தி எடுத்துக்கொண்டுபோய் அந்த மரப்பொந்தினுள்ளே வைத்துவிடு; என்றுசொல்லிற்று.

மறுநாள் இராசகுமாரன் பொன்மாலையைக் கல்லில் வைத்துவிட்டு ஸ்நானஞ்செய்யக் குளத்திற் பிரவேசித்தபோது காகப்பேடு பொன்மாலையை எடுத்துக்கொண்டுபோய் அப்பூடியே வைத்தது. அப்போது பொன்மாலையைப்பார்த்துப் பின்றொடர்ந்துபோன இராச பணிவிடைக்காரராற் கிருஷ்ணசர்ப்பம் மரப்பொந்திலே கண்டுகொல்லப்பட்டது.

ஆதலினாற்றான், "உபாயத்தினால் எது செய்யக்கூடியதோ அது பராக்கிரமத்தினாற் செய்யப்படக்கூடியதன்று." என்பது சொல்லலுற்றேன். என்றது.

கரடகன், இப்படியாகுமேயாயிற் போ; உன் வழிகள் அநுகூலமாகக்கடவது. என்றது.

பின்னர்த் தமனகன் பிங்கலன் சமீபப்போய் நமஸ்காரஞ்செய்து, தேவரீர்! மிகவும் அகிதம் என்று நான் நினைத்த ஒரு காரியத்தை உமக்கு அறிவிக்கும்படிவந்தேன்;

௨. ஆபத்துக் காலத்திலும் பிழைவழியிற் செல்லும்போதுஞ் செய்யப்படவேண்டிய காலங் கடந்தபோதுந் தன் மனத்திலே நன்மையை விரும்பியிருக்கும் மனுஷன் பிறன் கேளாதிருந்தாலும் நற்புத்திகளைச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

௩. அநுபோகத்தைப் பிரித்துச் சனங்களுக்குக் கொடுக்கும் பாத்திரம் இராசா; காரியங்களை முடிக்கும் பாத்திரம் மந்திரி; இராச்சிய காரியங்களிலே அழிவுவரச் செய்யும் மந்திரி தோஷத்தினாற் கறைப்பட்டவனாய் இருக்கிறான்.

௪. இதுவே மந்திரிமாருடைய கிரமம். யசமானனுடைய நிலையைக் கவர்ந்துகொள்ள விரும்புகின்ற பாதகனுடைய உபேக்ஷையிலும் பிராணனைப் பரித்தியாகஞ் செய்தலாவது சிரச்சேதஞ் செய்தலாவது அவனுக்கு உத்தமம். என்றது.

பிங்கலன், நீ என்னசொல்லப் பிரியப்படுகிறாய்? என்று ஆதரவோடு கேட்டது.

தமனகன், இந்தச் சஞ்சீவகன் தேவரீருக்கு மேலாய் முன்னர்க்காணாத வியவகாரமுடையவனாய்த் தோற்றப்படுகின்றான். அப்படியே எங்கள் முன்னிலையிலேதானே சுவாமியுடைய பிரபுசத்தி, உற்சாகசத்தி, மந்திரசத்தி என்னும் முச்சத்திகளையும் நிந்தித்து இராச்சியத்திலே இச்சைகொள்ளுகின்றது என்றது.

பிங்கலகன், இதனைக்கேட்டு மிகவும்பயந்து ஆச்சரியத்தோடு சும்மா இருந்தது.

தமனகன், பின்னரும் சுவாமீ ! நீர், மந்திரிமார் எல்லாரையும் விலக்கிவிட்டு அதனையே சகல அதிகாரத்திலேயும் நியோகித்து வைத்தீர் ! அப்படிச்செய்ததே பெருங்குற்றமாக இருக்கின்றது.

ரு. மந்திரியும், இராசாவும் உன்னதத்திலேயிருக்கும்போது இலக்குமியானவள் கால்தளர்ந்து தன்னியல்பின்படி அவ்வளவுபெரும்பாரத்தைத் தாங்கக்கூடாமையால் இவர்களில் ஒருவரை விடுகின்றாள்.

சு. இராசாவானவன் ஒருவனை இராச்சியத்திலே பிரதான மந்திரி யாக்குகின்றான். அவனுக்கு அப்போது மதமானது மோகத்தினால் உண்டாகின்றது. மதத்தினாலும், ஆலசியத்தினாலும் பேதப்படுகின்றான். பேதப்பட்ட அவனிடத்திற்சுவதந்திர இச்சை குடிகொள்ளுகின்றது ; அவன் பின்னர்ச் சுவதந்திர இச்சையினால் இராசாவுக்குப் பிராணன் அழிதற்கேற்ற துரோகத்தைச் செய்கின்றான்.

எ. நேர்மையற்ற சேவகனையும், அலைகின்ற பல்லையுந், துஷ்ட மந்திரியையும் மூலத்தோடு களைதல் உத்தமம்.

அ. மந்திரியிடத்திலே செல்வந்தங்கியிருக்கும்படி விடுகின்ற இராசா எவனோ அவன் ஆபத்து வரும்போது கோல்கொடுத்து நடத்துகிறவர்களில்லாத குருடர்களைப்போல நஷ்டப்படுவான்.

அந்தச் சஞ்சீவனே சகலகாரியங்களையுந் தன்னிச்சைபடி நடத்துகின்றது ; இதற்கு இங்கே சுவாமியே பிரமாணம். நானே இதனைக் காரியப்பிரகாரம் அறிவேன்.

கூ. பாக்கியத்தை விரும்பாத புருஷன் உலகத்திலே இல்லை. பிறனுடைய இரம்மியமான யௌவனஸ்திரியைத் தான் வைத்திருக்கும்படி விருப்பத்தோடும் பாராதவன் யார்? என்று சொல்லிற்று.

சிங்கம், ஆலோசித்து, நல்லது ! நீ சொல்லுகிறபடி காரியமிருப்பினும், அந்தச் சஞ்சீவகனோடு எனக்கு மகா சிநேகம் இருக்கின்றது.

௧௦. குற்றங்களைச் செய்கிறவனாயிருந்தாலும், எவன் பிரியமுடையனோ அவன் பிரியமுடையவன்றான்; குறைவில்லாத குற்றங்களினால் நிறைந்ததாயிருந்தாலுந் தன் காயத்திலே பிரியமில்லாதவன் யார்?

௧௧. பிரியமில்லாதவைகளைச் செய்கிறவனாயினும் எவன் பிரியமுள்ளவனோ அவன் பிரியமுள்ளவன்றான்; சிரேட்டமாகிய மந்திரத்தை எரித்தபோதினும் யாருக்கு அக்கினியிலே அவமானம் வருகின்றது? என்று சொல்லிற்று.

தமனகன், தேவரீர்! அது தானே குற்றம்;

௧௨. இராசா எவனிலே அதிகங் கண்ணோட்டஞ் செய்கின்றானோ அவன் புத்திரனாயிருந்தாலென்ன! மந்திரியாயிருந்தாலென்ன! உதாசீனனாயிருந்தாலென்ன! இலக்குமியை அடைகின்றான்.

௧௩. தேவரீ! கேளும், பத்தியமானது பிரியமில்லாததாயிருந்தாலும் அதன் முடிவோ சுகத்தைக்கொடுப்பதாம். ஆலோசனை சொல்லுகிறவனும், அதன்படி கேட்டுச் செய்கின்றவனும் எங்கே இருக்கின்றார்களோ அங்கே செல்வங் குதிகொண்டு விளையாடுகின்றது.

நீரோ பழைய சேவகர்களை நீக்கிவிட்டு இடையில் வந்த இந்தச் சஞ்சீவகனை உத்தியோகத்தில் உயர்த்தி வைத்திருக்கிறீர்! இதுவும் அநுசிதமான செய்கை.

௧௪. பழைய சேவகனுக்கு அபராதம் செய்து இடையில் வந்தவனைப் பரிபாலிக்கலாகாது. அப்படிச்செய்பவனிலும்பார்க்க இராச்சியத்துக்குப் பேதஞ்செய்கிறவன் வேறொருவனுமில்லை என்றது.

சிங்கம், உன்னுடைய வார்த்தைகள் எனக்குப் பேராச்சரியத்தை விளைக்கின்றது. உன்னாற்கொண்டுவரப்பட்டதும், என்னால் அபயவாக்குக்கொடுத்து உயர்த்திவைக்கப்பட்டதுமாகிய இந்தச் சஞ்சீவகன் இப்போது எப்படித் துரோகஞ் செய்யும்? என்று கேட்டது.

தமன்கன்; தேவரீர் !

கரு. நாயின் வாலானது நன்றாய்ப் போஷித்து எண ணெய் முதலிய உபாயங்களைக்கொண்டு நிமிர்த்தப்பட்டாலும் இயல்பான வளைவையே அடைகின்றது; அதுபோலத்துர்ச்ச னனும் எப்போதும் தாட்சண்ணியங்களை அடைந்துகொண் டாலும் தன்னியல்பான நிலையையே அடைகிறான்.

சகா. நாயின் வாலானது எண்ணெய்பூசிக்கயிற்றினால் நிறுத்திச்சுற்றிக்கட்டிப் பன்னிரண்டுவருஷம் விடப்பட்டா லும் தனது இயல்பான நிலைக்கே செல்கின்றது.

கஎ. நச்சுமரங்களுக்கு அமிர்தத்தைப் பாய்ச்சிவளர்த் தாலும் அவைகள் நல்ல பழங்களைக் கொடுக்கமாட்டா. அதுபோலக் கெட்டமனுஷருடைய பிரீதியின்பொருட்டு, வள ர்த்தலையுஞ் சம்மானத்தையுஞ் செய்தாலும் அவர்கள் நன்மை யைக் கொடுக்கமாட்டார்கள்.

கஅ. எவனுக்குங் கேடுசெய்ய விரும்பாமலிருக்கிற வன், ஒருவன் கேளாமலிருந்தாலும் அவனுக்கு இதத்தை யே சொல்லக்கடவன். இதுவே நல்லோருடைய கடமை இதற்கு மாறாகநடத்தலே கெட்டவர்களுடைய செய்கை.

ககூ. எவன் பிறனைத் தீமையினின்று காக்கின்றானோ அவனே சிநேகன்; சுத்தமாயிருப்பது எதுவோ அதுவே கரு மம்; அடக்கமாயிருப்பவள் எவளோ அவளே ஸ்திரி; நல் லோர்களினாற் பூசிக்கப்படுகிறவன் எவனோ அவனே புத்தி மான். கர்வத்தைச் செய்யாமல் இருப்பது எதுவோ அது வே ஐசுவரியம். ஆசையை நீக்கியிருப்பவன் எவனோ அவ னே சுகமுடையவன். மாய்மாலமில்லாதது எதுவோ அது வே மித்திரத்தன்மை; தன்னிந்திரியங்கள் தனக்கு வேதனை செய்ய விடாமல் இருப்பவன் எவனோ அவனே புருஷன்.

சஞ்சீவகன் தீமையைச்செய்ய விரும்பியிருக்கின்றான் என்பதைச் சுவாமியாகிய உமக்கு அறிவித்தும், நீர் அதனை நீக்காதிருப்பீராயின் அப்போது என்மேற் குற்றமில்லை.

௨0. இராசாவானவன் காமப்பற்றுடையவனுயிருந்தானுயின் செய்யவேண்டிய காரியங்களை எண்ணமாட்டான். தன்னுடைய நன்மையைப் பார்க்கவுமாட்டான். தன்னுடைய இச்சைகள் எங்கே நடத்துகின்றதோ அங்கேயே மத்தயானையைப் போலத் தன்னிச்சைப்படி செல்கின்றான். பின்னர்ப் பெருமையினுற் பொங்கி யெழுந்து மிக்க சோகத்தில் அமிழ்ந்தித் தன்சேவகர்களிலே குற்றத்தை ஏற்றுகின்றான். தன்னுடைய நடைப்பிழையைத் தான் உணர்வதில்லை. என்றுசொல்லிற்று.

பிங்கலன், சொல்லுகின்றது.

௨௧. பிறனுடைய அபவாத வார்த்தையைக் கேட்டுப் பிறருக்குத் தண்டஞ்செய்தல் நீதியன்று; தானே விசாரித்தறிந்து குற்றமுண்டாயின், தண்டிக்கவேண்டும்; குணமுண்டாயின், பூசிக்கவேண்டும்.

௨௨. குணங்களையுங் குற்றங்களையும் உள்ளபடி நிச்சயித்துணராமல் ஒருவனைப் பிடித்துத் தண்டித்தல் தனக்கு நாசம்விளைப்பீ ப்பாம்பின்வாயிலே கர்வத்தினுற் கையைவைத்தலுக்குச் சமம்.

என்று தன்னுள்ளே ஆலோசித்துச் சஞ்சீவகன் மரணமடையவேண்டிய குற்றமுடையவனுய்ப் பிரசித்தப்படுத்தப் படக்கடவன். என்று வெளிப்படையாய்ச்சொல்லிற்று.

தமனகன், கலக்கமடைந்து, சுவாமீ! யாதொருவிதத்திலும் அதுநன்றன்று; அப்படி நடந்தால் எங்கள் மந்திரத்துக்குப் பேதமுண்டாகும்.

௨௩. இரகசியமான மந்திரவிதையானது எப்படியாயினும் இரட்சிக்கப்படவேண்டும். அதனைச் சிறிதாயினும் பிளத்தலாகாது, பிளக்கப்பட்டால் வளரமாட்டாது.

௨௪ சீக்கிரஞ் செய்துமுடியாமலே தாமதித்துச்செய்கின்ற கொடுக்கல் வாங்கல் தொழில்களாகிய ஒவ்வொரு செயலின் இரசத்தையுங் காலமே உறிஞ்சுகின்றது.

ஆதலாற் றொடங்கப்பட்டது எதுவோ அது மகாப்பிர யத்தனத்தோடு விரைவிலே செய்துகொள்ளவேண்டியது.

உரு. போர்செய்பவன் எல்லாச்சேனைகளினாலுஞ் சூழப்பட்டிருந்தாலும் பிறன் பேதப்படுத்துவான் என்றபயத்தினால் நெடுங்காலந் தாமதிக்கமாட்டான். அதுபோல மந்திரமும் அசைவுள்ளதாயிருக்கின்றது.

காணப்பட்ட குற்றத்தையுடையதாயினுங் குற்றத்தினின்று நீக்கிப் பின்னர் வைத்துக்கொள்ளவேண்டியது என்பதும் நன்றன்று.

உசு. ஒருமுறை தீங்குசெய்த மித்திரனைப் பின்னரும் வைத்திருக்க விரும்புகிறவன் எவனோ அவன் கருப்பத்தைச் சுமந்திருக்கிற கோவேறு கழுதையைப்போல மரணத்தைக் கிரகிக்கிறான். என்று சொல்லிற்று.

அதற்குச் சிங்கம், இவன் அவ்வளவுசெய்தற்குச் சமர்த்தனோ என்பதை ஆராய்தல்வேண்டுமென்றது.

தமனகன், தேவரீர்!

உஎ. ஒருவனுடையசேர்க்கையாகிய அங்காங்கிகளின் தன்மையை அறியாமல் அவனுடைய சாமர்த்தியத்தை நிர்ணயஞ்செய்தல் எப்படி? பாரும்; ஒரு டிட்டிப்க் குருவியினாலே சமுத்திரம் வியாகுலப்படுத்தப்பட்டது என்று சொல்லிற்று.

இஃது எப்படி என்று சிங்கம் கேட்கத் தமனகன் சொல்லுகின்றது.

சமுத்திரடிட்டிபக்குருவிகள் கதை.

ஒரு சமுத்திரக்கரையிலே டிட்டிபதம்பதிகள் வாசஞ்செய்தன. அப்போது பிரசவகாலஞ் சமீபித்திருந்த டிட்டிபப்பெடை நாயகனை நோக்கி நாதா! அடைகாத்தற்கு யோக்கியமானதோர் இடந்தேடவேண்டும். என்றது.

டிட்டிபச்சேவல், "நாம் இருக்குமிடம் அதற்கு யோக்கியமானதன்றே! என்று கேட்டது."

டிட்டிபப்பெடை, யோக்கியமானதன்று; இந்த ஸ்தானநற் காலந்தோறுஞ் சமுத்திரத்திநற் பெருக்கெடுக்கப்படுகின்றது. என்றது.

சேவல், பிரியையே! நான் பெலனில்லாதவனு? என்னுடைய வீட்டிலே வைதத முட்டைகள் சமுத்திரத்தினல் அபகரிக்கப்படுமோ? என்றது.

பெடை, சிரித்து நாதா! உனக்குஞ் சமுத்திரத்திற்கும் பெரும்பேதம் இருக்கின்றது. என்றது.

க. இது செய்தற்கு யோக்கியமோ அன்றோ என்று ஆலோசித்துத் துக்கத்தைத் தடுத்தற்குரிய விஞ்ஞானம் எவனுக்கு இருக்கின்றதோ அவன் கிருச்சிரம் வந்தபோதிலுந் தாழ்ந்துபோகமாட்டான்.

உ. அனுசிதமான கருமத்தைத்தொடங்கலுந், தன்னைச்சேர்ந்த சனங்களோடு விரோதங்கொள்ளுதலும், பெலவான்களோடு எதிர்த்தலும், பெண்களை விசுவசித்தலுமாகிய நான்கும் மரணத்திற்கு வாயில்களாம்.

பின்னர், அந்தப்பெடை நாயகனுடைய சொல்லுக்கு அமைந்து அங்கேதானே முட்டையிட்டது. இவையெல்லாவற்றையுங் கேட்டுத் தன்வலிமையைக் காட்ட விரும்பிய சமுத்திரத்தினல் அதன் முட்டைகள் எடுக்கப்பட்டன. பின் அந்தப் பெடை சோகத்தினல் வருந்தி நாயகனை நோக்கி, நாதா! கஷ்டம் வந்து சம்பவித்திருக்கிறது. சமுத்திரம் என்னுடைய முட்டைகளைத் திருடிக்கொண்டு போயிற்று. என்றது.

சேவல், பிரியையே! பயப்படாதே; என்றுசொல்லிப் பறவைகள் எல்லாவற்றையும் ஒருங்கு கூட்டிக்கொண்டு பறவைவேந்தனுகிய கருடன் சமீபம்போய்த் தன்முட்டைகள்

நாசமடைந்த கதையை அறிவித்தது. கருடன் அவ்வார்த்தையைக் கேட்டுச் சிருட்டிதிதி சங்காரகாரணரும், பிரபுவுமாகிய நாராயணபகவானுக்கு அறிவித்தது. அவர் வரும்படி சமுத்திரத்திற்குக் கட்டளையிட்டார். சமுத்திரம் பகவானுடைய ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு அவர் சமீபம் வந்து அவர் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு முட்டைகளை ஒப்பித்தது.

ஆதலாற்றான் ஒருவனுடைய சேர்க்கையாகிய அங்காங்கிகளின் தன்மையை அறியாமல் அவனுடைய சாமர்த்தியத்தை நிர்ணயஞ்செய்தல் எப்படி? என்பது சொல்லலுற்றேன். என்றது.

பிங்கலகன், அது துரோகபுத்தியுடையது என்பதை எப்படி அறியவேண்டும்? என்றுகேட்டது.

தமனகன், அது, கூர்மையான கொம்பு என்னும் ஆயுதத்துடன் சுவாமீ! உமது முகத்துக்கெதிரே பயந்தவனைப்போல வரும்போது அறிந்துகொள்ளக்கடவீர். என்று சொல்லிவிட்டுச் சஞ்சீவகன் சமீபம்போய் மெல்லமெல்ல நடந்து ஆச்சரியம் அடைந்தவனைப்போலத் தன்னைக் காண்பித்தது.

சஞ்சீவகன், தமனகா! உனது க்ஷேமம் எப்படி? என்று ஆதரவோடு கேட்டது.

தமனகன், சேவகர்களுக்குச் சௌக்கியம் எப்படி உண்டாகும்?

௩. இராசாவைச் சேர்ந்திருப்பவருடைய விருத்திகள் பராதீனமாயிருக்கின்றன. அவர்களுடைய மனம் ஒருகாலமுஞ் சுகமாயிருக்கமாட்டாது; தங்கள் சீவியத்திலும் விருப்பம் வைத்திருக்கமாட்டார்கள்.

௪. திரவியங்களைப் பெற்றுக் கர்வமில்லாமல் இருப்பவன் யாவன்? எந்தத் தூர்த்தனுடைய ஆபத்து நீங்குகின்றது?

பூமியிலே எவனுடைய மனம் ஸ்திரிகளால் உபத்திரவப்படா மல் இருக்கின்றது? இராசாவுக்குப் பிரியமுள்ளவன் யார்? காலத்தின் கையில் அகப்படாதவன் எவன்? இரப்பவர்களு ள்ளே கௌரவமுள்ளவன் எவன்? துர்ச்சனருடைய கண்ணி களிலே அகப்படாமல் க்ஷேமத்தோடு தப்பிப்போன ஆட வன் யார்? என்றது.

சஞ்சீவகன், மித்திரா! இப்படி என் சொல்லுகின்ற னை என்று கேட்கத்,

தமனகன் மந்த பாக்கியனாகிய நான் யாது சொல்லு வேன்.

ரு. சமுத்திரத்திலே அமிழ்ந்தினவன் ஒருபாம்பை ஆதாரமாயடைந்துகொண்டால் அதனை விடுகின்றானும் இல் லை! பிடிக்கின்றானுமில்லை! அப்படியே நானும் மூடத்துவ முடையனா யிருக்கின்றேன்.

சா. நான் ஒருபக்கத்திலே இராஜாவுக்கு விசுவாசி; மற்றப்பக்கத்திலே என் சுற்றத்தவன் அழிகின்றான்; அந்தோ என்ன செய்வேன்! எங்கேபோவேன்! துக்கசமுத்திரத்தி லே விழுந்துகிடக்கின்றேன்.

என்றுசொல்லி நெடுநேரம் பெருமூச்சு விட்டுக்கொண் டிருந்தது.

சஞ்சீவகன், மித்திரா! அப்படியாயினும் நீ அதிகம் விஸ்தாரமாய் மனத்தில் அடைந்திருக்குந் துக்கத்தைச் சொ ல்லவேண்டும். என்று கேட்டது.

தமனகன், இரகசியமாகச் சொல்லத்தொடங்கிற்று. இ ராசாவுடைய விசுவாசம் பிறனுக்குச் சொல்லக்கூடாது. ஆயினும் நீ எங்களுடைய விசுவாசத்தினால் வந்திருக்கிறாய். ஆதலாற் பரலோகத்தை விரும்புகின்ற நான் உனக்கு நன் மையைத் தருவது எதுவோ அதனை அவசியஞ் சொல்லவே ண்டும். கேள்; இந்தச் சுவாமி உன்மேற் கோபபுத்தியு டையராய் உன்னையே கொன்று தன் பரிவாரத்துக்குத் திரு

ப்திசெய்யவேண்டும் என்று இரகசியமாக எங்களுக்குச் சொல்லியிருக்கிறார் என்றது.

சஞ்சீவகன், இதனைக்கேட்டு அதிகந் துக்கப்பட்டது.

தமனகன், துக்கங்கொண்டது போதும். ஏற்றகாலத்திலே செய்யவேண்டியதைச்செய்க என்றது.

சஞ்சீவகன், ஒரு கணப்பொழுது வரையில் ஆலோசித்துச் சொல்லத்தொடங்கிற்று.

எ. பெண்கள் துர்ச்சனரோடு போகின்றார்கள்! இராசாக்கள் பெரும்பாலும் பாத்திரமல்லாதவர்களைப் போஷிக்கின்றார்கள். திரவியங்கள் உலோபியை அநுசரிக்கின்றது. மேகம் மலையிலுங் கடலிலும் மழைபெய்கின்றது!

அ. அப்படியே இலக்குமி நீசனை அடைகின்றாள்; சரஸ்வதியுங் குலத்திற்பிறவாதவனோடு சேர்ந்து கொள்கிறாள்; ஒருபெண் அயோக்கியனையே விரும்பி அவனைச்சேருகின்றாள். தேவேந்திரன் மலையிலே வருஷிக்கிறான்.

இதனை உண்மையான காரியமோ அல்லது வேறே வன்மமுள்ளவர்களால் ஏற்பட்ட வியவகாரமோ? என்று நிச்சயித்துக்கொள்ள முடியாது என்று பின்னருஞ் சிந்தித்தது.

கூ. சற்சனனல்லாதவன் வேறொருவனை அடைதலினால் உண்டாகின்ற சோபையானது ஒரு பெண்ணுடைய கண்ணிலிடப்பட்ட அழுக்குள்ள அஞ்சனத்துக்குச் சமம்.

பின்னும் விசேஷமாகச் சிந்தித்து, இது இப்படிச் சம்பவித்திருப்பது கஷ்டமன்றோ!

கo. இராசன் பிரயத்தினத்தோடு பூசிக்கப்பட்டாலும் சந்தோஷம் அடையமாட்டான். இதில் ஆச்சரியம் யாது? சேவிக்கப்படுபவன் எவனோ அவன் சத்துருத்தன்மையாய் வருதல் அபூர்வமான பிரதிமையின் விசேஷமாயிருக்கின்றது.

இது பிரயத்தினத்தால் விளங்கப்படுத்தப்படக்கூடாத ஒரு காரியமாய் எண்ணப்படவேண்டும்.

கக. யாதொரு நிமித்தத்தைப் பற்றி எவன் கோபிக்கின்றானோ அவன் அஃதில்லாமல் இருக்கும்போது சலிப்பின்றி இருக்கின்றான்; எவனுடைய மனங்காரணமின்றிக் கோபங்கொள்ளுகின்றதோ அந்த மனிதன் தன்மனத்தை எப்படிச்சந்தோஷமாக்குவான்?

இராசாவுக்கு என்னாற்செய்யப்பட்ட குற்றம் யாது? இராசாக்கள் காரணமின்றி அபகாரஞ் செய்கிறவர்களா? என்றது.

தமனகன், இஃது அப்படித்தான் கேளும்.

கஉ. பண்டிதர்களினாலுஞ் சிநேகிதர்களினாலும் உபகாரஞ் செய்யப்பட்டார்களாயினுஞ் சிலர் வெறுப்புக்கொள்ளுகின்றார்கள். சிலர் தமது கண்ணெதிரே பிறரால் அபகாரஞ்செய்யப்பட்டாலும் பிரீதியைத்தானே அடைகின்றார்கள். சேவகர்களுடைய கடமையோ அதிகஞ்சித்திரம்! சித்திரம்!! ஓரே இயல்பாக இருக்கவில்லை! சேவகத்தொழில் யோகிகளாற்றானுஞ் செய்து முடித்தற்கரிய அதிகம் ஆழமாயிருக்கின்றது.

கங. துர்ச்சனருக்குச் செய்த நூறு நற்செய்கைகளும் நட்டமாம்; புத்தியில்லாதவர்களுக்கு நூறு நல்லவார்த்தைகள் சொல்லப்பட்டாலும் அவைகள் நட்டமாம். சம்பாஷிக்கப் பிரியமில்லாதவர்களுக்குச் சொன்ன நூறு வசனமும் நட்டமாம்; அறிவில்லாதவர்களுக்குச் சொல்லிக்கொடுத்த நூறு புத்தியும் நட்டமாம்.

கச. சந்தனமரங்களிலே பாம்புகளும், நீரிலே தாமரைப்பூக்களும் உள, அங்கேதானே முதலைகளும் உள, உலோபிகளுடைய போகங்களிலே குணத்தைப் பற்றிக் குற்றஞ் சொல்லுகிறவர்களும் உண்டு. விக்கினமில்லாதசுகங்களோ காணப்பட்மாட்டா.

கரு. சந்தனமரத்தின் மூலம் பாம்புகளினாலுங் கொம்பர்கள் குரங்குகளினாலும் சிகரங்கள் காடுகளினாலும் அடை-

யப்பட்டிருக்கின்றன அந்தச்சந்தனமரத்திலே துஷ்டமான அழுக்குகளில்லாதவிடஞ் சிறிதுமில்லை என்று சொல்லிற்று.

தமனகன், எங்கள் சுவாமியுடைய வாக்கோ மதுரமாயிருக்கின்றது; இருதயம் விஷமாயிருக்கின்றது என்று நான் அறிகிறேன்.

கசு. அவர் தூரத்திலே காணும்போது கையை உயர்த்தி அழைக்கின்றார்; நீர் சொரியுங்கண்ணுள்ளவராய் ஆசனத்திற்பாதியை இருக்கும்படி விடுகிறார். இறுக்கமாய்க்கட்டித்தழுவும் விருப்பமுள்ளவராயிருக்கிறார். கேள்விகளுக்குப் பிரியமான கதைகளைச்சொல்லுகிறார். ஆதரவுள்ளவராயிருக்கிறார்; உள்ளே மறைக்கப்பட்ட விஷத்தை யுடையராயிருக்கிறார். வெளியில் மதுரமயமாய் இருக்கிறார். மாயா வித்தையில் மகா சமர்த்தர்.

துர்ச்சனராற் பயிற்றப்பட்ட இந்த அபூர்வமான நாடகவிதிக்கு நாமம் யாது?

கஎ. கடத்தற்கரிய சமுத்திரத்தைக் கடத்தற்குத் தோணியும், இருள் வரும்போது விளக்கும், காற்றில்லாதபோது விசிறியும், மதயானையைச் சாந்திபண்ணுதற்குத் தோட்டியும் உள. இப்படியே பூமியிற்பிரமதேவராற் செய்யப்படாத உபாயசிந்தை ஒன்றுமில்லை. ஆயினுந் துர்ச்சனருடைய சித்தவிருத்தியைத் தடுத்தலிற் பிரமதேவர்தாமுந்தம்முயற்சியிற்தவறுவார்என்றுநான்நினைக்கின்றேன்என்றுசொல்லிற்று.

சஞ்சீவகன், சரியபக்ஷகனுகிய நான் சிங்கத்தினுற் கொல்லபட வேண்டியவனுவது எப்படி? ஓகோ! கஷ்டம்! கஷ்டம்!

கஅ. சமமான திரவியமுடைய இருவருக்குஞ் சமபெலமுடைய இருவருக்கும் இடையிலுள்ள வாதுதானே கவனிக்கத்தக்கது; எவ்விடத்தும் உயர்ந்தவனும், இழிந்தவனுமாகிய இருவருக்கும் இடையிலுள்ள வாது கவனிக்கப்படத்தக்கதன்று.

இராசா என்னகாரணத்தினால் என்னோடு கோபித்துக் கொண்டிருக்கிறார்? இராசா வெறுத்திருக்கிறபடியால் எப்போதும் பயந்துகொண்டே இருத்தல்வேண்டுமென்று சிந்தித்தது.

கக. இராசாவுடைய சித்தம் மந்திரியினால் எங்கேயாவது வேறுபடுத்தப்பட்டாற் பளிங்குவளையலைப்போலப் பொருந்தமாட்டாது; அதனைப் பொருத்தவல்லவன் யாவன்?

உ௦. இடியேறு, இராஜாதிகாரம் என்னும் இரண்டும் அதிகம் பயங்கரமுடையன; இவற்றுள் இடியேறு ஓரிடத்தில் மாத்திரமே விழுகின்றது. இராஜாதிகாரம் எப்போதும் எவ்விடத்திலுஞ் சுற்றி விழுகின்றது.

ஆதலாற் போரிலே மரணத்தை அடைந்துகொள்ளலாம்; இப்போது அதனுடைய ஆஞ்ஞைப்படி நடத்தலோ யோக்கியமன்று.

உக. போரில் இறந்தவன் சுவர்க்கத்தை அடைகின்றான். சத்துருவைக்கொன்றவன் சுகத்தைத் அநுபவிக்கிறான். இவையிரண்டும் வீரர்களுக்குக் கிடைத்தற்கரிய குணங்களாம்.

உஉ. எவ்விடத்தும் யுத்தமில்லாமலிருந்தாலும் மரணமே நிச்சயம்; போரிலே சீவித்திருத்தல் சந்தேகம் சந்தேககாலம் யுத்தத்திற்குக் காலம் என்று வித்துவான்கள் சொல்லுகிறார்கள்.

உ௩. புத்திமான் யுத்தகாரணமில்லாமலிருக்கையிலும் தனக்கு இதமானதைச் சிறிதேனுங் காணமல் இருக்கும்போது சத்துருவோடு யுத்தஞ்செய்து இறக்கின்றான்.

உச. ஒருவன் வெற்றியடையும்போது இலக்குமியை அடைகின்றான். இறந்தகாலத்துந் தெய்வப்பெண்களை அடைகின்றான். ஒரு கணப்பொழுதில் அழியுஞ் சரீரம் இறந்தாலென்ன! போர்செய்தாலென்ன! இதனைப் பற்றிச் சிந்தித்தலாற் பிரயோசனம் யாது!

இவைகளைச் சிந்தித்துக்கொண்டு ஓய்! மித்திரா! அது என்னைக் கொல்லவிரும்புகின்றது என்பது எப்படி அறியத் தக்கது? என்று கேட்டது.

தமனகன், அது, காதினை நிமிர்த்தி, வாலினை உயர்த்திக் கால்களையுமுயர்த்தி எப்போது உன்னைப் பார்க்கின்றதோ அப்போது நீயும் உன் விக்கிமரத்தைக் காட்டு;

உரு. பெலவானாயினுந் தைரியமகிமையில்லாதவனாயிருந்தானாயின் எவன்றான் தோல்வித்தானத்தை அடையமாட்டான்? சனங்கள் பயமில்லாமற் சாம்பற்குவியலிலே கால் வைக்கின்றார்களன்றோ.

மேலும் இவைகளெல்லாவற்றையும் நன்றாய் மறைத்துச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாதொழியின் நீயாவது நானாவது உயிர்விடவேண்டும். என்று சொல்லிக் கரடகன் சமீபம்போயிற்று.

கரடகன், முடிவு என்ன? என்றுகேட்டது. தமனகன் இவ்விருவருள்ளும் அன்னியோன்னியமான பேதம் நிறைவேறிற்று என்றது.

கரடகன், இதற்குச் சந்தேகமில்லை.

உசு. துட்டர்களுள்ளே சுற்றத்தவன் யாவன்? அதிகமாகப் பிரார்த்திக்கப்பட்டாற் கோபங்கொள்ளாதவன் யாவன்? திரவியத்தினாற் கர்வங்கொள்ளாதவன் யாவன்? கெட்டசெயலிலே சாமர்த்தியவானாகாதவன் யாவன்?

உஎ. ஒரு மனிதன் தூர்த்தர்களால் துன்மார்க்கமுடையவனாக்கப்படுகின்றான். தன்னாத்துமாவின் விருத்தியினால் இலட்சுமீகரமுடையவனாகின்றான். அதமரோடு சம்பந்தஞ் செய்தல் சேர்ந்தார்க் கோல்லியைப்போல யாதுதான் செய்யாது?

பின்னர்த் தமனகன் பிங்கலகன் சமீபத்திற்போய்த் தேவரீர்! அந்தத் துராத்துமா வருகின்றது. யுத்தசன்னத்தராய் இருக்கக் கடவீர். என்றுசொல்லிச் சிங்கத்தை முன்னர்ச் சொல்லிய பிரகாரஞ் செய்யும்படி செய்தது. சஞ்சீவகனும் வந்து சிங்கம் அப்படியே விகாரரூபமாய் நிற்றலைக் கண்டு

தானுந் தன் விக்கிரமத்தைக் காட்டத்தொடங்கிற்று. அதன் பின் அவ்விரண்டிற்கும் நடுவே கொடிய மகாயுத்தம் நடந்த போது சஞ்சீவகன் சிங்கத்தினுற் கொல்லப்பட்டது.

பின்னர்ப் பிங்கலகன் சஞ்சீவகனுகிய தன்சேவகனைக் கொன்று இளைப்படைந்து சோகமுள்ளவனைப் போலிருந்து நான் ஏன் இந்தப் பயங்கரமான செயலைச் செய்தேன்?

உஅ. நியாயப்பிரமாணத்தை மீறுகின்ற இராசாந்தரான் ருனே பாபத்துக்குப் பாத்திரனுய் யானையைக் கொல்வதினுற் பாபமடைகின்ற மிருகராசனைப்போல இருக்கின்றுன். இராச்சியம் பிறரால் அனுபவிக்கப்படுகின்றது.

உகூ. பூமியில் ஒருபகுதியை இழத்தல் புத்தியுங் குணமுமுள்ள சேவகனை இழத்தல் என்னும் இரண்டில் சேவகன் நாசமடைதல் இராசாக்களுக்கு மரணமாம். பூமி நாசம்போனுல் இலகுவிற் பெற்றுக்கொள்ளலாம். சேவகர்களை அப்படிப் பெற்றுக்கொள்ளுதல் கூடாது. என்றுசொல்லிற்று.

தமனகன், சுவாமீ! இஃதென்ன நூதன நியாயம்? ஒருவன் நம்பிக்கையில்லாத சத்துருவைக் கொன்றபின் சந்தாபங்கொள்வது எப்படி?

௩௦. பிதாவாயிருந்தாலென்ன! சகோதரனுயிருந்தாலென்ன! புத்திரனுயிருந்தாலென்ன! மித்திரனுயிருந்தாலென்ன! தன் சுகவிருத்தியை விரும்பும் இராசாத் தன்னுயிர்க்குச் சதிசெய்பவர்கள் எவரையுங் கொல்லக்கடவன்.

௩க. தருமார்த்த காமங்களின் தத்துவத்தை அறிந்தவன் அதிகம் பக்ஷமுள்ளவனுயிருத்தலாகாது. கையிலே திரவிய மிருந்தாலும் எப்போதும் பொறுத்துக்கொள்ளுதற் காயத்தமாயிருத்தலாகாது. இரக்கத்தை விழுங்குதலே ஜீவனுக்கு யோக்கியம்.

௩உ. சத்துருவிலேயும், மித்திரனிலேயும் பொறுமையாயிருத்தலே சந்நியாசிகளுக்குப் பூஷணம். குற்றஞ்செய்த பிராணிகளிலே பொறுமையாயிருத்தலே இராசாக்களுக்குத் தூஷணம்.

௬௩. இராசாவின் ஸ்தானத்தை இராச்சிய லோபத்தினாலும், அகங்காரத்தினாலும் இச்சிக்கின்றவனுக்குக் கொலையன்றி வேறு பிராயச்சித்தம் இல்லை.

௬௪. இரக்கமுள்ள இராசாவும் எல்லாவற்றையும் உண்கின்ற பிராமணனும், அடக்கமில்லாத ஸ்திரியும், கெட்ட குணமுடைய மித்திரனும், விசுவாசமில்லாத வேலைக்காரனும், கவனமில்லாத மேல்விசாரணைக்காரனும், செய்ந்நன்றி மறந்தவனுமாகிய இவர்களெல்லாம் நீக்கப்படக்கடவர்.

௬௫. சத்தியமும், அசத்தியமும், கடுமையும், மென்மையுங், கொடுமையும், இரக்கமும், உலோபத்தன்மையும், கொடைக்குணமும், நித்தியசெலவும், மிக்க இரத்தின திரவியவரவுமாக இராசாவுடைய நீதி ஒரு வேசையைப்போல அநேகரூபமுள்ளதாயிருக்கின்றது. என்று சொல்லிற்று.

இப்படியே தமனகனுடைய கபட வசனங்களினாற் பிங்கலகன் சந்தோஷப்பட்டு தன்னியல்பான குணத்தையடைந்து சிங்காசனத்தில் வீற்றிருந்தது. தமனகன், சந்தோஷமனங்கொண்டு இராசாவே! வெற்றியடைந்திருப்பீராக. சர்வலோகத்துக்குஞ் சுபமுண்டாவதாக. என்று சொல்லிக்கொண்டு தன் இஷ்டப்படியே சுகம் அடைந்திருந்தது.

விஷ்ணுசர்மர், இராசபுத்திரரைநோக்கிப், பிள்ளைகளே! சுகிர்தபேதம் உங்களாற் கேட்கப்பட்டது. என்றார்.

இராசபுத்திரர், நாங்கள் இதனால் மிகச்சந்தோஷமுடையேம். என்றார்கள்.

விஷ்ணுசர்மர், இன்னும் இப்படியிருக்கக்கடவது.

௬௬. சுகிர்தபேதமானது உங்கள் சத்துருவீட்டிலே அதிகம் உண்டாகக்கடவது. அதமர்கள் நாடோறுங் காலத்தினாலிழுக்கப்பட்டு அழியக்கடவர்கள். சனங்கள் நித்தியமுஞ் சகலசுகத்தையுஞ் சம்பத்தையும் பெறக்கடவர். பாலகர்கள் இந்த இரம்மிய கதையாகிய சோலையிலே எப்போதும் விநோதஞ் செய்யக்கடவர். என்றுசொல்லினார்.

சுகிர்தபேதம் முற்றுப்பெற்றது.

மூன்றாவது.

விக்கிரகம்.

பின் கதை ஆரம்பத்திலே இராசபுத்திரர்கள் விஷ்ணுசர்மனை நோக்கிக் குருவே! நாங்கள் இராசபுத்திரர்கள்; ஆதலால் விக்கிரகத்தையுங் கேட்டால் எங்களுக்குக் குதூகலம் உண்டாகும் என்றார்கள்.

விஷ்ணுசர்மர், உங்களுக்கு எது இரசத்தைத் தருமோ அதனையே சொல்லுகிறேன். விக்கிரகத்தைக் கேண்மின்; அதன் முதற்சுலோகம் இது:—

க. சமமானபெலனுடையஅன்னங்களும் மயில்களும் போர்செய்தபோது சத்துருவின் வீட்டிலிருந்த காகங்களால் அன்னங்கள் வஞ்சிக்கப்பட்டன என்றார்.

இராசபுத்திரர்கள் இஃது எப்படி என்று கேட்க, விஷ்ணு சர்மர் சொல்வாராயினர்:

அன்னமயூராதிகள் கதை.

கர்ப்பூரத்துவீபத்திலே பத்மகேலி என்னும் பெயருடைய குளமொன்று இருக்கின்றது. அக்குளத்திலே இரணியகர்ப்பன் என்னும் பெயருடைய இராச அன்னம் வாசஞ்செய்து வந்தது. அதனைச் சகலசலசரபக்ஷிகளும் ஒருங்கு கூடிப் பறவைகளுக்கு அரசனாக அபிஷேகஞ் செய்து வைத்தன.

க. இராசா இல்லையாயின்; சனங்களெல்லாஞ்சமுத்திரத்திலே சுக்கானி இல்லாத தோணியைப்போல அலைந்துபோவார்கள்.

உ. இராசாச் சனங்களை நன்றாகக் காக்கின்றான்; சனங்கள் இராசாவை விருத்தியாக்குகின்றார்கள். விருத்தி

செய்தலினும் காத்தலே முக்கியம்; காத்தலில்லையாயின்; சனங்களும் இல்லாமற்போவார்கள்.

ஒருநாள் அந்த அரசவன்னம் நல்ல விஸ்தாரமான தாமரைப் பரியங்கத்திலே பரிவாரங்கள் சூழச் சுகமாய் விற்றிருக்கும்போது, எங்கேயோ ஒரு தேசத்திலிருந்து தீர்க்கமுகன் என்னும் பெயருடைய கொக்கு ஒன்று அங்கே வந்து நமஸ்காரஞ்செய்து சமீபத்தில் இருந்தது.

இராசா, அதனை நோக்கித் தீர்க்கமுகா! நீ பிறதேசங்களிலிருந்து வந்திருக்கின்றாய்; புதுமைகளைச் சொல்லு என்று கேட்டது. தீர்க்கமுகன், "தேவரீர்! பெரியபுதினங்கள் இருக்கின்றன; அவற்றைச் சொல்ல விரும்பித்தான் சீக்கிரம் வந்திருக்கிறேன் கேட்கக்கடவீர் என்று சொல்லத் தொடங்கிற்று.

சம்புத்துவீபத்திலே விந்தியமலையிலே சித்திரவர்ணன் என்னும் பெயருடைய மயில் ஒன்று பறவைகளுக்கு இராசனாக இருக்கின்றது. நான் ஒருநாள் எரிந்த காட்டின் நடுவிற் போகும்போது அவனுடைய சேவகர்கள் என்னைக்கண்டு, "நீ, யார்? எங்கேயிருந்து வருகின்றாய்?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு, நான் கர்ப்பூரத்துவீபராசனாகிய இரணியகர்ப்பனுடைய சேவகன்: கௌதுகத்தினால் வேறு தேசங்களைப் பார்க்கும்படி வந்திருக்கிறேன் என்று சொன்னேன். பறவைகள் அதனைக் கேட்டு இந்தத் தேசங்கள் இரண்டனுள் எந்தத் தேசம் மிக நல்லது? எந்த இராசா மிக நல்லவர்? என்று கேட்டன.

அப்போது நான், இப்படி என் சொல்லுகிறீர்கள்? பெரும்பேதம் இருக்கின்றது கர்ப்பூரத்துவீபமோ ஒரு சுவர்க்கம்: இராசரோவோ இரண்டாம் இந்திரன், இதனை வர்ணித்தல் எப்படி முடியும்! நீரில்லாத இந்நிலத்திலிருந்து நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எங்கள்தேசத்துக்கு வரக்கடவீர்கள், என்று சொன்னேன். அவைகள் என் வசனத்தைக் கேட்டுக் கோபங்கொண்டன.

௪. பாம்புகளுக்குப் பாலினைக் குடிக்கக் கொடுத்தல் அவைகளுடைய விஷத்தை வளர்த்தலாகும். மூர்க்கர்களுக்கு உபதேசஞ் செய்தல் சாந்தியின் பொருட்டன்று; கோபத்தின் பொருட்டேயாம்.

௫. வித்துவானுக்கே உபதேசிக்கவேண்டும்; மூடனுக்கு ஒருகாலமும் உபதேசித்தலாகாது; சில பறவைகள் அறிவில்லாத குரங்குகளுக்கு உபதேசித்ததனால் தங்கள் வாசஸ்தானத்தையும் இழந்தன என்றது.

இராசா இஃது எப்படி என்று கேட்கத் தீர்க்கமுகன் சொல்லுகின்றது.

பக்ஷிவானரங்களின்கதை.

நருமதையாற்றங்கரையிலுள்ள ஒரு மலைச்சாரலிலே விசாலமான இலவமரம் ஒன்று நிற்கின்றது. அதிலே தங்களால் நிருமிக்கப்பட்ட கூட்டிலே சில பறவைகள் மழைக்காலத்திலுஞ் சுகத்தோடு வசித்தன. ஒரு நாள் நீலாம்பரத்தை யொத்த மேகபடலத்தினால் ஆகாசம் மறைக்கப்பட்டபோது தாரைதாரையாகப் பெருமழை பெய்தது. அப்பொழுது பறவைகள், மரத்தினடியிலே குளிரினால் வருந்தி நடுங்கிக்கொண்டிருக்குங் குரங்குகளைக்கண்டு, ஓகோ! குரங்குகாள்! கேளுங்கள்;

௧. நாங்கள் மூக்கு ஒன்றே யுடையேம். அதனால் புல்லெடுத்துவந்து கூடுகட்டியிருக்கின்றோம். கரசரணாதி அவயவங்களெல்லாம் பொருந்தியிருக்கின்ற நீங்கள் இப்படி ஏன் வருந்துகிறீர்கள்? என்று சொல்லின.

குரங்குகள், இதனைக் கேட்டுக் கோபங்கொண்டு, "ஆகா! காற்றில்லாத கூடாகிய கர்ப்பத்திற் சுகமாயிருக்கும் பறவைகள் எங்களை நிந்திக்கின்றன! மழை தணியட்டும், என்று ஆலோசித்து விடாமழை தணிந்தபின் விருக்ஷத்திலேறிக் கூடுகளெல்லாவற்றையுங் கிழித்தெறிந்தன. பறவைகளுடைய முட்டைகளுங் கீழே விழுந்தன.

ஆதலாற்றான் வித்துவானுக்கே உபதேசிக்கவேண்டும். என்பது சொல்லலுற்றேன் என்றது.

இராச அன்னம், பறவைகள் யாது சொல்லின? என்று கேட்டது. தீர்க்கமுகன், பறவைகளெல்லாங் கோபங்கொண்டுஇந்த இராசஅன்னம் எவனால் இராசாவாக்கப்பட்டது. என்று கேட்டன. நானுங் கோபங்கொண்டு உங்களுடையஇந்தமயில் எவனால் இராசவாக்கப்பட்டது என்றேன். இதனைக் கேட்டு அந்தப்பறவைகள் என்னைக்கொல்லும்படி முயற்சிசெய்தன. அப்போது நானும் நல்ல விக்கிரமங்காட்டினேன்.

உ. பெண்களுக்குப் பொறுமையும் இலச்சையும் ஆபரணமா யிருத்தல்போல ஆடவர்களுக்கு விவாகக் கொண்டாட்டத்தில் இலச்சை யின்மையும் பரிபவத்திற் பராக்கிரமமாயிருத்தலும் பூஷணங்களாம்.

இராசர்ச் சிரித்துச் சொல்லத் தொடங்கிற்று.

ங. எவன் தனக்குஞ் சத்துருக்களுக்குமுள்ள பலாபலத்தை நன்றாக ஆராய்ந்து பேதத்தைக் கண்டுணராமல் இருக்கின்றானோ அவன் சத்துருக்களினால் மேற்கொள்ளப்படுவான்.

ச. புத்தியில்லாத கழுதை ஒன்று புலித்தோலைப் போர்த்துக்கொண்டு நெடுங்காலமாய் வயலிற் பயிரை உண்டுவந்தும் வாக்குத்தோஷத்தினாற் கண்டு கொல்லப்பட்டது என்று சொல்லிற்று.

இஃது எப்படி என்று கொக்குக் கேட்க இராச அன்னஞ் சொல்லுகின்றது.

புலித்தோல்போர்த்தகழு தையின் கதை.

அத்தினபுரியிலே விலாசன் என்னும் பெயருடைய வண்ணான் ஒருவன் இருந்தான். அவனுடைய கழுதை ஒன்று அதிகம் பாரத்தைச் சுமந்ததனால் வலிமைகெட்டுச் சாகக்கிடந்தது. அதனால் வண்ணான் அந்தக்கழுதையைப் புலித்தோலினாற் போர்த்துக் காட்டுக்குச்சமீபமாயுள்ள பயிர்நிறைந்த வயலிலேவிட்டான். வயற்காரர் அதனைத் தூரத்திலே கண்டு புலி என்றெண்ணிப் பயந்து விரைந்து தப்பியோடினார்கள். அதன்பின் ஒரு காவற்காரன் கழுதைத்தோற் கம்பளம் போர்த்துக்கொண்டு வில்லையும் அம்பையும் ஆயத்தமாக்கி வளைந்த சரீரத்தோடு தனியே நின்றான். கொழுத்து நின்ற அந்தக் கழுதை அவனைத் தூரத்திலே கண்டு பெட்டைக்கழுதை என்றெண்ணி ஆரவாரித்துக்கொண்டு அவனுக்கெதிராக ஓடிப்போயிற்று. வயற்காவற்காரன் கழுதை என்று அறிந்து அதனை விளையாட்டின்பொருட்டுக் கொன்றான்.

ஆதலாற்றான் புத்தியில்லாத கழுதை ஒன்று புலித்தோலைப் போர்த்துக்கொண்டு என்பது சொல்லலுற்றேன் என்றது.

தீர்க்கமுகன், அந்தப் பறவைகள் பின்னர் என்னை நோக்கி அடா! பாவீ! துட்டக்கொக்கே! எங்கள் பூமியிலே இருந்துகொண்டு எங்கள் சுவாமியை அற்பமாகப் பேசத் துணிகின்றாயா? இதனை நாம் பொறுக்கமாட்டோம் என்று சொல்லிக்கோபங்கொண்டு என்னைச் சஞ்சுவினாற்கொத்தி, அடா! மூர்க்கா! பார்; அன்னமே உன்னுடைய இராசா; அது எப்பொழுதும் மிருதுவானது. அதற்கு இராச்சியஅதிகாரம்இல்லை. பெரிதும்மிருதுவானது எதுவோ அது கையிலிருக்கும் பொருளைத் தானுங் காத்துக்கொள்ள மாட்டாது. அது பூமியை எப்படி ஆளக்

கூடும்? அதற்கு இராச்சியமாவதென்ன! நீயோ கிணற்றுத்தவளை. அதனை அடையும்படி உபதேசிக்கின்றாய்.

க. கேள்; பழத்தையும் நிழலையுமுடைய ஓரு மகாவிருக்ஷம் கணிக்கப்படத்தக்கது; தைவாதீனமாய் அதிலே பழமில்லையாயினும் நிழல் எவனாற் றடுக்கப்படுகின்றது!

உ. இழிந்தவனுக்குச்சேவை செய்யப்படாது. பெரியவனையே அடைதல்வேண்டும். கள்விற்பவனுடைய கையிலே பால் இருந்தாலும் அது கள்ளென்றுதான் சொல்லப்படும்.

ங. ஆடானது சிங்கத்தினுடைய அனுக்கிரகத்தினாற் பயமின்றி வனத்திற் சஞ்சரிக்கின்றது. விபீஷணன் இராமசுவாமியை அடைந்து இலங்கை இராச்சியத்தைப் பெற்றுக்கொண்டான்.

ச. கண்ணாடியிலே ஆதார ஆதேயத்தன்மையினால் ஒரு கசேந்திரன் எப்படிச் சிறிதாகத் தோற்றப்படுகின்றதோ அப்படியே குணமில்லாதவனிடத்தில் அடைந்த குணமுடையவன் பெரியவனாயிருந்தாலும் அற்பத்தன்மையை அடைகிறான்.

ரு. விசேஷமாகச் சத்துருவாகிய இராசா மிக்க வலிமையுடையவனாயிருந்தாலுங் கபட ஆலோசனையினாலே சித்தியுண்டாகின்றது, சந்திரனைப் பற்றிய கபடவாலோசனையினால் முயல்கள் சுகத்தோடு வசித்தன என்று சொல்லின.

இஃது எப்படி என்று நான் கேட்கப் பறவைகள் சொல்லின.

கஜசசங்களின்கதை.

ஒரு மாரிகாலத்திலே மழை பெய்யாமையினுல் தண்ணீர்த்தாகங்கொண்டு வருத்தமடைந்த யானைக்கூட்டங்கள் யூதநாதனை நோக்கி, நாதா! எங்கள் சீவனத்துக்கு ஓர் உபாயமுமில்லை. அற்பப்பிராணிகளுக்கு மஞ்சனஸ்தானம் வேண்டுமென்றே; எங்களுக்கோ மஞ்சனமில்லை. அந்தகரைப் போன்ற நாங்கள் எங்கே போவோம்? யாதுசெய்வோம் என்று முறையிட்டன.

அப்போது யூதநாதன் சிறிதுதூரம்போய்ச் சுத்தமான ஒரு வாவியைக் காட்டிவிட்டது. அந்த வாவிக்கரையிலிருந்த முயல்கள் யானைகளின் கால் உழக்கினுற் கொன்றுசூரணமாக்கப்பட்டன. பின் சிலீமுகன் என்னும் முயல், இந்த யானைகள் தண்ணீர்த் தாகத்தினுல் வருந்தி எப்போதும் இங்கே வரவேண்டியதாயிருக்கின்றது, அதனுல் எங்கள் குலம் நஷ்டமடையும் என்று சிந்தித்துத் துக்கித்தன. அப்போது விசயன் என்னும் கிழமுயல் சகோதரா! நீ துக்கங்கொள்ளாதே, அதற்குப் பிரதிகாரம் நானே செய்வேன் என்று வாக்குத்தானஞ்செய்து போயிற்று. போகும்போது யானைக்கூட்டத்துக்கு முன்னே போய் நான் எப்படிப் பேசுவேன்.

சூ. யானை தடவிக்கொண்டுநின்றுலுங் கொல்லுகின்றது. மணந்துகொண்டிருந்தாலும் பாம்பு கொல்லுகின்றது. இரட்சித்துக்கொண்டிருந்தாலும் இராசாக் கொல்லுகிருன். சிரித்துக்கொண்டிருந்தாலுந் துர்ச்சனன் கொல்லுகிருன்.

ஆயினும் மலையினுச்சியில் ஏறிப்போய் யூதநாதனேடு பேசுவேன் என்று ஆலோசித்துக் கொண்டுபோய் அப்படிச் செய்தபோது யூதநாதன் அதனைக் கண்டு நீ யார்? எங்கே யிருந்து வருகின்றுய் என்று கேட்டது.

முயல், நான் பகவானுகிய சந்திரனுல் அனுப்பப்பட்ட தூதன் என்றது.

யூதநாதன் காரியம் யாது சொல்லு என்றது. விசயன் சொல்லத் தொடங்கிற்று.

எ. கொல்லும்படி ஆயுதத்தை உயர்த்தினலுந் தூதன் இராச்சிய நயத்திற் கன்றி வேறுவிதமாகச் சொலலமாட்டான். எப்போதும் மரணத்துக்குப் பயப்படாதவனுகையால் அவன் வார்த்தை யதார்த்தமாயிருக்கும்.

ஆதலால் நான் அவருடைய ஆஞ்ஞையினுற் சொல்லுகிறேன் கேளும். "இந்தச் சந்திரவாவியைக் காவல்செய்யும் முயல்களை நீர் துரத்திக் கொன்றுவிட்டீர்! அது யோக்கியமன்று. அம்முயல்கள் என்னுடையவைகள்; அதனுலே எனக்குச் சசாங்கன் என்ற பெயர் பிரசித்தமாயிற்று" எனச்சந்திரன் சொல்லுமாறு சொன்னுர் என்று தூதன் சொன்னபோது, யூதநாதன் பயந்து, தேவனே! இதனை அறியாமற் செய்துவிட்டேன். இனி ஒருகாலமும் போகமாட்டேன் என்றது.

தூதன், அப்படியாயின் இந்தக் குளத்திலே கோபத்தினுல் நடுங்கிக்கொண்டு நிற்கின்ற சந்திரபகவானைக் கண்டு நமஸ்கரித்துச் சமாதானஞ் செய்துகொண்டுபோம் என்று சொல்லி இராக்காலமானவுடன் யூதநாதனைக் கூட்டிக்கொண்டுபோய் அந்தக் குளத்தில் அசையுஞ் சந்திரப்பிரதிவிம்பத்தைக் காண்பித்து நமஸ்கரிக்கும்படி செய்தது. யூதநாதன் நமஸ்கரித்துத் தேவனே! அறியாமையினுற் குற்றஞ் செய்திருக்கிறேன்; அதனைப் பொறுத்துக்கொள்ளக்கடவீர். என்று சொல்லி அந்த முயலிடத்தேயும் அனுமதிபெற்றுக்கொண்டு சென்றது.

ஆதலாற்றுன் சத்துருவாகிய இராசா மிக்க வலிமையுடையவனு யிருந்தாலுங் கபடவாலோசனையினுலே சித்தி யுண்டாகும். என்பது சொல்லலுற்றேம். என்றன.

பின்னர் நாஞ் எங்கள் பிரபுவாகிய அவர் தாமே மகாப்பிரதாபமுள்ளவர் என்றும், சமர்த்தர் என்றும், மூன்

றுலகத்துக்கும் பிரபுத்தன்மை அவரிடத்திலே தானே பொருந்தியிருக்கின்றது என்றும், ஆதலினால் இராச்சிய த்தைப் பற்றி அவருக்கு என்ன! என்றுஞ் சொன்னேன்.

அப்பொழுது அந்தப் பறவைகள் என்னை நோக்கி அடா! துட்டா! எங்கள் பூமியிலே எப்படிச் சஞ்சரிக்கின்றாய்! என்று சொல்லிச் சித்திரவர்ணன் என்னும இராசாவின் சமீபத்திற் கொண்டுபோய் நமஸ்காரஞ்செய்து என்னைக் காண்பித்துத் தேவனே! இதனைப் பிடித்து சிறையில் வையும்; இந்தத் துட்டக்கொக்கு எங்கள் தேசத்திலே இருந்துகொண்டுந் தேவரீருடைய ஸ்ரீ பாதங்களை நிந்திக்கின்றது என்று விண்ணப்பஞ் செய்தன.

இராசா இது யார்? எங்கேயிருந்து வருகின்றது? என்று கேட்டது. அவைகள் இது இரணியகர்ப்பன் என்னும் இராச அன்னத்தினுடைய அனுசாரி; கர்ப்பூரத்துவீபத்தினின்றும் வந்தது என்றன.

அப்போது மந்திரியாகிய கிருத்திரம் என்னைநோக்கி அங்கே முக்கியமந்திரி யார் என்றுகேட்டது. நான் சகல சாஸ்திரங்களையுங் கரைகண்டுணர்ந்த சர்வஞ்ஞன் என்னும் நாமமுடைய சக்கரவாகம் என்றேன். கிருத்திரம், சுவதேசத்திற் பிறந்தபடியால் மந்திரியாக வைக்கப்படுதற்கு யோக்கியமுடையது.

அ. இராசாவானவன் தன் தேசத்திற் பிறந்தவனும், குலாசாரத்திலே சுத்தனும், பரீக்ஷையினாற் சுத்தன் என்று அறியப்பட்டவனும், சாத்திரங்களை உணர்ந்தவனும் தீங்கில்லாதவனும், வியபிசாரமில்லாதவனும், வியவகாரங்களைப் படித்தறிந்தவனும், புகழுடையவனுங், குலக்கிரமமாய் வந்தவனும், வித்துவானும், பொருளை வளர்ப்பவனுமாகிய ஒருவனையே நன்றாக ஆராய்ந்து மந்திரியாக நியமிக்கக்கடவன் என்றது.

இதற்கிடையிற் கிளி இராசாவை நோக்கித் தேவரீர்! கர்ப்பூரத்தீவு முதலியவைகள் சம்புத் தீவுள் அடங்கிய

சிறுதீவுகள் அங்கேயுந் தேவரீருடைய பாதங்களுக்கு அதிகாரம் உண்டு. என்றது.

இராசா அப்படித்தான் என்றது.

௯. இராசாவும், பைத்தியகாரனும், சிசுவும், பெண்ணும் திரவியகர்வமுடையவனும், அடையத்தகாத பொருளிலும் ஆசைகொள்ளுகிறார்கள். பின்னை அடையத்தக்க பொருளிலே அவர்களுடைய ஆசை எவ்வளவு அதிகமாக இருக்கும்!

அப்போது நான் ஸ்ரீமான் தேவரீருடைய பாதங்களுக்கு அங்கேயும் வார்த்தைமாத்திரத்தினால் அதிகாரம் அடைதல் உண்டாயின்; எங்கள் பிரபுவாகிய இரணியகர்ப்பருக்கும் அப்படி அதிகாரம் அடைதல் உண்டுதானே. என்றேன்.

கிளி, இதற்கு நிர்ணயம் யாது? என்றது.

நான், யுத்தந்தான் என்றேன். இராசாச் சிரித்து நீ போய் உன்னுடைய சுவாமியைப் போருக்கு ஆயத்தஞ்செய் என்றது. அப்போது நான் உம்முடைய தூதனையும் என்னுடன் அனுப்பும் என்றேன். இராசாத் தூத உத்தியோகத்துக்கு அனுப்பத் தக்கவன் யாவன்?

௧0. தூதனானவன், பற்றுள்ளவனும், நற்குணமுடையவனுஞ், சுத்தமுடையவனுஞ், சாமர்த்தியவானும், நம்பிக்கையுடையவனுஞ், சிற்றின்பத்திற் பிரியமில்லாதவனும், பொறுதியுடையவனும், பிறனுடைய மார்க்க தர்ம பழக்க வழக்கங்களை நன்றாய் அறிந்தவனும், தைரியமுடையவனும் பிராமணனுமாக இருத்தல்வேண்டும். இப்படிப்பட்டவனே தூதகாரியத்தில் நியமிக்கப்படத்தக்கவன் என்றது.

கிருத்திரம்; இத்தன்மையுடையவராக அநேகரிருந்தாலும் பிராமணனே தூதனாக நியமிக்கப்படத் தக்கவன்.

௧௧. அவன் தன் சுவாமியுடைய காரியத்தையேயன்றித் தனது மேற்குலத்தை விருத்தியாக்க முயற்சிசெய்

யமாட்டான். ஆயினுந் தனது மேற்குலத்தையே விருத்தியாக்குகின்றான். காளகூடத்தின் கருமையானது ஈசுவரனோடு சேர்ந்திருந்தாலும் நீங்கமாட்டாது என்றது.

இராசா, ஆதலாற் கிளிதானே போகக்கடவது என்று கிளியை நோக்கிக் கிளியே! நீதானே இதனோடு அங்கே போய் எங்கள் விருப்பத்தைச் சொல்லு என்றது.

கிளி, தேவரீர்! ஆஞ்ஞாபிக்கிறபடி செய்கிறேன். ஆயினும், இந்தக் கொக்கோ துர்ச்சனன். துர்ச்சனனோடு போகமாட்டேன்.

௧௨. துர்ச்சனனே கெட்ட செய்கையைச் செய்கிறான். மெய்ம்மையாக அவன் நல்லவர்களிடத்திலே தான் பலனைப் பெறுகின்றான்; இராவணன் சீதையைக்கவர்ந்தான்; சமுத்திரத்திற்கும் பந்தனம் உண்டாயிற்று.

௧௩. துர்ச்சனனோடு கூடிக்கொண்டு நிற்றலாவது போதலாவது செய்யத்தக்கதன்று; காகத்தோடு கூடிநின்றஅன்னமும், அதனோடு கூடிப்போன வருத்தகன் என்னுங் காடைப்பட்சியுங் கொல்லப்பட்டன என்று சொல்லிற்று.

இராசா இஃது எப்படி என்று கேட்கக் கிளி சொல்லுகின்றது.

காகஅன்னங்கள் கதை.

உச்சயினிபுரத்திற்குப் போகின்ற நிழலில்லாத நெடுடுந்தெருவிலே பெரிய அரசமரம் ஒன்று இருக்கின்றது. அதிலே ஓர் அன்னமுங் காகமும் வாசஞ்செய்து வந்தன. கோடைகாலத்திலே, ஒருநாள் இளைப்படைந்த வழிப்போக்கன் ஒருவன் அந்த மரத்தினடியிலே தன் வில்லையும் அம்பையும் வைத்துவிட்டு நித்திரை செய்தான். பின் ஒரு கணப்பொழுதினுள்ளே அவன் முகத்

தினின்றும் அந்த மரத்தின் நிழல் பிரிந்தது. அவனுடைய முகஞ் சூரிய கிரண ஒளியினாலே மூடப்பட்டிருந்த லைக் கிருபையையுடையதும், புண்ணியாத்துமாவும், பாவமில்லாததுமாகிய அந்த அரசமரத்தி லிருந்த அன்னராசன்கண்டு தன் சிறகுகள் இரண்டையும் விரித்துப் பின்னும் அவனுடைய முகத்துக்கு நிழலைக்கொடுத்தது. வழியிலே நடந்து திரிந்து இளைப்படைந்திருந்து பின்னர் அதிக நித்திரைச் சுகமடைந்த பயணக்காரன்வாயைத்திறந்தபோது இயல்பிலே கெட்ட பிறப்பை யுடையதும், பிறனுடைய சுகத்தைச் சகிக்கமாட்டாததுமாகிய காகம் இவன் முகத்திலே புரீடத்தைப் போட்டுவிட்டு ஓடிப்போயிற்று. அவன் எழுந்து மேலே பார்த்தபோது அன்னத்தைக் கண்டு அதனை அம்பினால் எய்து கொன்றான்.

ஆதலாற்றான் துர்ச்சனனோடு கூடிவசித்தலாவது போதலாவது செய்யத்தக்கனவல்ல. என்பது சொல்லலுற்றேன்.

க. துர்ச்சனருடைய கூட்டத்தை விட்டுவிடு; சற்சனருடைய கூட்டத்தை அநுசரி; இரவிலும் பகலிலும் புண்ணியத்தைச் செய்; நித்தியமுஞ் சீவன் அநித்தியம் என்பதனை நினைத்துக்கொள்.

'தேவரீர்! வர்த்தகன் என்னுங்காடைப்பக்ஷியின்கதையையுஞ் சொல்லுகிறேன். இப்பொழுது சொல்லிய கதை துர்ச்சனனோடு கூட வசித்தலைப் பற்றியது. இனி வருங் கதை துர்ச்சனனோடு கூடப்போதலைப் பற்றியது.

காகவர்த்தகக்குருவிகள்கதை.

ஒரு காகம் எப்போதும் ஒரு மரத்தின் கொம்பிலே நித்திரை செய்துவந்தது. ஒரு காடையும் அக்கொம்பின் கீழ்நிலத்திலே வாசஞ்செய்து வந்தது. ஒரு முறை பறவைகளெல்லாம் பகவானாகிய கருடனிடம் போதல்வே

ண்டும் என்ற பிரியத்தினுற் சமுத்திரக் கரைக்குப் போயின. அப்போது காகத்தோடு காடையும் போயிற்று. போகும்போது அந்தக் காகம் ஓர் இடையனுடைய தலையிலிருந்த பாத்திரத்திலிருந்து தயிரை இடையிடையே கவர்ந்துண்டது. இடையன் தயிர்ப்பாண்டத்தைப்பூமியில் வைத்துவிட்டு மேலே பார்க்கையில் காகத்தையுங் காடையையுங் கண்டான். அவனைக்கண்டவுடன் காகம் ஓடிப்போயிற்று. காடை மந்தகதியுடையதாதலால் அவனுற் பிடித்துக்கொல்லப்பட்டது.

ஆதலாற்றுன் போதலாவது என்பது சொல்லலுற்றேன். என்றது.

அப்போது நான் சகோதரா! கிளியே! என்இப்படிப் பேசுகிருய்? என்மேலேஸ்ரீமத் தேவரீருடைய பாதங்கள் எப்படி இருக்கின்றனவோ அப்படியே நீயும் இருக்கின்ருய் என்றேன்.

கிளி, அப்படியே யிருக்கக்கடவது.

க. துர்ச்சனர் சொல்லும் வார்த்தைகள் புன்னகைகொள்ளத்தக்கவைகளும், பிரியமுள்ளவைகளுமாகவிருந்தாலும் பருவகாலத்திலே மலராத பூக்களைப் போல எனக்குப் பயத்தை உண்டாக்குகின்றன.

நீ, துர்ச்சனன் என்பது உன்னுடையவார்த்தையினுல் அறிந்தேன். இந்த இராசாக்கள் இருவருடைய யுத்தத்திற்கும் உன் வார்த்தையே காரணமாயிருக்கும்.

உ. பார்; கண்ணுக்கெதிரே செய்யப்பட்ட குற்றத்திலேயும் மூர்க்கன் கோபமின்றிச் சந்தோஷங்கொள்ளுகிருன். ஒரு தபதி தன் மனைவியைச் சோரநாயகனேடுகூடத் தலையில்வைத்துச்சுமந்தான் என்றுசொல்லிற்று.

இராசா இஃது எப்படியென்று கேட்கக் கிளி சொல்லுகின்றது.

இரதகாரன்கதை.

சிறீ நகரத்திலே மந்தமதி என்னும்பெயருடைய் தபதி ஒருவன்இருந்தான். அவன்தன்மனைவி வியபிசாரிணிஎன்பதை அறிந்திருந்தும்அவளைச்சோரநாயகனோடு ஓரிடத்திலே தன் கண்களாற் கண்டானல்லன், பின்னொருநாள் அந்தத் தபதி நான் வேறுகிராமத்துக்குப் போகின்றேன். என்று சொல்லிவிட்டுச் சிறிது தூரம்போய்த் திரும்பிவந்து தன் வீட்டுக்கட்டிலின் கீழே மறைந்து படுத்திருந்தான். அந்த வியபிசாரிணி தன் நாயகன் வேறு கிராமத்துக்குப் போய்விட்டான் என்று நம்பி மாலைக்காலத்திலே சோரநாயகனை அழைத்துஅவனுடனே அந்தக் கட்டிலிற்பேசிக்கொண்டிருந்தாள். அப்படி இருக்கும்போது அந்தத் தபதி கட்டிலின் கீழிருக்குங் குறிப்பறிந்து பின்னர்த் தன் பரிசஞானத்தாற் கட்டிலின்கீழிருப்பவன்தன்னுடையநாயகன்தான்என்று நிச்சயித்துணர்ந்து துக்கமடைந்தாள்.

அப்பொழுது சோரநாயகன் நீ ஏன் இன்றைக்கு என்னுடன் அதிகம் இரம்மியமாயிருக்கவில்லை? துக்கங் கொண்டவளைப்போலத்தோற்றுகின்றாய் என்றுசொன்னான். அவள் என்னுடையபிராணநாயகர் இன்றைக்குவேறு கிராமத்துக்குப் போயிருக்கிறார்; இந்தக் கிராமஞ் சகல சனங்களினாலே நிறைந்திருந்தாலும் அவரில்லாமையினால் எனக்குக் காடுபோலத் தோற்றுகின்றது! பிற இடமாகிய அங்கே யாது நடக்குமோ? எதனை உண்பாரோ? எப்படிநித்திரை செய்வாரோ! என்று என்னுடைய இருதயந் துடிக்கின்றது. என்றாள். இதனைக் கேட்ட சோரநாயகன், இவ்வளவு நேசத்துக்கிடனான உன்னுடைய் நாயகன் கலககாரனோ? என்று கேட்டான். அதற்குஅந்த வேசை அடா! நீசா! என்ன சொல்லுகிறாய். கேள்.

ரு. கடூரமாய்ப்பேசினகாலத்துங் கோபக்கண்ணோடு பார்த்தகாலத்துந் தன்னுடைய நாயகனுக்கு முன்னே

எந்தப்பெண் சந்தோஷமுடையவளாய்க் காணப்படுகின்ருளோ. அந்தப் பெண்ணே தருமபாத்திரமாம்.

ச. நகரத்திலிருந்தாலென்ன! காட்டிலிருந்தாலென்ன! பாவியாயிருந்தாலென்ன! சுத்தனுயிருந்தாலென்ன! எந்த ஸ்திரிக்குப் பிரியமுள்ள நாயகன் இருக்கின்ருனே அந்தஸ்திரிக்கு மகாவிருத்தியுள்ள உலகங்கள் உண்டு.

ரு. ஆபரண மில்லாமலிருந்தாலும், ஒரு பெண்ணுக்கு நாயகனே உத்தமமானஆபரணமாம். சொலிக்கின்ற ஆபரணங்களுடையளாயினும் நாயகனில்லாதவள் பிரகாசிக்கமாட்டாள்.

சோரனுகிய நீயோ மனவிச்சையினுற் புட்பதாம்பூலம் போலச் சிலபோது மாத்திரஞ் சேவிக்கப் படுகின்ருய். என்னுடைய சுவாமியாகிய அவரோ என்னை விற்கிறதற்குந் தேவர்களுக்காவது பிராமணர்களுக்காவது கொடுத்தற்குஞ் சாமர்த்தியமுடையவர். அதிகம் பேசுதலினுற் பிரயோசனம் யாது? அவர் சீவித்திருக்கும்போதே நானுஞ் சீவித்திருபபேன். அவர் மரணிக்கும்போது நானும் அநுமரணஞ் செய்வேன். இதுவே என்னுடைய துணிபு.

சா. எவ்ள் தன்னுடைய நாயகனேடு கூட மரிக்கின்ருளோ அவள் மனித சரீரத்திலே எவ்வளவு கோடி உரோமங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு கோடிகாலஞ் சுவர்க்கத்திலே வசிபபாள்.

எ. பாம்பாட்டியானவன் புற்றினின்றும் பெலத்தினுற் பாம்பினை எப்படி மேலே இழுக்கின்ருனே அபபடி மனைவியும் நாயகனைப் பற்றிக்கொண்டு அவனேடு சந்தோஷப்படுகிருள்.

அ. எந்த நாயகி பிராணனின்றிக் கிடக்கின்ற தனது நாயகனை ஈமவிறகின்மேலே தழுவிக்கொண்டு தன் தேகத்தை விடுகின்ருளோ அந்த நாயகி நூறிலக்கம் பாவஞ் செய்தவளாயிருந்தாலும், தன் நாயகனைப் பற்றிக்கொண்டு சுவர்க்கலோகத்தை அடைகின்ருள்.

கூ. இவள் பிதாவினால் அல்லது அவன் அநுமதிப் படி புத்திரனால் எவனுக்குக் கொடுக்கப்படுகின்றாளோ அவனைச் சேவிக்குங் காலத்திலே பிரியாதிருந்து அவனுக்கு ஏவல் செய்யவேண்டும். இறந்தகாலத்திலும் அவனுக்கு மேற்படச் சேவிக்கலாகாது என்றாள்.

அந்தத் தபதி இவைகள் எல்லாவற்றையுங் கேட்டுச் சிநேகவதியும், பிரிய வார்த்தையை யுடையவளுமாகிய இவ்விதமான மனைவியையுடைய நான் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று மனத்தினினைத்துக்கொண்டு ஸ்திரிபுருஷர்களைத் தாங்கிய அந்தக் கட்டிலைத் தலையில் வைத்துக் கூத்தாடினான்.

ஆதலாற்றான், கண்ணுக்கெதிரே செய்யப்பட்ட குற்றத்திலேயும் மூர்க்கன் கோபமின்றிச் சந்தோஷங் கொள்ளுகிறான். என்பது சொல்லலுற்றேன் என்றது.

பின்னர் நான் அந்த இராசாவினாலே வியவகாரப்பிரகாரம் பூசித்து அனுப்பப்பட்டேன். அந்தக் கிளியும் எனக்குப்பின்னேவந்திருக்கின்றது, இவைகள் எல்லாவற்றையும் அறிந்து எப்படிச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்க என்றது.

அப்போது சக்கரவாகஞ் சிரித்துத் தேவரீர்! கொக்கு இவ்வளவு பிறதேசம்போய்த் தன் வலிமைப்படி இராசகாரியத்தைச் செய்தது. மேலும் இது மூர்க்கர்களுடைய இயல்பேயாம்.

க0. வாக்குவாதஞ் செய்யலாகாது என்பதற்கு அளவற்ற பிரமாணம் உண்டு. காரணமின்றி ஒருவனை ஒருவர் விரோதிக்கச் செய்தலே மூர்க்கனுடைய இலக்கணம் என்றது.

இராசா பேசின நிந்தைகளெல்லாம் போதும். இப்பொழுது செய்யவேண்டியதைச் செய்க. என்றது.

சக்கரவாகந் தேவரீர்! நான் சனங்களில்லாத இடத்திலே சொல்லுகிறேன்.

கஉ. புத்திமான்கள், வருணம், ஆகாரம், எதிரொலி என்பவைகளாலுங், கண், முகம், என்பவைகளின் விகாரங்களினாலும் மனக்கிடக்கையை யூகித்தறிந்து கொள்ளுகிறார்கள். ஆதலால் மந்திராலோசனை இரகசியத்திலே செய்யவேண்டும் என்றது.

அதன்பின் இராசாவும், மந்திரியுமாத்திரம் அவ்விடத்திலே நிற்க மற்றையவைகளெல்லாம் வேறிடத்துக்குப போயின. அப்போது சக்கரவாகந் தேவரீர் யாரோ எங்கள் உத்தியோகஸ்தரால் அனுப்பப்பட்ட ஒற்றுகிய கொக்கினாலேதான் இது செய்யப்பட்டது என்று நான் அறிகிறேன்.

கரு. வைத்தியர்களுக்கு வியாதியாளனே உத்தமன்; இராச்சிய உத்தியோகஸ்தர்களுக்கு முயற்சியுள்ள ஒற்றனே உத்தமன்; வித்துவான்களுக்கு மூர்க்கனே ஆதாரம், இராசவுக்கு இரகசியமுள்ளவனே தக்கவன். என்றது.

இராசா பின்னர் ஆராயவேண்டிய காரணமிருக்க இப்போது இங்கே செய்யத்தக்கதைச் சொல்லுக என்றது.

சக்கரவாகம், தேவரீர்! வேவுகாரன் அங்கே போகவேண்டும். அப்போது அந்த இராச்சியத்தின் வலிமையையும் வலிமையின்மையையும் அறிவோம்.

கச. தன்னிராச்சியம் பிறவிராச்சியம் என்னும் இரண்டின் காரியாகாரியங்களைக் கண்டறிகின்ற கண்ணுகிய சாரபுருஷன் எந்த இராசாவுக்கு இல்லையோ அந்த இராசாக் குருடனேயாம்.

அந்த வேவுகாரனுந் தனக்கு இரண்டாவதாய் நம்பிக்கைக்கிடமான ஒருவனைக் கூட்டிக்கொண்டு போதல்வேண்டும். அவனேடு போய் அவ்விடத்திலே நின்று அவ்விடத்து மந்திரகாரியங்களை அதிகம் இரகசியமாய் நிச்சயித்துணர்ந்து அவைகளை அந்த இரண்டாமாளிடத்தே சொல்லிவைத்து அவனை அனுப்பிவைக்கக்கடவன்.

கரு. தீர்த்தம், ஆச்சிரமம், தேவாலயம் என்னும் இவ்விடங்களிலே சாஸ்திரங்களை அறிதல் காரணமாகச் செ

ல்லுகின்ற தபஸிக்குரிய வேடத்தைத் தரித்துக்கொண்டு போகும்படி இராசாவானவன் தன் வேவுகாரருக்குக் கற்பிக்கவேண்டும்.

மறைவான ஒற்றாய் எது சலத்திலுந் தலத்திலுஞ் செல்லத்தக்கதோ அதுவும் இந்தக்கொக்கேயாம். ஆதலால் இதனையே நியமிக்கவேண்டும். இத்தன்மையையுடைய வேறொரு கொக்கு இதனோடு இரண்டாவதாய்ப் போகவேண்டும். இப்படியே நியமித்தபின் சனங்களெல்லாங் கோட்டைக்குள்ளே நிற்றல்வேண்டும். தேவரீர்! தூதன் திரும்பிவரும் வரைக்கும் இந்த ஆலோசனையை நன்றாய் மறைத்துக்கொள்ளவேண்டும்.

கசு. இராசாவானவன் ஆறு காதுகளினாற் கேட்கப்பட்டால் மந்திராலோசனையும் இரகசிய சமாசாரங்களும் வெளியாய்விடும் என்றுணர்ந்து இரண்டாவதாகிய ஒருவனுந் தானுமே மந்திராலோசனையைச் செய்தல் வேண்டும்.

கஎ. இராசாக்களுடைய மந்திராலோசனை வெளிப்படுதலினால் எந்தக்குற்றங்கள் உண்டாகின்றனவோ அந்தக் குற்றங்களைச் சமாதானஞ் செய்ய முடியாது என்பதே நிதிசாத்திரவித்துவான்களுடைய கொள்கையாம் என்று சொல்லிற்று.

இராசா ஆலோசித்து இப்போது எனக்கு அவ்வளவு மேன்மையான ஒற்றன் கிடைத்தது என்றது. மந்திரி, தேவரீர்! எங்களுக்குப்போரிலே வெற்றியுங்கிடைத்தது என்றது. இப்படி இருக்கையிற் பிரதிகாரன் உள்ளேபோய் நமஸ்கரித்துத் தேவரீர்! சம்புத் தீவினின்று வந்த கிளி ஒன்று வாயிலிலே வந்து நிற்கின்றது என்று சொன்னான். அப்போது இராசா மந்திரியாகிய சக்கரவாகத்தைப் பார்க்கச் சக்கரவாகம், இப்போது அதனை ஒருவீட்டிலே போயிருக்கச் செய்; பின்னர்க் கொண்டுவந்து காட்டு என்றது. வாயில்காப்போன், தேவரீர்! கட்டளையிடுகிறபடி செய்கிறேன். என்று சொல்லிக் கிளியைக் கூட்டிக்கொ

ண்டு சென்றான். இராசா, "யுத்தம் நேரிட்டது." என்றது. மந்திரி, தேவரீர்! அப்படியாயினுஞ் சீக்கிரமாக யுத்தஞ் செய்தற்கு விதியில்லை.

கஅ. எவன் விசாரணை செய்யுமுன்னே இராசாவை யுத்தத்துக்குப்பிரயத்தனஞ்செய்யும்படியாவது, தன்பூமியை விட்டுவிடும்படியாவது புத்தி சொல்லுகின்றானோ அவன் மந்திரியா? சசிவனா?

கசு. ஒருவன் சத்துருக்களைச் செயித்தற்குப் பிரயாசப்படவேண்டும். அதுவும் போரினால் எபபோதும் முடியாது. வெற்றியானது போர் செய்வோர் இருதிறத்தவர்க்கு மிடையேநிச்சயமில்லாததாகக்காணப்படுகின்றது.

உ0. சாமதான பேதங்களாகிய எல்லாவற்றினாலுமாவது தனித்தனி ஒவ்வொன்றாலாவது சத்துருக்களைக் கெடுத்தற்குப பிரயாசப்படவேண்டும். போரினாற் கெடுத்தல் எப்போதுங் கூடாது.

உக. போரிற் பங்கப்படாத சனங்களெல்லாம் வீரர் தான். சத்துருவின் சாமர்த்தியத்தைக்காணாதவன் எவனும் கர்வமுள்ளவனா யிருப்பான்.

உஉ. மரத்தினாற் செய்யப்பட்ட சூத்திரத்தைக்கொண்டு மனிதரால் ஒருகல்லானது இலகுவாய் உயர்த்தப்படுகின்றது. சூட்சும உபாயத்தினாற் பெரிய அநுகூலம் உண்டாகின்றது. அப்படியே மந்திராலோசனையின் பலனும் பெரிதாயிருக்கும்.

அப்படியானாலும் இப்போது நேரிட்டிருக்கும்போரைப் பார்த்துச் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்யக்கடவோம்.

உந. வீரத்தன்மையான் குணஞ் சமீபத்திலிருக்கும்போது பயங்கரத்தன்மையான குணந் தூரத்திலிருக்கும். ஆபத்துக் காலத்திலே உலகத்தில் மகத்தாயிருக்கிற மனுஷன் தைரியத்தை அடைகின்றான்.

௨௪. ஏற்றகாலத்திலே செய்யப்பட்ட முயற்சியினாலே வேளாண்மை பிரயோசனமாகின்றது. அதுபோலத் தேவரீர்! இந்த நீதியுங் கணப்பொழுதிலே பிரயோசனத்தைக் கொடுக்கமாட்டாது. நெடுங்காலத்தின் பின்னரோ கொடுக்கும்.

௨௫. அதிவேகம், அநுகூலங்களெல்லாவற்றுக்கும், முக்கியமான விக்கினமன்றோ! நீரானது அதிசீதளமாயிருந்தாலும் பூமியைப் பிளக்கின்றதன்றோ!

தேவரீர்! விசேஷமாக அந்தச் சித்திரவர்ண ராசன் மகாபெலவான்.

௨௬. பெலவானோடு போர்செய்ய வேண்டும் என்று ஒரு பிரமாணமில்லை; மனிதர் மல்லயுத்தஞ் செய்வது போல யானையோடு போர் செய்வதில்லை.

௨௭. ஏற்றகாலமின்றி எவன் தன் சத்துருவுக்கு அபகாரஞ் செய்ய முயல்கின்றானோ அவன் மூர்க்கனேயாம். பெலவானோடு சண்டைசெய்தல் கீடமானது தன் சிறகுகளை உயர்த்துதற்குச் சமமாகும்.

௨௮. நீதியை அறிந்தவன் காலம்வாயாதபோது ஆமையைப்போல ஒடுங்கி அடியையுஞ் சகித்துக்கொள்ளக்கடவன். காலம் வாய்த்தபோது குரூரமான பாம்பைப்போல எழும்பக்கடவன்.

௨௯. தேவரீர்! கேளும்; நதியின் வேகமானது புற்களைப்போல மரங்களையும் வேரோடு பிடுங்குதற்கு வல்லமையுடையது. அதுபோல உபாயத்தை அறிந்தவன் சிறியவனாயிருந்தாலும், பெரியசமயத்திலே சத்துருவுக்குச் சமமான வலிமையையுடையவனாவன்.

ஆதலாலே தூதனாய் வந்த கிளியானது துருக்கங்களை ஆயத்தப்படுத்தும்வரையும் இங்கே மறிக்கப்பட்டுப்பொழுதுபோக்கக் கடவது.

௩0. வில்லைத் தரித்துக்கொண்டு கோட்டையிலேநிற்கின்ற ஒருவன் நூறுபேரோடு போர்செய்வான். நூறு

பேர் பதினாயிரம் பேரோடு போர் செய்வார்கள். இக்காரணத்தினாலே கோட்டை விதிக்கப்படுகின்றது.

௩க. துர்க்கமில்லாத தேசத்தையுடைய இராசாச் சத்துருக்களுக்குத் தோல்வியடைதல் நிச்சயம். துர்க்கமாகிய புகலிடமில்லாத இராசாத் தோணியினின்று விழுந்த மனுஷனைப் போலிருக்கிறான்.

௩உ. துர்க்கமானது பெரிய அகழியோடும் உயர்ந்த மதிலோடுங் கூடியதாகச் செய்யப்பட வேண்டும். அதுவும் யந்திரசலசைலத்தையுடையதாகி மலையையாவது நதியையாவது, மைதானத்தையாவது வனத்தையாவது எது யோக்கியமோ அதனை அடைந்திருக்கவேண்டும்.

௩௩. விசாலமும், அதிகஞ்சமமின்மையும், இரசமுந் தானியமும், விறகுக்குவியலும், பிரவேசிக்குங்கற்படையும், வெளியே போகுங் கற்படையுமாகிய இந்த ஏழுமே கோட்டையின் சம்பத்துகளாம். என்றது.

இராசாச், சக்கரவாகத்தை நோக்கிக் கோட்டையைக் கட்டி நிறைவேற்றற்கு யாரை நியமிக்கவேண்டும் என்று கேட்டது. அப்போது சக்கரவாகஞ் சொல்லுகின்றது.

௩ச. எவனெந்தக்காரியத்தில்வல்லவனோ அவனை அந்தக்காரியத்திலே நியமித்தல்வேண்டும். சாத்திரங்களை அறிந்தவனாக இருந்தாலுங் காரியங்களைப் பரீட்சித்தறியாது தொழில் செய்தவன் மயக்கமடைகின்றான். நாரையே இத்தொழிலில் நியமிக்கத் தக்கது. ஆதலின்; நாரையைக் கூப்பிடவேண்டும். என்றது. அப்படியே செய்த போது நாரையும் வந்தது. இராசா நாரையை நோக்கி நாரையே! நீ சீக்கிரங் கோட்டையைக் கட்டி ஒழுங்கு செய் என்றது.

நாரை, இராசாவை வணங்கித் தேவரீர்! கோட்டை இதற்குமுன்னே நெடுங்காலமாகப் பரீட்சித்து நன்றாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. அதில் ஒரு பெரிய வாவியும் இருக்கின்றது. அதன் நடுவிலிருக்குந்தீவிலே

போசனத்துக்குரிய வஸ்துக்களைச் சேர்த்து வைத்தல் வேண்டும்.

இராசாவே! எல்லாவற்றையுங் கூட்டி வைத்தலினுந் தானியங்களைக் கூட்டிவைத்தலே உத்தமம். ஓர் இரத்தினத்தை வாய்க்குள்ளே போட்டால் அது உயிரைத் தாங்கமாட்டாது.

௯௬. சொல்லப்பட்டஇரசங்கள்எல்லாவற்றுள்ளும் இலவண இரசமே உத்தமம். ஆதலின் அதனை எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். அஃதில்லையாயின்; வியஞ்சனங்களெல்லாஞ் சாணிமயமாய்ப்போய்விடும்என்றது.

இராசா, அதனைநோக்கிச் சீக்கிரம்போய் எல்லாவற்றையும் முடிப்பாயாக. என்றது. வாயிற் காவற்காரன் பின்னரும் உள்ளேபோய்த் தேவரீர் சிங்களத் தீவினின்று வந்த மேகவர்ணன் என்னும்பெயருடைய காகராசாத் தன் பரிவாரங்களோடு வாயிலிலே வந்து நிற்கின்றது, தேவரீருடைய பாதங்களைக் கண்டு நமஸ்கரித்தற்கு விரும்புகின்றது என்றான்.

இராசா "காகம் அறிவுடையதும், அனேக காரியங்களைக் கண்டுணர்ந்ததுமாதலின்; அது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது. என்று சொல்லிற்று.

சக்கரவாகம், தேவரீர்! அப்படித்தானெனினுங், காகம், எங்கள் சத்துருபக்ஷத்திலுள்ளது; நிலத்திலே சஞ்சரித்தலையுடையது; எங்கள்சத்துருபக்கத்தினலேநியோகிக்கப் பட்டுள்ளது. ஆதலின்; அஃதெப்படி ஏற்றுக்கொள்ளப்படும்?

௯௭. எவன் தன்பக்கத்தவரை முற்றும் விட்டொழித்துச் சத்துருபக்கத்தவரோடுவசிக்க விரும்புகின்றானோ அவன் மூட நீலவர்ணசிருகாலனைப் போலப் பிறராற் கொல்லப்படுவான். என்றது.

இராசா இஃது எப்படி என்று கேட்க மந்திரி சொல்லுகின்றது.

நீலிசிருகாலர்கள்கதை.

ஒரு நரி தன்னிச்சைப்படியே நகரத்தின் சமீபத்திலே திரிந்து நீலமிடப்பட்ட ஒரு பாத்திரத்திலே விழுந்து மேலே எழும்புதற்கு வலிமையில்லாததாகி விடியற்காலத்திலே இறந்தவனைப்போலத் தன்னைக்காட்டிக்கொண்டு கிடந்தது. அப்போதுநீலபாண்டத்தலைவன்வந்து கண்டு அதனைமேலே தூக்கியெடுத்துத் தூரத்திலே கொண்டு போய் எறிந்துவிட்டான்.

பின்னர், அது காட்டிற்போய்த் தான், நீலவர்ணமுடையதாய் இருத்தலைக்கண்டு, நான் இப்போது உத்தம வர்ணமுடையனாகியிருக்கிறேன், ஆதலினால் யான்தானே என்னை மேன்மையான நிலைக்குக் கொண்டுவரமாட்டேனா? என்று நினைத்து நரிகளைவருவித்து நான்பகவதியாகிய வனதேவதையினுடைய கையினாலே சகலஔடதிகளினின்றும் எடுக்கப்பட்ட இரசத்தைக்கொண்டாரணியரார்ச்சியத்திற்கு அபிஷேகஞ் செய்யப்பட்டிருக்கின்றேன். என்னுடைய நிறத்தைப் பாருங்கள் ஆதலால் இன்று தொடங்கி இந்தக் காட்டிராச்சியத்திலே வியவகாரங்களெல்லாம் என்னுடைய ஆஞ்ஞைப்படி செய்யப்படவேண்டும், என்றுசொல்லிற்று.

நரிகள் அதனுடைய விசிட்ட வர்னத்தைக் கண்டு சாட்டாங்கமாக விழுந்து நமஸ்காரஞ்செய்து தேவரீர்! கட்டளை யிடுகிறபடி, ஆகக்கடவது, என்று சொல்லின. இப்படியே கிரமங் கிரமமாய்ச் சகல வனவாசிகளிடத்திலேயும் மேலான அதிகாரம் அதற்குண்டாயிற்று. பின்னர்ச் சுற்றத்தவர்களாற் சூழப்பட்டு அதிபத்தியத்தை நடத்திவருங் காலத்திலே சிங்கம் புலி முதலிய உத்தம பரிசனங்கள் தன்னை வந்து சேர்தலைக் கண்டு நரிகளைநோக்கி இலச்சையுடையதாகி ஞாதிகளாகிய அவைகளை அவமானஞ்செய்து தூரத்தே நீக்கிற்று.

அப்போது ஒரு விருத்தநரி துக்கங்கொண்டிருக்கின்ற நரிகளை நோக்கிப் பயப்படாதேயுங்கள்; ஞாதிகளாகிய நாங்கள் அந்த நீதியற்றவனாலே அவமானமாக நடத்தப்பட்டிருக்கின்றோம். அது எந்தஉபாயத்தினாலே அழியுமோ அந்த உபாயம் என்னாலே செய்யத்தக்கது. இதனை நரி என்றுணராமல்இராசாஎன்று மதித்திருக்கின்ற புலி முதலியவைகள் இதன் வருணத்தினால் மாத்திரம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆதலால் அதனை அறிந்துகொள்ளத்தக்க உபாயம் எதுவோ அதனைச் செய்யுங்கள். அதையுஞ் சொல்லித் தருகிறேன். நீங்கள் எல்லீரும் மாலைக்காலத்திலே அதன் சமீபத்திற் போய்நின்று பெருஞ்சத்தமாக ஊளையிடுங்கள். அந்தச் சத்தத்தைக் கேட்டுத் தன் வர்னசுவாபத்தின்படி சத்தமிடும்.

க. எதற்கு எது சுவாபமோ அதற்கு அதனைக் கடத்தல் அரிதாயிருக்கின்றது. நாயானது இராசாவாக்கப்பட்டாலும் உபானகத்தை உண்ணாமல் விடுமா? என்றது.

அப்படியே செய்யப்பட்டபின் அதன் சத்தத்தினாலே நரி என்று அறியப்பட்டுப் புலியினாற்கொல்லப்பட்டது.

உ. சத்துருவானவன் தன் குற்றத்தையும், உயிர்நிலையையும், வீரியத்தையும் மற்றைய எல்லாவற்றையும் அறிகிறான் பட்டமரத்தை "அக்கினி சுடுதல்போல உள்ளேயிருப்பதைத் தானுஞ் சுடுகிறான்.

ஆதலாற்றான் எவன் தன் பக்கத்தாரை முற்றும்விட்டு என்பது சொல்லலுற்றேன் என்றது.

இராசா, அப்படியாயினும், அது தூரத்திலே நின்று வந்தபடியால் என்னைக் காணத்தக்கது. அதனிடத்தே சுருக்கமாய்ச் சிலகாரியம் நாம் விசாரித்தறிய வேண்டும்.

சக்கரவாகம், தேவரீர்! ஒற்றும் அனுப்பப்பட்டது. கோட்டையும் ஆயத்தஞ் செய்யப்பட்டது. ஆதலாற் கிளியையுங் கண்டு எங்கள் கருத்தைச் சொல்லி அனுப்பவேண்டும்.

ா. சுடுசொற்கொண்டு தூதுகூறியதன்மையினுல்சாணக்கியனை நந்தன் கொன்றான். ஆதலினால்இராசாவானவன்வீரர்களோடு சேர்ந்தவனாகி இடைவெளியிருக்கவிட்டுத் தூரத்தே நின்று தூதனைக்காணவேண்டும் என்றது.

பின்னர் ஒரு சபையைக் கூட்டி கிளியையுங் காகத்தையும அழைத்தபோது கிளியானது கொடுக்கப்பட்ட ஆசனத்திலே சற்றே தலைநிமிர்ந்து இருந்துகொண்டு, ஓய்!இரணியகருப்பரோ! ஸ்ரீமத். சித்திரவர்ணராசா "உனதுசீவியத்தினாலாவது, செல்வத்தினாலாவது, உனக்கு யாதாயினும் பிரயோசனமிருந்தால் சீக்கிரம் வந்து என்னுடைய பாதங்களை வணங்கு; அல்லது நிலையாயிருத்தற்கு வேறிடம் போகவேண்டும்." என்று நினைத்துக்கொள்; என்று உமக்குக் கட்டளையிடுகின்றது. என்று சொல்லிற்று.

இராசாக், கோபங்கொண்டு,அடடா!இந்தச் சபையில் இருக்கிறவர்களுள்ளே இதனைக் கழுத்திலே பிடித்துத் தள்ளிவிடத்தக்கவன் யாராவது இல்லையா? என்றது.

அப்பொழுது, மேகவர்ணன் எழுந்து தேவரீர்! எனக்குக் கட்டளையிடும்; நான் இந்தத்துட்டக்கிளியைக் கொல்லுகிறேன் என்றது.

மந்திரி பத்திமானே! அப்படியன்று கேள்;

ச. எந்தச் சபையிலே விருத்தரில்லையோ அந்தச்சபை சபையன்று; சபையிலே நீதியைச் சொல்லாமலிருக்கிறவர்கள் விருத்தரல்லர். சத்தியமில்லாதது எதுவோ அது நீதியன்று; எதுபயங்கரத்தை அடைவிக்கின்றதோ அது சத்தியமன்று.

ரு. இதுவே தருமமாம்.இராசாவுக்குத் தூதனேமுகமாயிருத்தலினால் மிலேச்சனாயிருந்தாலும் அவன் கொல்லப்படத்தக்கவனல்லன்.கொல்லும்படி ஆயுதங்களை உயர்த்தின காலத்தினுஞ் சொல்லியபடியன்றித் தூதன் வேறுவிதமாகச் சொல்லமாட்டான்.

கூ. தன்னுடைய கீழ்மையையும்,பகைவனுடையமேன்மையையும் தூதனுடையவார்த்தையைக்கொண்டு எவ்

ன் எண்ணுவான்? தூதன் எப்போதுங் கொல்லப்படாத் தன்மையனாதலின்எல்லாவற்றையும்பேசுகிறான்என்றது.

இந்த உபதேசங்களைக் கேட்டபோது. இராசாவுங் காகமுஞ் சாந்தமடைந்தன. கிளியும் எழுந்து போயிற்று. பின்னர்ச் சக்கரவாகங் கிளியைக் கூட்டிக்கொண்டுபோய்க் காரியங்களை அறிவித்துப்பொன்னாபரணம் வஸ்திரம் முதலியவைகளைக் கொடுத்து நன்மையாக அனுப்பிவிட, அதுவுந் தன்னுடைய தேசத்திற்குப் போயிற்று. கிளி விந்தியமலையை அடைந்து தன்னுடைய இராசாவாகிய சித்திரவர்ணனை நமஸ்காரஞ் செய்தது. இராசா அதனை நோக்கிக் கிளியே! என்ன விசேஷம்? அந்தத் தேசம் எப்படிப்பட்டது? என்றது.

கிளி, தேவரீர்! சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளும்; போருக்கு முயற்சி செய்யவேண்டும். கர்ப்பூரத்தீவாகிய அந்தத் தேசமோ தேவலோகத்தின் ஒரு பங்குதான். அதனை வர்ணித்தல் எப்படிக் கூடும்? என்றது.பின்னர் இராசா மந்திராலோசனை செய்யும்படிசிட்டர்கள் எல்லாரையும் அழைப்பித்து, ஓரிடத்தில் இருந்து அவர்களை நோக்கி, இப்போது செய்யவேண்டியதைச் சொல்லுங்கள்; பின்னர் அவசியம் போர் செய்யவேண்டும்.

எ. எப்போதுஞ்சந்தோஷமில்லாதபிராமணர்களும், சந்தோஷமுடைய இராசாக்களும் நட்டமுடையவர்களாம். இலச்சையுடைய கணிகையர்களும், இலச்சையில்லாத குலஸ்திரிகளும்நட்டமுடையவர்களாம்என்றது.

இவர்களுள்ளே தூரதரிசி என்னும் பெயருடைய கிருத்திரமந்திரி, இராசாவைநோக்கித் தேவரீர்!விதியானது உம்மோடு யுத்தஞ் செய்வதிற் சோம்பாக இராது.

அ. மித்திரரும், மந்திரிமாரும், சகாயரும் நிச்சயபத்தியுடையராயுஞ் சத்துருக்களுக்கு விரோதிகளாயும் எப்பொழுது இருக்கின்றார்களோ அப்பொழுதே போர் செய்தல்வேண்டும்.

௯. பூமி,சிநேகிதன்,பொன் என்னும் மூன்றுமேபோருக்குப்பலமாம். இவைகள்நிச்சயமாய் எப்போது அடையப்படுமோ அப்போது தானே சத்துருவோடு போர்செய்யவேண்டும் என்றது.

இராசா, மந்திரியை நோக்கி மந்திரீ! என்னுடையசேனையைப் பார்க்கக்கடவாய். அவைகளுடைய தகுதியை அறியவேண்டும். முகூர்த்தங் குறிப்பவனைக் கூப்பிட்டு யாத்திரைக்குச் சுபலக்கினத்தைக் குறிப்பித்தல்வேண்டும் என்றது.

மந்திரி, தேவரீர்! அப்படியாயினும் சீக்கிரம் போருக்குப் போதல் யோக்கியமன்று.

௰. சத்துருவுடைய சேனையை விசாரித்தறியாமல் எந்த மூடர்கள் விரைந்து போருக்குப் போகின்றார்களோ அவர்கள் வாட்படையின் கூர்மையை நிச்சயமாய்த் தழுவுகிறார்கள் என்றது.

இராசா, அதனை நோக்கி மந்திரீ! என்னுடைய முயற்சியை எப்போதும் பங்கப்படுத்தாதே; வெற்றியையடைய விரும்புகிறவன் எப்படிப் பிறனுடைய பூமிக்கு ஆக்கிரமித்துச் செல்கின்றானே அப்படியே உபதேசி; என்றது.

கிருத்திரம், தேவரீர்! அதனைச் சொல்லுகிறேன். அது இவ்விதமாய்ச்செய்யப்பட்டாற்றான்பலனைக்கொடுக்கும்.

௧௧. சாஸ்திரசம்மதமாகச் செய்யப்படாத ஆலோசனையினால் இராசாக்களுக்குப் பிரயோசனம் யாது? மருந்துகளை அறிந்திருத்தலினால் எவ்விடத்திலாவது வியாதி தணியமாட்டாது.

இராசாவுடைய கட்டளையைக் கடக்கப்படாதென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் யுத்தவிஷயத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறதைச் சொல்லுகிறேன் தேவரீர்! கேளும்.

கஉ. நதி, மலை, காடு என்னும் இவைகளை அடுத்த கோட்டையிலே எங்கே எங்கே பயமுண்டோ அங்கே அங்கே சேனாபதியானவன் அணிவகுக்கப்பட்ட சேனைகளோடும் போர்க்கடவன்.

கங. வீரபுருஷர்களோடு சேர்ந்தவனாய்ச்சேனையின் அத்தியட்சகன் முன்னே போதல்வேண்டும். மனைவியுஞ் சுவாமியும், பொக்கிஷப்பெட்டியும் போசனப் பொருள்களும் விலையுயர்ந்த பொருள்களும் நடுவிலே போதல் வேண்டும்.

கச. இரண்டுபக்கத்திலுங் குதிரைகளும், குதிரைகளுக்குப் பக்கத்திலே தேரும், தேரின்பக்கத்திலே யானைகளும், யானைகளின் பக்கத்திலே பதாதிகளும் போதல் வேண்டும்.

கரு. வருத்தப்பட்டவர்களை மெல்லத் தைரியப்படுத்திக்கொண்டு சேனாபதி பின்னணியிலே போதல்வேண்டும். இராசாவானவன்மந்திரிகளோடும்யுத்தவீரர்களோடுஞ் சேர்ந்தவனாய்ச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு போர்க்களத்துக்குப் போகவேண்டும்.

கசு. ஒத்தசெப்பமில்லாத நிலத்தையுஞ், சேற்றுநிலத்தையும் மலைநிலத்தையும், யானைகளினாலும், சமபூமியைக் குதிரைகளினாலும், நீரைத் தோணியினாலுங் கடந்து போதல் வேண்டும்.

கஎ. யானைகள் மழைக்காலத்திலே போதல் உத்தமம் என்று சொல்லப்பட்டது. இதனையொழிந்தகாலம் எப்போதுங் குதிரைகளும் மற்றைய சேனைகளும் போகலாம்.

கஅ. மலைகளிலேயும், போதற்கரிய நெருங்கிய வழிகளிலேயும் இராசாத் தன்சேனைகளினாலேகாக்கப்படுதல் யோக்கியம். அவன் போர்வீரரினாற்காக்கப்பட்டிருந்தாலும் யோகநித்திரையைப் போலக் கபடமாக நித்திரை செய்தல்வேண்டும்.

கக. கோட்டையிலும், மலைச்சாரலிலுமிருந்து கல்லுகளை உருட்டிவிடுதலினுற் சத்துருவை வருத்தி நாசஞ்செய்தல்வேண்டும். சத்துருவின் தேசப்பிரவேசத்திலே காட்டுவழி அறிந்தவர்களை முன்னே விட்டுக்கொள்ளவேண்டும்.

உ0. இராசா எங்கே இருக்கின்ருனே அங்கே திரவியப்பெட்டியும்இருத்தல்வேண்டும். திரவியப்பெட்டியில்லையாயின்; இராசத்துவம் இருக்கமாட்டாது. அதினின்றுந் திரவியம் எடுத்துப்பிரதான உத்தியோகஸ்தருக்குப் பிரித்துக் கொடுக்கக்கடவன். பொருள் கொடுப்பவனுக்காகப் போர் செய்யாமலிருப்பவன் யாவன்?

இராசாவே! ஒருமனிதன்மனிதனுக்கு அடியனல்லன். ஆயினும், மனிதன் திரவியத்துக்கே அடியவனுயிருக்கிருன். திரவியத்தோடிருத்தலிலே மேன்மையும், திரவியமின்றியிருத்தலிலே தாழ்மையுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உக. பேதமில்லாமல் யுத்தஞ் செய்தல்வேண்டும். ஒருவரை ஒருவர் காத்துக்கொள்ளவேண்டும். போசனங்களையுஞ்சிறிது சிறிதாக எடுத்து வியூகநடுவிலே வைத்துக்கொள்ளல்வேண்டும்.

உஉ. இராசாப்பதாதியைத்தானே சேனைக்கு முன்னே நியோகிக்கவேண்டும். சத்துருவைத் தடுத்து அவனுடைய இராச்சியத்தைப் பிடிக்கவேண்டும்.

உங. சமநிலத்திலே தேர் குதிரைகளைக் கொண்டும், நீர்ப்பெருக்கு நிலத்திலே நாவாய் யானைகளைக்கொண்டும், மரங்களுங்கொடிகளும்நிறைந்து படர்ந்திருக்கின்ற நிலத்திலே அம்புவில்லுகளைக்கொண்டும், வெளிநிலத்திலே வாள் கேடங்களைக் கொண்டும் போர் செய்தல்வேண்டும்.

உச. சத்துருவினுடைய புல்லு, அன்னம், விறகு, நீர், என்னும் இவைகளைஎப்போதும் அழிக்கப் பிரயாசப்பட்

வேண்டும். அப்படியே தடாகங்களையும், பிராகாரங்களை யும், அகழ்களையும் அழிக்கவேண்டும்.

௨௫. சதுரங்க சேனைகளுள்ளே யானையே இராசாவு க்குப் பிரதானமானது. மற்றயவைகள் அப்படியல்ல, யா னைதன்னுடைய அவயவங்களினாலே அட்டாயுதம் என் றுஎண்ணப்பட்டிருக்கின்றது.

௨௬. சேனைகளுள்ளே குதிரையும்பெலமுடையதாம். அது நடைமதில் என்று எண்ணப்பட்டிருக்கின்றது. ஆத லால் அனேகங் குதிரைகளையுடைய இராசா நிலத்தினி ன்று செய்யும் போரிலே வெற்றியுடையனாயிருப்பான்.

௨௭. குதிரையிலே ஏறிக்கொண்டு போர்செய்கிறவ ர்களைத் தேவர்களும் வெல்லமாட்டார்கள். அவர்களு டைய சத்துருக்கள் தூரத்திலே நிற்பவர்களாயினுங் கை க்குள்ளே இருக்கிறவர்களைப் போல இருக்கிறார்கள்.

௨௮. முதன்முதல் யுத்தஞ்செய்தலும், சேனைகளெ ல்லாவற்றையுங் காத்தலும் திக்குமார்க்கங்களைப் பரிசுத் தம்பண்ணுதலும் பத்தியினுடைய கருமமாம்.

௨௯. சுபாவத்திலே வீரரும், அஸ்திரவித்தை அறிந் தவர்களும், பற்றுடையவர்களும், இளைப்பில்லாதவர்க ளும் பிரசித்தமானசத்திரிய நிலையை யுடையவர்களுமா கிய சேனைகளேஅதிசிரேட்டமுடையன.

௩0. பூமியிலுள்ள மனிதர்கள் தங்கள் பிரபுவினாற் கொடுக்கப்பட்ட சம்மானத்துக்காக எப்படியுத்தஞ் செ ய்கின்றார்களோ இராசாவே! அப்படி யுத்தம் அனேக திரவியங்களைக் கொடுத்தாலும் செய்யமாட்டார்கள்.

௩௧. வலிமையில்லாத அநேகமுண்டமண்டலங்களை யுடைய சேனையினும்பார்க்க வலிமையையுடைய அற்ப சேனையே உத்தமம். வலிமையில்லாத சேனைமுரியும்போ துவலிமையுடையசேனையும் பங்கப்படுதல் வெளிப்படை யாம்.

௯௨. இராசாத்தன்சேனைகளிற் பற்றின்றியிருத்தல், தன் பிரபுத் தன்மையைக் காட்டாதிருத்தல், கொடுக்க வேண்டிய வேதனம்முதலியவைகளைக் கொடாமலெடுத்தல்,வேதனங்கொடுக்கவேண்டிய காலத்தைநீளவிடுதல், சேனைகளுள்ளேஒருவரோடொருவர்விரோதிக்குங்காலத்தில் அவ்விரோதத்தை நிவாரணஞ் செய்யாதிருத்தல், என்னும்இவைகளேசேனைகள்பற்றின்றியிருத்தற்குக்காரணமாம்.

௯௩. சத்துருக்களைவெல்லவிரும்புகிறவன் தன் சேனைகளை வருத்தாது அச்சத்துருக்களை வருத்தக்கடவன். நெடுங்காலமாகப்பிரயாணஞ் செய்து வருத்தப்பட்டசேனைகளைவெல்லுதல்சத்துருக்களுக்குஇலகுவாயிருக்கும்.

௯௪. ஒருவனுக்குச் சபிண்டனை யொழியப் பேதத்தைச் செய்யத்தக்க மந்திரி வேறொருவனில்லை, ஆதலினாலே தன்சத்துருவுக்கு விரோதமாக அவனுடைய சபிண்டனை எழுப்பிவிடல்வேண்டும்.

௯௫. இளவரசனோடாவது பிரதான மந்திரியோடாவது சேர்ந்துகொண்டு அவர்களை ஒருவரோடொருவர் போர்செய்யும்படி மூட்டிவிடுதலேஸ்திரமானமனமுடையவனுக்கு எற்றகாரியமாம்.

௯௬. குரூரமான சத்துருவைப்போரிலே அவன்மித்திரனைக்கொண்டாவது,பங்கப்படுத்தியாவது கொல்லவேண்டும். அல்லது அவனை அடைந்திருக்கின்ற முக்கியசனங்களுக்குக் கொள்ளைப் பொருள் கொடுத்தலினாலாவது கொல்லவேண்டும்.

௯௭. இராசாவானவன் பிறதேசங்களினின்றுங்கவர்ந்துகொண்டுவந்த திரவியங்களினாலே தன் தேசத்தைச் சந்தோஷப்படுத்தி வைத்தல்வேண்டும். அல்லது தன்னுடைய திரவியப்பெட்டியிலிருந்து கொடுத்தலினாலாவது அஃதில்லையாயின்; சம்மானத்தினாலாவதுசந்தோஷப்படுத்திவைத்தல்வேண்டும்.அப்படிச்செய்தானாயின்; அவ

னுக்கு ஆபத்துகாலத்திலேதிரவியத்தை அதுகொடுக்கு மன்றோ! என்று சொல்லிற்று.

இராசா,இதனைப்பற்றி அதிகம் பேசுவதினாற் பிரயோசனம்யாது?

கூஅ. தன்னுயர்ச்சியும்,பிறன்சிதைவும்நீதிதான் என்றுசொல்லுகிறார்கள்.அதனை ஒத்துக்கொண்டால்எங்கள் செய்கையினாற் சிறந்து வாக்கானது மறுக்கப்படுகின்றதன்றோ! என்றது.

மந்திரி, புன்னகைகொண்டு இவையெல்லாஞ் சத்தியம். ஆயினும்,

கூகூ. ஒருவன் உயர்ந்தவனும் அதிகாரமுள்ளவனும் ஒழுங்கில்லாதவனுமாயிருக்கிறான். வேறொருவன் சாத்திரப்பிரமாணப்படி நடந்து அடக்கமுடையவனாயிருக்கிறான். அக்கினியிலும் இருளிலும் ஒரேவிதமானமேன்மை எப்படி உண்டாகும்? என்றது.

அதன்பின் இராசா எழுந்து முகூர்த்தங் குறிப்புவனாலே அறிவிக்கபபட்ட இலக்கினத்திலே யுத்தத்திற்குப் பிரயாணப்பட்டது.

அப்பொழுது முன்னர் அனுப்பிய ஒற்று வந்து இரணியகர்ப்பனுடைய் சமீபத்தை அடைந்து நமஸ்கரித்துத்தேவரீர்! இராசாவாகிய சித்திரவர்ணன் கிட்ட வந்து இப்போது பொதிய மலைச்சாரலிலே இறங்கியிருக்கின்றது. என்று சொல்லிற்று. அப்போது இராசாத் துருக்கமானது கணந்தோறும் பரிசுத்தமாக்கப் படவேண்டும். ஏனெனில்; அந்தக்கிருத்திரமோ மகாமந்திரி. மேலும் அது ஒருவனோடு விசுவாசமாகக் கதாப்பிரசங்கஞ்செய்ததனாலே அதனுடைய மனக்குறிப்பை நானறிந்திருக்கிறேன்.அது முன்னமேதானே யாரோ ஓரொற்றனை எங்கள் கோட்டையிலே வைத்திருக்கின்றது. என்றது.

சக்கரவாகம், இராசாவே! அங்கே ஒரு வேவுகாரன் இருந்தால் அது காகமேயன்றிவேறொன்றன்று என்றது.

இராசா, ஒருகாலமும் அஃதன்று. அப்படியாயின்; கிளியை வெல்லும்படி எப்படி முயன்றது! பின்னுங் கிளி இங்கு வந்த பின்னர்த்தானே இந்த யுத்தமுயற்சி செய்யப்பட்டது. அன்றியும் அது நெடுங்காலமாகத் தானே இங்கே இருக்கின்றது. என்றது.

மந்திரி, அப்படியாயினும் இடையிலே வந்த அந்தக் காகஞ் சந்தேகங் கொள்ளப்படத் தக்கது என்றது.

இராசா, அஃது இடையில்வந்ததாயினும்எங்களுக்கு அபகாரஞ் செய்கிறதாகக் காணப்படவில்லை. கேள்;

௪௦. பிறனயிருந்தாலும் இதத்தைச்செய்கின்றவனே சுற்றத்தவனும். சுற்றத்தவனயிருந்தாலும் அகிதத்தைச் செய்கின்றவனே பிறனும். சரீரத்தோடு உண்டாய வியாதி அகிதத்தைச் செய்கின்றது. காட்டிலுள்ள மருந்தே இதத்தைச் செய்கின்றது.

௪௧. சூத்திரகன் என்னும் பெயருடைய இராசனுக்கு வீரவரன் என்னும் பெயருடைய சேவகன் ஒருவன் இருந்தான். அவன் சொற்பகாலத்திலே தன் புத்திரனைப் பலியாகக் கொடுத்தான். என்றது.

சக்கரவாகம் இஃது எப்படி என்று கேட்க இராசாச் சொல்லுகின்றது.

வீரவரன்கதை.

நான் முன்னே சூத்திரகன் என்னும் இராசனுடைய கிரீடைவாவியிலே கருப்பூரகேலி என்னும் பெயருடைய இராச அன்னத்தினதுபுத்திரியாகிய கர்ப்பூரமஞ்சரியிடத்தே அதிகம் அநுராகங்கொண்டிருந்தேன். அவ்விடத்திலே வீரவரன் என்னும் பெயருடைய இராசபுத்திரன் ஒருவன் ஏதோ ஒரு தேசத்தினின்றுவந்துஇராசவாயிற்காவற்காரனை அடைந்து, நான் சீவனத்தைத் தேடும் இராசபுத்திரன்; என்னை இராசாவைக் காணும்படி செய்; என்றான்.

அப்போது அவனும் அப்படியே இராசாவைக்காட்டிவிட வீரவரன் இராசாவை நோக்கித் தேவரீர்! என்னுடைய சேவகத்தினுலும் உமக்குப்பிரயோசனமிருந்தால், எனக்குச் சீவனச் செலவு நியமியும் என்றான்.

சூத்திரகன், உனக்குச் சீவன ச்செலவு எவ்வளவு வரும்? என்று கேட்டான்.

வீரவரன், ஒரு நாளைச்கு நானூறு பொன்வேண்டும். என்றான்.

இராசா, உன்னுடைய ஆயுதங்கள் யாவை? என்று கேட்டான்.

வீரவரன், இரண்டு புயங்களும் மூன்றுவதாக வாட்படையுந்தான். என்றான்.

இராசா இது போதாதுஎன்றான். அதனைக்கேட்டு வீரவரன் நமஸ்காரஞ்செய்து திரும்பிப்போனான்.

அப்போது மந்திரிமார்கள் இராசாவை நோக்கி, தேவரீர்! நாலுநாளைக்குச் சம்பளங்கொடுத்து அவனுடைய சாமர்த்தியத்தை அறியவேண்டும். இவ்வளவு சம்பளம் வாங்குகின்ற இவன் இதற்கு உபயோகமுள்ளவனோ உபயோகமில்லாதவனோ என்பதனையும் அறியவேண்டும். என்றார்கள். பின்னர் மந்திரிமாருடைய வார்த்தைப்படி அவனைக் கூப்பிட்டுத் தாம்பூலத்தைக் கொடுத்து அவனுடைய சம்பளத்தையுங் கொடுத்தான்.

க. உறைப்பு, கசப்பு, இவ்விரண்டுங் கலந்திருத்தல்; மதுரம், உவர்ப்பு, மலத்தைக்கட்டுதல், வாதத்தைக் கெடுத்தல், கபத்தைநாசஞ்செய்தல், கிருமிகளைநீக்குதல், துர்க்கிந்ததோஷங்களை நீக்குதல், முகத்துக்கு ஆபரணமாயிருத்தல், மலவிசர்ச்சனஞ்செய்தல், ஆசையைஉண்டாக்குதல் என்னும் பதின்மூன்றுந் தாம்பூலத்திற்குரிய குணங்களாம். இக்குணங்களைத் தேவலோகத்தினுங் காணுதல் அரிது.

பின்னர் அவன் தன் சம்பளத்தை எப்படிச் செலவுசெய்கிறான் என்பதனை இராசாவானவன் மிகவும் இரகசிய

மாக ஆராய்ந்தான். வீரவரன் அந்தச் சம்பளத்திலே பாதியைத் தேவர்களுக்கும், பிராமணர்களுக்குங் கொடுத்தான். எஞ்சிய திரவியத்தின் பாதியை வறியவர்களுக்குக் கொடுத்தான். எஞ்சிய திரவியத்தைப் போசனச் செலவிலேயும், விளையாட்டுச் செலவிலேயும் போக்கினான்.

இவைகள் எல்லாவற்றையும் எப்போதுஞ் செய்து முடித்துக்கொண்டு இராசவாயிலிலே இரவும் பகலும் வாட்படையைத் தாங்கிக்கொண்டு நின்று சேவித்து வந்தான். எப்போது இராசாக் கட்டளையிடுகின்றானோ அப்போதுதானே அவன் தன் வீட்டுக்குப் போவான். பின்னர் அபரபக்க சதுர்த்தசி சேர்ந்த ஓர் இராத்திரியிலே இராசாச் சயனித்திருக்கையில் துக்கத்தோடு அழுகிற ஒரு சத்தந் தன் காதுக்குக் கேட்டது. அப்பொழுது இங்கே வாயிலில் நிற்கிறவன் யார்? என்று கேட்டான். வீரவரன், தேவரீர்! நான்தான் வீரவரன்என்றான். இராசா அவனை நோக்கி இங்கே ஓர் அழுகைச்சத்தங் கேட்கின்றது. இதனைத் தொடர்ந்துபோய் யாது என்று பார்த்துக்கொண்டுவா; என்றான். வீரவரனுந் தேவரீர்! அப்படியேசெய்கிறேன் என்றுசொல்லிக்கொண்டுபோனான்.

அப்போது இராசா "ஐயோ! நானே தவறு செய்துவிட்டேன். இவனோ தனிமையான இராசபுத்திரன்; இவனை நானோ மிகநெருங்கிய இருளிலே அனுப்பியிருக்கிறேன். இது நன்றன்று! நானும்போய் இது என்ன காரியம் என்று ஆராயவேண்டும் என்று ஆலோசித்து அப்போது தானே தன் வாளினையும் எடுத்துக்கொண்டு நகரவாயிலினின்றும் வெளிப்பட்டு அவன் போன வழிவழியே போனான்.

முன்போன வீரவரன் அழுகின்றவளும், ரூபயௌவனம் நிறைந்தவளும், எல்லா ஆபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டவளுமாகிய ஒரு ஸ்திரியைக்கண்டு, "நீ யார்? என் அழுகின்றாய்?" என்று கேட்டான். அந்த ஸ்திரி

நான் இந்தச் சூத்திரகராசாவுடைய இலக்குமி; நெடுங் காலமாக இவருடைய புயநிழலிலே பெருஞ்சுகத்துடன் இளைப்பாறி யிருந்தேன். இப்போது துர்க்காதேவிக்குச் செய்த குற்றத்தினாலே இன்று தொடங்கி மூன்றாநாளி லே இராசா இறந்துவிடப்போகிறார். நானும்அப்போது துணையில்லாதவளாய் விடுவேன்; ஆதலால் இங்கே யிரு க்கமாட்டேன்; என்பதனால் இப்பொழுது அழுகிறேன். என்றாள்.

வீரவரன், பின்னர் நீ இன்னும் நெடுநாளைக்கு இங்கே இருக்கும்படி பகவதியுடைய அனுக்கிரகம் பெறுதற்கு வழி யாது? என்று கேட்டான்.

இலக்குமி, நீ முப்பத்திரண்டு இலக்கணங்களும் அமை யப்பெற்ற உன்னுடைய புத்திரனாகிய சத்திதரன் என் பவனுடைய தலையை உன் கையினாலே வெட்டிச் சர்வம ங்கலையாகிய துர்க்கைக்கு உபகாரஞ் செய்வாயாயின்; இராசாவும் நூறுவயசுக்குச் சீவிப்பார்; நானுஞ் சுகமா யிருப்பேன். என்று சொல்லி மறைந்தாள்.

அப்போது வீரவரன் தன் வீட்டிற்குப் போய் நித்தி ரையிற் சோப்பமாய்க் கிடந்த தன் மனைவியையும் புத்தி ரனையும் எழுப்பி இலக்குமி சொன்ன வார்த்தைகளெல் லாவற்றையும் அறிவித்தான் இதனைச் சத்திதரன் கேட்டு எங்கள் சுவாமியுடையஇராச்சியத்தைஇரட்சிக்கும்பொ ருட்டு அவருக்கு உபயோகமாக இப்படிக்கொல்லப்படு கின்ற நான் அதிட்டமுடையேன்; பிதாவே! இப்பொ ழுது தாமசஞ் செய்வதென்னையோ? எபபோதும் இவ் விதமான செயல்களிலே இந்த உடம்பை விடுதல் புக ழாம். என்றான். பின்னர் சத்திதரனுடைய மாதா எங் கள் குலத்துக்கு இது நன்று! இப்படிச் செய்யாது விடு வோமாயின்; நாம் பெற்றுக்கொண்ட இராசசம்பளக்க டனை இறுத்தல் எப்படி உண்டாகும்? என்றாள். இப்ப டியே ஆலோசித்துக்கொண்டு எல்லாருஞ் சர்வமங்கலி யாகிய துர்க்கையுடைய் கோவிலுக்குப் போனார்கள்.

அங்கே வீரவரன், துர்க்காதேவியைப் பூசை செய்து, "தேவி! அனுக்கிரகஞ் செய்தருள்; சூத்திரகமகாராசன் வெற்றிபடையக்கடவன். இந்த உபகாரம் ஏற்றுக்கொள்ளப்படுக." என்றுசொல்லிப் பிரார்த்தித்துத் தன் புத்திரனுடைய தலையைவெட்டினான். அப்பொழுது வீரவரன், என்னாற் பெற்றுக்கொள்ளப்பட்ட இராசனுடைய சம்பளக்கடன் இறுக்கப்பட்டது. இப்போது புத்திரனின்றிச் சீவித்தல் உபத்திரவம். என்று ஆலோசித்துத் தன்னுடைய தலையையும் வெட்டினான். பின்னர் அவன் மனைவியும் நாயகன் புத்திரன் என்னும் இருவரையும் இழந்த சோகத்தினாற் பீடிக்கப்பட்டுத் தன்னுடைய தலையையும் வெட்டினாள். இவைகள் எல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும் நின்ற இராசா ஆச்சரியப்பட்டு,

உ. என்போலிய அற்பமனுடர்கள் சீவிக்கிறார்கள்! இறக்கிறார்கள்! அவர்களாற் பிரயோசனம் யாது! அந்தோ! இவனுக்குச் சமமான ஒருவன் உலகத்திலே முன்னிருந்ததுமில்லை! இனிமேல் இருப்பதுமில்லை!

ஐயோ! இவனையிழந்த இராச்சியத்தினாலே எனக்குப் பிரயோசனம் யாது? என்று சிந்தித்துத் தானுந் தன் தலையை வெட்டுதற்கு வாளினை யோங்கினான். அப்போது சர்வமங்கலையாகிய துர்க்கை பிரத்தியட்சமாகி இராசாவுடைய கையைப் பிடித்து மகனே! இந்த மூடத்தன்மை போதும்; இப்போது உனக்கு இராச்சியபங்கமில்லை என்றாள். இராசாச் சாட்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, தேவீ! எனக்கு இராச்சியத்தினாலாவது, சீவிக்கப்படுதலினாலாவது, செல்வத்தினாலாவது ஒருபிரயோசனமுமில்லை. என்மேற் கிருபையிருக்குமாயின்; எனது எஞ்சிய ஆயுட்காலத்திலே இந்த இராசபுத்திரன் தன்மனைவியோடும், புத்திரனோடுஞ் சீவிக்கும்படி திருவருள் புரிக. இப்படிச் செய்யாதொழியின்; நீ, என்னைக்கண்டு தடுத்த அக்கதியிலே போகின்றேன் என்றான்.

துர்க்கை, உன்னுடைய இந்தமேன்மையான உதார குணத்தினுலுஞ், சேவகனுடைய இரக்கத்தினுலும் எப்போதுஞ் சந்தோஷமுடையவளாய் இருக்கிறேன். நீ, போய் வெற்றியடைந்திருக்கக்கடவாய். இந்த இராசபுத்திரனும் பரிவாரத்தோடுஞ் சீவிப்பானுக என்ருள். அப்போது வீரவரனும், புத்திரனேடும் மனைவியோடுஞ் சிவனைப் பெற்றெழுந்து தன்வீட்டுக்குப்போனுன். இராசாவும் அவர்களாற் காணப்படாமல் அரண்மனை உப்பரிகையின் மேலே போய் முன்போல நித்திரைசெய்தான்.

பின்னர், வீரவரன் வாயிலிலே வந்து நின்ற பின் இராசா அவனைக்கண்டு அழுகைச் சத்தத்தைப் பற்றிக் கேட்டபோது அவன் தேவரீர்! அழுதவளாகிய அந்தஸ்திரி என்னைக்கண்டு பின் மறைந்து விட்டாள். இஃதொழிய வேருெரு வார்த்தையுமிருக்கவில்லை. என்ருன். அவனுடைய வார்த்தையை இராசாக்கேட்டுச் சந்தோஷமடைந்து ஆச்சரியத்தோடு சிந்திப்பானுயினுன். இந்த மேன்மையான மனுஷனை எப்படிப்புகழலாம்?

௩. ஒருவன்நீசத்தன்மையில்லாதவனுய்ப் பிரியமாய்ப்பேசவேண்டும். கொடையாளனுகிச் சற்பாத்திரத்திலே கொடுத்தல்வேண்டும். தைரியவானுய்க் கொடுமையின்றி இருத்தல்வேண்டும்.

இவைகளே மகாபுருடனுடைய இலக்கணம். இவைகளெல்லாம் இவனிடத்திலேஇருக்கின்றன என்று ஆலோசித்து விடியற்காலத்திலே பெரியோர்களை அழைத்து அவர்கள் சபையிலே இந்த விருத்தாந்தங்கள் எல்லாவற்றையும் புகழ்ந்துசொல்லித் தயையோடுங் கர்னுடராச்சியத்தை அவனுக்குக் கொடுத்தான். ஆதலால் ஆகந்துகன் விரோதமுள்ளவனே? இதிலும், உத்தமர், அதமர், மத்தியமர் என மூன்று பிரிவு உண்டு என்றது.

சக்கரவாகஞ் சொல்லுகின்றது.

௪. இராசாவுடைய விருப்பின்படி செய்யத்தகாத காரியத்தைச் செய்யத்தகும் என்று செய்கின்றவன் மந்

திரியா? செய்யத்தகாத காரியத்தைச் செய்வதினால்இராசா நாசமடைதலினும் அவர் மனத் துக்கங்கொண்டிருத்தல் உத்தமம்.

ரு. வைத்தியனும், குருவும், மந்திரியும் இராசாவுக்கு முகமன்வார்த்தைகளைச்சொல்வார்களாயின்; அந்த இராசனுடைய சுகமும், புண்ணியமுந், திரவியசாலையும் விரைவில் அழிந்துவிடும்.

சு. தேவரீர்! கேளும்; ஒருவன் புண்ணியத்தினால் அடைவது எதுவோ அதனை யானும் புண்ணியஞ் செய்தேனாயின்; அடைவேன். ஏனெனில்; திரவியத்தில்விருப்பங்கொண்ட ஒரு நாவிதன் பிச்சைக்காரன் ஒருவனை மோகத்தினாற் கொன்று அதனாற்றானுங் கொல்லப்பட்டான் என்றது.

இராசா இஃது எப்படி என்று கேட்க மந்திரி சொல்லுகின்றது.

பிச்சைக்காரனைக்கொன்ற நாவிதன்கதை.

அயோத்திமாநகரத்திலே சூடாமணி என்னும் பெயருடைய சத்திரியன் ஒருவன் இருந்தான். அவன் திரவியத்தில் விருப்பங்கொண்டு சந்திரார்த்த சூடாமணியாகிய பகவானை நெடுங்காலமாகச் சரீர வருத்தத்தோடும் பூசைசெய்துவந்தான். அதனால் அவன் பாபவிமோசனமடைந்து சொப்பனத்திலே பகவானுடைய தரிசனத்தைப் பெற்றான். அப்போது அந்தப்பகவான் அனுக்கிரகத்தோடும் அவனைநோக்கி, நீ, இன்றைக்குக்காலையிலே சௌரஞ் செய்வித்துக் கையிலே ஒரு தடியையும் வைத்துக்கொண்டு உன் வீட்டுவாயிலிலே மறைந்து நில்; அப்போது ஒரு பிச்சைக்காரனை உன் முற்றத்திலே வரக்காண்பாய். அவனை இரக்கமின்றித் தடியினால் அடித்து

க்கொல்லு ; அந்தப் பிச்சைக்காரன் அக்கணத்திற்றுனே சுவர்ணபூரணமான ஒரு பாத்திரமாவான். அதனாலே நீ, சீவியகாலம் வரையுஞ் சுகத்தோடிருப்பாய் என்று ஆஞ்ஞாபித்தருளினர்.

அதன்பின் அவன் அப்படிச் செய்தபோது பகவான் சொல்லியபடி நடந்தது. இவை எல்லாவற்றையுஞ் சௌரகருமத்துக்காக வருவிக்கப்பட்டிருந்த நாவிதன் கண்டு, “ஆகா! நானுந் திரவியத்தைப் பெற்றுக்கொள்ளுதற்கு இதுவே நல்ல உபாயம். ஆதலால் நானும் இப்படிச் செய்யாமலிருக்கிறதென்ன? என்று நினைத்து அன்று தொடங்கி நாடோறும் அவ்விதமானதடியையுங் கையில்வைத்துக்கொண்டு பிச்சைக்காரனுடையவரவை விரும்பி எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஒருநாள் அப்படியே வந்தகப்பட்ட பிச்சைக்காரன் ஒருவனைத்தடியினால் அடித்துக் கொன்றான். அக்குற்றத்தினாலே அந்த நாவிதனும் இராசபுருஷர்களினால் அடிக்கப்பட்டு மரணமடைந்தான்.

ஆதலாற்றான் ஒருவன் புண்ணியத்தினால் அடைவது எதுவோ அதனை யானும் புண்ணியஞ்செய்தேனாயின்; அடைவேன். என்பது சொல்லலுற்றேன் என்றது.

க. இராசா, முன்னடந்த கதைகளைச் சொல்லுவதினால் பிறனொருவன் காரணமின்றி வந்தவனோ அல்லது சிநேகிதனோ அல்லதுநம்பிக்கைத்துரோகியோஎன்பது எப்படி நிச்சயிக்கப்படும்?

இது போக, இப்போது செய்யவேண்டியது செய்யப்படுக. சித்திரவர்ணன் என்னும் இராசாப் பொதியமலைக்குச் சமீபமான பூமியிலே பாளயமிறங்கி இருக்கின்றான். ஆதலால் இப்போது செய்யத்தக்கது யாது! என்றுகேட்டது.

மந்திரி, தேவரீர்! மகாமந்திரியாகிய கிருத்திரத்தினது புத்தியான ஆலோசனையைச் சித்திரவர்ணன்இகழ்

ந்து தள்ளினுன் என்று இங்கே வந்த ஒற்றன் வாயாற் கேள்விப்பட்டேன். ஆதலால் அந்த மூடன் செயிக்கப் படக்கூடியவன்.

௨. உலுத்தனுங், குரூரமுடையவனும், வசப்படுத்தக்கூடாதவனும், உண்மையில்லாதவனும், பிரமாதமுள்ளவனும், பயமுடையவனும், ஸ்திரமில்லாதவனும்,மூடனும், யுத்தவீரனை இகழ்பவனுமாகிய சத்துரு இலகுவிலே கொல்லப் படுவான், என்றெண்ணப் பட்டிருக்கின்றுன்.

ஆதலால், அது எங்கள் கோட்டையை அடைகோட்டைப்படுத்தாமல் எவ்வளவும் இருக்கின்றதோ அவ்வளவும் நதி, மலை, காடு என்னும் இவ்வழிகளிலே நின்று அதன் சேனைகளைக் கொல்லும்படி நாரை முதலிய சேனுதிபதிகளை அனுப்பவேண்டும்.

௩. நெடுவழி நடந்ததனுல் இளைத்ததும், யாறு, மலை, காடுகளிலே அடைக்கப்பட்டதும், கொடிய அக்கினிபய்த்தினுல் வெருவப்பட்டதும், பசி தாகதுன்பங்களினுலே இளைப்படைந்ததும்,பிரமத்தமடைந்ததும்,போசனவியாகுலமுடையதும், வியாதியினுலும், பஞ்சத்தினுலும் பீடிக்கப்பட்டதும், நிலையில்லாததும், அதிகமில்லாததும், மழையினுலுங், காற்றினுலும், வியாகுலப்பட்டதுஞ், சேற்றினுலும், பூழியினுலுஞ் சலத்தினுலும் வசதியீனப்பட்டதும், சிதறப்பட்டதும், கள்ளராற் கலைக்கப்பட்டதுமாகிய சத்துருவின் சேனையை ஓர் இராசன் தோற்கச் செய்வான்.

௪. சத்துரு முட்டுவானென்ற அச்சத்தினுல் இரவில் விழித்திருக்குஞ் சிரமமுடையதும் பகலில் நித்திரைசெய்தலையுடையதும்,எப்போதும் நித்திரை வியாகுலத்தை யுடையதுமாகிய சேனையை இலகுவிலே கொல்லலாம்.

ஆதலாற் கர்வமுள்ள அந்த மயிலின் சேனையை நாரை முதலிய சேனுதிபதிகள் சாவகாசத்துக் கேற்றபடி இரவிலும், பகலிலுங் கொல்லவேண்டும் என்றது.

பின்னர், அப்படியே செய்தபோது சித்திரவர்ணனு கிய அந்த மயிலினுடைய் வெகுசேனைகளுஞ் சேனுபதி களுங் கொல்லப்பட்டன. அப்போது சித்திரவர்ணன் துக்கமடைந்து தன்னுடைய மந்திரியாகிய தூரதரிசி யைநோக்கிப் பிதாவே! நீர் ஏன் என்னைக்கைவிட்டீர்? எதிலே அல்லது எவ்விடத்திலே என்னுடைய மரியா தைக்குறைவு இருக்கின்றது என்றுர்.

ரு. அதற்குத்தூரதரிசி இராச்சியம் எனக்குக் கிடை த்துவிட்டது என்று எண்ணிக்கொண்டு இப்படியே இரு த்தல் யோக்கியமன்று. சரை உத்தமரூபத்தை அழித் தல்போலப் புத்தியீனம் பாக்கியத்தை அழிக்கின்றது.

சு. சாமர்த்தியமுடையவன் அதிட்டத்தையும், பத் தியமாக உண்பவன் உரோகமின்மையையும்,உரோகமில் லாதவன் சுகத்தையும், முயற்சிசெய்பவன், கல்விக்கரை யையும், நன்றுகப்பயிற்றப்பட்டவன் தருமார்த்தகீர்த்தி களையும் அடைகின்றுன் என்றது.

கிருத்திரம், தேவரீர்! கேளும்;

எ. அரசனுனவன் மூடனுயிருந்தாலும், கல்வியின் முதிர்ந்த ஒரு வித்துவானைத் தன் சேவகத்திலே வைத் தலினுற் சலத்துக்குச் சமீபமாயிருக்கும் மரத்தைப்போ லப் பிறனுடைய பாக்கியத்தை அடைகின்றுன்.

அ. மேலும், கட்குடித்தலும், ஸ்திரிசேவையும், வேட் டையுஞ், சூதும்,திரவியத்தை வீண்செலவு செய்தலும், நிந்தைமொழிகளுமாகிய இவைகளெல்லாம் இராசாக்க ளுக்குத் துன்பத்தைக் கொடுப்பனவாம்.

கூ. சடிதியான வலாற்காரந்தானே மிகவும் உருசி என்று அதனைப் பின்பற்றுகிறவனுலாவது நட்டப்பட்ட உபாயத்தையுடையவனுலாவது வலிமையானஐசுவரியம் அடையப்படமாட்டாது. ஐசுவரியமானது நன்னடையி லேயுஞ் சவுரியத்திலேயும் வசிக்கின்றது.

நீரோ உம்முடைய சேனையின் முயற்சியைக்கண்டு வலாற்காரந்தானே உருசியென்று நினைத்துக்கொண்டு நான் முன்னமே சொல்லிவைத்தமந்திராலோசனையிலே அவதானமின்மையையும் நிந்தைமொழிகளையுஞ் செய்தீர்! ஆதலினால் இப்போது கெட்டநடையின் பிரயோசனத்தை அனுபவிக்கின்றீர்.

க0. நீதித் தவறுகள் கெட்டமந்திரியாயிருப்பவன் எவனைத் தான் அடையமாட்டா? உரோகங்கள் பத்தியமில்லாமலுண்பவன் எவனைத்தான் வருத்தப்படுத்தமாட்டா? செல்வம் எவனைத்தான் கர்வமடைவிக்கமாட்டாது? மிருத்தியு யாரைத்தான் கொல்லமாட்டாது? பெண்களாற் செய்யப்பட்ட விஷயபங்கம் யாரைத்தான் பரிதாபப்படுத்தமாட்டாது?

கக. சோகமானது மனமகிழ்ச்சியையும், பனிக்காலவரவு சரற்காலத்தையும், சூரியன் இருளையும், நன்றிமறத்தல், நன்மையையும், மித்திரரையடைதல், துக்கத்தையும், அநீதி, திரவியத்தோடு பெரிய விருத்தியையும் அழிக்கின்றன.

அப்போது நானும், "எங்கள் சுவாமி அறிவுடையவராயின்; நீதிசாத்திரகதையாகிய கௌமுதியை வாக்கு என்னும் உற்கையினால் எப்படி மறைத்தார்" என்று ஆலோசித்தேன்.

கஉ. தன்னறிவு எவனுக்கு இல்லையோ அவனுக்குச் சாத்திரம் யாது செய்யும்? இரண்டு கண்களுமில்லாதவனுக்குக் கண்ணாடிதான் யாது செய்யும்?

இந்த நியாயங்களினாலும் நான் மவுனமாய் இருந்தேன் என்றான். அப்போது இராசாக் கைகுவித்துக்கொண்டு "பிதாவே! இது என்னுடைய குற்றமாக இருக்கட்டும். இப்போது நான் எஞ்சிய சேனைகளோடும் எவ்விதமாகத் திரும்பி விந்தியமலைக்குப் போகவேண்டுமோ, அவ்விதத்தை உபதேசஞ்செய்; என்றது.

அப்போது கிருத்திரம், "நான் இவ்விடத்திலே சுவாமியுடன் சமாதானமாய்விடவேண்டும்.

௧௩. தேவர், குருமார், பசுக்கள், இராசாக்கள், பிராமணர்கள், பாலர், விருத்தர், வியாதியாளர் என்னும் இவர்களுடைய சமுகத்திலே கோபம் எப்போதும் அடக்கிக்கொள்ளத்தக்கது.

என்று தன்னுள்ளே சிந்தித்துக்கொண்டு புன்னகை செய்து இராசாவை நோக்கித் தேவரீர்! பயப்படாதேயும்; ஆறுதலாயிருந்து என் வார்த்தையைக் கேளும்;

௧௪. மந்திரிமாருடைய விசேட அறிவு, சமாதானம் பின்னமாயிருக்கும் போதும், வைத்தியருடைய விசேட அறிவு, சன்னிபாதத்திலும் பிரகாசிக்கின்றன. சுகமாயிருக்கும்போது பண்டிதனல்லாதவன் யாவன்?

௧௫. அறிவில்லாதவர்கள் தமக்குப்பிரியமான அற்ப காரியங்களையே தொடங்கி வியாகுலப்படுகின்றார்கள். பெருஞ் செயல்களைச் செய்யும் அறிவுடையவர்களோ பெரிய காரியங்களைத் தொடங்கி வியாகுலமில்லாதவர்களாக இருக்கின்றார்கள்.

தேவரீர்! உமது பிரதாபத்தினாற்றானே பகைவனுடைய கோட்டையைப் பங்கப்படுத்திக் கீர்த்திப் பிரதாபத்தோடும் எம்மைச் சிறிது காலத்துள்ளே விந்தியமலைக்குக் கொண்டுபோகின்றேன். என்றது.

அப்போது, இராசா "அற்பசேனையினால் இப்போது இந்தச் செய்கை எப்படி முடியும்?" என்று கேட்டது.

கிருத்திரம், தேவரீர்! சகலமும் முடியும்; ஏனெனில்; வெற்றியை விரும்புகிறவனுக்குத் தாமசமில்லாமலிருத்தலே விசயசித்திக்கு அவசியகாரணமாகும். ஆதலால் இன்றுதானே சத்துருவின் கோட்டையை அடைகோட்டையாக்கும்படி சீக்கிரங் கட்டளையிடுக என்றது.

இப்படி நிர்ணயஞ் செய்த உடனே வேவுகாரனாகிய கொக்கு இரணியகர்ப்பனிடத்தில் வந்துதேவரீர்! அற்ப

சேனையோடு நிற்கின்றசித்திரவர்ணன் கிருத்திரத்தின்வார்த்தையைத் தழுவிக்கொண்டுவந்து கோட்டையின்துவாரத்தை அடைப்பான், என்றது. அப்போது இராசஅன்னம் சக்கரவாகத்தை நோக்கிச் சர்வஞ்ஞனே! இப்போது செய்யத்தக்கது யாது? என்று கேட்டது; சக்கரவாகம்,எங்கள் சேனையிலே வலிமையுடையதையும்,வலிமையில்லாததையும் வேறு வேறாகப்பிரித்து அவ்வவற்றின்தகுதியை அறிந்து பொன்வஸ்திரம் முதலியவைகளை நன்கொடையாகக் கொடுத்தல்வேண்டும்.

கசு. குறுக்குவழியிலே காணப்பட்ட இருபது வராடகங்களை ஆயிரம் நிஷ்கங்களுக்குச் சமமாக எடுத்துக்கொள்பவனும், எப்போதுங் கோடி காகினிபொன் கொடுக்குங் கையையுடையவனும் எவனோ அவ்விராசசிங்கத்தை இலக்குமி கைவிடமாட்டாள்.

கஎ. யாகம், விவாகம், துக்ககாலம், பகைவரைக்கெடுத்தல், புகழைக்கெடுக்குஞ் செய்கை மித்திரர் கூட்டம் அமைந்தியானஸ்திரி, திரவியமில்லாத சுற்றம் என்னும் எட்டிடத்திலேயும் இராசன் அதிகஞ்செலவுடையனாயிருத்தலாகாது.

கஅ. ஒரு மூர்க்கனானவன் அற்பசெலவுக்குப் பயப்படுவதினால் எல்லாவற்றையும் நாசஞ்செய்கின்றான்; அற்பமான திறையை இராசாவுக்குக் கொடுக்கவேண்டும் என்ற பயத்தினால் எந்தப் புத்திமான் சுத்தமான பாண்டத்தைக் கைவிடுவான்? என்றது.

இராசா, ஆபத்தின் பொருட்டுத் திரவியத்தைக்காத்துவைக்கவேண்டும். என்று சொல்லப்பட்டிருக்கவும் சமயத்திலே அதிகஞ் செலவு செய்யவேண்டும் என்பது எப்படிப் பொருந்தும் என்றது.

மந்திரி,செல்வமுடையவனுக்கு ஆபத்து எப்படி உண்டாகும் என்று கேட்டது.

இராசா, சிலகாலத்திலே இலக்குமி கோபித்துக்கொண்டு ஒருவனை விட்டுநீங்குவாள். என்றது.

பின்னர் மந்திரி தேவரீர்; சம்பாதிக்கப்பட்டதிரவியம் அழிகின்றது. ஆதலால் உலோபத்தன்மையை விட்டு உம்முடைய யுத்தவீரர்களைத் தானசம்மானங்களினாற் கனம்பண்ணக்கடவீர்.

கக. ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள், நல்லமனச்சந்தோஷமுடையவர்கள், தங்கள் உயிரிலே கவனமில்லாதவர்கள், நன்றாக நிச்சயிக்கப்பட்டவர்கள், நற்குலத்திற் பிறந்தவர்கள் பூசிக்கப்பட்டவர்கள் என்னுமிவர்கள் சத்துருவின் சேனையை நன்றாகவெல்லுவார்கள்.

உ0. நல்ல யுத்தவீரரும், யுத்தவித்தையை நன்றாகப் பயின்றறிந்தவர்களும், கூட்டமான ஸ்திரமுடையவர்களும், நியமிக்கப்பட்டவர்களுமாகிய ஐந்நூறு வீரர்கள் பொருந்திய அற்பசேனைதானும், சத்துருவின் சேனைகளெல்லாவற்றையுந் தூளாய் நெரிக்கும்.

உக. பின்னும், விசேஷத்தை அறியாதவனும், மூர்க்கனும், செய்ந்நன்றியைக் கொன்றவனுந், தன் வயிற்றைமாத்திரம் நிரப்புபவனுமாகிய மனுஷன் பெரியோர்களின்லுந் தன்மனைவியினாலுங்கைவிடப்படுகிறான். பின்னர் மற்றையவர்களால் விடப்படுதலைப் பற்றிப் பேசுவதென்!

உஉ. சத்தியம், சௌரியம், கொடை என்னும் மூன்றும் இராசாவுடைய குணங்களாம். இக்குணங்களில்லாத இராசன் பிறருடைய நிந்தைமொழிகளை அடைவான்.

அமாத்தியருக்கும் அப்படியே உபகாரம் அவசியஞ் செய்யவேண்டும்.

உங. எவன் எவனாலே உபசரிக்கப்படுகின்றானோ அவன் அவனாலே உதயமடைந்தவனாகி அவன்பொருட்டுத் திரவியங்களைச்செலவுசெய்கிறவனாயிருக்கவேண்டும். இராசா நன்றாக நம்பப்பட்டவர்களையே தன் பிராணனுக்குந் திரவியத்துக்கும் அதிகாரிகளாக நியமித்துவைக்கவேண்டும்.

உச. எந்த இராசனுக்குத் தூர்த்தனாவது ஸ்திரியாவது, சிசுவாவது, புத்திசொல்லுகிறவர்களாய் இருக்கின்றார்களோ அந்த அரசன் அநீதி என்னுங் காற்றினால் அடிக்கப்பட்டுத் துக்கம் என்னுஞ்சமுத்திரத்திலே அமிழ்ந்துகிறான்.

உரு. தேவரீர்! பாரும்! அற்பதிரவியச் செலவோடு விருப்புவெறுப்புகளை அடக்குகிறவனும், எப்போதுந் தன் சேவகர்களை விழிப்புள்ளவர்களாய் வைத்திருக்கிறவனும், எவனோ அவனுக்குப்பூமியானது பூரணமான திரவியத்தைக் கொடுக்கின்றதாயிருக்கின்றது.

உசு. தங்கள் இராசாவோடு உறுதியாய் வாழவும் அல்லது தாழவும் தங்களை நியமித்திருக்கும் நீதிமான்களாகிய மந்திரிமாரை இராசாவனவன் ஒருபோதும் அவமானம் பண்ணுதிருக்கக் கடவன்.

உஎ. மதத்தாற் குருடனுங் காரியசாகரத்தில் அமிழ்ந்தினவனுமாகிய அரசனுக்கு நற்சிநேகமுடைய மந்திரிமார்களே உதவியாகக் கையை நீட்டிக்கொடுக்கிறார்கள் என்றது.

அப்போது மேகவர்ணன் வந்து நமஸ்கரித்துத் தேவரீர்! கிருபாநோக்கஞ் செய்தருளும், போரை விரும்பிய அந்தச் சத்துருக் கோட்டை வாயிலிலே நிற்கின்றான். ஆதலால், தேவரீர்! ஸ்ரீபாதத்தின் கட்டளையுண்டேல்; வெளியேபோய் என் விக்கிரமத்தைக் காட்டித் தேவரீருடைய கிருபையின் கடனைத்தீர்த்துவிடுகிறேன் என்று சொல்லிற்று.

சக்கிரவாகம், அப்படியன்று வெளியேபோய்ப் போர் செய்யவேண்டுமாயின்; நாம் கோட்டையிலே ஒதுங்கி இருத்தல் விருதாவாய் முடியும்.

உஅ. இன்னும், முதலையானதுதனக்கு எதிரியில்லாததாய் இருந்தாலும்; நீரிலிருந்துவெளியேவரும்போது வல்லமை அற்றதாயிருக்கின்றது. காட்டினின்று நழுவியசிங்கமுஞ் சத்தியமாய், நரியை ஒத்திருக்கும் என்றது.

காகம், தேவரீர்தானேபோய்ப் போனைப் பார்க்கவேண்டும்.

உகூ. இராசாத் தன்சேனையை முன்னே அனுப்பிவிட்டுத் தான்போய் மேல்விசாரணை செய்யவும்வேண்டும். யசமானனால் மேல்விசாரணை செய்யப்படுகின்ற நாய்தானும் நிச்சயமாய்ச் சிங்கம்போலிருக்கின்ற தன்றோ! என்றது.

அதன்பின்னர் அவைகளெல்லாங் கோட்டைவாயிலிலேபோய்மகார்யுத்தஞ்செய்தன. மற்றைநாள் சித்திரவர்ணராசாக்கிருத்திரமாகியமந்திரியை நோக்கிப் பிதாவே! உம்முடைய பிரதிஞ்ஞையை இப்போது செய்துவிடும்; என்றது.

௩0. கிருத்திரந் தேவரீர்! தயவோடு கேளும்; நெடுங்காலஞ் சகிக்கக்கூடாததும்,மிகவற்பமானதும்,மூர்க்கனும் வியசன முள்ளவனுமாகிய நாயகனை யுடையதும், வெளியாயிருப்பதும், பயப்படுகின்ற யுத்தவீரரையுடையதுமாகிய கோட்டை மிக்வும் பெலமில்லாதது என்று சொல்லப்படுகின்றது.

ஆனால் இங்கே அப்படியன்று.

௩க. பேதஞ்செய்தலும், நெடுங்காலமாக அடைகோட்டையிடுதலும், பெலனோடு முட்டுதலும், விரைந்து கோட்டையைத் தகர்த்து வீரங்காட்டலுமாகிய இந்நான்குங் கோட்டையை மேற்கொள்ளுதற்குரிய உபாயங்களாம்.

இங்கே வலிமைக்குத் தக்கபடி முயற்சி செய்யவேண்டும். என்றுசொல்லச் சித்திரவர்ணனும் அப்படித்தான் என்றது. பின்னர்ச்சூரியனுதிக்கமுன்னே விடியற்காலத்திலே நான்குவாயிலிலுநின்று போர்செய்தபோது கோட்டைக்குள்ளே இருக்கின்ற ஒவ்வொரு வீடுகளுங் காகத்தினாலே நெருப்புவைக்கப்பட்டன. அப்போது கோட்டைபிடிக்கப்பட்டது என்னுங் கோலாகலத்தைக் கேட்

டும், அநேக வீடுகளிலே நெருப்புப்பற்றியெரிதலைப் பிரத்தியக்ஷமாய்க்கண்டும், இராசவன்னத்தினுடைய கோட்டைக்குள்ளே வாசஞ்செய்த அநேக சேனைகள் சீக்கிரம்போய் வாவியினுட் பிரவேசித்தன.

ரூ௨. நன்றாக யுத்தஞ்செய்தலோ நன்றாகப் புறங்காட்டுதலோ எது நன்றாக ஆலோசித்து நியமிக்கப்பட்டதோ அதனை ஏற்றகாலத்திலே விசாரணையின்றித் தன்வலிமைக்குத் தக்கபடி செய்யவேண்டும்.

இயல்பிலே மந்தகதியையுடைய இலகுவான இராசவன்னமும், இரண்டாவதாகி நாரையுஞ் சித்திரவர்ணனுடைய சேனாபதியாகிய குக்குடத்தினாற் சுற்றி மறிக்கப்பட்டன. அப்போது இராசவன்னமாகிய இரணியகர்ப்பன் நாரையை நோக்கிச் சேனாபதீ! நாராய்! என்னூழியத்தினால் உன்னைத் தற்கொலை செய்யாதே; இப்போது நானோ ஓடிப்போதற்குச் சமர்த்தனல்லேன். நீயோ இப்போதும் ஓடிப்போதற்குச் சமர்த்தனாயிருக்கிறாய். ஆதலின் ஓடிப்போய் நீருக்குள்ளே பிரவேசித்திரு; பின் என்னுடைய புத்திரனாகிய சூடாமணி என்பவனைச் சர்வஞ்ஞனாகிய சக்கரவாகத்தின் சம்மதப்படி இராசாவாக்கிச் சிங்காசனத்தில் வை; என்று சொல்லிற்று.

நாரை, தேவரீர்! இப்படியே தாங்குதற்கரிய வார்த்தையைப் பேசுதல் தகுதியன்று; சந்திரசூரியர் எவ்வளவு காலம்வரையும் இருக்கின்றார்களோ அவ்வளவுகாலம்வரையுந் தேவரீரும் வெற்றியடையக்கடவீர். தேவரீர்! நான் பின்னுங் கோட்டையினுள்ளே போய் அதற்கு அதிகாரியாய் நிற்பேன். ஆதலால் என்னுடைய மாமிசமும், இரத்தமும் புரண்டிருக்கின்ற துவாரவழியாற் சத்துருவானவன் போகக்கடவன். பின்னுந் தேவரீர்!

ரூரு. பொறுமையுடையவனுந், தாதாவும், குணங்களைக் கிரகித்தறிந்தவனும், ஆகிய யசமானனானவன் அதிட்டத்தினாற் பெற்றுக்கொள்ளப்படுகிறான். என்றது.

இராசா, மெய்தான் அப்படி இருக்கச்கடவது.

௩௪. நேர்மையுடையவனுஞ், சாமர்த்தியவானும், பற்றுள்ளவனுமாகிய சேவகனைப் பெற்றுக்கொள்ளுதல் மிக அருமை. என்று சொல்லிற்று.

நாரை தேவரீர்! கேளும்.

௩௫. போர்க்களத்தைக் கைவிட்டாலும் மரணபயமின்றி இனிதினின்று வேறோரிடத்திற்குப் போதலே தகுதி; பின்னும் பிராணிகளுக்கு மரணம் அவசியம் நேரிடுகின்றது. ஆதலால் என்னுடைய கீர்த்தியை வீணாக மலினப்படுத்துதல் எதன்பொருட்டு?

௩௬. இன்னுங், காற்றினாலே மேலே அடிக்கப்பட்ட திணாக்குச் சமமாகச் சுழன்று உடைகின்ற இப்பிறப்பிலே புண்ணியயோகத்தினாற் பிறப்பவன் எவனோ அவன் பிறன் பொருட்டுச் சீவிக்கக்கடவன்.

தேவரீர்! எப்போதும் யசமானனே இரட்சிக்கப்படத் தக்கவன், ஆதலால் உம்மையும் இரட்சிக்கவேண்டும்.

௩௭. பிரகிருதியானது தன் சுவாமியினால் விடப்பட்டதாயின்; வளர்ச்சியுடையதாயிருந்தாலுஞ் சீவிக்கமாட்டாது. திரவியமுடையவனாயிருந்தாலும், வைத்தியனானவன் ஆயுசுமுடிகின்றவனிடத்தே யாது செய்வான்?

௩௮. இந்தச் சீவலோகமானதுசூரியனுடைய தோற்ற ஒடுக்கங்களிலே தாமரை மலர்வதுங் குவிவதும் போல இராசாக் கண்மூடும்போது தானுங் கண்மூடுகின்றது. இராசா உதிக்கும்போது தானும் உதிக்கின்றது.

௩௯. இராசா, மந்திரி, இராச்சியம், கோட்டை, திரவியப்பெட்டி, சேனை, சிநேகிதன், நகரச்சனங்களின் வரிசை, என்னும் இவைகள் இராச்சியத்தின் அங்கங்களாகிய பிரகிருதிகளாம்.

இவற்றுள் இராசாவே பிரதானமான அங்கமாம். என்றது.

பின்னர்க் குக்குடம் வந்து இராசவன்னத்தினுடைய சரீரத்திலே மிகக்கூர்மையான நகத்தினாலே காயத்தை உண்டாக்கிற்று. அப்போது நாரையானது விரைந்துவந்து தன் சரீரத்தினாலே இராசவன்னத்தை மறைத்துக்கொண்டது. பின்னர்க் குக்குடத்தினது போர்முள்ளுகளினாற் குத்தப்பட்டும், நகங்களினாலே துண்டுதுண்டாய்க் கிழிக்கப்பட்டும், மூக்கினாற் கொத்தப்பட்டும் அந்த நாரை இராசாவைத் தன் சரீரத்தினால் மூடிக்கொண்டுபோய்த் தண்ணீரில்விட்டது. குக்குடமோ சேனாபதியாகிய நாரையின் மூக்கினால் அடியுண்டு இறந்துவிட்டது. பின்னர் நாரையும் அநேகபறவைகளினால் ஆக்கிரமித்துக் கொல்லப்பட்டது. பின்னர்ச் சித்திரவர்ணன் கோட்டைக்குள்ளே பிரவேசித்து அங்கிருந்த திரவியம் முழுவதையும் எடுப்பித்துக்கொண்டு மங்கலப்பாடகர் "சய சய" என்று ஆரவாரிக்க ஆனந்தத்தோடும அவ்விடத்தினின்று திரும்பிப்போயிற்று.

இவைகளெல்லாவற்றையுங் கேட்ட இராசபுத்திரர்கள் விஷ்ணுசர்மரை நோக்கி அந்த இராசவன்னத்தினுடைய சேனைகளுள்ளே தன் சரீரத்தைக்கொடுத்துத் தன் சுவாமியைக் காத்துக்கொண்டமையால் நாரை ஒன்றுமே புண்ணியவான்.

சo. பசுக்களெல்லாம் பசுவாகிருதியையுடைய கன்றுகளை ஈனுகின்றனவாயினுங் கொம்புகள் கழுத்தடியை உரிஞ்சுகின்ற கோபதியையீனுகின்ற பசுக்கள் மிக அரிதேயாம். என்றார்கள்.

அப்போது விஷ்ணுசர்மர் அவர்களை நோக்கித் தன் சரீரத்தினாலே அழிவில்லாத மன்ப்பாக்கியம் நிறைந்த உலகங்களைக் கிரயமாகப் பெற்றுக்கொண்ட இந்தமகாப் பிராணியானது வித்தியாதரஸ்திரி பரிசன்ங்களாலே சேவிக்கப்பட்டு அநுபவிக்கத்தக்கது.

சக. போரில் வீரரும், சுவாமியின்பொருட்டு உயிரைவிடுபவர்களும், சுவாமிக்குப் பத்தியுடையவர்களும், நன்றிய

றிதலை யுடையவர்களும் எவர்களோ அந்த மனுடர்கள் சுவர்க்கலோகத்தை அடைதற்குரியர்.

௬௨. வீரனானவன் எவ்விடத்திலே சத்துருகளினாற் சூழப்பட்டுக் கொல்லப்படுகின்றானோ அவ்விடத்தில் அவன் பயங்கரத்தன்மை யில்லாதிருந்தானாயின்; அழிவில்லாத உலகங்களை அடைகின்றான்.

விக்கிரகம், உங்களாற் கேட்கப்பட்டது. என்றார்.

அப்போது இராசபுத்திரர்களும், அதனைக் கேட்டுச் சந்தோஷமடைந்தோம். என்றார்கள்.

விஷ்ணுசர்மர் இன்னும் இப்படியே இருக்கக்கடவது.

௬௩. இராசாக்களுக்குக் கெஜதுரக பத்திகளோடு போர்செய்தற்கு ஒருகாலமும் இடமில்லாமலிருக்கக்கடவது. சத்துருக்கள் நீதியாலோசனை என்னுங் காற்றினால் அடியுண்டவர்களாகி மலையின் முழையை அடையக்கடவர்கள். என்றுசொன்னார்.

விக்கிரகம் முற்றுப்பெற்றது.

நான்காவது சந்தி.

பின்னருங் கதையை ஆரம்பிக்கும்போது அரசபுத்திரர்கள் விஷ்ணுசர்மரை நோக்கி ஆரியனே! நாங்கள் விக்கிரகத்தைக் கேட்டுக்கொண்டோம். இப்போது எங்களுக்குச் சந்தியையுஞ் சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

விஷ்ணுசர்மர், அவர்களை நோக்கிச் சந்தியையுஞ் சொல்லுகின்றேன் கேண்மின்கள். அதன் மூதற்சுலோகம் இது:—

௧. மிகுதியாய்ச் சொல்லப்பட்ட சேனைகளையுடைய இந்த இரண்டிராசாக்களின் போரும் முடிந்தபொழுது ஸ்திரமுடைய கிருத்திர சக்கரவாகங்களின் வார்த்தையினால் ஒருகணப்பொழுதினுள்ளே சந்தி செய்யப்பட்டது. என்றார்.

இராசபுத்திரர்கள் இஃது எப்படி என்று கேட்க விஷ்ணுசர்மர் சொல்வாராயினர்.

அஞ்சமயூரங்கள் கதை.

பின்னர் அந்த அரசஅன்னமானது எங்கள் கோட்டையிலே நெருப்புவைத்தவன் சத்துருபக்கத்துள்ள ஒருவனே அல்லது என் கோட்டையிலே இருப்பவர்களுள் சத்துருபக்கத்தாலேவப்பட்ட ஒருவனே யாவன்? என்று கேட்டது.

சக்கிரவாகம், தேவரீர்! உம்முடைய காரணமில்லாத பெந்துவாகிய மேகவர்ணனையும் அவன் பரிவாரத்தையும் இங்கே காணவில்லை. ஆதலின் அவனேதான் இந்தக் காரியத்தைச் செய்தான் என்று நான் நினைக்கிறேன். என்றது.

இராசா, ஒரு கணப்பொழுதுவரையில் ஆலோசித்து அப்படித்தான்; இது என்மனத் துர்ப்பாக்கியம்.

உ. இந்தக்குற்றம் விதியினால் வந்ததேயன்றி மந்திரியினால் வந்ததன்று; முயற்சியினால் நன்குசெய்யப்பட்ட காரியமும் வித்திவசத்தினால் அழிகின்றது என்றது.

ங. மந்திரி ஒருவன் துக்கமான நிலையை அடையும் போது இது தைவிகம் என்று கடவுளையே நிந்திக்கிறான். மூடன் தன் செய்கைகளால் வந்தகுற்றங்களைத் தன்னாலேதான் வந்ததென்று உணருகின்றானில்லை.

ச. தன் சுகவிருத்தியை விரும்பியிருக்கின்ற மித்திரருடைய புத்தியான்வார்த்தையை அங்கிகரித்துக் கனஞ்செய்யாதவன் எவனே அவன் காட்டத்திநின்றும் விழுந்த துர்ப்புத்தியையுடைய ஆமையைப்போல அழிவான் என்றுசொல்விற்று,

இராசா இஃது எப்படி என்று கேட்க மந்திரி சொல்கின்றது.

சங்கவிடகடகம்புக்கிரீவங்கள் கதை.

மகத்தேசத்திலே புல்லோற்பலம் என்னும் பெயருடைய வாவியிலே சங்கடம் விகடம் என்னும் பெயருடைய

அன்னங்களிரண்டு நெடுங்காலமாக வாசஞ்செய்துவந்தன. அவற்றின் மித்திரனாகிய கம்புக்கிரீவன் என்னும் ஆமையும் அவற்றோடு வாசஞ்செய்தது. இப்படியிருக்கும் நாள்களில் ஒரு நாள் கரையார் அங்கே வந்து "இன்றைக்கு நாங்கள் இங்கேயிருந்து காலையில் இந்தக் குளத்திலுள்ள மீனை, ஆமை முதலியவைகளை உணவின்பொருட்டுக் கொல்லவேண்டும்" என்று பேசினார்கள்.

இதனைக்கேட்ட ஆமையானது அன்னங்களை நோக்கி மித்திரர்களே! கரையாருடைய வார்த்தையைக் கேட்டீர்களா? இப்போது நான் செய்யவேண்டியது யாது? என்று கேட்டது. அதற்கு அன்னங்கள் செய்யத்தக்கது யாது? என்று மெல்ல மெல்ல நாங்கள் அறிந்துகொள்வோம். என்றன. ஆமை அப்படியன்று. நான் இங்கே அதிட்டவீனத்தினால் வியசனங்கொண்டிருக்கிறேன்.

௧. அநாகதவிதாதாவும், பிரத்தியுற்பன்னமதியுஞ் சுகத்தை அடைகின்றது. யற்பவிஷியனோ அழிகின்றது.

இஃது எப்படி என்று அவைகேட்க ஆமைசொல்லுகின்றது.

மூன்றுமீன்களின் கதை.

முற்காலத்திலே இக்குளத்தில இப்படியே கரையார் மீன்பிடிக்க வந்தபோது மூன்றுமீன்கள் ஆலோசனை செய்துகொண்டிருந்தன. அவற்றுள் அநாகதவிதாதா என்னும் பெயருடைய ஒரு மீன் நான் அவ்வளவும் வேறுவாவிக்குப் போகின்றேன். என்று சொல்லிக்கொண்டு வேறுவாவிக்குப் போய்விட்டது. மற்றைப் பிரத்தியுற்பன்னமதி என்னும் பெயருடைய மீன் வருங்காரியத்தின்பொருட்டுப் பிரமாணமின்மையால் நான் எங்கேபோகவேண்டும். காரியஞ் சம்பவித்தபின் காரியத்துக்குத் தக்கபடி செய்துகொள்ளவேண்டும்.

க. ஒரு வணிகன் மனைவி அவன் முன்னிலையிலே சோரநாயகன் ஒருவனை மறைத்தது போல வந்த ஆபத்தை மேற்கொள்ளுகின்றவன் எவனோ அவனே புத்திமான். என்றது.

இஃது எப்படி என்று யற்பவிஷியன் கேட்கப் பிரத்தியுற்பன்னமதி சொல்லுகின்றது.

வணிகபத்தினி இரத்தினப்பிரபையின் கதை.

விக்கிரமபுரத்திலே சமுத்திரதத்தன் என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவியாகிய இரத்தினப்பிரபை என்பவள் சேவகன் ஒருவனோடு எப்போதுஞ் சம்பாஷணை செய்துகொண்டு வந்தாள்.

க. பெண்களுக்குப் பிரியமுள்ளவன் என்றும், பிரியமில்லாதவன் என்றும் ஒருவனும் இல்லை. பசுக்கள் காட்டிலே புல்லை விரும்புதல் போலப் புதுப்புது நாயகர்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறார்கள்.

ஒருநாள் அந்த இரத்தினப்பிரபை என்பவள் அந்தச் சேவகனுடைய முகத்திலே முத்தமிடும்போது நாயகனாகிய சமுத்திரதத்தனாற் காணப்பட்டாள். காணப்பட்டபோது நாயகனுடைய சமீபத்தில் விரைந்து சென்று நாதா! இந்தச் சேவகனுக்குப் போசனமூட்டு. உமக்காகக் கொண்டு வரப்பட்ட கர்ப்பூரத்தை உண்டுவிட்டான். இவனுடைய முகத்திலே கற்பூரவாசனை பிரத்தியட்சமாய் என்னாலே மணந்தறியப்பட்டது. என்றுசொன்னாள்.

உ. பெண்களுக்கு உணவு இருமடங்கு என்றும், புத்தி நான்மடங்கு என்றும், உபாயம் அறுமடங்கு என்றும், காமம் எட்டு மடங்கு என்றும் எண்ணப்பட்டிருக் கின்றது.

இந்த வார்த்தையைக் கேட்ட சேவகன் கோபிக்கும் பாசாங்கு காட்டி எவனுடைய வீட்டிலே இவ்விதமான மனைவி இருக்கின்றாளோ, அந்த வீட்டிலே சேவகன் எப்படி

நிற்பான்? வீட்டுக்காரி கணந்தோறுஞ் சேவகனுடைய முகத்தை மணந்து பார்க்கின்றாளே!" என்று சொல்லிக்கொண்டு எழுந்து ஓடிப்போனான். பின்னர்ச் சற்புருஷனாகிய அந்த வீட்டுக்காரன் அவனை மகாப்பிரயாசத்தோடும் கூப்பிட்டுப் பிரியப்படுத்தி வேலையில் நிறுத்தினான்.

ஆதலாற்றான், ஒரு வணிகன் மனைவி அவன் முன்னிலையிலே சோரநாயகன் ஒருவனை மறைத்ததுபோல என்பது சொல்லுகிறேன். என்றது.

பின் யற்பவிஷியன் அதனை நோக்கி;

௩. எது வரற்பாலதல்லாததோ அது வரமாட்டாது. வரற்பாலதாயின்; அது வேறுவிதமாக மாறமாட்டாது வந்தேவிடும். என்னுஞ்சிந்தையின் விஷத்தைக்கெடுக்கும் இந்த மருந்து ஏன் குடிக்கப்படாமல் இருக்கின்றது? என்றது.

பின்னர் விடியற்காலத்திலே பிரத்தியுற்பன்னமதியானது வலையில் அகப்பட்டபோது இறந்ததுபோலத் தன்னைக் காட்டிக்கொண்டு கிடந்தது. பின் வலையினின்றும் எடுத்து நிலத்திற் போட்டவுடனே துள்ளிப் பாய்ந்து கம்பீரமான சலத்திற் பிரவேசித்தது. யற்பவிஷியனோ வலைஞரால் அகப்படுத்திக் கொல்லப்பட்டது.

ஆதலாற்றான், "அநாகத விதாதா" என்பது சொல்லுகிறேன்.

நான் வேறு வாவிக்குப்போகவேண்டியவிதம் எதுவோ அதனை இன்றைக்கு எனக்கு விதிக்கக்கடவீர்கள். என்றது.

அன்னங்கள், வேறு வாவிகளுள்ளே போய்விட்டால் உனக்கு நன்மைதான். பூமியிலே போதற்கு உனக்கு வழி யாது? என்று கேட்டன.

ஆமை, நான் உங்களோடு ஆகாசத்தில் வருதற்கு எது வழியோ அதனை யோசித்துச்சொல்லக்கடவீர்கள் என்றது.

அன்னங்கள், உபாயம் எப்படிச் சம்பவிக்கும்? என்று கேட்டன.

ஆமை, நீங்களிருவரும் உங்கள் மூக்குகளினலே ஒரு தடியைப் பிடித்துக்கொள்ள நான் என்வாயினல் அதனைக் கவ்விக்கொண்டு தூங்குகிறேன். நீங்களுஞ் சிறகுகளின் வலிமையினல் என்னைச் சுகமாகக் கொண்டுபோகவேண்டும். என்றது. அதற்கு அன்னங்கள் இந்த உபாயஞ் செய்யத் தக்கது,

ச. உபாயத்தைச் சிந்திக்கின்ற புத்திமான்றனே அபாயத்தையுஞ் சிந்திக்கவேண்டும். மூர்க்கனுகிய கொக்குப்பார்த்துக்கொண்டிருக்கின்ற அதன் குஞ்சுகளைக்கீரிகள் உண்டன. என்று சொல்லின.

ஆமை இஃது எப்படி என்றுகேட்க அன்னங்கள் சொலின.

நகுலபகங்கள் கதை.

வடதேசத்திலே கிருத்திரகூடம் என்னும் பெயரையுடைய மலை ஒன்று உண்டு. அம்மலைச்சாரலிற் பெருகும் நர்மதையாற்றங்கரையிலேயுள்ள ஆலமரம் ஒன்றிலே சில கொக்குகள் வாசஞ்செய்தன. அம்மரத்தின் கீழேயுள்ள புற்றிலே சர்ப்பமும் வாசஞ்செய்தது. அந்தச் சர்ப்பங்கள் கொக்குகளுடைய சிறுகுஞ்சுகளைப் பிடித்துக்கொன்று தின்று வந்தது. அப்போது அந்தச் சோகத்தினற் பீடிக்கப்பட்ட கொக்குகளினுடைய அழுகுரலைக்கேட்டு ஒரு கிழக் கொக்கு நீங்கள் இப்படிச்செய்யுங்கள். மீன்களைக் கொண்டு வந்து கீரியிருக்குங் குகைதொடுத்துப் பாம்புப் புற்றுவரைக்குங் கிரமமாய் ஒவ்வொன்றுகச் சிந்திவையுங்கள். அப்போது அந்த ஆகாரவழியினற் கீரிகள் வந்து கண்டுபிடித்துத் தங்களுக்கு இயல்பிலே சத்துருவானபடியினல் அதனைக் கொல்லக்கூடும் என்றது. அப்படிச்செய்யப்பட்டபோது சருப்பங் கீரிகளினற் கண்டு கொல்லப்பட்டது. அப்போது கீரிகள் மரத்தின் மேலேயுள்ள பறவைக் குஞ்சுகளின் சத்தத்தைக்கேட்டு அவைகளையுங் கொன்று தின்றன.

ஆதலாற்றான், உபாயத்தைச் சிந்திக்கின்ற புத்திமான் றனே அபாயத்தையுஞ் சிந்திக்கவேண்டும். என்பது முதலியவைகளைச் சொல்லுகிறோம்.

நாங்கள் உன்னைக் கொண்டுபோவதைக்கண்டு சனங்கள் யாதாயினும் பேசுவார்களே! அதனைக் கேட்டு நீ, யாதாயினும் உத்தரம் பேசுவாயாயின்; அப்போதே உனக்கு மரணம் வரும். ஆதலால் இருக்குமிடத்திற்றனே இருத்தல் உத்தமம் என்று சொல்லின.

அப்போது ஆமை அப்படிச்செய்தற்கு நான் மூடனோ? நான் யாதொன்றும் பேசமாட்டேன். என்றது. பின்னர் அப்படிச் செய்தபோது ஆகாயத்திற் கொண்டுபோகப்படுகின்ற அந்த ஆமையை இடையர்கள் யாவருங் கண்டு பின்னே ஓடிப்போய். "ஆகா! இது மகா ஆச்சரியம்! பறவைகள் ஓர் ஆமையைச் சுமந்துகொண்டு போகின்றன." என்றார்கள். அவர்களுள்ளே சிலர் இந்த ஆமை விழுமாயின்; 'இங்கேதானே பாகஞ்செய்து புசித்தல்வேண்டும். என்றும், சிலர், வீட்டுக்குக்கொண்டுபோகவேண்டும் என்றும், வேறு சிலர் குளக்கரையிலேதானே சமைத்துச் சாப்பிடவேண்டும் என்றும் பேசினார்கள்.

இந்த வார்த்தைகளெல்லாவற்றையும் ஆமை கேட்டுக் கோபங்கொண்டு சொன்னதையும் மறந்து, "உங்களுக்கு வாய்ச்சாம்பல் விழும். என்றது. அப்போது தான் வாயிற் பற்றிய தடியினின்றும் வழுவி விழுந்து இடையர்களினாற் கொல்லப்பட்டது.

ஆதலாற்றான், "தன் சுகவிருத்தியை விரும்பியிருக்கின்ற மித்திருருடைய" என்பது சொல்லலுற்றேன் என்றது.

அப்போது வேவுகாரனாகிய கொக்கு அங்கே வந்து, "தேவரீர்! முன்னர்த்தானே கோட்டையானது கணந்தோறுஞ் சோதிக்கப்படவேண்டும் என்று நான் அறிவித்திருக்கிறேன். அப்படி நீரே செய்திரில்லை! ஆதலால் அவ்தான

மின்மையின் பலன் இப்போது அநுபவிக்கப்பட்டது. கோட்டைக்கு நெருப்பு வைத்ததும் அந்தக் கிருத்திரத்தினுற்பிரயோகிக்கப்பட்ட மேகவர்ணன் என்னுங் காகந்தான் என்று சொல்லிற்று. இதனைக் கேட்ட இராசாப் பெருமூச்சுவிட்டு,

க. விபட்சத்தினுலாவது, உபகாரத்தினுலாவது சத்துருக்களிடத்தே எவன் விசுவாசம் வைத்திருக்கின்றானோ அவன் நித்திரைசெய்து மரத்து நுனியிலிருந்து விழுந்தவனைப்போல விழித்தெழுகின்றான். என்றது.

பின் பிரணிதியாகிய கொக்கு, இந்தக் கோட்டையை எரித்துவிட்டு எப்போது மேகவர்ணன் போனுனே அப்போது சித்திரவர்ணன்." இந்த மேகவர்ணனைக் கற்பூரத்தீவுக்கு இராசாவாக அபிஷேகஞ்செய்துவைக்கவேண்டும். என்றான்.

உ. தன் கடமைகளைச் செய்துமுடித்த சேவகனுடைய செய்கைகளை நாசமாக்காமல் அவனை உபகாரத்தினுலும், மனத்தினுலும், வாக்கினுலும், பார்வையினுலும் ஒருவன் சந்தோஷப்படுத்தக் கடவன். என்றது.

அப்போது சக்கரவாகம் சுவாமீ ! பிரணிதி சொல்லுகின்ற வார்த்தையைக் கேட்டீரோ ! என்றது.

இராசா அதினுல் என்ன ! என்றது. பிரணிதியாகிய கொக்குப் பின்னுஞ் சொல்லுகின்றது, பின்னர்ப்பிரதான மந்திரியாகிய கிருத்திரம் இராசாவை நோக்கித்தேவரீர் ! இதுவும் யோக்கியமன்று; ஒருவனை உயர்ந்த உத்தியோகத்தில் வைத்து அநுக்கிரகஞ் செய்துவிட்டுப் பின்னர்அவனுக்கு என்ன செய்யத்தக்கது ?

ந. அதிகாரத்தில் வைக்கப்பட்டவனைக் கண்டிப்பது எப்படி ? இராசாவே ! நீசருக்குச் செய்த உபகாரம் வெண்மணலிலே முத்திரையிட்டதுபோலவிருக்கும்.

நீசன் ஒருபோதும் உயர்ந்தநிலையில் வைக்கப்படத் தக்கவனல்லன்.

ச. நீசனானவன் புகழப்படத்தக்க உயர்ந்த நிலையில் வைக்கப்படுதற்கு யோக்கியனல்லன். வைக்கப்பட்டானாயின்; ஒரு மூஷிகம் புலியின் தன்மையை அடைந்தபின் முனியைக்கொல்ல விரும்பினதுபோலத் தன் யசமானனையுங்கொல்ல விரும்புகின்றான். என்றது.

சித்திரவர்ணன் இஃது எப்படி என்றுகேட்கக் கிருத்திரஞ் சொல்லுகின்றது.

முனிமூஷிகங்கள்கதை.

கௌதமாரணியத்திலே மகாதபன் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய ஆச்சிரமசந்நிதானத்திலே காகத்தின்வாயினின்றும் விழுந்த ஓர் எலிக்குஞ்சைக்கண்டு தயைகொண்டு குளநெல்லரிசியைக் கொடுத்து அதனை வளர்த்தார். இப்படியிருக்கையில் அந்த மூஷிகத்தைக் கொன்று தின்னும்படி ஒரு பூனை பின்தொடர்ந்தது. அதனை முனிவர் கண்டு தம்முடைய தவவலிமையினாலே அந்த மூஷிகத்தைப் பெலமுடைய ஒரு பூனையாக்கினார். அந்தப் பூனையும் நாய்க்குப் பயப்பட்டதனால் அதனைப் பின் நாயாக்கினார். நாய்க்கும் புலியினால் மகாபயம் உண்டாயிற்று. அதன்பின் அதனையும் புலியாக்கினார். இப்படிச் செய்தபோது புலியைத்தானும் எலியினின்றும் விசேஷமுடையதாக எண்ணினாரல்லர்.

அப்போது அவ்விடத்திலிருந்த சனங்களெல்லாம் அந்தப் புலியை நோக்கி, "இந்த முனிவரால் இந்த மூஷிகம் புலியின் நிலையிலே கொண்டுவரப்பட்டது என்றுசொன்னார்கள். இதனை அந்தப்புலிகேட்டு வேதனைப்பட்டு "இந்த முனிவர் எவ்வளவுகாலம்வரையுஞ் சீவிக்கின்றாரோ அவ்வளவுகாலமும் என்னுடைய இந்த அபகீர்த்தியான சரீரக்கதை நீங்கமாட்டாது." என்று சிந்தித்து முனிவரையுங் கொல்லும்படி முயற்சி செய்தபோது முனிவரும் அதன் விருப்பத்தை

அறிந்து தம்முடைய தவவலிமை யினால் "பின்னும் மூஷிகமாகக்கடவாய்." என்று சொல்லிமூஷிகமாக்கினார்.

ஆதலாற்றான், "நீசனானவன் புகழப்படத்தக்க உயர்ந்த நிலையில் வைக்கப்படுதற்கு யோக்கியனல்லன்." என்பது முதலியவைகளைச் சொல்லுகின்றேன்.

இன்னும் தேவரீர்! இது இலகுவாகச் செய்யத்தக்கதென்றுஒருபோதும் எண்ணவேண்டாம். கேளும்:—

க. ஒரு மூர்க்கமான கொக்கானது உத்தமமும், அதமமும், மத்தியமுமான அனேக மீன்களை உண்டதன்பின் பேராசையினால் ஒரு நண்டினைப் பிடிக்க முயன்று அதனாற் கொல்லப்பட்டது. என்றது.

சித்திரவர்ணன் இஃது எப்படி என்று கேட்க மந்திரி சொல்லுகின்றது.

வலாககர்க்கடகங்கள்கதை.

மாளவதேசத்திலே பதுமகர்ப்பம் என்னும் பெயருடைய வாவியொன்றிருந்தது. அங்கே வயோதிகமான கொக்கு ஒன்று சாமர்த்தியமில்லாமல் வியாகுலமடைந்தவனைப் போலத் தன்னைக் காட்டிக்கொண்டிருந்தது. அதனை ஒரு நண்டு தூரத்திலே கண்டு, பெரியவரே! நீர் இங்கே ஆகாரத்தை விட்டுவிட்டு நிற்கிறதென்ன? என்று கேட்டது. கொக்கு அதனை நோக்கி மீன்களே என்னுடைய சீவனத்துக்கு ஆதாரமானவைகள். இங்கே கரையார் வந்து அவைகளை அவசியங் கொல்லவேண்டும் என்று பேசினது என்காதுக்குக்கேட்டது. என்னுடைய சீவனம் நட்டம் போதலினால் எனக்கு மரணஞ் சமீபிக்கும் என்பதை அறிந்து போசனத்திலே தானும் பிரியமில்லாமல் இருக்கிறேன். என்றது.

அப்போது மீன்கள், இச்சமயத்திலே எங்களுக்கு அவ்வளவு உபகாரஞ் செய்வதுவாகவே இதுகாணப்படுகின்றது. ஆதலால் இதனிடத்தே செய்யவேண்டியது யாதென்று கேட்கக்கடவோம். அப்படியே சொல்லப்பட்டிருக்கின்றது.

க. உபகாரஞ் செய்கின்ற சத்துருவோடு சந்திசெய்ய லாமாயினும், அபகாரஞ்செய்கின்ற மித்திரனோடு சந்திசெய் யலாகாது; இவ்விரண்டுமே உபகார அபகாரங்களுக்கு இலக் கணம் என்று பகுத்தறியவேண்டும்." என்று ஆலோசித்துக் கொண்டு கொக்கே! நாங்கள் இரட்சிக்கப்படுதற்கு உபாயம் யாது? என்று கேட்டன.

கொக்கு, அவைகளை நோக்கி இரட்சித்தற்குக் காரண மாக வேறொரு வாவியிருக்கின்றது. நான் உங்களை ஒவ்வொ ன்றாக அங்கே கொண்டுபோய் விடுகிறேன். என்று சொல் லிற்று. மீன்களும் பயந்து அப்படியே செய்க என்றன.

பின்னர் அந்தத்துட்டக்கொக்கு அந்தமீன்களைஒவ்வொ ன்றாகக்கொண்டுபோய் யாதோ ஒரு தேசத்திலிருந்துதின்று விட்டுப்பின்னர் வந்து "அவைகளை நான் வேறொருவாயிலி லே கொண்டுபோய் விட்டுவிட்டேன்." என்று சொல்லிற்று.

பின்னர் நண்டு அதனை நோக்கிக் கொக்கே என்னையும் அங்கே கொண்டுபோய் விடு; என்றது.

அப்போது கொக்கும் அபூர்வமான அந்த நண்டின் மா மிசத்தில் விருப்புடையதாகி அதனை மரியாதையோடுங் கொ ண்டுபோய்விட்டது. அப்போது நண்டு மீன்முள்ளுகள் நிலத்திலே சிந்திக்கிடத்தலைக்கண்டு ஆ! அதிட்டக் குறைவுள் ளவனாகிய நான் கொல்லப்பட்டவனாயிருக்கிறேன். அப்படி யாயினும்; இச்சமயத்துக்கு உசிதமான காரியத்தைச் செய்ய க்கடவேன்.

உ. பயங்கரமானது எவ்வளவும் வராமலிருக்கின்ற தோ அவ்வளவும் பயங்கரத்துக்கு பயப்படவேண்டும். வந்த பயங்கரத்தையோ ஒருவன் பார்த்துத் தான் பயப்படாமல் எதிர்க்கவேண்டும்.

ங. பகைவர்களினாற் சூழப்பட்ட அறிஞனானவன் தன க்குச் சிறிதேனுந் தப்பிக்கொள்ள வழியில்லை என்று கண் டபோது அவர்களோடு போர்செய்து மரிக்கிறான்.

என்றிப்படியே ஆலோசித்துக்கொண்டு அந்தக்கொக்கின்னது கழுத்தை அறுததுவிட்டது.

ஆதலாற்றான், "ஒருமூர்க்கமான கொக்கு" என்பது சொல்லலுற்றேன். என்றது.

பின்னருஞ் சித்திரவர்ணன் அதனை நோக்கி, மகாமந்திரீ! இவ்வளவையுங் கேள்; அங்கே இருககின்ற மேகவர்ணராசனுற் கற்பூரத் தீவிலிருக்கின்ற உத்தம வஸ்துக்களெல்லாம் எங்களுக்கு அனுப்பவேண்டியவைகள்; அதனுற் பெருஞ்சிறப்போடும் நாங்கள் விந்திய மலையிலிருப்போம். என்று ஆலோசித்திருக்கிறேன். என்றது.

அப்போது தூரதரிசி புன்னகைகொண்டு தேவரீர்! கேளும்;

ச. எவன் வராதகாரியத்தைச் சிந்தித்துச் சந்தோஷப்படுகின்றானே அவன் பாண்டத்தை உடைத்த பிராமணனைப் போல அவமானமடைவான். என்றது.

இராஜா இஃது எப்படி என்று கேட்கத் தூரதரிசி சொல்லுகின்றது.

பொரியரிசிச்சராவமுடைத்தபிராமணன் கதை.

தேவகோட்டம் என்னும் நகரத்திலே தேவசன்மா என்னும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவனால் ஒரு விஷுவசங்கிராந்தியிலே பொரியரிசிமா நிறைந்த சராவம் ஒன்று அடையப்பட்டது. அவன் அதனை எடுத்துக்கொண்டு போகும்போது சூரியனுடைய உட்டணத்தினாலிளைத்து மட்கலங்கள் நிறைந்திருக்கின்ற ஒரு குயவனுடைய மண்டபத்திலே நித்திரைசெய்தான். அப்போது பொரியரிசிமாவைப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டுக் கையிலே ஒரு தடியை எடுத்துவைத்துக்கொண்டு, "நான் இந்தப் பொரியரிசிமாப் பாத்திரத்தை விற்றுப் பத்துவராடகம் பெறுவேனாயின்; ஏற்ற சமயங்களிலே அந்த வராடகங்களைக்கொண்டு குடம், சரா

லும் முதலியவற்றை வாங்கி விற்று அதனாலே அனேகமாகப் பெருகிய திரவியங்களினால் பின்னும் பின்னுங் குவியல் குவியலாய் விலையுயர்ந்த புடைவைமுதலியவைகளை வாங்கிவிற்று வாணிகஞ்செய்து இலட்சத் தொகையான திரவியங்களைச் சம்பாதித்து நாலு விவாகஞ்செய்வேன். அப்படி விவாகஞ் செய்யப்பட்ட மனைவிகளுள் அதிகரூப யௌவனவதி எவளோ அவளிலே நான் அதிகம் பற்றுவைத்திருப்பேன். அதன்பின் பொறாமையுண்டாகி எப்போது அந்தச் சபத்தினிகள் ஒருவர்க்கொருவர் விரோதமாவார்களோ அப்போது நான் கோபங்கொண்டு சகலசபத்தினிகளையுந் தடியினாலடிப்பேன்,'' என்று சிந்தித்துக்கொண்டு அந்தத்தடியை வீசினான். அதனாற் பொரியரிசிமாப் பாத்திரம் பொடியாயிற்று. அதுவன்றி அநேக மட்கலங்களும் உடைந்தன. மட்கலமுடைந்த சத்தத்தைக் குயவன் கேட்டு வந்து அந்தப் பிராமணனைக் கழுத்திலே பிடித்துத்தள்ளி மண்டபத்தினின்றும் வெளியே நீக்கிவிட்டான்.

ஆதலாற்றான், "எவன் வராதகாரியத்தைத்சிந்தித்துச்சந்தோஷப்படுகின்றானோ'' என்பதுசொல்லுகின்றேன்என்றது.

அப்போது இராசா இரகசியத்திலேகிருத்திரமந்திரியை நோக்கிப் பிதாவே! எப்படிச்செய்யவேண்டுமோ அப்படியே உபதேசஞ்செய்யும் என்றது. கிருத்திரஞ் சொல்லுகின்றது.

க. தத்துவச் செருக்கின்றிக் கர்வங்கொள்ளுகின்ற இராசாவையும், காயப்பட்ட அல்லது அடங்காத யானைகளையுங் கெட்டமார்க்கங்களில் நடத்துகிறவர்களே அவகீர்த்தியை அடைவார்கள்.

தேவரீர்! கோட்டை இடிக்கப்பட்டது எங்கள் பெலனின் கருவத்தினாலா? தேவரீருடைய மகிமையினாற் காட்டப்பட்ட உபாயத்தினாலல்லவா? என்றது.

அப்போது கிருத்திரம் "என்னுடைய புத்தியின்படி செய்வீராயின்; எங்கள் தேசத்துக்குத் திரும்பிப் போக்வே

ண்டும். அப்படிச் செய்யாதிருந்தோமாயின்; சமீபித்திருக்கின்ற மழைக்காலத்திலே சமபெலனுடைய சேனைகளோடு பின்னும் ஒருபோது யுத்தம் நேரிடும். பிறனுடைய தேசத்திலே யிருக்கின்ற நாங்கள் எங்கள் தேசத்துக்குப் போவதும் பிரயாசமாயிருக்கும். சுகத்தையும் மகிமையையும் அடையும் பொருட்டுச் சத்துருவோடு சமாதானஞ் செய்துகொண்டு போகக்கடவோம். நாங்கள் கோட்டையைப்பிடித்துக் கீர்த்தியையும் பெற்றுக்கொண்டோம். என்னுடைய சம்மதம் அவ்வளவும் இதுதான்.

உ. ஏனெனில்; தன்கடமையை முன்னரோ வைத்துத் தன்சுவாமியினுடைய பிரியத்தையும், பிரியவினத்தையும் விட்டுவிட்டு இராசாவுக்குப் பிரியமில்லாத சத்தியம் என்னும் பத்தியத்தைச் சொல்லுகிறவன் எவனோ அவனே இராசாவின் தோழனும்.

ந. மேலும், போரிலே வெற்றியடைதல் சந்தேகமாயிருந்தால்; சமமானவனோடு தானுஞ் சந்திசெய்யவேண்டும் அதனைப்பற்றிச் சந்தேகப்படப்படாதென்று வியாழபகவான் சொல்லியிருக்கிறார்.

ச. ஒரு பாலகனே யன்றிச் சினேகிதனையுஞ், சேனையையும், இராச்சியத்தையும், தன்னையுந், தன்கீர்த்தியையும், போரிலே சந்தேகமான தராசில் வைக்கத்தக்கவன் யார்?

ரு. மேலும், சிலகாலத்திற் சமவீரமுடைய இருவரது போரிற்றனும் விநாசமுண்டாகும்; சுந்தர் உபசுந்தர் என்னுஞ் சமவீரர்கள் இருவரும் ஒருவரால் ஒருவர் கொல்லப்பட்டாரன்றோ! என்றது.

இராசா இஃது எப்படி என்றுகேட்க மந்திரி சொல்லுகின்றது.

சுந்தோபசுந்தர்கதை.

முற்காலத்திலே தைத்தியசகோதரர்களாகிய சுந்தர் உபசுந்தர் என்னும் பெயருடைய இருவரும் மூவுலகத்தையும் இராச்சியஞ் செய்யவேண்டும் என்னும் விருப்பத்தினுற் சரீரத்தை மிகவருத்தி நெடுங்காலமாகச் சந்திரசேகரனைப் பூசை செய்து வந்தார்கள். அப்போது பகவான் சந்தோஷப்பட்டு அவர்களை நோக்கி "வேண்டியவரத்தைக் கேளுங்கள்" என்றார். பின் அவர்களின் ஆளுஞ் சரஸ்வதி அவர்கள் சொல்ல விரும்பியிருந்ததைவிட்டு வேறொன்றைச் சொல்லும்படி செய்தாள். அவர்களும் பகவானே! நீர் எங்களிலே பிரியமுடையவராயின்; உமது மனைவியாகிய பார்வதியை எமக்குக் கொடுத்தருளும் என்றார்கள். அதனுற்கோபங்கொண்ட பகவானுனவர் வரங்கொடுத்தல் அவசியமாக இருந்தபடியால் மூடர்களாகிய அவர்களுக்கு வேறொருபெண்ணைக்கொடுத்தார்.

பின்னர் அவர்கள் அவளுடைய உருபத்தினுலும், பேரழகினுலும் மயங்கி உலகத்தை அழிக்க விரும்பிப் பாவம் என்னும் இருளினுல் மூடப்பட்டு இருவருந் தனித்தனியே எனக்கு எனக்கு என்று ஒருவரோடொருவர் கலகஞ்செய்து தங்களாலே முடிவுசெய்துகொள்ள இயலாமல் ஒரு மத்தியஸ்தனை நடுச்சொல்லும்படி கேட்கவேண்டும் என்று மனத்தில் நிச்சயித்தபோது அந்தக் கடவுள்தானே ஒரு வயோதிகப் பிராமண வேடத்தைத் தரித்துக்கொண்டு அங்கே வந்து நின்றார். அப்போது அவர்கள் இருவரும் அந்தப் பிராமணனை நோக்கித் தவவலிமையினுலே நாங்கள் பெற்றுக்கொண்ட இந்தப்பெண் எங்களில் யாவருக்குரியவள் என்பதனை நியமித்துச் சொல்லும் என்றுகேட்டார்கள். பிராமணன் அவர்களை நோக்கி,

க. உயர்ந்த ஞானத்தினுற் பிராமணனும் பெலவானுயிருந்தால் வணிகனும், த்விசசேவையினுற் சூத்திரனும் பூசிக்கப்படவேண்டும்.

நீங்கள் இருவருஞ் சத்திரிய தருமமுடையவர்களாதலா ற்போர்தானே உங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றது என் ருன். அப்பிராமணனுடைய வார்த்தை அவர்களுடைய மன த்தில் அழுந்தி ஒருவரை ஒருவர் ஒத்த சமவீரர்களாகிய அவ் விருவரும் ஒரே காலத்தில் ஒருவரை ஒருவர் கொன்று நாச மடைந்தார்கள்.

ஆதலாற்ருன், "சிலகாலத்திற் சமவீரமுடைய இருவ ரது போரிற்றுனும் விநாசமுண்டாகும்." என்பது சொல்லு கிறேன் என்றது.

இராசா அப்படியாயின்; முன்னரோ இதனை ஏன் எனக் குச் சொல்லவில்லை? என்று கேட்டது.

மந்திரி, அப்போது நீர் என்னுடைய வார்த்தையை மு டிவுவரைக்குங் கேட்டீரா? அப்படியாயினும் என்னுடைய எண்ணப்படி போருக்கு ஆரம்பிக்குங் காலமன்று; இந்த இரணியகர்ப்பன் சமாதானஞ்செய்தற்கன்றிப் போர்செய்தற் குத் தக்கவனல்லன்.

உ. சத்தியமுள்ளவன், ஆரியன், தார்மிகன், ஆரியன் சகோதரக்கூட்டமுடையவன், பெலவான் அநேக யுத்தத்தி லே வெற்றிகொண்டவன் என்னும் இந்த எழுவரோடுஞ் சந் திசெய்யவேண்டும்.

ங. சத்தியமுள்ளவன் சத்தியத்தைத்தானே பாதுகாத் துக்கொண்டிருக்கிருன். ஆதலால் அவனோடு சந்திசெய்யும் போது மாறுபாடு வராது. ஆரியன் பிராணக்கேடு வந்த போதினும் அநாரியத்தன்மையை அடையமாட்டான் என் பது வெளி.

ச. வியவகார விஷயத்திலே விருப்புடைய தார்மிகனு க்கு ஒவ்வொன்றுஞ் சேர்ந்திருக்கின்றது. தார்மிகனானவன் பிரசைகளிடத்தே அன்புந் தருமமுமுள்ளவனாதலின்; துக் கங்களை நீக்குகிறவனாய் இருக்கிருனன்றே!

ரு. விநாசஞ் சமீபத்திருக்கும்போது ஆரியனல்லாதவனோடு சந்திசெய்துகொள்ளவேண்டும், அவனை அடைதலின்றி வேறொன்றினாலும் காலத்தைக் கழித்தலாகாது.

௬. நெருக்கமான முள்ளுகளினாற் சூழப்பட்டுக் கூடித்திரண்டிருக்கின்ற மூங்கிலைப்போலச் சகோதர கூட்டமுடையவனை வெற்றிகொள்ளுதல் கூடாது.

எ. பெலவானோடு போர்செய்யவேண்டும் என்று விதியில்லை. முகிலானது காற்றுக்கெதிராக ஒருகாலமும் போகமாட்டாது.

அ. சமதக்கினி முனிவருடைய புத்திரனாகிய பரசுராமனைப்போலப் பலபோர்களிலும் வெற்றியடைகிறவனுடைய பிரதாபத்தினால் எல்லாம் எவ்விடத்திலும் எப்போதும் அநுபவிக்கப்படுகின்றன.

௯. அநேக யுத்தவிசயமுள்ளவன் எவனோடு சந்திசெய்கின்றானோ அவனுடைய பிரதாபத்தினால் அவன் பகைவர்கள் அவனுக்குச் சீக்கிரம் வசப்படுகிறார்கள்.

இந்த இராச அன்னம் அநேக நற்குணங்களுடையதாகையால் இங்கே அதனோடு சமாதானமாதலே தகுதி என்று சொல்லிற்று.

சக்கரவாகம், வேவுகாரா! சத்துருவின் பாளையத்துக்குப்போய்ச் சமாசாரங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டு திரும்பிவா என்றது.

பின்னர் இரணியகர்ப்பன் சக்கரவாகத்தை நோக்கி மந்திரீ! சந்திசெய்யத்தக்கவர்கள் எத்தனை பேர் என்பதனை நான் அறிய விரும்புகிறேன் என்றது.

அப்போது மந்திரி இராசாவை நோக்கித் தேவரீர்! சொல்லுகிறேன் கேளும்;

௧0. பாலகன், விருத்தன், நெடுங்காலரோகி, ஞாதிகளினால் விலக்கப்பட்டவன், பயமுடையவன், பயப்படுகின்ற ச

ணங்களையுடையவன், உலுத்தன், உலுத்த சனங்களையுடைய வன், பிரதான உத்தியோகஷ்தர்களாற் பற்று வைக்கப்படா தவன், உலக விஷயங்களிலே அதிகம் பற்றுள்ளவன், அநே க சிந்தையான மந்திராலோசனையுடையவன், தேவரையும் பி ராமணரையும் நிந்திக்கிறவன், அதிட்டமில்லாதவன், விதியை யே எப்போதுஞ் சிந்திக்கிறவன், பஞ்சத்தினாலும் பெருவா ரிக்காய்ச்சலினாலும் உபத்திரவப்படுகின்றவன், ஒழுங்கில்லா தசேனையையுடையவன், தன் தேசத்தினில்லாதவன், அநேக சத்துருக்களாற் சூழப்பட்டவன், ஏற்றகாலத்திற் சேனையில் லாதவன், சத்தியமார்க்கத்தினின்று பிரிந்தவன் என்னும் இ ருபது புருடர்களுஞ் சந்திசெய்யப் படாதவர்கள்.

௧௧. இந்த இருபதின்மரோடுஞ் சந்திசெய்யப்படாது; இவர்களோடு யுத்தமாத்திரஞ் செய்யவேண்டும். இவர்கள் போர்செய்தார்களாயின், சீக்கிரமாகச் சத்துரு வசத்திற்போ கின்றார்கள்.

௧௨. பாலகனுடையஅற்பமகிமையினாற்சனங்கள் போர் செய்ய விரும்பமாட்டார்கள். ஏனெனில்; பாலகன் போர் செய்கிறவர்களுக்கும், செய்யாதவர்களுக்கும் பலனை அறிந் துகொடுத்தற்குச் சக்தியில்லாதவனேயாம்.

௧௩. விருத்தனும், நெடுங்காலத்துன்பமுடையவனுமா கிய இருவரும் உற்சாக மின்மையாலே தங்களினாற்றுங்களை சந்தேசமில்லாமல் மேற்கொள்ளப்படுகிறார்கள்.

௧௪. ஞாதிகள் யாவராலும் விலக்கப்பட்டவன் இலகு வில் வெற்றிகொள்ளப்படத் தக்கவனேயாம். சுற்றத்தவர்க ளாகிய அவர்களே தங்கள் மரியாதையினால் அவனைக் கொல் லுகிறார்கள்.

௧௫. பயப்படுகிறவன் போரைவிட்டோடுதலினாற்றான் றானே நாசமாகின்றான். அவனுடையஜனங்கள் அப்படியே அவனைவிடுகிறார்கள். உலுத்தனைவன் கொள்ளையாகக்கொ ண்ட பொருளைத் தன்னேவற்காரருக்குக் கொடாமையினால்

அவர்கள்போர்செய்யார்கள். உலுத்தன்வேலைக்காரர்களுக்குச் சமபளங்கொடாமையினால் அவர்களாற் கொல்லப்படுகிறான்.

கசு. பிரதான உத்தியோகஸ்தர்களாற் பற்றுவைக்கப் படாதவன் போர்நடுவிலே அவர்களால் விடப்படுகிறான். உலகவிஷயங்களிலே அதிகம் பற்றுள்ளவன் சுகமாய்ச் சத்துருக்களினாற்சூழப்படுகிறான்.

கஎ. அநேக சிந்தையான மந்திராலோசனையை யுடையவன் மந்திரிமாருக்கு வெறுப்புடையவனாய் இருக்கிறான். அவன் நிலையில்லாதமனமுடையவனாதலால் அவசியமான காரியம் நேரிடும்போது அவர்களாற் கவனியாமல் நடத்தப்படுகிறான்.

கஅ. தருமமானது எப்போதும் பெலமுடையதாயிருத்தலினாற் பிராமணர்களையுந் தேவர்களையும் நிந்திக்கிறவன் தானேதானே பழுதுபடுகிறான். அதிட்டமில்லாதவனும் அப்படியே அழிகின்றான்.

கக. செல்வத்துக்கும் ஆபத்துக்கும் விதிதானே காரணமென்று விதியை விசுவசித்துத் தியானிக்கிறவன் தானே யாதொரு சேட்டையுமின்றி இருப்பான்.

உ0, பஞ்சத்தினாலும், பெருவாசிக்காய்ச்சலினாலும் உபத்திரவப்படுகிறவன் தானேதானே தளர்ச்சி யடைகின்றான். ஒழுங்கீனமான சேனையையுடையவன் போர்செய்ய வலிமையில்லாதவனாகின்றான்!

உக. தன்தேசமல்லாத விடத்திலிருப்பவன் சொற்ப பகைவராற்றானுங்கொல்லப்படுகிறான். முதலையானது சிறிதாயிருந்தாலுஞ்சலத்திலே பெரிய யானையையும் இழுக்கின்றது.

உஉ. வெகுசத்துருக்களினாற்பயப்படுத்தப்பட்டிருக்கிறவன் பருந்தின் நடுவில் அகப்பட்ட புறாவைப்போல எந்த வழியாற்போனாலும் அந்தவழியிலே ஆபத்தை அடைகிறான்.

உங. காகமானது இரவிலே வெளிப்பட்டதாயிற்; கூகையினாற் கண் கொத்தப்படும். அதுபோல வற்றகாலத்தி

லே சேனையில்லாதவன் காலத்தோடு போர்செய்தலினுற்கொ ல்லப்படுகிறுன்.

உச. சத்தியமார்க்கத்தினின்று பிரிந்தவனுடன் ஒரு போதுஞ் சந்தி செய்யப்படாது. அவன் சந்தியைச் செய்ய ப்பட்டவனுயிருந்தாலும் நீதியின்மையால் விரைவில் அதனை முரிக்கின்றுன்.

இன்னுஞ்சொல்லுகிறேன் கேளும். சந்தி, விக்கிரகம், ஆசனம், யானம், சஞ்சிரயம், துவைதீபாவம் என்னும் இவை கள் சாட்குண்ணியம் என்றுசொல்லப்படும்.

யுத்தகர்மாரம்ப உபாயம், புருஷத்திரவிய சம்பத்து, தே சகாலவிபாகம், விபாதப்பிரதீகாரம், காரியசித்தி என்னும் இ வைகள் பஞ்சமந்திரம் என்றுசொல்லப்படும்.

சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் இவைகள் சதுருபாயம் என்று சொல்லப்படும்.

உற்சாகசத்தி, மந்திரசத்தி, பிரபுசத்தி என்னும் இவை கள் முச்சத்திஎன்று சொல்லப்படும்.

இவைகளெல்லாவற்றையும் ஆலோசித்து நடக்கின்ற இ ராசாக்கள் எப்போதும் வெற்றியுடையவர்களாகின்றுர்கள்.

உரு. பிராணத்தியாகம் என்னும் மூலியத்தினுற்றுனும் எந்த இலக்குமி அடையப்படாமலிருக்கின்றுளோ அந்த இ லக்குமி சஞ்சலமுள்ளவளாய் நீதியை அறிந்தவர்களுடைய வீ டுகளுக்கு ஓடிப்போகின்றுள்.

உசா. சமமாய்ப்பிரிக்கப்பட்ட செல்வத்தையும் ஒற்றர் மறைக்கின்ற இரகசியமந்திராலோசனையையும் எவன் உடை யானே எவன் பிராணிகளிடத்திற் பிரியமில்லாதவைகளைப் பேசாமலிருக்கின்றுனே அவன் சமுத்திரம் வரைக்கும் பூமி யை ஆளுகிறுன்.

மேலுந் தேவரீர்! மகாமந்திரியாகிய கிருத்திரத்தோடு சமாதானஞ் செய்யவேண்டும். என்று பேசியிருந்தாலும்

அதன் சுவாமியாகிய இராசா முந்தினவெற்றிக்கர்வத்தினுற்க வனிக்கமாட்டாது. ஆதலால் எங்கள் மித்திரனும், சிங்களத்து வீபராசனுமாகிய "மகாபலன்" என்னும் நாவைதானே சம்புத்தீவிலே ஒரு கலகத்தை உண்டாக்கக்கடவது.

௨௭. வீரனானவன் காரியத்தை நன்ருய் மறைத்துக்கொண்டு நல்ல அடக்கமான சேனையுடனே படையெடுத்துப்போய்ப் பகைவனைத் திகைக்கும்படி செய்யவேண்டும். அக்கினியிற்காய்ச்சப்பட்ட பொருள் எதனுல் நன்ருகக்காய்ச்சப்பட்டதோ அதனுேடு சேர்ந்துகொள்ளுகின்றது என்றது.

இராசா "அப்படியிருக்கக்கடவது" என்று சொல்லி இரகசியமாக ஒரு காகிதம் எழுதி விசித்திரன் என்னுங் கொக்கினிடத்தே கொடுத்து அனுப்பிவிட்டது.

பின்னர் வேவுகாரன் வந்து தேவரீர்! கேளும்; இவ்வளவுந்தான் அவ்விடத்துச்செய்தியென்று நடந்தவற்றைச்சொல்லிற்று. பிருத்திரம், தேவரீர்! மேகவர்ணன் அங்கே நெடுங்காலம் வசித்தது. இரணியகர்ப்பராசன் சமாதானஞ்செய்யத்தக்க குணமுடையனே அல்லனே என்பதைத் அது அறியமாட்டாதா? என்றது.

அப்போது சித்திரவர்ணன், மேகவர்ணனை அழைத்து "வாயசமே! அந்த இரணியகர்ப்பன் என்னும் இராசன் எப்படிப்பட்டவன்? சக்கரவாகம் என்னும் மந்திரி எப்படிப்பட்டது? என்று கேட்டது.

மேகவர்ணன் இராசாவை நோக்கித்தேவரீர்! அந்த இரணியகர்ப்பராசன் தருமனுக்குச் சமமான மேன்மையுஞ் சத்தியவாக்குமுடையவன். சக்கரவாகத்துக்குச் சமமான மந்திரியை எங்கேயாவது காணுதல் அரிது என்றது.

இராசா அப்படியிருந்தால், அது உன்னுல் எப்படி வஞ்சிக்கப்பட்டது? என்றுகேட்டது.

மேகவர்ணன், புன்னகைகொண்டு தேவரீர்! விசுவாசத்தை அடைந்திருக்கிறவர்களை வஞ்சித்ததிலே என்னசாமர்த்தி

யம்? மித்திரையாய் இருப்பவனுடைய சரீரத்திலேறி அவனைக்கொல்லுதல் வீரமா?

தேவரீர்! கேளும்; அந்த மந்திரி முதன்முதல் என்னைக் கண்டபோதே அறிந்துகொண்டது. ஆயினும், அந்த இராசா மகாமகிமையுள்ளது. அதனை நான் அனுப்பிப்போட்டேன்.

உஅ. சத்தியம் பேசுகின்ற துர்ச்சனனை எவன் தனக்குச் சமமாக எண்ணுகின்றானோ அவன் ஒரு பிராமணன் வெள்ளாட்டினால் வஞ்சிக்கப்பட்டது போல வஞ்சிக்கப்படுவான், என்றது.

இராசா இஃது எப்படி என்று கேட்க மேகவர்ணன் சொல்கின்றது.

பிராமணசாகங்கள்கதை.

கௌதமாரணியத்திலே கீர்த்திபொருந்திய யாகம் ஒன்று இருந்தது, அதற்காக ஒரு பிராமணன் வேறு கிராமத்துக்குப்போய் வெள்ளாடு ஒன்றை விலைக்கு வாங்கிக் கழுத்திலே வைத்துக்கொண்டு போனான். அப்படிக் கொண்டு போதலை மூன்று தூர்த்தர்கள் கண்டு, ஏதாயினும் ஓர் உபாயத்தினால் இந்த வெள்ளாட்டினைப் பெற்றுக்கொள்வோமாயின்; அப்போது எங்கள் புத்தி மேன்மையாயிருக்கும் என்று ஆலோசித்து நெடுந்தூரத்திற்கிடையில் அந்தப்பிராமணன் போகும் வழியிலே நிற்கின்ற மூன்று மரத்தினடியிலே அந்த மூவருந் தங்கியிருந்தார்கள்.

முன்னே நின்ற தூர்த்தன், பிராமணன் வருதலைக் கண்டு, "ஓகோ! பிராமணா! நீ, நாயொன்றைக் கழுத்திலே வைத்துச் சுமந்துகொண்டு போகிறதென்ன?" என்று கேட்டான். அப்போது பிராமணன், "இது நாயன்று யாகத்துக்குரிய ஆடு" என்று சொல்லிவிட்டுப் போயினான்.

பின்னர் ஒரு கூப்பிடுதூரம்வரையிலே நின்ற இரண்டா ந்தூர்த்தனும் அப்படியே கேட்டான். பிராமணன் அதனை க்கேட்டு வெள்ளாட்டைப் பூமியிலே வைத்துவிட்டுத் திரும் பத்திரும்பப் பார்த்துப் பின்னுங் கழுத்திலே எடுத்து வைத் துக்கொண்டு அசைந்து அசைந்து போனான்.

க. தீயவர்களுடைய வார்த்தையினாலே நல்லவர்களு டைய புத்திதானுஞ் சத்தியமாய்த் தடதடக்கின்றது. அவர் களை விசுவாசிப்பவன் சித்திரகர்ணனைப் போல மரணமடை வான்" என்றது.

இராசா இஃதெப்படி என்றுகேட்க அதுசொல்லுகின்றது.

ஒட்டகவியாக்கிரசிருகாலர்கதை.

ஒருகாட்டிலே மதோற்கடன் என்னும் பெயருடைய சிங்கம் ஒன்று இருந்தது. காகம், புலி, நரி, என்னும் மூன் றும் அதற்கு ஏவல் செய்பவைகளாய் இருந்தன. பின்னர் அவைகள் சுற்றித்திரியும்போது ஒருநாள் வியாபாரிகள் கூட் டத்தினின்றும் விலகின ஒட்டகம் ஒன்றைக்கண்டு நீ, எங்கே இருந்து வருகின்றாய்? என்றுகேட்டன. அதுவுந் தன்னு டைய விருத்தாந்தத்தைச் சொல்லிற்று.

பின்னர் அவைகள் அதனைக் கொண்டுபோய்ச் சிங்கத்து க்கு ஒப்பித்தன. அந்தச் சிங்கமும் அதற்கு அபயவார்த்தை கொடுத்துச் சித்திரகர்ணன் என்னும் பெயரையுஞ் சூட்டித் தன்சேவையில் வைத்தது.

இப்படியே காலஞ்செல்லும்போது ஒருநாள் சிங்கத்தி ன் சரீரத்திலே குறைவிருந்ததனாலும், மிகவும் மழைபெய்த காரணத்தினாலும், உணவுபெற்றுக்கொள்ளாமையால் அவை கள் பயந்திருந்தன. அப்போது காகம், புலி, நரி என்னும் இவைகள் எங்கள் சுவாமி சித்திரகர்ணனைக் கொல்லும்படி செய்வோம். இந்த முள்ளுத் தின்னியினால் எங்களுக்குப் பிர யோசனம் யாது? என்று தங்களுள்ளே ஆலோசித்தன.

புலி, இந்தச் சித்திரகர்ணன், எங்கள் சுவாமியினால் அபயவார்த்தைசொல்லித் தன்சேவகத்தில் வைக்கப்பட்டிரு

க்கின்றது. ஆதலால் இந்தக்காரியம் எப்படிச்சம்பவிக்கும்? என்று கேட்டது.

காகம், இந்தச்சமயத்திலே எங்கள் சுவாமி சுசக்குறைத் திருத்தலினாற் பாவத்தைத் தானுஞ்செய்தற்குச்சந்தேகங்கொள்ளமாட்டாது.

க. பசியினால் வருந்துகின்ற மனுஷன் தன்மனைவியோடு புத்திரனைத்தானும் விட்டுவிடுவான். பசியினால் வருந்துகின்ற பெண்சர்ப்பந் தன்முட்டையை உண்ணும். பசியினால்வருந்துகின்றவன் என்ன பாபத்தைத்தான் செய்யமாட்டான்? பசியினாற் குறைவுடைய மனுஷர் கருணையில்லாதவர்களாகின்றார்கள்.

உ. மேலும், வெறியன், காமவெறியன், பைத்தியவெறியன், வருத்தமுடையவன், குரோதமுடையவன்பசியுடையவன், உலுத்தன், பயமுடையவன், விரைவுடையவன், காமுகன், என்னும் இவர்கள் நீதியை அறிந்தவர்களல்லர்.

இப்படியே நிச்சயித்துக்கொண்டு அவைகளெல்லாஞ் சிங்கத்துக்குக் கிட்டப்போயின. சிங்கம், அவைகளை நோக்கி உணவின்பொருட்டு யாதாயினுங் கிடைத்ததா? என்று கேட்டது.

காகம், தேவரீர்! வெகுபிரயாசப்பட்டுஞ் சிறிதேனுங் கிடைக்கவில்லை. என்றது.

சிங்கம், இப்போது சீவனத்துக்கு வழி யாது? என்று கேட்டது.

காகம், உம்முடைய வசத்திலே இருக்கும் உணவை விட்டதினாலேதான் இந்த ஈர்சங்களெல்லாம் வந்துசேர்ந்தன. என்றது.

சிங்கம், இங்கே உணவு யாது? என்னுடைய வசத்தது யாது? என்றுகேட்டது.

காகம், சித்திரகர்ணன்தான் என்று காதினுள்ளே சொல்லிற்று.

சிங்கம், மண்ணிலே தொட்டுக் காதைப் பொத்தி நான் பயப்படவேண்டாம் என்று முன்னமே வாக்குக் கொடுத்திருக்கப் பின்னர் இஃது எப்படிச் சம்பவிக்கும்?

ஈ. பூமிதானமுமன்று; சுவர்ணதானமுமன்று; கோதானமுமன்று; அன்னதானமுமன்று; எல்லாத் தானங்களுள்ளும் அபயதானந்தானே மகாதானம் என்று மனுஷர் இங்கே சொல்லுகிறார்கள்.

சா- தன் சரணத்தில் வந்தடைந்தவனைக் காக்கின்றவன் சகலவிருப்பங்களையுஞ் சித்தியாக்குகின்ற அசுவமேதயாகத்தின் பலனை அடைகின்றனன்.

காகம். சுவாமீ! இதனைக் கொல்லப்படாது. ஆயினும், அதுதானே தன் சரீரத்தை உமக்குக் கொடுக்கச் சம்மதிக்கும்படி நாங்களே உபாயஞ் செய்யவேண்டும். என்றது. அதனைக் கேட்டுச் சிங்கம் மௌனமாயிருந்தது.

பின்னர்ச் சமயம் வாய்த்தபோது அது மாயஞ்செய்து எல்லாவற்றையுங் கூட்டிக்கொண்டுபோய்ச் சிங்கத்தைநோக்கித் தேவரீர்! பிரயாசப்பட்டும் உணவு கிடைக்கவில்லை. சுவாமீ! அநேகநாள் உபவாசித்ததினாற் கிலேசப்படுகிறீர்! ஆதலால்இப்போதுஎன்னுடையசரீரமாமிசத்தை உண்ணும்.

ரு, சகல கனமுஞ் சம்பத்துகளுஞ் சுவாமி மூலமாயே இருக்கின்றன. மரங்கள் வேரோடு நின்றாலும் மனிதருடைய பிரயாசத்தினாலேதான் பழங்களைக் கொடுக்கின்றவைகளாய் இருக்கின்றன, என்றது.

சிங்கம், நல்லது! பின்னும் இவ்விதமான செயல்களிலே பிரவேசித்தலினும் பிராணனை விடுதல் உத்தமம், என்றது. நரியும் அப்படியே சொல்லிற்று. சிங்கம், அப்படியன்று. என்றது.

புலி, சுவாமீ! என்னுடைய சரீரத்தினாலே சீவியும் என்றது. சிங்கம், இது ஒருகாலமும் உசிதமல்ல என்றது.

பின்னர்ச்சித்திரகர்ணனும் தன்னிடத்தே உண்டான விசுவாசத்தினால் அப்படியே தன் சரீரத்தை ஏற்கும்படி கேட்டது, அது சொல்லுமுன்னமே புலி அதன் வயிற்றைக்கிழித்துக்கொல்ல எல்லாம் அதனை உண்டன.

ஆதலாற்றான், "தீயவர்களுடைய வார்த்தையினாலே நல்லவர்களுடைய புத்திதானுஞ்சத்தியமாய்த்தடதடக்கின்றது." என்பது சொல்லுற்றேன்.

அதன்பின் அந்தப்பிராமணன் மூன்றுதூர்த்தனுடைய வார்த்தையைக்கேட்டுத் தன் சந்தேகத்தை நிச்சயித்து வெள்ளாட்டை நீக்கிவிட்டு ஸ்நானஞ் செய்துகொண்டு வீட்டுக்குப்போனான். தூர்த்தர் வெள்ளாட்டைக்கொண்டுபோய்க்கொன்றுதின்றார்கள்.

ஆதலாற்றான்; "சத்தியம் பேசுகின்ற துர்ச்சனனை என்பது சொல்லுகிறேன். என்றது.

இராசா மேகவர்ண! சத்துருமத்தியிலே நெடுங்காலமாக நீ எப்படி வசித்தாய்? அவர்களுடைய சம்மானத்தை எப்படிப் பெற்றுக்கொண்டாய்? என்று கேட்டது.

மேகவர்ணன், தேவரீர்! தங்களுடைய சுவாமிகாரியத்தை முடிக்க விரும்புகிறவர்களினால் அல்லது தங்கள் பிரயோசனவசத்தினால் என்னென்னதான் செய்யப்படமாட்டாது?

௬. பாரும், இராசாவே! மனிதர் எரிக்கும்படி விறகைத் தலையினாற் சுமந்துகொண்டு போகிறார்கள், நதியின் வேகமானது மரத்தின் வேரைக் கழுவினாலும் அதனை வெட்டி எடுக்கின்றதன்றோ!

௭. விருத்தசர்ப்பம் ஒன்றினாலே தவளைகள் எப்படிக் கொல்லப்பட்டவோ அப்படியே புத்திமானானவன் தன்காரியத்தைப் பெற்றுக்கொண்டு தன்சத்துருக்களைப் புயத்தினாலேனுஞ் சுமக்கவேண்டும். என்றது.

இராசா 'இஃது எப்படி என்றுகேட்க மேகவர்ணன் சொல்கின்றது.

விருத்தசர்ப்பமண்டூகங்கள்கதை.

சீர்ணோத்தியானத்திலே மந்தவிசர்ப்பன் என்னும்பெயருடைய பாம்பு ஒன்று இருந்தது. அது அதிகம் முதுமைப்பருவத்தை அடைந்திருந்ததனால் தன்னுடைய உணவைத் தானுந் தேடிக்கொள்ள வலிமையில்லாமல் ஒரு குளக்கரையிலே இறங்கி யிருந்தது. அதனைத்தூரத்திலே ஒரு தவளை கண்டு, பெரியவரே! நீர் ஏன் உணவைத் தேடாமலிருக்கிறீர்? என்றுகேட்டது.

பாம்பு, நல்லது போ: மந்தபாக்கியனாகிய என்னுடைய சரித்திரத்தைக்கேட்பதினால் உனக்கு என்ன என்றது.

பின்னர்த்தவளை தனக்குண்டான கௌதுகத்தினால் எப்படியாயினும் உம்முடைய துக்ககாரணத்தைச் சொல்லும் என்று கேட்டது.

பாம்பு, பத்திரமுள்ளவனே! இந்தப் பிரமபுரத்திலுள்ள கௌண்டின்னியன் என்னும் பிராமணனுடைய மகனும், இருபதுவ்யசுடையவனும் சகலகுண சம்பன்னனுமாகிய ஒருவனைக்கெட்டவிதியினால்வைராக்கியமாய்க்கடித்துவிட்டேன்.

அப்போது கௌண்டின்னியன், சுசீலன்என்னும்பெயருடைய தன் புத்திரன் இறந்துகிடத்தலைக்கண்டுசோகத்தினாலே மூர்ச்சையடைந்து பூமியிலே புரண்டுருண்டான். பிரமபுரத்தில் வாசஞ்செய்கின்ற அவனுடைய சுற்றத்தவர்கள் யாவரும் அங்கே வந்திருந்தார்கள்.

க. மங்கலத்திலும், அமங்கலத்திலும், பஞ்சத்திலும், சத்துருயுத்தத்திலும், இராசாவாயிலிலுஞ், சுடுகாட்டிலும் எவன் நிற்கின்றானோ அவனே சுற்றத்தவனாம்.

அப்போது கபிலர் என்னுங் கிருகஸ்தர் கௌண்டின்னியனை நோக்கி, ஓய்! கௌண்டியன்னியரே! மூடராயிருக்கிறீர்! ஏன் புலம்புகிறீர்!

உ. சேளும்: பிறப்பு அநித்தியமாயிருக்கின்றதினுன் முதன்முதற்பாலகனே வளர்க்குந்தாயான்வள் மடியில் வைத்தல்போல மாதாவும் பின்னர் வைக்கிருள், ஆதலாற்சோகத்துக்குக் கிரமம் யாது ?

ங. பற்பல சேனையையும், பெலனையும் படையுறுப்புகளையுமுடைய பூலோக ராசாக்கள் எங்கே போய்விட்டார்கள்! அவர்கள் இவ்வுலகத்தினின்றும் பிரிந்துபோய்விட்டார்கள் என்பதற்குச் சாட்சியாகப் பூமிதேவி இன்றும் நிற்கிருள்.

ச. மேலும் இந்த உடம்பானது கணந்தோறும் பாழ்பட்டுப்போதல் காணப்படவில்லையோ? தண்ணீரிருக்கும் பச்சைக்குடத்தைப்போல இது அழிந்துபோதல் வெளிப்படவில்லையா ?

ரு. பிராணிகளுக்கு மரணமானது தினந்தோறுங்கிட்டவருகின்றது, ஆயினுங் கொல்லும்படி மரண சாலைக்குக் கொண்டுபோகப்படுகிறவனுக்குத் கிரமங் கிரமமாய் வருகின்றது.

சு. இளமைப்பருவமும், அழகும், சீவியமும், திரவியக்கூட்டமும் ஐசுவரியமும், பிரியமான கூட்டமும் அநித்தியம். ஆதலாற் பண்டிதன் இவைகளிலே மோகமடையாதிருக்கக்கடவன்.

எ. சமுத்திரத்திலே இரண்டுமரக்குத்திகள் ஒன்ரோடொன்று கூடிப்பிரிவதுபோலப் பிராணிகள் கூடிப்பிரிகின்றன.

அ. ஒரு மனிதன் வழியிலே யாதேனும் ஒரு நிழலில் இளைப்பாறிப் பின்னர்ப்போவதுபோலப் பிராணிகளின் கூட்டமும் இளைப்பாறிப் போகின்றன.

கூ. பஞ்சபூதங்களிலே நிருமிக்கப்பட்ட உடம்பானது பின்னும் பஞ்சத்துவமாய்ப்போய்த் தத்தம் யோனியை அடைகின்றது. அதனைப்பற்றிப் புலம்பவேண்டியது யாது ?

க0. பிராணியாகிய மனிதன் மனசுக்குப் பிரியமான சம்பந்தங்களை எவ்வளவு செய்கின்றானோ அவ்வளவுக்கு அவனுடையஇருதயத்திலே துக்கமுளைகள் நாட்டப்பட்டிருக்கின்றன.

மேற்கொள்ளுதற்கரிய சென்மமானது மரணத்தைப்போல வருகின்றது.

கக. பிரியமானவர்களோடு நாங்கள் கொள்ளுகின்ற சேர்க்கையின் மாறுதல் அன்னத்தில் உண்டாம் பத்தியமாறுதலை போலப் பயங்கரமுள்ளதேயாம்.

க௨. சிற்றாறு பேராற்றை நோக்கிச் செல்லுகின்றது. அது பின்னர்த் திரும்பிவரமாட்டாது. அப்படியே இரவும் பகலும் மனிதருடைய ஆயுளை எப்போதும் எடுத்துக்கொண்டு செல்லுகின்றன.

கங. இவ்வுலக சஞ்சாரத்திலே மிகுசுகத்தை அனுபவிக்கின்ற பெரியோர் கூட்டம் எதுவோ அது துக்கம் என்னும் பண்டியின் காலிற் பூட்டப்பட்டிருக்கின்றது.

கச. பிரிவென்னும் வாளினால் வெட்டப்பட்ட மனத்துக்கத்துக்கு மருந்தின்மையாற் புத்திமான்கள் நல்லோர் கூட்டத்தை விரும்பமாட்டார்கள்.

கரு. சகரர்முதலிய இராசாக்களினால் அநேகம் மேன்மையான கருமங்கள் செய்யப்பட்டனவாயினும் அந்தக்கருமங்களும் அவர்களுடன் அழிந்துபோயின.

கசு. அந்த உக்கிரமான தண்டத்தையுடைய மரணத்தைச் சிந்தித்துச் சிந்தித்துத் துக்கப்படுதலினாற் சாமர்த்தியமுடைய மனிதனது முயற்சிகளெல்லாம் மழையினாலே நனைக்கப்பட்ட தோலின் வாரைப்போல இளகிப்போகின்றன.

கஎ. மனிதருள்ளே ஒவ்வொருவனும் எந்த இராத்திரியிலே கருப்பத்தில் வசிக்கின்றானோ அந்த இராத்திரி தொடங்கித்தவறாத பிரயாணக்காரனாய் மரணத்தின் சமீபம் போகின்றான்.

ஆதலாற் சஞ்சாரத்தைப்பற்றி விசாரித்துப்பார்; இந்தச் சோகம் அறியாமையின் மயக்கந்தான்.

கஅ. அஞ்ஞானங் காரணமன்று; பிரிவுதானே துன்பத்துக்குக் காரணமாயின்; சோகமானது நாட்செல்லச் செல்ல வளர்ச்சியிற் குறைவதென்ன !

ஆகையினாற் பத்திரமான உன்னுடைய மனதைச் சமாதானப்படுத்தித் துக்கமான எண்ணத்தை ஒழித்துவிடுக.

அகாலத்திலே புத்திரர் பிறந்திறத்தலால் எங்கள் மார்பைப் பிளக்கின்ற அம்புகளாகிய சோககாயங்களைச் சந்தியாமல் விடுதலே பேரவுஷதமாம்.

அப்போது அந்த வசனத்தைக் கேட்டு விழித்தவனைப்போலக் கௌண்டின்னியன் எழுந்து நரகம் என்னும் வீட்டிலே நான் வாசஞ்செய்தது போதும். இனி நான்காட்டுக்குப் போகின்றேன். என்றான்.

பின்னுங் கபிலர்சொல்லுகிறார்.

கக. ஆசையுள்ளவர்களுக்குக் காட்டிலே போயிருந்தாலுங் குற்றங்கள் உண்டாகின்றன. வீட்டிலேயிருந்து பஞ்சேந்திரியங்களை அடக்குதலே தபமாம்; இகழப்படாத கருமங்களைச் செய்பவனும், ஆசையில்லாதவனும் எவனோ அவனுடைய வீடே தபோவனமாம்,

உ0. துக்கமுள்ளவனாயிருந்தாலும், எந்த ஆச்சிரமத்திலே விருப்பமடைந்திருக்கிறானோ அங்கே தருமத்தைச் செய்யவேண்டும். எல்லாப் பிராணிகளுக்குஞ் சமபாக இருத்தல்வேண்டும். வித்தியாச அறிகுறிகள் தருமத்துக்குக் காரணமல்ல.

உக. எவர்களுக்குச் சீவனைத் தாங்கும்பொருட்டுப் போசனமும், சந்தானத்தின்பொருட்டு மைதுனமும், சத்தியவசனத்தின் பொருட்டு வாக்குமுண்டோ அவர்கள் பிரயாசங்களைத் தாணுங் கடக்கின்றார்கள்.

உஉ. நீதானே ஒரு நதி; அடக்கமே புண்ணியதீர்த்தம்; சத்தியமே நீர்; சீலமே கரைகள்; தயையே திரை; அங்கே ஸ்நானஞ் செய்; ஏனெனில்; உள்ளே இருக்கும் ஆத்துமாத் தண்ணீரினாற் சுத்தமாகமாட்டாது. என்று பாண்டுபுத்திரனுக்குச் சொல்லப்பட்டது.

உஙு. விசேஷமாக, இந்த உலக சஞ்சாரமானது பிறப்பு, இறப்பு, வியாதி, நரை, வேதனை என்பவைகளால் அமிழ்ந்தப்பட்டு அளவுக்கு மிகுந்து சாரமற்றதாய் இருக்கின்றது. இதனை விடுபவனுக்கே சுகம் உண்டாகும்.

உச. துக்கந்தானே உள்ளது சுகமோ இல்லாதது. துக்கத்தினால் வருத்தமடைந்தவனுக்குப் பிரதீகாரமாகச்சுகம் என்னும்பெயர் விதிக்கப்பட்டிருக்கின்றது. என்றார்.

இவையெல்லாஞ் சொன்னபின் கௌண்டின்னியன் அப்படித்தான் என்றான். அதன்பின் சோகாகுலங்கொண்டிருந்த அந்தப்பிராமணன் “ இன்றுதொடங்கி மண்டூகங்களுக்கு வாகனமாயிரு ” என்று என்னைச் சபித்துவிட்டான்.

கபிலர் அவனை நோக்கி, நீர் இப்போது புத்திகளைத் தாங்கமாட்டீர்; உம்முடைய இருதயம் சோகத்தினாலே நுழையப்பட்டிருக்கின்றது. அப்படியாயினுஞ் செய்யவேண்டியது. யாது என்பதைக் கேளும்.

உரு. சங்கத்தை முழுமனத்தோடும் தள்ளிவிடவேண்டும். அதனைத் தள்ளிவிடமுடியாதாயின்; நல்லவர்களோடு சேர்ந்துகொள்ளவேண்டும். நல்லவர்களுடைய நட்பே அதற்கு மருந்தாகும்.

உசு. காமத்தை முழுமனத்தோடும் விடவேண்டும் அதனை விடமுடியாதாயின்; தன்மனைவியோடு கொண்டாட்டஞ் செய்யவேண்டும். அதுவே அதற்கு மருந்தாகும். என்றார்.

கௌண்டின்னியன் கபிலருடைய உபதேசமாகிய இந்த அமிர்தத்தினாற் சாந்தமான சோகாக்கினியுள்ளவனாய் விதிப்படியே தனது தண்டை எடுத்தான்.

அதன்பின் பிராமணனுடைய சாபத்தை ஏற்று மண்டூகங்களைச்சுமக்கும்படி நான் இங்கே வந்திருக்கிறேன் என்றது.

இந்த நெடுங்கதையைக் கேட்டுக்கொண்டிருந்த தவளை போய் மண்டூகநாதனாகிய சாலபாதன் என்பவனுக்குச் சொல்ல அந்த மண்டூகநாதன் வந்து பாம்பின்மேல் இவர்ந்தது. அந்தப்பாம்பு அதனை முதுகின்மேல் வைத்துக்கொண்டு சித்திரமாய் மெல்ல உலாவிற்று.

மற்றநாள் நடக்கத்தானும் இயல்பில்லாத அந்தப்பாம்பை மண்டூகம் நோக்கிப் பெரியவரே! நீர் இன்றைக்கு ஏன் மந்தகதியாய் நடக்கிறீர்? என்று கேட்டது. பாம்பு தேவரீர்! ஆகாரமின்மையாற் பெலஹீனனாயிருக்கிறேன். என்றது.

மண்டூகநாதன், என்னுடைய கட்டளைப்படி தவளைகளெல்லாவற்றையும் உண்ணென்றது, பாம்பு "இவர் மகாவனுக்கிரகமுடையவர்" என்று சொல்லிக்கொண்டு கிரமங்கிரமங்கிரமமாய் அந்தத் தவளைகளைத் தின்றன. பின்னர் வாவியிலே தவளைகள் இல்லை என்று கண்டு மண்டூகநாதனையும் பிடித்துத்தின்றது.

ஆதலாற்றான், "விருத்தசர்ப்பம்" என்பது சொல்லலுற்றேன்.

தேவரீர் முற்காலத்தில் நடந்த கதைபோக இரணியகர்ப்பராசன் எப்போதுஞ் சந்திசெய்யப்படத்தக்கவன் ஆதலால் அவனோடு சந்திசெய்யவேண்டும். என்பதே என்னுடைய புத்தி என்றது.

இராசா, இந்த ஆராய்வு உனக்கு ஏன்? எம்மால் அது வெற்றிகொள்ளப்பட்டதன்றோ! ஆதலால் அது எங்கள் கட்டளைப்படி எங்களுக்குத் தாசனாய் இருந்தால் இருக்கட்டும் அல்லது போர்செய்யவேண்டும். என்று சொல்லிற்று.

அப்போது சம்புத் தீவினின்று வந்த கிளி, சிங்களத்தீவின் இராசாவாகிய சாரை இப்போது சம்புத்தீவிலே ஆக்கிரமித்து நிற்கின்றது. என்றது.

இராசஸ், திகைப்புடன் கேட்டு என்ன? என்ன? என்றது. கிளி, முன்சொன்னதையே பின்னுஞ்சொல்லிற்று.

கிருத்திரம், அடா, சக்கரவாகமந்திரீ! நல்லசெய்கை! நல்லசெய்கை! என்றது.

இராசாக் கோபங்கொண்டு நான்போகும்வரையும் அது இருக்கக்கடவது. போய் அரசனையும் அதன் சந்ததியையுஞ் சமூலத்தோடு பிடுங்குவேன். என்றது.

தூரதரிசி, புன்னகைசெய்து,

உஎ. சரற்காலத்து முகிலைப்பார்த்து நடத்தல் பிரயோசனமன்று. எங்களுடைய தலைவன் காட்டுகின்ற முகிற்கர்ச்சிதம் நயத்தினல் வந்தாலென்ன! நடடத்தினால் வந்தாலென்ன! முற்றுஞ் சித்தியற்றதாய் இருக்கின்றது.

உஅ மேலும், இராசாவானவன் ஒருமுறையிலே அனேகசத்துருக்களோடு வாதஞ்செய்தலாகாது. கர்வமுள்ள ஒரு பாம்பு நிச்சயமாய் அனேக கீடங்களினல் நாசமாக்கப்பட்டது.

தேவரீர்! இங்கே சமாதானஞ் செய்யாமற் போகவேண்டுமோ? அப்படியாயின்; இரணியகர்ப்பன் கோபத்துடன் எங்கள் பின்னணியை முட்டி அடிப்பன்.

உகூ. வேறும், எவன் பொருள்களின் உண்மையை அறியாமற் கோபத்தின் வசமாகின்றுனே அவன் ஒரு மூடப் பிராமணன் ஒரு கீரியைக் கொன்று பின் துக்கப்பட்டது போலத் துக்கப்படுவான். என்றது.

இராசா இஃது எப்படி என்றுகேட்கத் தூரதர்சிசொல்லுகின்றது.

நகுலபிராமணர்கதை.

உச்சயினிநகரத்திலே மாதவன் என்னும் பெயருடைய பிராமணன் ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவி தான் சிறிது நாளைக்கு முன்னே பெற்ற பிள்ளையைக் காத்துக்கொள்ளும்படி அப்பிராமணனை வைத்துவிட்டு ஸ்நானஞ்

செய்யப்போனாள். பின்னர்ப் பிராமணனுக்குப் பார்வண சிராத்தங் கொடுத்தற்காக இராசா ஒருவனை அனுப்பினார். பிராமணன் அவனைக்கண்டு இயல்பானவறுமையினாற் சிந்திப்பானாயினன். "நான் சீக்கிரம் போகாமல் இருப்பேனாயின்; யாராவது ஒருவன் சிராத்தத்தை வாங்கிக்கொள்ளுவான்."

,க. கொடுத்தலாயிருந்தாலென்ன! வாங்கலாயிருந்தாலென்ன! செய்யப்படவேண்டிய ஒவ்வொரு கருமத்தையுஞ் சீக்கிரஞ்செய்தல்வேண்டும். செய்யப்படாத கருமத்தின் இரசத்தைக் காலமே உறிஞ்சுகின்றது.

இங்கே என்னுடைய பிள்ளையைக் காத்துக்கொள்ளுதற்கு ஒருவருமில்லை. அதற்கு யாதுசெய்வேன்! ஆயினும் நெடுங்காலமாகப் புத்திரனைப்போல வளர்க்கப்பட்ட இந்தக் கீரியைப் பாலகனைக் காக்கும்பொருட்டு வைத்துவிட்டுப் போவேன்." என்று சிந்தித்து அப்படியே வைத்துவிட்டுப் போனான். அப்போது கீரி பாலகன் சமீபத்திலே மெல்ல வாக ஊர்ந்துவந்த கிருஷ்ணசர்ப்பம் ஒன்றைக் கொன்று துண்டமாக்கிற்று.

பின்னர் அது பிராமணன் வருகிறதைக்கண்டு இரத்தந்தோய்ந்த முகத்தோடும் பாதங்களோடும் விரைந்து ஓடிப்போய் அவனுடைய பாதங்களுக்குக்கிட்ட விழுந்துருண்டது. அப்போது அந்தப்பிராமணன் இரத்தந்தோய்ந்த கீரியைக் கண்டு என்னுடைய புத்திரனை இது தின்றுவிட்டதென்றெண்ணி ஆராயாமல் அதனைக் கொன்றான். பின்னர்க் கிட்ட வந்து பார்த்தபோது பாலகன் சுகமாய் நித்திரைசெய்தலையுஞ் சர்ப்பங் கொல்லப்பட்டுக் கிடத்தலையுங்கண்டு துக்கமடைந்தான்.

ஆதலாற்றான், "எவன் பொருள்களின் உண்மையை அறியாமற் கோபத்தின் வசமாகின்றானோ." என்பது சொல்லலுற்றேன்.

உ. மேலும், காமம், குரோதம், உலோபம், சந்தோஷம், பெருமை, மதம், என்னும் அறுவகைக் குற்றங்களையும் ஒருவன் விட்டுவிடவேண்டும். இவைகளை விட்டபோதே அவன் சுகத்தைப் பெறுவான். என்றது.

இராசா, மந்திரீ! இஃது உன்னுடைய நிச்சயமோ என்றுகேட்டது. மந்திரி, அப்படித்தான்.

௩. பெரியகாரியங்களை நினைத்திருத்தலும், நன்றாக யூகித்தறிதலும், திடமும், ஆலோசனையை மறைத்துவைத்திருத்தலும் மந்திரியுடைய உத்தமகுணமாம்.

௪. இன்னும், யாதொரு காரியத்தையும் ஆராயாமற் சீக்கிரஞ் செய்யலாகாது. ஆராயாது செய்தலே பெரிய ஆபத்துக்கு இடமாக இருக்கின்றது. காரியங்களை ஆராய்ந்து செய்பவனுக்குத் தகுதியான அநுகூலம் வந்தடைகின்றது.

தேவரீர்! என்னுடைய வார்த்தைப்படி செய்யிற்; சந்தி செய்துகொண்டு போகக்கடவீர்.

௫. செய்யப்படவேண்டிய காரியங்களைச் செய்துமுடித்தற்கு உபாயங்கள் நான்குஞ் சொல்லப்பட்டாலும், அவைகளின் பலனின் சித்தி சமாதானத்திலே தங்கியிருக்கின்றது. என்றது.

இராசா, இது சீக்கிரம் எப்படிச் சம்பவிக்கும்? என்று கேட்டது. மந்திரி, தேவரீர்! சீக்கிரத்திற் சம்பவிக்கும்.

௬. துர்ச்சனனானவன் மட்குடம்போல இலகுவில் உடைக்கப்படுவானாயினும் அவனைப் பொருத்துதல் அரிது. சற்சனனோ பொற்குடம்போல அரிதாக உடைக்கப்படுவான். அவனைப் பொருத்துதல் எளிது.

எ. மேலும், மடையன் அற்பசுகத்தை அநுபவிக்கின்றான். விசேஷ அறிவுள்ளவன் அதிகசுகத்தை அநுபவிக்கின்றான். சிறிதும் ஞானமில்லாத கெட்டமடையனைப் பிரமாவும் பிரியமுள்ளவனாக்கமாட்டார்.

அந்த இராசா விசேஷமாகத் தருமத்தை அறிந்தவன்; மந்திரியோ எல்லாவற்றையும் அறிந்தவன்; இதனை நான் மேகவர்ணன் அறிவித்ததினாலும் அவைகள் செய்த காரியத்தினாலும் முன்னமே அறிவேன்.

அ. ஒருவனுடைய தருமகுணமும், நடையும், அவனைக் காணாமலிருக்கும்போதும் அவன் செய்த கருமங்களினால் எவ்விடத்தும் அனுமித்தறியலாம். ஆதலாற் காணப்படாமல் இருப்பவர்களுடைய கருமத்தை அதன் பலன்களினாலே அறியவேண்டும். என்றது.

இராசா இந்த உத்தரங்களுக்கு உத்தரம் போதும். இதனை எது விருப்பமோ அதனைச் செய்க. என்றது. இதனை ஆலோசித்துக் கிருத்திரம் என்னும் மகாமந்திரி, அவ்விடத்தில் யோக்கியப்படி செய்யவேண்டும் என்று சொல்லிக் கோட்டைக்குள்ளே போயிற்று.

அப்போது பிரணிதியாகிய கொக்கு வந்து தேவரீர்!, மகாமந்திரியாகிய கிருத்திரம் சந்திசெய்யும்படி எங்கள் சமீபம் வருகின்றது. என்று இரணியகர்ப்பராசனுக்கு அறிவித்தது.

இராசா, மந்திரீ! பின்னரும் யாரோ வஞ்சிக்கும் பொருட்டு வந்திருக்கவேண்டும். என்றது.

சர்வஞ்ஞமந்திரி புன்னகைசெய்து தேவரீர்! இது சந்தேகப்படத்தக்க காரியமன்று. அந்தத் தூரதர்சி மகாமகிமையுடையது. அல்லது மந்தபுத்தியுள்ளவர்களுக்கு நிலையான இந்தச் சந்தேகம் ஒருபோதுஞ் செய்யத்தக்கதன்று. சிலகாலத்தில் முற்றுஞ் சந்தேகமாயிருக்கும்.

கூ. குமுதப்பூங்கொத்துகளைத் தேடுவதும், இரவிற் சமர்த்தனும் வாவியிற் பலமுறையும் நட்சத்திர நிழலைக் காணுதலினால் வஞ்சிக்கப்பட்டதுமாகிய அன்னமானது பின்னர்ப்,பகற்காலத்திலேதானும் நட்சததிரம் என்ற சந்தேகத்தினால் வெண்குமுதத்தைக் கொத்தித் தின்னமாட்டாது.

வஞ்சகமுள்ள மனிதர் அப்படியே சத்தியத்திலும் வஞ்சகம் உண்டென்று சந்தேகப்படுகிறார்கள்.

௰. தூஷிக்கப்பட்ட மனத்தையுடைய துர்ச்சனனுக்குச் சற்சனனிலேயும் விசுவாசமில்லை. பாயசத்தினற் சுடப்பட்ட பாலகன் தயிரைத்தானும் ஊதியாற்றி உண்கின்ருன்.

ஆதலால், தேவரீர்! இயன்றவளையும் நல்ல இரத்தினம், வஸ்திரம் முதலிய உபகாரங்களை ஆயத்தப்படுத்தி அதற்குக் கொடுக்கவேண்டும். என்றது. அப்படிச் செய்யப்பட்டபோது அந்தக் கிருத்திர மந்திரியைச் சக்கரவாக மந்திரி, கோட்டைவாயிலிற்போய்ச் சற்காரஞ்செய்து அழைத்துக்கொண்டுவந்து இராசதர்சனஞ் செய்வித்துக் கொடுக்கப்பட்ட ஆசனத்தில் இருத்திற்று. மந்திரி உமக்குக் கீழுள்ள இராச்சியங்கள் எல்லாவற்றையும் உமதிச்சைப்படி அநுபவிக்கக்கடவீர். என்றுசொல்லிற்று. இராச அன்னமும் அப்படித்தான் என்று சொல்லிற்று.

தூரதர்சி, அப்படியே இருக்கக்கடவது. இப்போது அதிகம் விரிவாய்ப் பொருத்தம்பண்ணிக் கொள்வது நிட்பிரயோசனமா யிருக்கின்றது.

௧௧. பொருளாசைக்காரனைத் திரவியங்கொடுத்தும், அகங்காரியை அஞ்சலிசெய்தும், மூர்க்கனைச் செய்யுள்பாடியும், பண்டிதனை நேர்மையாய் நடந்தும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

௧௨. மித்திரனை நற்குணத்தோடும், சுற்றத்தவர்களை மரியாதையோடும், ஸ்திரீ சேவகர்களைத் தானமானத்தோடும் மற்றைய சனங்களை இரக்கத்தோடும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆதலால் இப்போது சந்திசெய்துகொண்டு மகாப்பிரதாபவானாகிய சித்திரவர்ணராசன் போகக்கடவது. என்றது.

சக்கரவாகம், சந்தானம் எப்படிச் செய்யவேண்டுமோ அதனையுஞ் சொல்லவேண்டும். என்றது.

இராசவன்னம், எத்தனைவித சந்திகள் இருக்கின்றன? என்று கேட்டது.

கிருத்திரஞ் சொல்லுகிறேன் தேவரீர்! கேளும்.

கங. ஓர் இராசன் தன்னினும் பெலவானால் வெற்றி கொள்ளப்பட்டவனாயின்; அவனுக்குவேறு எதிர்ச்செய்கை யாதொன்றுமில்லை. ஆபத்தையுடைய இராசன் காலத்தைப் போக்காமற் சீக்கிரஞ் சந்திசெய்துகொள்ள வேண்டும்.

கச. கபாலம், உபகாரம் சந்தானம், சங்கதம் உபநியாசம், பிரதீகாரம், சம்யோகம், புருஷாந்தரம், அதிருட்டநரம், அதிஷ்டம், ஆத்துமாதிஷ்டம், உபக்கிரகம், பரிக்கிரயம், உச்சின்னம் பரபூஷணம், கரு. ஸ்கந்தோபநேய சந்தி என்னும் இவைகள் பதினாறுங் கீர்த்திக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பதினாறையுஞ் சந்தியில் வல்லவர்கள் சந்தி என்று சொல்லுகிறார்கள்.

கரு. கபாலசந்தியாவது சமமான நிலையிலுள்ள இருபக்கத்தாருஞ் சமாதானஞ்செய்வது மாத்திரம் என்றறியவேண்டும். உபகாரங்கொடுத்துச் செய்யுஞ் சந்தி உபகாரசந்தி என்னப்படும்.

கசு. இருபக்கத்தவருள் ஒருபக்கத்தார் தங்கள் தாரத்தை முன்கொடுத்து அதன்பின் செய்யுஞ்சந்தி சந்தானசந்தி என்று அறிந்து கொள்ளவேண்டும். சினேகத்தை ஆதாரமாய் முன்வைத்துக்கொண்டு தக்கவர்களோடு செய்யுஞ்சந்தி சங்கதசந்தி என்று சொல்லப்படும்.

கஎ. ஆயுசுக்கு அளவை எவ்வளவோ அவ்வளவுஞ் சங்கதசந்தி சமானமான கருத்தையுடையதாய் இருக்கின்றது. சம்பத்தின் காரணத்தினால் அல்லது விபத்தின் காரணத்தினால் அது தடுக்கப்படமாட்டாது.

கஅ. சங்கதசந்தியாகிய இது பொன்போல மேன்மையுள்ளதாய் இருத்தலினால் அப்படியே சந்தியில் வல்லவர்கள் சிலர் காஞ்சனசந்தி என்று சொல்லுகிறார்கள்.

கக. திரவியத்தினாலே தன்காரியஞ் சித்தியாகும் என்று உத்தேசித்துக்கொண்டு இருதிறத்தவருள் ஒருவன் செய்யுஞ் சந்தி உபநியாயசந்தி என்று உபநியாச சந்தி வல்லவர்கள் சொல்லுகிறார்கள்.

௨௦. நான் முன்னமே அவனுக்கு உபகாரஞ் செய்திருக்கின்றேன். அவனும் எனக்குச் செய்வான் என்று எண்ணிச் செய்யுஞ்சந்தி பிரதீகாரசந்தி என்று சொல்லப்படும்.

௨க. நான் அவனுக்கு உபகாரஞ்செய்வேன் அவனும் எனக்குச்செய்வான் என்று செய்யுஞ்சந்தியும் இராமசுக்கிரீவருடைய சந்தியைப் போலப் பிரதீகார சந்தியாம்.

௨௨. எங்கள் இருதிறத்தவர்களின் முக்கிய யுத்தவீரரினால் என்பொருட்டுச் செய்யவேண்டும் என்றுசொல்லி இதனை முடிக்கும்போது பணம் இவ்வளவு என்று நியமித்துச் செய்யுஞ்சந்தி புருஷாந்தர சந்தியாம்.

௨௩. என்னுடைய காரியங்களை நீ மாத்திரமே செய்துமுடி என்று சத்துருவானவன் பணம் நியமித்துச் செய்யுஞ்சந்தி அதிருஷ்ட புருஷசந்தி என்று சொல்லப்படும்.

௨௪. எவ்விடத்திலே சத்துருவுக்குத் தன் பூமியில் ஒரு பங்கை அபராதமாய்க் கொடுக்க அவன் தன் தேசத்தை விட்டு விலகும்படி சந்திவல்லவர்களினாற் செய்யப்படுஞ் சந்தி ஆதிஷ்டசந்தி என்று சொல்லப்படும்.

௨௫. தன் சேனையோடு சந்தானஞ் செய்வது ஆத்துமாதிஷ்டம் எனப்படும். எல்லாவற்றையுங் கொடுத்துத் தன்னைக் காக்கும்படி செய்யுஞ்சந்தி உபக்கிரகசந்தி எனப்படும்.

௨௬. திரவியசாலையின் ஒருபங்கையேனும், பாதியையேனும் அல்லது திரவிய சாலை முற்றையேனுங் கொடுத்து எஞ்சியதைக் காக்கும்படி செய்யுஞ் சந்தி பரிக்கிரயம் எனப்படும்.

௨௭. பிரயோசனமுள்ள பூமியைக்கொடுத்துச் செய்யுஞ்சந்தி உச்சின்னம் எனப்படும். பூமியிலுள்ள பிரயோச

ணங்கள் எல்லாவற்றையுங் கொடுத்துச் செய்யுஞ் சந்தி பரபூஷணம் எனப்படும்.

௨அ. பூமியினின்று பொறுக்கியெடுத்த பிரயோசனங்களைப் புயத்தில் வைத்துச் சுமந்துகொண்டுபோய்க் கொடுத்துச்செய்யுஞ்சந்தியைச் சந்தியில் வல்லவர்கள் ஸ்கந்தோபநேய சந்தி என்று சொல்லுகிறார்கள்.

௨௯. ஒருவர்க்கொருவர் உபகாரஞ்செய்தல் மித்திரத்தன்மை, உறவுத்தன்மை, உபகாரம் என மேலும் நான்குவித சந்தி உண்டென்று அறிய வேண்டும்.

௩0. உபகாரசந்தி ஒன்றுமே சந்தி என்பது எனது கொள்கை. உபகாரத்துக்குபேதமான மற்றவைகளெல்லாம் மித்திரத்தன்மை இல்லாதனவாம்.

௩௧. வெற்றிகொள்பவன் பலவானுகையால் யாதாயினும் வாங்கியன்றிப்போகமாட்டான். ஆதலால் உபகாரசந்தியைத் தவிர வேறுசந்திகள் காணப்படவில்லை என்றது.

இராசா, "நீரோ மகாபண்டிதர். ஆதலால் இங்கே செயயவேண்டிய காரியத்தை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும் என்றது.

தூரதர்சி, ஏன் இப்படிச்சொல்லுகிறீர்?

௩௨. மனவியசனம், வியாதி, பரிதாபம் என்னும் இவைகளினல் இன்றைக்கு அல்லது நாளைக்கு அழிவதும் நீதியற்றதுமான சரீரத்துக்கு நாம் யாது நாமத்தைக் கொடுப்போம்.

௩௩. உயிர்க்களுக்குச் சீவியமானது சலத்துள்ளே தோற்றுஞ் சந்திரனைப்போல அசைவுடையதன்றோ! அசைவுடையது என்பதை அறிந்து எப்போதும் நற்செய்கைகளையே செய்யவேண்டும்.

௩௪. உலக சஞ்சாரமானது கானற்சலத்துக்குச் சமமாகக் கண்டுதோறும் அழிதலைக்கண்டு தருமத்தின்பொருட்டும்,

நீதியின்பொருட்டுஞ் சற்சனரோடு சேர்ந்துகொள்ளுதலே தகுதி.

ஆதலால் எனது சம்மதப்படி காரியம் இப்படிச்செய்ய வேண்டும்.

நூறு, ஆயிரம் அசுவமேதத்தையுஞ் சத்தியத்தையுந் தராசில் வைத்து நிறுத்தபோது அசுவமேதத்திலும் சத்தியமே பாரத்தினால் மேற்பட்டது.

ஆதலாற்சத்தியம் என்னும்பெயரையே தைவிகமாய் முன்வைத்துக்கொண்டு இந்த இராசாக்கள் இருவர்க்கும் இடையிலே காஞ்சனசந்தியே விதிக்கப்படக்கடவது.

சர்வஞ்ஞன், “அப்படியாகக்கடவது என்றது. அப்போது விலையுயர்ந்த வஸ்திர உபகாரமுதலியவைகளினால் மந்திரியாகிய தூரதர்சி பூசிக்கப்பட்டது. தூரதர்சி மனமகிழ்ச்சியோடுஞ் சக்கரவாகத்தைக் கூட்டிக்கொண்டு மயூரராசன் சமீபம்போயிற்று. சித்திரவரணராசாக் கிருத்திரத்தின் வார்த்தையைக் கேட்டுச் சர்வஞ்ஞமந்திரிக்கு வெகுமானமுஞ் செய்து கனம்பண்ணிச் சந்தியை நிலைப்படுத்திக்கொண்டு இராசவன்னத்தின் சமீபத்துக்கு அனுப்பிற்று. தூரதர்சி, தேவரீர்! எங்கள் விருப்பஞ் சித்தியாயிற்று. இப்போது எங்களுடைய ஸ்தானமாகிய விந்தியமலைக்குப் போகக்கடவேம். என்றது. பின்னர்ச் சகலமுந் தததமிடத்திற் போய்த்தங்கள் மனத்துக்குப் பிரியமான பிரயோசனங்களை அநுபவித்துக் கொண்டிருந்தன.

விஷ்ணுசர்மர், இராசபுத்திரர்களை நோக்கி இன்னும் எதனை நான் உங்களுக்குச்சொல்லவேண்டுமோ அதனைச்சொல்லுங்கள் என்று கேட்டார்.

இராசகுமாரர்கள், ஆரியரே! உமது கிருபையினால் இராச வியவகார அங்கங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டோம். ஆதலால் நாங்கள் மனப்பாக்கியம் உடையேம் என்றார்.

விஷ்ணுசாமா, அப்படியாயினும் இதுவும் இருக்கக்கட்வது.

௩௬. வெற்றியடைகின்ற சகலராசாக்களுக்குஞ் சமாதானம் இருக்கக்கடவது. நன்மைசெய்பவர்களுடைய கீர்த்தியானது நெடுங்காலம் வளர்ந்து விருத்தியடையக்கடவது. நீதியானது மகிமையான சூரியனைப்போல என்றும் உங்கள் நெஞ்சிலே பிரகாசிக்கக்கடவது. சந்தோஷமானது எப்போதுஞ் சற்சனருக்கு இருக்கக்கடவது. பூமியானது உங்கள் அனுபவத்தின்பொருட்டு நற்பிரயோசனத்தோடும் நெடுங்காலம் இருக்கக்கடவது. என்றார்.

இதோபதேசம் முற்றுப்பெற்றது.